தமிழ்நாடு
சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE COUNCIL DEBATES

# செயலக வெளியீடு
# OFFICIAL REPORT

**வியாழக்கிழமை, மார்ச் 20, 1986-தொகுதி 221 எண் 3.**
Thursday, 20th March 1986-Volume 221 No. 3.

சட்டமன்ற மேலவைச் செயலகம்.
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009.

LEGISLATIVE COUNCIL SECRETARIAT.
Fort St. George, Madras-600 009.

விலை ரூ. 2.75

தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

வியாழக்கிழமை, 1986 மார்ச் 20.

(பங்குனி 6, குரோதன, திருவள்ளுவராண்டு-2017.)

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில், முற்பகல் 10-00 மணியளவில், மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

இராணுவத்தினருக்கு வீடுகள்

* 81 வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இருபது அல்லது முப்பது ஆண்டுகள் இராணுவத்தில் சேவை புரிந்துவிட்டு, சொந்த ஊர் திரும்பும் இராணுவ வீரர்களுக்கு, அவர்களின் விருப்பப்படி, அவர்களுடைய உறவினர்கள் வசிக்கும் பகுதிகளில் வீடு கட்டிக் கொடுப்பது குறித்து, தமிழக அரசு பரிசீலித்து வருகிறதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மேற்படி திட்டம் தற்போது பரிசீலனையில் இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : முன்னாள் இராணுவ வீரர்களுக்கு தனியாக வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் பரிசீலனையில் இல்லையென்றாலும், அரசாங்கத்தினுடைய கட்டுப்பாட்டில் இருக்கின்ற வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்படுகின்ற வீடுகளில் அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட சதவிகிதமாவது ஒதுக்கீடு செய்து அந்த வகையில் உதவி செய்வதுபற்றி அரசு பரிசீலனை செய்யுமா ?

[1986 மார்ச் 25

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முன்னாள் படை வீரர்களுக்கு வீட்டு மனை ஒதுக்குவதிலே நாம் இப்பொழுது முன் உரிமை அளிக்கிறோம். போரிலே இறந்துவிட்ட போர் வீரர்களுடைய கைம்பெண்களுக்கு முதலிடம் தந்து, அவர்களுக்கு வீட்டு மனை ஒதுக்குகிறோம். அவர்களுக்கு மாத வருவாய் 500 ரூபாய்க்குக் குறைவாக இருந்தால், வீட்டைப் பழுது பார்த்தல், ஏற்கெனவே உள்ள வீட்டை விரிவுபடுத்துதல், கட்டுதல் போன்றவற்றுக்கு 5,000 ரூபாய் வரை முன்னாள் படை வீரர்களுக்காக உள்ள தொகுப்பு நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. இப்படி 99 கைம்பெண்களுக்கு நான்கு லட்சம் ரூபாய்க்கு மேல் வழங்கியிருக்கிறோம். அந்த வகையில் வீட்டு மனைகளை ஒப்படைப்பு செய்யும் வகையில் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : என்னுடைய உடன் பிறந்த இரண்டு சகோதரர்கள் இராணுவத்தில் பணியாற்றுகிறார்கள் என்பதால், அவர்களுடைய பிரச்சினைகள்பற்றி எனக்கு ஓரளவுக்குத் தெரியும். இவ்வாறு ஒதுக்கப்படுகின்ற வீட்டு மனைகள் கூட அவர்கள் விரும்புகின்ற இடத்தில் இருப்பது அவர்களுக்கு ஓரளவு உதவி செய்வதாக அமையும். ஆனால் அவர்கள் விரும்பாத இடத்தில், வீடு கட்ட முடியாத இடத்தில் வீட்டு மனைகளை ஒதுக்குகிறார்கள். காரணம் அது புறம்போக்கு நிலம். ஆகவே அந்தத் திட்டம் உள்ளபடியே அவர்களுக்கு உதவி செய்யும் வகையில் வெற்றிகரமாக நிறைவேற்றப்படுகிறது என்று சொல்ல முடியாது. அவர்களுக்காக ஒன்று தனியாக வீடு கட்டிக் கொடுக்க பரிசீலனை செய்வதுபற்றி ஆராய வேண்டும். அல்லது ஏற்கெனவே நான் கூறியதுபோல், வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்படுகின்ற வீடுகளில் ஒரு குறிப்பிட்ட சதவிகித வீடுகளை ஒதுக்கீடு செய்ய வேண்டும். அந்த வகையில் இதனைப் பரிசீலனை செய்வதில் அரசுக்கு என்ன சிரமம் இருக்கிறது? இதுகுறித்து நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்படுகின்ற வீடுகளில் 7½ சதவிகிதம் முன்னாள் படை வீரர்களுக்கு ஒதுக்கப்படுகின்றன. அந்த 7½ விழுக்காட்டில் ஒரு சதவிகிதம் மகாவீர் சக்ரா, பரம வீர சக்கரா, வீர் சக்கரா போன்ற பதக்கம் பெற்றவர்களுக்கு ஒதுக்கப்படுகிறது. மொத்தத்தில் 7½ சதவிகிதம் ஒதுக்கப்படுகிறது.



1986 மார்ச் 20]

திரு. எல். ஜெயச்சந்திரன் : இதுபோன்ற முன்னாள் படை வீரர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்தில் புறம்போக்கு நிலத்தை ஒதுக்குகின்ற ஒரு நல்ல திட்டத்தை அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. ஆனால் அவர்கள் விவசாயம் செய்வதற்கு ஏதுவாக நிலம் கொடுக்கப்படுவதில்லை. கரம்பு நிலத்தைக் கொடுக்கிறார்கள். அவர்கள் நெல் பயிர் சாகுபடி செய்யும் வகையில் அதற்கேற்ற நிலம் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்பொழுது அவர்களுக்கு வீட்டு மனைகள் வழங்கப்படுகின்றன. அவர்கள் விண்ணப்பிக்கின்ற இடம் பயிரிடுவதற்கு ஏற்ற இடமாகப் பொருந்தி வருகின்ற இடங்களில் அப்படித்தான் ஏற்கெனவே வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் அவர்கள் விரும்புகிற இடத்தைத் தர வேண்டுமென்று கேட்பதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன.

### சென்னை மாநகரில் வெள்ளம்

*82 வினா.—திரு. ஆர். டி. சீத்தாபதி : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

சென்னை மாநகரில், 11—11—1985, 12—11—1985 ஆகிய தேதிகளில் ஏற்பட்ட வெள்ளத்தால் இறந்தவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சென்னை மாநகரில் 11—11—1985 மற்றும் 12—11—1985 ஆகிய தேதிகளில் ஏற்பட்ட வெள்ளத்தால் இறந்தவர்கள் எண்ணிக்கை 16.

திரு. ஆர். டி. சீத்தாபதி : இறந்தவர்களுடைய குடும்பங்களுக்கு அரசாங்கத்தினுடைய சார்பில் நிதியுதவி அளிக்கவில்லையென்று சொல்கிறார்கள். அப்படி ஏதாவது அரசாங்கத்தால் நிதியுதவி வழங்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் : சென்னையில் இறந்த 16 குடும்பங்களுக்கும் குடும்பம் ஒன்றுக்கு இரண்டு ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் 32 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். டி. சீத்தாபதி : வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகின்ற இடத்தில் குடிசைகள் கட்டப்படுவதால், வெள்ளப் பெருக்கு வரும் நேரத்தில் அடித்துச் செல்லப்பட்டு இறந்து விடுகிறார்கள். குடிசை போடுவது குற்றம் என்கிற வகையில், குடிசை போட்டால் மூன்று ஆண்டு தண்டனை என்று சட்டம் வேறு இருக்கிறது. இதையெல்லாம் மனதில் வைத்து, மாநில அரசு விரைவுபடுத்தி, ஆக்கிரமிப்பு இடங்களை எல்லாம் அகற்ற முன்வருமா?

(முற்பகல் 10-05)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, வெள்ளம் எந்த எந்தப் பகுதியில் அடிக்கடி ஏற்பட வாய்ப்பு இருக்கிறது என்பது தொடர்ந்து தெரிந்து, அப்படிப்பட்ட பகுதிகளில் கூடுமானவரையில் குடிசைகள் போடவேண்டாம் என்று அறிவுரைகள் தொடர்ந்து நாம் அளித்து வருகிறோம். உதாரணமாக, அடையாறு பகுதியிலும், கூவம் பகுதியிலும் குடிசைகள் போட்டதால், அப்பகுதிகளில் வெள்ளம் வரும்போது, உயிருக்கும், உடைமைகளுக்கும் சேதம் ஏற்படக்கூடிய நிலைமைகளுக்கெல்லாம் ஆளாகவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அந்த இடங்களில் குடிசைகள் போடவேண்டாம் என்று நாம் அறிவுறுத்தியும்கூட, புதிதாக மாநகருக்கு வரும் ஏழை எளியவர்கள் அவ்விடங்கள் குடிசை போடுவதற்கு ஏற்ற இடங்களாக அமைந்திருப்பதால், அங்கே குடிசைகளை அமைத்து விடுகிறார்கள். பிறகு அவர்களை அவ்விடங்களிலிருந்து அகற்றுவதென்பது மனிதாபிமானமற்ற செயலாகிவிடுவதால், பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. எனவே, கூடுமானவரையில், வெள்ளம் வரும் காலங்களில் வெள்ளம் தாக்காத அளவிற்கு, கரைப்பகுதிகளை உயர்த்துவதற்கு முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். இப்போது மைய அரசு 1½ கோடி ரூபாய் அடையாறு ஆற்றின் இரு கரைகளையும் வலிவுபடுத்துவதற்காக ஒதுக்கீடு செய்திருக்கிறது. வெள்ளம் அடிக்கடி தாக்குகின்ற பகுதிகளில் கூடுமானவரையில் குடிசைவாழ் மக்கள் குடிசைகளைப் போடாமலிருப்பது நல்லது. அதற்கான முயற்சிகளையும் நாம் மேற்கொண்டு வருகிறோம்.

### இராயபுரத்தில் உள்ள மேம்பாலத்தை அகலப்படுத்துதல்

* 83 **வினா.—திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்):** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை-கல்கத்தா தேசிய நெடுஞ்சாலையில், சென்னை, இராயபுரம், மன்னார்சாமி கோயில் தெருவில், இருப்புப்பாதையின் மீதுள்ள மேம்பாலத்தினை அகலப்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலைனயில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது ?

(உ) இல்லை எனில், இனியாவது அது குறித்து அரசு நடவடிக்கை



**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ), (இ) மற்றும் (உ) சென்னை-கல்கத்தா தேசிய நெடுஞ்சாலையில், சென்னை இராயபுரம் மன்னார்சாமி கோயில் தெருவில் உள்ள மேம்பாலத்தின் நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டு இருவழித் தடங்களுக்குப் பதிலாக, நான்கு வழித் தடங்களாக அகலப் படுத்தும் திட்டம் குறித்து பரிசீலிக்கப்பட்டது. இத் திட்டத்திற்காகும் உத்தேசச் செலவு ரூ. 5.60 கோடி என மதிப்பிடப்பட்டிருக்கிறது. இத்திட்டம் மாநகராட்சியின் பரிசீலனையில் உள்ளது.

### பழைய மிருகக்காட்சி சாலை பகுதியில் கடைகள் கட்டுதல்

* 84 **வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னையில், மூர் அங்காடி பகுதியில் கடை வைத்துள்ள வியாபாரிகளுக்கு, பழைய மிருகக்காட்சி சாலை பகுதியில், கடைகள் கட்டித் தரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) மற்றும் (இ) சென்னையில், சென்ட்ரல் இரயில்வே நிலையத்தை விஸ்தரிக்கும் திட்டத்திற்காக மூர் அங்காடி அமைந்த கட்டிடம் மற்றும் அதனைச் சார்ந்த பிற நிலப்பகுதிகளை இரயில்வே துறையினருக்கு மாற்றிக் கொடுக்கப்பட்டுள்ளது. மூர் மார்க்கெட்டில் தீ விபத்து ஏற்பட்டதால், இவ்விடத்தில் கடைகள் வைத்து வியாபாரம் செய்து வந்தவர்களுக்கு மாற்றுக் கடைகள் கொடுப்பதற்காக சென்னை மாநகராட்சிக்குப் பின்புறமாக உள்ள அல்லிக்குளம் பகுதியில் பல மாடிகள் கொண்ட பல்பொருள் அங்காடியினைக் கட்ட அரசு அனுமதித்து, முதல்கட்டமாக ரூ. 1.4 கோடி நிதி உதவி, சென்னை மாநகராட்சிக்கு அளித்துள்ளது. கட்டிடம் கட்டுவதற்கு மாநகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, இந்தக் கட்டிடம் கட்டுவதற்கான வரைபடம் மாநகராட்சியின் ஒப்புதலைப் பெற்று விட்டதா ? வரைபடம் அளிக்கப்பட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட பிறகும், அப்படத்தை மாநகராட்சியினர் நிராகரித்ததாக செய்தி ஒன்று வந்ததே, அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, கட்டிடம் கட்டுவதற்காக வரைபடங்கள் கோரப்பட்டன. 14 பேர் வரைபடங்களை அனுப்பியிருந்தார்கள். பிறகு கட்டிடங்கள் கட்ட மாடல்களைச் செய்யுமாறு ஆணை பிறப்பித்தோம். மாடல்களைப் பார்வையிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவற்றில் ஒன்றில் சில மாற்றங்களைச் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் அதற்குள்ளாகவே மாநகராட்சியினர் அதற்குமுன் வந்த மாடல் ஒன்றினைக் கொண்டுவந்த ஒருவருடன் ஒப்பந்தம் செய்துவிட்டார்கள். இது அரசு ஆணையின்றி நடந்துவிட்டது. பல மாடல்கள் கொண்டுவந்து அளிக்கப்பட்டபின், அவற்றைப் பார்வையிட்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள் அவற்றில் ஒன்றைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அரசும், அவருடன்தான் ஒப்பந்தம் செய்ய வேண்டுமென்று ஆணை பிறப்பித்திருக்கிறது. ஆனால் முதலிலே வரைபடம் கொடுத்து ஒப்பந்தம் செய்தவர் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார். வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிற காரணத்தினால், இந்தப் பணிகள் தடைப்படுமா? அதற்குத் தடை வராத வகையிலே நீதிமன்றத்தின் குறுக்கீடு இருந்தால், அதை அகற்றுவதற்கு அரசு என்ன செய்திருக்கிறதென்று அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** நீதிமன்றம் இன்னும் முடிவெடுக்கவில்லை. எந்த விதத்திலும் தடையாக இருக்காது என்று நம்புகிறோம்.

### தேசிய நெடுஞ்சாலையின் இருபுறமும் ஆக்கிரமிப்பு

* 85 **வினா.—திரு. எல். ஜெயச்சந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தாம்பரத்தில், தேசிய நெடுஞ்சாலையின் இருபுறமும், கடைகளை வைத்துக்கொண்டு போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பவர்களது கடைகளை அப்புறப்படுத்த, அரசு எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தாம்பரத்தில் தேசிய நெடுஞ்சாலையின் இருபுறமும் போக்குவரத்துக்கு இடையூறாக இருந்த அனைத்து ஆக்கிரமிப்புகளும் 11—5—1985 அன்று அகற்றப்பட்டுவிட்டன. இப்போது அங்கே ஆக்கிரமிப்புகள் இல்லை.



(முற்பகல் 10-10)

**திரு. எல். ஜெயச்சந்திரன்:** தலைவரவர்களே, 11—5—1985 அன்று அந்த ஆக்கிரமிப்புகள் எல்லாம் அகற்றப்பட்டுவிட்டதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு நன்றி. அதைப் பத்திரிகை வாயிலாகவும் நாங்கள் தெரிந்துகொண்டோம். ஆனால் அதற்குப் பிறகு ஒரு மாதத்திற்குள்ளாக மீண்டும் அந்தக் கடைகள் அந்தப் பகுதியில் வந்துவிட்டன. அதனால் அங்கே சாலையின் இருபுறங்களிலும் ரோடு ஓரத்தில் பேருந்துகள் நிற்பதால், போக்குவரத்திற்கு மிக மிக இடைஞ்சலாக இருக்கிறது. அதற்காகத்தான் இந்தக் கேள்வியே போடப்பட்டது. மீண்டும் அந்தக் கடைகள் அங்கே வந்திருக்கின்றன. மீண்டும் அந்தக் கடைகளை அப்புறப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவரவர்களே, அரசுக்கு வந்த தகவலின்படி, அங்கே அகற்றப்பட்ட பகுதியில் ஆக்கிரமிப்புகள் வரவில்லை என்று தகவல் கொடுத்திருக்கிறார்கள். மீண்டும் அங்கே ஆக்கிரமிப்புகள் வந்திருக்குமானால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு அவைகள் அங்கிருந்து அகற்றப்படும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** தலைவரவர்களே, திரு. ஜெயச்சந்திரன் அவர்கள் கூறியதுபோல, ஆக்கிரமிப்புகள் நீக்கப்படுவதும், அகற்றப்படுவதும், சிறிது காலம் கழித்து மீண்டும் அவைகள் வருவதும் வழக்கமாக ஆகிவிட்டது. ஆனால் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்ட பிறகு, அந்தச் சாலையை சரியான முறையில் நெடுஞ்சாலைத் துறை பயன்படுத்திக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டால், மீண்டும் ஆக்கிரமிப்புகள் வராமல் தடுக்க முடியும். இது தாம்பரத்தில் ஒரு பிரச்சினையாக இருக்கிற காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் தொடர்ந்து சிறப்புக் கவனம் செலுத்தி, ஆக்கிரமிப்புகளை அறவே அகற்ற நடவடிக்கை எடுப்பது ஒருபுறமும், அகற்றப்பட்ட பிறகு அதைச் சரியான முறையில் பயன்படுத்துவது ஒருபுறமும் புதிய ஒரு நடவடிக்கைகளையும் சம்பந்தப்பட்ட துறை எடுத்ததா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவரவர்களே, அந்த ஆக்கிரமிப்புகளை நாம் எடுக்கிறபோது, அந்த இடத்தைப் பயன்படுத்துவதற்காகத்தான் எடுக்கிறோம். அதை முழுவதுமாகப் பயன்படுத்த வேண்டுமென்பதுதான் அரசினுடைய நோக்கம். அந்த இடத்தைப் பொறுத்த

வரையில், மீண்டும் அங்கே ஆக்கிரமிப்புகள் வந்திருக்குமேயானால், அதை அகற்றி அந்த இடத்தை முழுவதுமாகப் பயன்படுத்திக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** தலைவரவர்களே, அந்த ஆக்கிரமிப்புகள் இருந்ததால் இடையூறுகள் இருந்தன. அவைகள் அகற்றப்பட்ட பிறகு, அவர்கள் வேறு இடம் இல்லை என்ற காரணத்தால், மீண்டும் அங்கேயே வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு வேறு இடங்களைக் கொடுப்பதற்கு அரசு திட்டம் ஏதும் வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் இந்தப் போக்குவரத்து இடைஞ்சலைப்பற்றிக் கூறும்போது, இருங்கலூரிலுள்ள வணிகவரி செக்-போஸ்ட் அருகே இருபுறமும் புறச்சாலைகள் இருந்தாலும், லாரிகளை மெயின் ரோட்டிலேயே நிறுத்திவிடுவதால், அது போக்குவரத்திற்கு இடைஞ்சலாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதையும் கவனிப்பதாகக் கூறினார்கள். அதற்கு முக்கிய காரணம் போக்குவரத்துப் பணியில் ஈடுபட்டுள்ள காவலர்கள் சரியாக இல்லாததுதான். அதற்கும் அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவரவர்களே, தாம்பரத்தைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு வேறு இடம் கொடுக்க முடியுமா என்பதைப் பற்றிப் பார்க்க வேண்டும். ஆனால் அந்த இடத்தைத் தவிர, வேறு இடத்திற்கு அவர்கள் போக விரும்பமாட்டார்கள். காரணம் அந்த இடத்திலே அவர்கள் பல தொழில்கள் வைத்து பழகியிருப்பார்கள். அவர்கள் அந்த இடத்திலே இருந்தால்தான், அந்தத் தொழில்கள் நடக்குமென்ற நிலைகூட அவர்களுக்கு இருக்கலாம். ஆனால் அரசைப் பொறுத்தவரையில், அங்கு இருக்கின்ற இடையூறுகளை நீக்கி, அந்த ஆக்கிரமிப்புகளை அப்புறப் படுத்தியாக வேண்டுமென்ற நிலை இருக்கின்ற காரணத்தால், உடனடியாக அரசால் வேறு இடம் கொடுப்பதற்கு முடியாது என்று கருதுகிறேன். அந்த செக்-போஸ்ட்டைப் பொறுத்தவரை, இரண்டு பக்கமும் வண்டிகள் நிற்பதற்கு வசதியாக இருக்கின்ற வகையில் இடத்தை ஆர்ஜிதம் செய்து அந்த இடங்களை பாதையாக அமைத்து, அதில் வந்து லாரிகள் நிற்க வேண்டுமென்று, பல இடங்களில் நாம் செய்திருப்பதைப்போல, செய்யலாம். சாலை இருந்தாலும் கூட, ஒரு குறிப்பிட்ட நேரத்திலே எல்லா வண்டிகளும் வருகின்ற காரணத்தால், அங்கே அந்த இடையூறு அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் ஏற்பட்டுவிடுகிறது. அதைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கும்.



**திரு. சி. இராமலிங்கம் :** தலைவரவர்களே, தாம்பரம் நெடுஞ்சாலையைப் பற்றிக் கேட்ட கேள்விகளுக்கு, அந்தப் பகுதியில் ஏற்கெனவே கடை வைத்திருப்பவர்கள், குடிசை போட்டிருப்பவர்கள் ஆகியோர் சொல்கின்ற காரணம், மரப் பெட்டி வைத்திருப்பவர்கள், மோட்டார் ரிப்பேர் செய்பவர்கள் எல்லாம் ரோட்டுக்கு வந்துவிடுகிறார்கள். ஆக அவர்களுக்கெல்லாம் இந்த அரசு அனுமதிக்கும்போது, "எங்களுக்கு மட்டும் ஏன் அனுமதிக்கக் கூடாது?" என்று ஒரு கேள்வியைக் கேட்டார்கள். அதுபோல கோவில்கள் இருக்கும் இடங்களில் அனுமதித்திருக்கும்போது எங்களை மட்டும் ஏன் அப்புறப்படுத்த வேண்டுமென்று கேட்டார்கள். இந்தக் கேள்விகள் எல்லாம் நான் சமீபத்திய தேர்தலின்போது பணியாற்றிய நேரத்தில் கேட்ட கேள்வியாகும். அரசு எடுக்கும் நடவடிக்கைகள் முறைப்படி ரீதியாக இருந்தாலும்சரி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினரவர்கள் கேட்கும் கேள்வி என்ன ?

**திரு. சி. இராமலிங்கம் :** மோட்டார் ரிப்பேராக இருந்தாலும்சரி, அவர்களையும் அப்புறப்படுத்தி சாலையைப் பெரிதாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு அரசு விரும்புமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவரவர்களே, அந்த இடத்தைப் பொறுத்தவரையில், ஆக்கிரமிப்பு என்று என்னென்ன இருக்கிறதோ அத்தனையையும் எடுக்க வேண்டுமென்பதுதான் அரசினுடைய நோக்கம். அங்கே என்ன வியாபாரம் நடக்கிறது, அதை யார் வைத்திருக்கிறார்கள் என்பதைப்பற்றி எல்லாம் அரசு பார்க்க முடியாது. ஆனால் கோவில் என்று வரும்போது, ஒரு பெரிய பிரச்சினை பல இடங்களில் உருவாக்கப்பட்டு விடுகிறது. இதைப் பயன்படுத்தி வருகிறார்கள். அதில் சில சிக்கல்கள் வருகின்ற காரணத்தால், சில இடங்களில் கோவில்களில் இருக்கும் ஆக்கிரமிப்புகளை எடுக்கமுடியாத நிலை ஏற்பட்டுவிடுகிறது. இருந்தாலும் போக்குவரத்திற்கு இடையூறாக என்னென்ன இருக்கிறதோ அத்தனையும் அகற்றப்பட வேண்டுமென்பதுதான் அரசினுடைய முழு நோக்கம்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் அளிக்கும்போது, ஆக்கிரமிப்பாளர்களுக்கு எல்லாம் இந்த இடங்களை எடுத்துவிட்டு வேறு இடம் தருவதாக உறுதி கூறினார்கள். இப்படிப்பட்ட உறுதிமொழி தந்தால், இங்கேகூட கோட்டையைச் சுற்றி ஆக்கிரமிப்பு செய்து கொண்டு, சர்க்கார் அவர்களுக்கு மாற்று இடம் தருமென்ற எண்ணம்

[1986 மார்ச் 20

(முற்பகல் 10-15)

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, நான் உறுதிமொழி கொடுப்பதாகச் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்தான் உறுதி சொல்லியது போல் பேசிவிட்டார். நான் சொன்னது ஆக்கிரமிப்பாளர்களை அங்கிருந்து அகற்ற வேண்டும் என்பதுதான் இந்த அரசின் எண்ணம். அவர்களுக்கு நாம் மாற்று இடம் கொடுக்க வேண்டும் என்று எண்ணினாலும், அது அவ்வளவு சுலபமல்ல, அது நடக்காத காரியம் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. அப்படியே வேறு இடம் கொடுத்தாலும்கூட, அவர்கள் அந்த இடங்களை விரும்ப மாட்டார்கள். காரணம் நடைபாதை ஓரத்தில்தான் அவர்களுக்கு வியாபாரம் நடக்கும். மேலும் அருகில் இடம் வாங்குவது என்றால், அங்குள்ள நிலத்தின் விலை என்ன என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அது நிச்சயமாக நடக்காது. எனவே ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என்பதுதான் இந்த அரசின் நோக்கம். மனிதாபிமான அடிப்படையில் இடம் கிடைத்தால், வேறு எங்காவது கொடுப்போம். ஆனால் அதற்காக நிச்சயமாக உறுதிமொழி எதுவும் கொடுக்கப்படமாட்டாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### ஆட்டோ ரிக்ஷாக்கள்.

* 86 **வினா.—திரு. அ. ப. சிவராமன் (டாக்டர் இரா. சனார்த்தனம் சார்பில்) :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோயம்புத்தூர், சேலம் மற்றும் ஈரோடு ஆகிய நகரங்களில், ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள் பயணிகளிடமிருந்து மீட்டர்படி கட்டணம் வசூலிக்க, எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

(இ) இந்நகரங்களில் ஓடும் ஆட்டோ ரிக்ஷாக்களின் எண்ணிக்கை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** (அ) கோயம்புத்தூர், சேலம் மற்றும் ஈரோடு ஆகிய நகரங்களில் எல்லா ஆட்டோ ரிக்ஷாக்களிலும் இயங்கும் நிலையிலுள்ள மீட்டர்கள் பொருத்தப்பட்டு பிரயாணிகளிடம் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத் தொகை மட்டுமே வசூலிக்கப்பட வேண்டும் என்று



1986 மார்ச் 20]

அனைத்து ஆட்டோ ரிக்ஷா உரிமையாளர்களுக்கும் மற்றும் ஓட்டுநர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டு தக்க ஒப்புதலும் அவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது. தவறு செய்யும் ஓட்டுநர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

| (இ) மாவட்டம். | இயங்கி வருகிற ஆட்டோ ரிக்ஷா எண்ணிக்கை. |
|---|---|
| 1. பெரியார் (ஈரோடு) | 643 |
| 2. சேலம் | 1,219 |
| 3. கோவை | 2,132 |

**திரு. அ. ப. சிவராமன் :** தலைவர் அவர்களே, கோவை, ஈரோடு, சேலம் ஆகிய பகுதிகளைப் போலவே தென்னாற்காடு மாவட்டத்தில் கடலூர், விழுப்புரம், பண்ருட்டி ஆகிய பகுதிகளிலும் ஆட்டோ ரிக்ஷாக்கள் செயல் படுகின்றன. அவற்றில்கூட மீட்டர்கள் பொருத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** அரசின் உத்திரவுப்படி, எங்கெல்லாம் ஆட்டோ ரிக்ஷாக்கள் ஓடுகின்றனவோ அங்கெல்லாம் ஆட்டோ ரிக்ஷாக்களில் மீட்டர்கள் பொருத்தப்பட்டு இயக்கப்பட வேண்டும். ஆனால் நடைமுறையில் எல்லா இடங்களிலும் மீட்டர் பொருத்தப்பட்டு ஓட்ட முடியாத வகையில் பல சிக்கல்கள் இருப்பதை நாம் உணர்ந்திருக்கிறோம். சென்னை, கோவை, மதுரை போன்ற பெரிய நகரங்களில் இந்தப் பிரச்சினை பெரிதாக வருவதில்லை. ஆனால் சிறிய நகரங்களில்தான் இந்தப் பிரச்சினை மிகவும் பெரிதாக இருக்கிறது. மீட்டர் போட்டு ஆட்டோ ரிக்ஷாக்களை ஓட்டுகிற அளவுக்கு அதிகமான எண்ணிக்கையில் அங்கெல்லாம் பயணிகள் வருவதில்லை. மேலும் அதிகமான தூரத்திற்கு அவர்களுக்குச் செல்வதற்கான வாய்ப்பும் இருப்பதில்லை. இதன் காரணமாக ஆங்காங்குள்ள மாவட்ட ஆட்சித் தலைவர், போக்குவரத்து அதிகாரிகள் மற்றும் காவல் துறை அதிகாரிகள் ஆகியவர் களைக் கொண்டு கலந்து ஆலோசித்து எந்த முறையில் கட்டணத்தை நிர்ணயிக்கலாம் என்று இப்போது ஆலோசித்து வருகிறோம். முதற்கட்டமாக கோவையில் இதைக் குறித்து முடிவெடுக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. எதிர்காலத்தில் அந்த அடிப்படையில் மற்ற இடங்களுக்கும் நிர்ணயிக்கப்படும். அதன் அடிப்படையில் மீட்டர் பொருத்துவதற்கான நிலையை உருவாக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1986 மார்ச் 20

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: ஆட்டோ ரிக்ஷாக்களில் மீட்டர் பொருத்தப்பட்டு அது இயங்குகிற நிலையில் இருந்தாலும்கூட, ஓட்டுநர்கள் அதை இயக்குவதற்கு ஒப்புவதில்லை. இதுதான் இப்போது இருக்கிற பிரச்சினை. இந்தப் பிரச்சினைதான் கோவை, ஈரோடு, சேலம் போன்ற நகரங்களில் இருக்கிறது. அது என்னுடைய சொந்த அனுபவமும்கூட. எனவே ஆட்டோ ரிக்ஷாக்களில் பொருத்தப்பட்டுள்ள மீட்டர்களை இயக்குவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன். டெல்லியில் ஆட்டோ ரிக்ஷா நிலையத்திலேயே காவல் துறையினரை நிற்க வைத்து அவைகளின் எண்ணிக்கையை அவர்கள் குறித்துக் கொள்வதுடன் எங்கே செல்கிறார்கள் என்பதையும் குறித்துக் கொள்கிற முறை இருக்கிறது. அந்த முறையை நாம் பின்பற்றலாமே. அதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தம் கருத்தைத் தெரிவிப்பாரா?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி: காவல் துறையினரைப் போட்டு ஆட்டோ ரிக்ஷாக்களின் எண்களைக் குறித்து அனுப்புவதைவிட அவர்களைக் கொண்டே ஆட்டோக்களை ஓட்ட வைக்கலாமே. இதற்காக என்று நாம் எத்தனை பேரைப் போட்டாலும், அப்படிச் செய்வது என்பது மிகவும் கடினமான காரியம். எங்கெங்கே பிரச்சினைகள் உருவாகின்றனவோ அங்கெல்லாம் இப்போதும் காவல் துறையினர் நடவடிக்கைகளை கடுமையா மேற்கொள்ள முயற்சிக்கிறார்கள். ஆனால் அப்படி நடவடிக்கை எடுச் போதுதான் சிக்கல்களோ வருகின்றன. கடந்தமுறை சட்டப் பே உறுப்பினர் ஒருவர் தமக்கு ஏற்பட்ட அனுபவத்தை எடுத்துச் சொ இங்கே ஒரு பிரச்சினையாகவே அதைக் கிளப்பி, "நடவடிக்கை எடுக் போகிறீர்களா இல்லையா?" என்று கேட்டதன் அடிப்படையில் கடுமையா நடவடிக்கை எடுக்கப்பட்டது. உடனே என்ன ஆகிறது என்றால் தொழிலாளர்கள் போராட்டம் என்று வருகிறபோது, எல்லாத் தொழி சங்கங்களும் கலந்து கொண்டு ஆதரவாகப் பேசுகிற நிலை ஏற்பட்டுவிடுகிற காரணத்தால், நம்மால் ஒன்றும் செய்ய முடிவதில்லை. எல்லோருமாகச் சேர்ந்து அரசாங்கத்தை நிர்ப்பந்தப்படுத்துகிற நிலைமை ஏற்படுகிறது. இதில் அனைத்துக் கட்சிகளையும் நான் கேட்டுக் கொள்ள விரும்புவது இதுதான். தவறு நடக்கிறது என்று எல்லோரும் ஒப்புக்கொள்கிறோம். ஆனால் அதற்காகக் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கிறபோது, தொழிற் சங்கங் களுக்கு ஆதரவு கொடுத்தால், நம்மால் பெரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியாது என்பதால், தயவுசெய்து ஆதரவு கொடுக்க வேண்டாம். அப்போது தான் அத்தகைய ஒரு பெரிய மாற்றத்தை உருவாக்க



1986 மார்ச் 20]

நம்புகிறேன். இல்லையென்றால் அரசு எந்த முயற்சி எடுத்தாலும் தோற்றுப் போகிற நிலைதான் ஏற்படும். அனைவரின் ஒத்துழைப்பும் ஆதரவும் இல்லாமல் இதைச் செய்ய முடியாது. கடுமையான ஒரு கட்டத்தில்தான் நடவடிக்கை எடுக்கிறோம். கோவையில்கூட அப்படிப்பட்ட நிலையில்தான் ஒரு ஒப்பந்தத்திற்கு வழி ஏற்பட்டது. இதை எல்லா இடங்களிலும் நாம் செய்ய விரும்புகிறோம். அதற்கு எல்லாத் தொழிற்சங்கங்களும் ஒத்துழைப்பு தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-20)

## இலங்கையிலிருந்து வரும் தமிழ் அகதிகள்

* 87 வினா.—திரு. சி. ஆர். கோலப்பா (திரு. காடுவெட்டி கண்ணப்பன் சார்பில்): மாண்புமிகு மறுவாழ்வு-வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் அவர்கள் பின்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இலங்கையில் இருந்து அகதிகளாக வரும் தமிழர்களை, வெளி மாநிலங்களிலும் குடியமர்த்த, மைய அரசு மூலம், மாநில அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. கா. இராமசாமி: (அ) இலங்கையிலிருந்து அகதிகளாக வரும் தமிழர்களை வெளி மாநிலங்களில் குடியமர்த்தும் எண்ணம் இல்லை.

(இ) வினா எழவில்லை.

* 88. வினா.—திரு. அ. ப. சிவராமன், திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்) மற்றும் திரு. க. சுப்பு (டாக்டர் இரா. சனார்த்தனம் சார்பில்): மாண்புமிகு மறுவாழ்வு-வேலை வாய்ப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக் களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) 1983 ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரத்திற்குப்பின், இலங்கை யிலிருந்து 15—3—1985 வரை, அகதிகளாக தாயகம் திரும்பிய, இலங்கைத் தமிழர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்கள் எங்கெங்கு குடியமர்த்தப்பட்டுள்ளனர்?

(உ) அவர்களுக்கு இதுவரை அரசு செலவழித்துள்ள தொகை எவ்வளவு?

(ஊ) இதில் மத்திய அரசின் பங்கு எவ்வளவு?

(ஐ) இச்செலவு முழுவதையும் மத்திய அரசே ஏற்றுக்கொள்ளும்படி, தமிழக அரசு வற்புறுத்துமா?

**மாண்புமிகு திரு. தா. இராமசாமி:** (அ) 15—3—1985 வரை 84,950 பேர்கள்; 17—3—1986 வரை 1,25,779 பேர்கள்.

(இ) 17—3—1986 வரை 28,463 ஏழை அகதிகள் மண்டபம் கொட்டப்பட்டு முகாம்கள் உள்பட 16 மாவட்டங்களில் உள்ள அகதிகள் முகாம்களில் குடியமர்த்தப்பட்டுள்ளனர். மற்றவர்கள் உறவினர்கள் நண்பர்களுடன் தனியாக வசிக்கின்றனர்.

(உ) பிப்ரவரி 1986 முடிய அகதிகளுக்கு அரசு ரூ. 555.47 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

(ஊ) முழுமையாக மைய அரசால் ஏற்கப்படுகின்றது

(ஐ) வினா எழவில்லை.

**திரு. அ. ப. சிவராமன்:** இந்த நிவாரண முகாம்களிலிருந்து ஸ்ரீலங்கா தமிழர்கள் சிறுசிறு குழுக்களாகப் பிரிந்து அவர்களைச் சார்ந்துள்ள முகாம்களிலிருந்து வந்து தங்களுடைய தேவைக்காக நன்கொடை என்ற பெயரால் பிச்சை எடுக்கும் நிலைமை இருப்பது அரசுக்குத் தெரியுமா? அதைத் தவிர்க்க அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

* **மாண்புமிகு திரு. தா. இராமசாமி:** தமிழகத்திலே இன்றைய தினம் மூன்று மாவட்டங்களைத் தவிர 16 மாவட்டங்களில் 165 மையங்களில் ஸ்ரீலங்கா தமிழர்கள் குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். மூன்று பெரியவர்கள், இரண்டு சிறியவர்கள் ஆகிய ஐந்து பேர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு ரூபாய் 357.50 என்றும், அதற்கும் மேல் ஒரு பெரியவர் அக்குடும்பத்தில் இருந்தால் அவருக்காக ரூ. 82.50 என்ற அளவிலும், 12 வயதுக்குட்பட்ட சிறுவர் இருந்தால் ரூ. 27.50 என்றும் மேலும் கூடுதலாக பணம்—ஒவ்வொரு மாதமும் வழங்க வேண்டுமென்று இருந்தாலும்—15 நாட்களுக்கு ஒரு முறை வழங்கப்படுகிறது. அவர்களுக்கு ஒரு கிலோ அரிசி 57 காசுகள் என்ற அளவில் மானியமாக வழங்கப்படுகிறது. மேலும் அனைத்து மையங்களிலும் ஆங்காங்கே



இருக்கக் கூடிய அதிகாரிகள் அரசின் ஆலோசனையின்படி சிறப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட குறைகளை எந்த முகாம்களிலும் எங்களிடம் சொன்னதில்லை. அப்படிப்பட்ட நிலை அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால், அதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

**திரு. அ. ப. சிவராமன்:** இதுபோன்ற புகார்கள் வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் அதை எழுத்துமூலமாக அமைச்சர் அவர்களுக்குத் தருகிறேன். இருந்தாலும் ஸ்ரீலங்கா தமிழர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தந்து அவர்களுடைய துயரைப் போக்க இந்த அரசு முன்வருமா? நிரந்தர வேலை வாய்ப்பை அரசு ஏற்படுத்தியிருக்கிறது என்றால், எங்கெங்கே எவ்வளவு பேருக்கு அந்த வாய்ப்பை ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. தா. இராமசாமி:** 1969 ஆம் ஆண்டு ஏற்பட்ட சாஸ்திரி-பண்டா ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஸ்ரீலங்காவிலிருந்து வருகின்றவர்கள் தங்களுக்கு வேலை வாய்ப்புகள் வேண்டும் என்று எழுதித் தந்தால், வேலை வாய்ப்பை அரசாங்கம் ஏற்படுத்தித் தந்திருக்கிறது. மத்திய அரசு ஏற்படுத்தித் தந்துள்ள விதிகளின்படி, அவர்களுக்கு மறுவாழ்வு ஏற்படுத்த மாநில அரசும், மைய அரசும் பாடுபட்டு வருகிறது.

ஆனால் 1983 ஆம் ஆண்டு திடீரென்று இனக் கலவரம் அங்கே உருவாகி இராமேஸ்வரம் கடல் மூலமாக தனுஷ்கோடிக்கு ஏராளமானவர்கள் வந்ததால், அவர்கள் இன்றைய தினம் அங்கே குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் ஸ்ரீலங்கா குடியுரிமை பெற்றவர்கள். இனக் கலவரம் ஒடுக்கப்பட்டு அமைதியான சூழ்நிலை உருவாகியதற்குப் பிறகு மீண்டும் ஸ்ரீலங்கா செல்லக்கூடிய நிலையிலே உள்ளவர்கள். ஆகவே அவர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பை நம்மாலே கொடுக்க முடியாது. தஞ்சம் என்று வந்த வகையில் இருக்க இடம், உடுக்க உடை, உண்ண உணவு அளித்து மற்றும் அனைத்து பராமரிப்பு வேலைகளையும் அரசு செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** இவ்வாறு தமிழகத்திற்கு வந்துள்ள அகதிகளை மீண்டும் ஸ்ரீலங்காவிற்கு வருமாறு அந்த நாட்டின் அதிபர் அழைப்பு விடுத்திருப்பதாக பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறதே, அது உண்மையா? அப்படி வந்த செய்தி நல்லெண்ணத்தின் அடிப்படையிலே அந்தரங்கச் சுத்தியுடன் கொடுக்கப்பட்டிருக்கிறதா? இது குறித்த

ஸ்ரீலங்காவிலிருந்து வந்து இங்கேயுள்ள தமிழர்களின் மனப் பிரதிபலிப்பு என்னவாக இருக்கிறது? இங்கேயுள்ள ஸ்ரீலங்கா தூதுவர் மூலமாகத் தொடர்பு கொண்டு அவர்களுடைய உண்மையான எண்ணத்தை இந்த அரசு தெரிந்து கொண்டிருக்கிறதா? அதை நாங்கள் அறியலாமா?

(முற்பகல் 10-25.)

**மாண்புமிகு திரு. தா. இராமசாமி:** அந்தச் செய்தியை, ஸ்ரீலங்காவில் இருக்கக்கூடிய அமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார்கள். ஸ்ரீலங்கா அகதிகள் அங்கே போக முற்பட்டிருக்கின்றார்கள். இருந்தாலும் அங்கே இருக்கக்கூடிய கடற்படை அவர்களை சுட்டு வீழ்த்தி இருக்கின்றது. இருந்தாலும் அவர்கள் பிடியிலிருந்து தப்பித்து மீண்டும் கரைக்கு வந்துவிட்டார்கள். ஒருசிலர் அப்படித் திரும்பி வந்துவிட்டார்கள். முகாம்களில் இருந்தவர்கள் அல்ல. சில இடங்களிலே அகதிகளாக இருந்தவர்கள் அங்கே சென்றிருக்கின்றார்கள், தனித்தனியாக வீடுகளிலே இருந்தவர்கள் சென்றிருக்கின்றார்கள். அதற்குப் பின்னாலே அவர்கள் கெடு கொடுத்து சனிக்கிழமையிலிருந்து தக்க பாதுகாப்பு கொடுக்கப்படும் என்ற அளவிலே அறிவிப்புகளும் இருந்தன. நானும் உடனடியாக அந்தக் கப்பற்படைத் தலைவருடன் தொடர்பு கொண்டு அந்தப் பகுதிக்குச் சென்று பார்த்தேன். அந்த அகதிகள் சனிக்கிழமையிலிருந்து எந்த அகதி முகாம்களிலிருந்தும் செல்லவில்லை. நான் அகதிகள் முகாமிலே சென்று கேட்டுப்பார்த்தேன். அப்படிக் கேட்டபோது அவர்கள் சொன்னார்கள். எங்கள் உயிருக்கும், உடலுக்கும், உடமைக்கும் பாதுகாப்பான நிலை இல்லாமல் இருக்கின்றது. மீண்டும் நாங்கள் அங்கு சென்று எங்களுடைய உயிரை, உடலை அழித்துக்கொள்ளத் தயாராக இல்லை என்று சொல்லக் கூடிய அளவுக்குத்தான் முகாம்களிலே உள்ள அகதிகள் இருந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி:** தலைவர் அவர்களே, ஸ்ரீலங்கா வாழ் தமிழர் பிரச்சினையில் மைய அரசு இங்கு வருகின்ற அகதிகளுக்கு எவ்வளவு பணம் ஒதுக்கியிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. தா. இராமசாமி:** ஸ்ரீலங்கா தமிழர்கள் இனக் கலவரத்தினால் பாதிக்கப்பட்டு இதுவரை வந்துள்ள தமிழர்களுக்காக செலவழிக்கப்பட்ட பணம் ரூ. 555.47 லட்சம். இத்தொகை முழுவதையும் மைய அரசு அனுமதிக்கக் கோரப்பட்டுள்ளது.



**திரு. எம். பி. சுப்பிரமணியம்:** தலைவர் அவர்களே, 1983-லேயிருந்து இதுவரையில் அகதிகளுக்காக என்று ஒரு குறிப்பிட்ட தொகை சொல்லப் பட்டது. ஏற்கெனவே துணைக் கேள்விக்கு பதில் சொல்லப்பட்டது. அந்தப் பணம் முழுவதையும் மாநில அரசு கொடுப்பதாகச் சொன்னார்கள். இப்போது மைய அரசு என்பதால், இரண்டுக்கும் விளக்கம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. தா. இராமசாமி:** தலைவர் அவர்களே, அது மத்திய அரசு அகதிகளுக்காக ஒதுக்கியுள்ள பணம்தான். மத்திய அரசுப் பணம் மத்திய அரசிலிருந்து வருவதற்குக் காலதாமதம் ஆகின்ற காரணத்தினால், மைய அரசு நிதியை எதிர்பார்த்துக் கொண்டு இல்லாமல், மாநில அரசே அதற்கான செலவுகளைச் செய்து கொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எம். பி. சுப்பிரமணியம்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தது எந்தக் காலம் வரை என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. தா. இராமசாமி:** தலைவர் அவர்களே, அது 28—2—1986 வரையில் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## நீர்பாசன வாய்க்கால்.

*** 89 வினா.—திரு. சி. ஆர். கோலப்பா (செல்வி ஆ. லீலாவதி சார்பில்):** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், வாலாஜாபாத் ஒன்றியம், தென்னேரி கிராமத்தில் உள்ள ஏரியிலிருந்து வாரணவாசி, ஆம்பாக்கம் போன்ற கிராம விளை நிலங்களுக்கு தண்ணீர் செல்லும் வாய்க்காலை, ஆழப்படுத்தி மேம்படுத்தும் கருத்துரு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** (அ) மற்றும் (இ) இக்கால்வாய் ஏற்கனவே ஆழப்படுத்தி மேம்பாடு செய்யப்பட்டு விட்டதால் வேறு எதும் [illegible] கற்போது அரசின் ஆய்வில் இல்லை.

## மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகள்.

*90 வினா.—திரு. சி. இராமலிங்கம் (டாக்டர் இரா. சனார்த்தனம் சார்பில்): மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கேரள மாநிலத்தில், மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளின் உபரி நீரைத் தமிழ் நாட்டிற்குத் திருப்பி, தமிழகத்தின் வறட்சிப் பகுதிகளுக்கு பாசனமளிப்பது குறித்து, இரு தரப்புப் பேச்சுவார்த்தை நடத்துவது பற்றி, கேரள அரசிடமிருந்து பதில் ஏதேனும் பெறப்பட்டதா?

(இ) ஆம் எனில், இரு தரப்புப் பேச்சுவார்த்தை எப்பொழுது நடைபெறும்?

(உ) இணைத்துக்கடவு-புளிப்பாறை அருகில் ரூ. 2½ கோடி செலவில் அணை கட்டும் கருத்துரு ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

(எ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: (அ) கேரள அரசிடமிருந்து இதுவரை பதில் வரவில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

(உ) ஆம்.

(எ) தற்பொழுது ஆய்வு நிலையில் உள்ளது.

கவிஞர் முத்துலிங்கம்: தலைவர் அவர்களே, மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளில் உபரி நீரைப் பயன்படுத்த ஆய்வுக் குழு ஏதேனும் நியமிக்கப்பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: தலைவர் அவர்களே, மேற்கு நோக்கிப் பாய்கின்ற ஆறுகளில் உள்ள உபரி நீரைப்பற்றி ஆய்வு செய்ய 1976 ஆம் ஆண்டு மத்திய அரசு தொழில் நுட்ப ஆய்வுக் குழு ஒன்றினை அமைத்தது. அந்தக் குழு கேரள மாநிலத்தில் ஒரு சில ஆறுகளில் உபரி நீர் இருப்பதாகவும் அந்த உபரி நீரை தமிழ் நாடு பயன்படுத்திக்கொள்ளக் கூடிய அளவுக்கு திட்டங்களை உருவாக்கலாம் என்றும் அன்றைக்கே அறிக்கை தந்தது. அந்தக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் கேரளத்தில்





விமலாபுரம், அச்சன்கோயில் ஆறு, கரமனா போன்று மற்றும் சில ஆறுகளின் வாயிலாக 46.73 டி.எம்.சி. மேற்பரப்பு நீரையும், நிலத்தடி நீர் உட்பட 67.59 டி.எம்.சி. நீரை தமிழக அரசு பயன்படுத்திக்கொள்ளக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன என்று சொல்லியிருக்கின்றார்கள். அப்படி அவர்கள் சொல்லியும் கேரள அதிகாரிகள் அதை ஒப்புக்கொள்ளவில்லை.

(முற்பகல் 10-30)

அதற்குப் பிறகு இன்னொரு குழுவையும் மத்திய அரசு அமைத்தது. அந்தக் குழு அரபிக் கடலில் கலக்கிற நீர் மற்றும் அதன் பயன்பாடு பற்றி ஆய்வு செய்து, பரிந்துரை செய்வதற்காக திரு. சி. வி. கோல் என்ற வல்லுநர் தலைமையில் அமைக்கப்பட்டது. அவ்வாறு அமைக்கப்பட்ட குழுவில் கேரள அரசு அதனுடைய தரப்பில் புள்ளிவிவரங்களைத் தரும்போது, அரபிக் கடலில் கலக்கக்கூடிய அளவுக்கு இருக்கும் தண்ணீர் 302.5 டி.எம்.சி. என்றும், அதில் பயன்படுத்தக்கூடிய அளவு 190.5 டி.எம்.சி. என்றும், தற்போது பயன்படுத்துவது 158.60 டி.எம்.சி. என்றும், அதை நோக்குங்கால் உபரி 31.9 டி.எம்.சி. என்றும் சொல்லியிருக்கிறது. அந்த முறையில் ஒரு குழுவிலே உபரி நீர் இல்லை என்றும், இன்னொரு குழுவில் உபரி நீர் இருக்கிறது என்றும் சொல்லியிருக்கிறது.

## தன்னிறைவுத் திட்டம்.

*63 வினா.—திரு. அ. ப. சிவராமன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தமிழகத்திலுள்ள அனைத்து நகராட்சிகளிலும் தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆம்.

திரு. அ. ப. சிவராமன்: தலைவரவர்களே, தன்னிறைவுத் திட்டப் பணியை முடிக்க ஏதேனும் கால வரையறை உள்ளதா? அந்தக் காலவரையறைக்குள் பணிகளை முடித்த நகராட்சிகள் எத்தனை? பணிகளை முடிக்காத நகராட்சிகள் எத்தனை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் பணிகளை நகராட்சிகள் முடிக்க காலவரையறையை நிர்ணயிக்கவில்லை. ஓராண்டுக்குள் வேலைகளை நடத்தி, முடிக்க வேண்டுமென்று சொல்லி, பணத்தை ஒதுக்குகிறோம். இந்தத் திட்டம் 1982-83 ஆம்

ஆண்டு அலக்கப்பட்டது. 1982-83 ஆம் ஆண்டில் 20 நகராட்சிகளுக்கும் 1983-84 ஆம் ஆண்டில் 31 நகராட்சிகளுக்கும், 1984-85-ல் 30 நகராட்சிகளுக்கும், 1985-86-ல் 25 நகராட்சி, நகரியங்களுக்கும் பணத்தை ஒதுக்கியிருக்கிறார்கள். அந்தந்த ஆண்டில் அந்தப் பணிகளை முடிக்க வேண்டும். அப்படி முடிக்காவிட்டால், அடுத்த ஆண்டு திட்டத்தை நடத்த அனுமதிக்கிறோம்.

**திரு. அ. ப. சிவராமன் :** தலைவரவர்களே, இதுபோன்ற பணிகளை முடிக்காத நகராட்சிகள் நிறைய இருப்பதாக பொது மக்களிடமிருந்து புகார்கள் வந்த வண்ணம் இருக்கின்றன. இதைக் கருத்திலே கொண்டு, பணி முடிக்காத நகராட்சிகளில் பணிகளை துரிதப்படுத்தி, பணிகளை முடிக்க உத்தரவிட அரசு முற்படுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, அரசுக்கு அப்படித் தகவல் இல்லை. மாண்புமிகு உறுப்பினரவர்கள் தகவல்களைத் தந்தால், அதுபற்றி நடவடிக்கை எடுக்கலாம்.

### நகராட்சிகள்

*** 64 வினா.—திரு. அ. ப. சிவராமன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்தில், தன்னிறைவு பெற்ற நகராட்சிகள் எத்தனை ?

(இ) பற்றாக்குறை நகராட்சிகள் எத்தனை ?

(உ) பற்றாக்குறை நகராட்சிகளின் செலவினங்கள், எந்த அடிப்படையில் அரசு ஏற்கிறது ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) 27.

(இ) 79.

(உ) பற்றாக்குறை நகராட்சிகளின் நிர்வாகச் செலவுகளை மேற்கொள்ள, அரசு அந்நகராட்சிகளுக்கு வழிவகை முன்பணமோ அல்லது குறுகிய கால கடனோ, அவ்வப்போது, தேவைக்கேற்ப அளிக்கிறது.

**திரு. அ. ப. சிவராமன் :** தலைவரவர்களே, பஞ்சாயத்து ஒன்றியங்களுக்குக் கொடுப்பது போன்று, நகராட்சிகளுக்கு மானியத் தொகை தரப்படுமா ? அப்படித் தர அரசு முன்வருமா ?



**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தருவதுபோல நகராட்சிகளுக்குத் தருவதாக உத்தேசமில்லை. இப்போது அப்படித் தருவதுமில்லை.

**திரு. அ. ப. சிவராமன் :** தலைவரவர்களே, நகராட்சிகளின் வருவாய் மிகக் குறைவாக இருப்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவார்கள். எனவே அதைக் கருத்திலே கொண்டுதான் நிதிநிலை அறிக்கையில் கேளிக்கை வரியை 10 சதவிகிதம் உயர்த்தியிருக்கிறார்கள். அதை மாண்புமிகு அமைச்சரவர்கள் உணர்ந்திருப்பதால், மேலும் நகராட்சிகளின் நிதி வருவாயைப் பெருக்க திட்டமிட்டு, அவர்களை இந்த அரசு ஊக்குவிக்குமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, பல நகராட்சிகளில் நிதிநிலைமை சரியில்லை என்பதை அரசு உணர்ந்துதான், இதுவரையில் இருக்கிற வரியை உயர்த்தக்கூடாது என்ற கட்டுப்பாட்டை இப்போது தளர்த்தி இருக்கிறோம். புதிதாக ‘குவின்குவினியல் ரெவ்யூ’ ஆரம்பிக்க வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. அதற்கான அதிகாரிகளை நியமிக்க இருக்கிறோம். 15 ஆண்டுகளாக வரியே உயர்த்தப்படாமல், அதே நிலையில் வரியை வைத்துவிட்டு, பணியாற்றும் ஊழியர்களுக்கு சம்பளத்தை உயர்த்தி வந்துள்ளதால், பல நகராட்சிகளில் பணமில்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதைத் தவிர்க்க, வர இருக்கும் ஆண்டுகளில் நகராட்சிகளே நிதி ஆதாரங்களைத் தேட வழிவகை செய்ய வேண்டுமென்பது அரசினுடைய நோக்கமாகும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(முற்பகல் 10-35)

### 2. அறிவிப்புகள்.

**(1) 1985-86 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை நிதிநிலை அறிக்கை மற்றும் உடனடி செலவிற்கான மானியக் கோரிக்கை இவற்றை அளித்தல் குறித்து.**

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** 1985-86 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை நிதிநிலை அறிக்கை மற்றும் உடனடி செலவிற்கான மானியக் கோரிக்கை ஆகியவற்றை 24—3—1986 திங்கட்கிழமையன்று, மேலவைக்கு அளிக்க வேண்டுமென ஆளுநர் அவர்கள் தீர்மானித்துள்ளார்கள்.

### (2) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு பற்றி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் கீழ்க்கண்ட நிகழ்ச்சி விபரம் முடிவு செய்யப்பட்டது :—

| | | |
|---|---|---|
| மார்ச் 20 | — | 1986-87 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் மீது பொது விவாதம். |
| மார்ச் 21 | — | கூட்டம் இல்லை. |
| மார்ச் 22 மற்றும் 23 | — | விடுமுறை. |
| மார்ச் 24 | — | (1) 1985-86 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த இறுதி துணை விவர அறிக்கையை அளித்தல். (2) 1986-87 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் மீது பொது விவாதம். |
| மார்ச் 25 | — | 1985-86 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த இறுதி துணை விவர அறிக்கையின் மீது விவாதம். |
| மார்ச் 26 | — | 1986-87 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் மீது பொது விவாதம். |
| மார்ச் 27 (மாலை 4 மணி) | — | (1) உடனடி செலவிற்கான மானிய முன் அனுமதி கோரிக்கை மற்றும் இறுதி துணை விவர அறிக்கை சம்பந்தமான நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவுகளை ஆய்வு செய்தல். (2) 1986-87 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் மீது பொது விவாதம். |



| | | |
|---|---|---|
| மார்ச் 28 | — | தூய வெள்ளிக்கிழமை—விடுமுறை. |
| மார்ச் 29 மற்றும் 30 | — | விடுமுறை. |
| மார்ச் 31 மற்றும் ஏப்ரல் 1 | — | கூட்டம் இல்லை. |
| ஏப்ரல் 2 | — | 1986-87 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் மீது பொது விவாதம். |
| ஏப்ரல் 3 | — | 1986-87 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் மீதான விவாதமும் பதிலுரையும். |

மேலவை ஏப்ரல் 3 ஆம் தேதி முடிவடைந்து, மீண்டும் ஏப்ரல் 15 ஆம் தேதி கூடும். மேற்கொண்டு நிகழ்ச்சி விபரம் பின்னர் முடிவு செய்யப்படும். மேலவை வழக்கம்போல் காலை 10 மணிக்குக் கூடும்.

### 3. 1986-87 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின்மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

* **திரு. க. அருணாசலம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீதான விவாதத்தில் கலந்துகொள்ள எனக்கு வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கை வரியே இல்லாத அறிக்கை. இது புரட்சிகரமான ஓர் அறிக்கை. புது வரியே இல்லாத நிலை இருப்பதால், பொது மக்களுடைய வாங்கும் சக்தி அதிகரிக்கும் என்று நம்புகிறேன். ஆனால் பொது மக்கள், இதனைப் பயன்படுத்திக்கொண்டு தங்களுக்கு முக்கியமாக வேண்டிய அத்தியாவசியமான பொருள்களை மட்டும் வாங்க வேண்டும். அப்படிச் செய்தால்தான், அரசுக்கும் வருவாய் பெருக வாய்ப்பிருக்கும். அவர்களுடைய வாழ்வும் வளம் பெறும். இப்படிப்பட்ட வரியே இல்லாத பட்ஜெட் வருவதன் மூலம், தொடர்ந்து நாம் பொதுவாக விரும்புகிற சமத்துவ சமுதாயம் உருவாக வாய்ப்பாக இருக்கும்.

அடுத்து, வேலைவாய்ப்பில்லாமல் நிறைய பேர் திண்டாடிக் கொண்டிருக்கும் நிலையில், கதர் கிராமத் தொழில் மூலம் ஏழு லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்போவதாக அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். வரியே இல்லாத பட்ஜெட்டை இந்த அரசு கொண்டு வந்திருக்கும் நிலையில் மக்களுடைய வாங்கும் சக்தியைப் பயன்படுத்தி, கதர் கிராமத் தொழில் மூலம் உற்பத்தியாகிற பொருள்களை மக்கள் வாங்கினால், இன்னும் கூடுதலான பேர்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்க முடியும். பெரும் தொழில்கள் மூலம் பொருள்கள் அதிகமாக உற்பத்தியாகும். ஆனால் வேலைவாய்ப்பு மிகவும் குறைவான பேர்களுக்குத்தான் கிடைக்கும். ஆகவே, கிராமக் கைத்தொழில்களுக்கு ஆக்கம் அளிக்கும் வகையில் இந்த பட்ஜெட்டில் உதவி செய்திருப்பதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன்.

அடுத்து, கள்ளுக் கடைகள் மற்றும் சாராயக் கடைகளை மூடுவது குறித்து ஆளுநர் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்கள். வரும் ஜனவரி 1 ஆம் தேதியிலிருந்து கள்ளுக் கடைகளை மூடுவது அமுலுக்கு வரும் என்று அதிலே உறுதி கூறியிருந்தார்கள். இப்பொழுது அதனை அமுல்படுத்துவது குறித்து கொஞ்சம் சந்தேகம் இருப்பது மாதிரி இந்த நிதிநிலை அறிக்கையிலே தோற்றமளிக்கிறது. ஏனென்றால் அதன்மூலம் ஏராளமாக வருவாய் இழப்பு ஏற்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இதனால் ஆண்டுக்கு 250 கோடி ரூபாய்க்கு வருவாய் இழப்பு இருக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படி அரசுக்கு வருவாய் இழப்பு இருந்தாலும், குடிப்பவர்கள் குடிக்காமல் இருப்பதினால் அந்த ரூபாயைக் கொண்டு வீட்டுக்கு வேறு உபயோகமான அத்தியாவசிய நுகர்பொருளை வாங்குவார்கள். ஆக, அந்தப் பணம் வேறு வகையில் அரசுக்கு வரும். ஆகவே துணிச்சலோடு முன்பே அறிவித்தவாறு மதுவிலக்குத் திட்டத்தை ஜனவரி 1 ஆம் தேதியிலிருந்து அமுல்படுத்த வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். முன்பு

(முற்பகல் 10-40)

சொன்னமாதிரி "நாங்கள் கடைகளை மூடிவிட்டோம். மக்கள் எல்லாம் பக்கத்து மாநிலங்களுக்குச் சென்று குடிக்கிறார்கள். எனவே பழையபடி கடைகளைத் திறக்க வேண்டும்" என்று சொல்லி இந்தக் கதை திரும்பத் திரும்ப வந்துகொண்டிருக்கும். எனவே மதுக் கடைகளை முற்றிலுமாக ஒழிப்பது என்று முடிவு செய்வார்கள் என்று நம்புகிறேன். நிச்சயமாக மதுக் கடைகள் மூடப்படும் என்கிற நிலை இருக்க வேண்டும். மத்திய சர்க்கார்



நிதி உதவி கொடுத்தாலும் சரி, கொடுக்காவிட்டாலும் சரி, மதுக் கடைகள் மூடப்படும் என்கிற நிலை இருக்க வேண்டும். கடைகளை மூடிவிட்டு, மத்திய சர்க்காரிடமிருந்து அதிக நிதி பெறுவதற்காக நாம் வாதாடுவோம் என்று சொல்வார்களானால் அதுதான் சரியான நிலையாக இருக்க முடியும்.

மதுவை ஒழிப்போம் என்று சொல்கிறபோது, பிராந்தி, ஒயின் கடைகள் ஒருவேளை இருக்கலாமோ என்கிற சந்தேகம் ஏற்படுகிறதென்று மக்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றித் தெளிவாக நிதிநிலை அறிக்கையில் ஒன்றும் இல்லை. முற்காலத்தில் காமராஜர், இராஜாஜி காலத்தில் இவை மிகவும் மறைவாக இருந்தன. மருத்துவக் காரியங்களுக்காக, அவசியமாகத் தேவைப்படுபவர்களுக்கு வேண்டுமென்பதற்காக பிராந்தி, விஸ்கி கடைகள் இருந்தாலும், அவை எவ்வித விளம்பரமுமின்றி இருந்தன. வெளிப்படையான இடங்களில் அவற்றை விற்கக்கூடாது என்றெல்லாம் சொல்லியிருந்தார்கள். இவற்றைக் குடித்து இளைஞர்கள் கெட்டுப் போக வாய்ப்பு கொடுக்கக்கூடாதென்று அவ்வாறு செய்திருந்தார்கள். அது வெற்றிகாமாகத்தான் நடந்துகொண்டிருந்தது. ஆகவே மறுபடியும் இந்தக் கடைகளை விளம்பரப்படுத்தி, நவீனப்படுத்தி எல்லோரும் அங்கு போகும்படி செய்தால், பின் கள், சாராயம் குடிப்பவர்கள்கூட அங்கே சென்று குடித்து உடல்நலத்தைக் கெடுத்துக்கொள்வார்கள், ஆகவே இந்த விஷயங்களையெல்லாம் பரிசீலனை செய்து, கள், சாராயக் கடைகளை மூடுவதில் உறுதியாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால், தேர்தல் வந்ததால்தான், கள், சாராயக் கடைகள் மூடப்படும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். தேர்தல் முடிந்துவிட்டதால், கடைகளை மூடாமல் விட்டுவிடுவார்களோ என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். முன்னாலேயே இவற்றை மூடியிருக்க வேண்டும். செப்டம்பர் 15 அன்றே மூடியிருக்க வேண்டும். அப்போதே மூட இயலாமல் போய்விட்டது. இப்போது ஜனவரி 1 அன்று மூடப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. முடியுமானால் ஏப்ரல் 1 லிருந்தேகூட மூட முடிவு செய்தால், மக்கள் குதூகலம் அடைவார்கள் . . .

திரு. ஆர். டி. சீத்தாபதி : தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். ஏதோ, சமீபத்தில் தேர்தல் வந்ததால்தான் இவ்வாறு அறிவிக்கப்படுகிறது என்கிறமாதிரி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிறார்கள். அதுமாதிரி இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். சாராயக் கடைகள் மூடப்படும் என்று அறிவிப்பதற்கு முன்பு செய்யாறு

தேர்தல் வந்தது. அதில் மாபெரும் வெற்றி கிடைத்தது. எனவே இதற்கும் அதற்கும் சம்பந்தப்படுத்திப் பேசவேண்டாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. அருணாசலம் :** தலைவர் அவர்களே, மிக்க நன்றி. இதை நான் சொல்லவில்லை. பொதுவாக மக்கள் அவ்வாறு நினைக்கிறார்கள் என்றுதான் சொன்னேன். இறுதியாக உறுதியாக மக்கள் மனதிலே கள், சாராயக் கடைகள் மூடப்படும் என்கிற எண்ணம் வரக்கூடிய அளவில் அரசு நடந்துகொள்ள வேண்டும் என்றுதான் கூறுகிறேன். மறுபடியும் சாராயக் கடைகள், கள்ளுக் கடைகள் திறக்கப்பட மாட்டாது ; பிராந்திக் கடைகள் கூட அந்தக் காலத்தில் இருந்ததுபோலத்தான் இருக்குமே தவிர, பத்திரிக்கையில் விளம்பரம் கொடுத்து, 'ஜீரணம் ஆவதற்கு' குடிக்கலாம் என்கிற மாதிரி விளம்பரம் கொடுத்து, வியாபாரம் செய்யாமல், அந்தக் காலத்தில் இருந்ததுபோல் செய்தால், நலமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகளுக்கு ஏராளமான உதவிகளைச் செய்ததன் மூலம் அவர்கள் நல்ல வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதன் மூலமாக உணவு உற்பத்தி அதிகமாகிக் கொண்டிருக்கிறது என்பது நாடு அறிந்ததுதான். ஆனால் கால்நடை வளர்ப்புபற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். கால்நடை வளர்ப்புக்கென்று நாம் ஏராளமாகச் செலவு செய்துகொண்டிருக்கும்போது, நிறைய பசுக்கள் வெளி மாநிலங்களுக்குப் போய்க்கொண்டே இருக்கின்றன. அவ்வாறு பசுக்கள் போக முடியாத இடத்திலெல்லாம், பசுக்களை வெட்டி, கறியாக்கி, கறியாக லாரிகளில் ஏற்றிக்கொண்டு போய்க்கொண்டிருக்கிறார்கள். இது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான். இதுகுறித்து முன்பொரு தடவை பேசினோம். ஆனால் அப்போது சட்டம் கொண்டுவருவதற்கு நம்மால் முடியாமல் போய்விட்டது. இப்போதாவது பசு இனங்களைக் காப்பாற்றினால்தான், எதிர்காலத்தில் விவசாயிகள் வாழ முடியும். அதுபற்றிக்கூட இங்கே சுட்டிக்காட்டப் பட்டிருக்கிறது. கால்நடைப் பராமரிப்பு இல்லாமல், கால்நடை வளர்ச்சி இல்லாமல் ஏராளமான கிராமங்கள் இருக்கும்போது, நாம் விவசாயத்தை

(முற்பகல் 10-45)

முன்னேற்றியிருக்கிறோம், விவசாயத் தொழில்கள் முன்னேறியிருக்கின்றன என்று சொல்வது சரியில்லை என்பது என்னுடைய கருத்து. ஆகவே அதை மனதில் கொண்டு நம்முடைய மாநிலத்தில் இருக்கிற பசு இனங்களைக் காப்பாற்ற வசதிகளையும், வாய்ப்புக்களையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்



கொள்கிறேன். அவசியமானால் ஒரு விசேஷ ஆணை பிறப்பித்து, அந்தக் கால்நடைகள் நமது மாநிலத்தைவிட்டு வெளியே செல்வதை நிறுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கல்வி. அது தரமான கல்வியாக இருக்க வேண்டும். ஏட்டளவாக இருக்கும் கல்வியைப்போல ஏட்டுக் கல்வியாக இல்லாமல், ஏட்டுக் கல்வியோடு தொழிற் கல்வியும் கலந்து இருந்தால் நன்றாக இருக்கும். அப்படி இல்லாமல், கல்விக்காக அதிகமாகப் பணம் ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்வதனால் மாத்திரம் நம்முடைய குறிக்கோளை அடைய முடிவதில்லை. கல்விக்காக 551 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். மிக்க மகிழ்ச்சி. ஆனால் 551 கோடி ரூபாயில் ஒரு கோடி ரூபாய்தான் பள்ளிக் கட்டிடங்களுக்காகப் போகிறது. மற்றப் பணத்தையெல்லாம் வேறு இனங்களுக்காகச் செலவழிக்க வேண்டியிருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால் வேறு பல வழிகளிலே, வேறு பல துறைகளிலே இருந்ததையெல்லாம் கல்விக்காக நம்முடைய மாநிலத்திலே ஏராளமாகச் செலவு செய்து மற்ற மாநிலங்களுக்கெல்லாம் ஒரு வழிகாட்டியாக இருக்கிறோம். ஆனாலும் நம்முடைய தற்குறித்தனத்தைப் போக்குவதிலே நாம் ஏதும் அதிகமாகச் செய்ய முடியவில்லை. இன்னும் நம்முடைய மாநிலத்திலும் தற்குறிகள் இருந்துகொண்டிருக்கிறார்கள், அதுவும் பெரிய அளவில் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்று கேள்விப் படும்போது, இந்த நடைமுறைக் கல்வியால் என்ன பயன் என்று கேட்கத் தோன்றுகிறது. தற்குறித்தனத்தைப் போக்குவதற்கு அதிகமான முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். இப்போது மத்திய அரசு புதிய கல்விக் கொள்கையை வகுக்கிறது என்று சொல்லி 'கல்வியின் சவால்' என்று ஒரு பெரிய புத்தகத்தை அச்சடித்து மக்கள் மத்தியிலே அதைவிட்டு, அவர்கள் அதை விவாதித்து, புதிய கல்வி முறையை உருவாக்க வேண்டுமென்று மத்திய அரசு சொல்கிறது. இப்போதெல்லாம் கல்வி சம்பந்தமான அதிகாரம் மாநில அரசுக்கு இருக்கிறது. இதை மத்திய, மாநில அரசுகளின் கூட்டுப் பொறுப்பாகக் கொண்டு வந்தபோதுகூட, மத்திய அரசு தனக்குப் போதிய அதிகாரம் இல்லை, மாநில அரசுதான் அதிகமாகச் செய்ய வேண்டுமென்ற உணர்வை உண்டு பண்ணுகிறமாதிரி சொல்லி, மத்திய அரசு தனது பொறுப்பிலிருந்து தப்பித்துக்கொள்ளப் பார்க்கிறது. இப்போதுதான் புதிய கல்விக் கொள்கையை வகுக்கப்போகிறது என்று சொல்கிறார்கள். இது சரியில்லை. மத்திய அரசு இதற்கு முன்னாலே ஐந்து அல்லது ஆறு தடவைகள் புதிய கொள்கைகளை வகுத்திருக்கிறது. அப்போதெல்லாம் இந்தப் புதிய கொள்கைகள் ஒன்றையும் செயல்படுத்த முடியாமல் போய் மறுபடியும், மறுபடியும் ஒரு புதிய கொள்கையை வகுக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டு

[திரு. க. அருணாசலம்] [1986 மார்ச் 20

குறிக்கோள் அடையும் நிலையை தள்ளிக்கொண்டே போகிறது. நம்முடைய குறிக்கோளை 14 வயதுக்கு உட்பட்டவர்களை அனைவருக்கும் இலவச, கட்டாயக் கல்வி கொடுக்க வேண்டுமென்பது. அதை அடைவதற்கு வேண்டிய முதல் உரிமை கொடுத்து, அதற்கு வசதியாகச் செலவு பணத்தை, வேண்டிய பணத்தை மேல் நிலைப் பள்ளிகளுக்காகச் செலவிட்டால், அதன் மூலமாக நம்முடைய குறிக்கோளை குறித்த காலத்திற்குள் அடைய முடியும். ஆனால் சுதந்திரம் பெற்று 37 ஆண்டுகள் ஆன பிறகும்கூட, இன்னும் நாம் நம்முடைய குறிக்கோளை அடைய முடியவில்லை. ஆனாலும் நமக்குப் பின்னால் சுதந்திரம் அடைந்த, அந்த பின்தங்கிய நாடுகளில் தற்குறித் தன்மையைப் போக்கியிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய நாட்டிலே பெரிய அறிவாளிகள் என்று சொல்பவர்கள்கூட வெறும் ஏட்டுக் கல்வி பெற்றவர்களாக இருப்பார்களேயானால், நாட்டிலே தற்சார்புடையதாக இருக்க முடியாது. அவர்கள் எல்லாம் நம்முடைய நாட்டிலே எந்த அளவுக்கு வருவாய் வருகிறது, அதையெல்லாம் எப்படி பங்குபோட்டுக் கொள்ளலாம் என்பதற்கு வழிவகைகள் செய்கிறார்களே தவிர, அதை நாட்டிற்காக பரவலாகப் பயன்படுத்த வேண்டுமென்ற வாய்ப்பினைக் கொடுத்து ஒரு புதிய கல்வியை உருவாக்க முயற்சி செய்ய மாட்டார்கள் என்றுதான் தோன்றுகிறது. அது கல்வியினுடைய சவாலாகவே இருந்து கொண்டிருக்குமோ என்று தோன்றுகிறது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பின்னாலே கூட இது சவாலாக இருந்து கொண்டிருக்கும். கொள்கையை வகுப்பதற்கு உதவுங்கள் என்று சொல்லிக்கொண்டே ஒவ்வொரு மாவட்டத்திற்கு ஒரு மாடல் பள்ளிக்கூடம் ஆரம்பிக்குமென்று மத்திய அரசு சொல்கிறது. அதற்காக ஒரு பள்ளிக்கு இரண்டு கோடி ரூபாய் செலவிடவும் முடிவு செய்து விட்டார்கள். நம்முடைய மாநிலத்தில் 40 அல்லது 50 கோடி ரூபாய் செலவழிக்க வேண்டியிருக்கும், மொத்தத்தில் ரூ. 500 கோடியாகும். மத்திய அரசு அப்படி மாதிரிப் பள்ளியை ஏற்படுத்துவதற்குப் பதிலாக, அந்த 40 கோடி ரூபாயை மாநில அரசிடம் கொடுத்து, ஒவ்வொரு மாநிலத்திலும், "ஒவ்வொரு மாவட்டத்திலும் தகுந்த பள்ளிக்கூடங்களைத் தேர்ந்தெடுத்து அதை மாதிரிப் பள்ளிக்கூடங்களாக ஆக்குங்கள்" என்று சொல்லியிருந்தால், மத்திய அரசின் லட்சியம் சீக்கிரமாக நிறைவேறும். அது மாநில அரசுகளுக்கு ஊக்கம் கொடுத்து, ஒவ்வொரு மாவட்டத்திலும், கிராமம் போன்றவைகளில் இந்த அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கு உதவியாக இருந்திருக்கலாம். அதை விட்டுவிட்டு மத்திய அரசு தானே இதைச் செய்யும் என்றும், அதற்கு அந்தப் பொறுப்பைக் கொடுத்துவிட்டால், அதுதான் அதைச் சீக்கிரமாகச் செய்து விடுமென்றும் சொல்கிறது. அதை ஒரு சவாலாகப் போட்டிருப்பதுபோல இருக்கிறது.



1986 மார்ச் 20] [திரு. க. அருணாசலம்]

இப்போது 500 கோடி ரூபாய் ஒதுக்கி அதற்காக வேலை செய்யவும் ஆரம்பித்துவிட்டது மத்திய அரசு. நம்முடைய மாநிலத்தில் அது எவ்வளவு தூரம் வந்திருக்கிறதென்று தெரியாது. நம்முடைய மாநிலத்தில் எவ்வளவோ பள்ளிக்கூடங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவைகளுக்கு ஊக்கம் கொடுப்பதற்கும், அடுத்தபடியாக வசதி இல்லாத பள்ளிக் கூடங்களானால் கட்டிடங்கள் கட்டுவதற்கும், கல்வி பெறுவதற்காக போதிய ஆசிரியர்களை நியமிப்பதற்கும் மத்திய அரசு மாநில அரசைப் பலப்படுத்தினால், அதன் மூலமாக நாம் நம்முடைய குறிக்கோளை அடைய முடியும். எனவே இந்த

(முற்பகல் 10-50)

விஷயத்தில் மாநில அரசும் விழிப்போடு இருந்து மாடல் பள்ளிக்கூடங்களை மத்திய அரசே நடத்துவதைவிட அவற்றையெல்லாம் மாநில அரசிடமே விட்டுவிட வேண்டும் என்று வாதாடி அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால், விரைவில் நம்முடைய தற்குறித்தனம் நீங்குவதற்கு உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். நாட்டில் எல்லோருக்கும் குடிநீர் வழங்க வேண்டும் என்ற திட்டத்தை நாம் பல ஆண்டுகளாகவே செயல்படுத்தி வருகிறோம். இந்த ஆண்டும் அதற்காக விசேஷமாகப் பணத்தை ஒதுக்கி வைத்திருக்கிறோம். மேல்நிலைத் தொட்டிகளைக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் மதுரை மாவட்டத்தைப் போன்ற வறட்சியான பிரதேசங்களில் குடிநீர்க் குழாய்கள் பல இடங்களில் போட்டிருந்தாலும்கூட, அந்தக் குழாய்களில் தண்ணீரே வருவதில்லை. அதுமட்டுமல்ல, பயன்படாத முறையில் இருக்கும் அந்தக் குழாய்கள் பழுதுபடுகிறபோது, அவைகளையும் மாற்றி அமைக்கிறார்கள். கெட்டுப் போனவைகளை புதுப்பிப்பதற்காகவே ஏராளமாகச் செலவு செய்கிறார்கள். அதெல்லாம் பயனில்லாமல் இருக்கிறது. நான் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்தவன். அந்த மாவட்டத்தின் நிலைமை எனக்கு நன்கு தெரியும். அந்த மாவட்டத்தில் பல ஊர்களில் குடிதண்ணீர் இல்லாமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்குப் போதுமான வாய்ப்புக் கொடுக்க சரியான ஏற்பாடுகளைச் செய்தாக வேண்டும். அதற்காக ஆழ் குழாய்க் கிணறுகளைத் தோண்ட அங்கே ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நான் இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்கிறேன். காரணம் இதில் வரவேற்கத் தகுந்த, பாராட்டத் தகுந்த பல விஷயங்கள் இருக்கின்றன என்பதை தைரியமாகச் சொல்ல முடியும். வரியே இல்லாத அளவுக்கு இந்த நிதிநிலை அறிக்கை இருக்கிறது. மேலும் ஏற்கெனவே இருப்பதில் ரூ. 20

கோடிக்கு வரிக் குறைப்பு செய்திருக்கிறார்கள். எனவே பொதுமக்கள் இதை உணர்ந்து, அரசுக்கு ஆதரவு கொடுத்து, தக்க முறையில் இதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதைப் போலவே குறைகளை அரசுக்குத் தெரியப்படுத்தி, அதன் மூலம் பரிகாரம் காணும் முறையை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மதுக்கடைகளை மூடுவது, மதுவிலக்கைச் சிறப்பாக அமுல்படுத்துவது, கல்வியின் தரத்தை உயர்த்துவது, நாட்டில் தற்குறித்தனத்தைப் போக்குவது ஆகியவற்றில் அரசு அதிக கவனம் செலுத்த வேண்டும். இதற்காக அதிகமாகப் பணம் ஒதுக்கியாவது செய்ய வேண்டும். இப்போது நாம் பள்ளி செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டது என்று சொல்லிப் பெருமைப் படுகிறோம். பள்ளிகளில் உணவு அளிக்கிறார்கள் என்பதற்காக அதிகமான மாணவர்கள் வருவதாக இல்லாமல், படிப்பதற்காகவே வருகிறார்கள் என்ற நிலையை உருவாக்க வேண்டும். அதோடு மாணவர்களுக்கு வெறும் ஏட்டுப் படிப்பு மட்டும் சொல்லிக் கொடுக்காமல், உடலுழைப்போடு கலந்த படிப்பை நாம் அளிக்க வேண்டும். அதுவும் அறிவோடு கூடிய படிப்பாக மட்டுமல்லாமல், ஆற்றலோடு கூடிய கல்வியாக அதை மாற்றி அமைக்க வேண்டும் என்று சொல்ல வாய்ப்பு அளித்த தலைவருக்கு நன்றிகூறி முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

**திரு. ஆர். இராஜேந்திரன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மேலவையின் இன்றைய நிகழ்ச்சியில் ஆளும் கட்சியைச் சார்ந்த நான் இங்கே அளிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்ட அறிக்கையை ஆதரித்துப் பேச முன்வந்திருக்கிறேன்.

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அருமைப் பெரியவர் திரு. அருணாசலம் அவர்கள் மத்திய அரசின் கல்விக் கொள்கையைப்பற்றி இங்கே தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். அந்த அடிப்படையில் மாநில அரசு செய்ய வேண்டிய பல்வேறு காரியங்களைப்பற்றியும் மிகத் தெளிவாக அவர் இங்கே எடுத்துச் சொன்னார். அவரைத் தொடர்ந்து இந்த நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு அளித்த உரையில் சொல்லப்பட்டிருக்கிற நல்ல காரியங்களைப்பற்றி நான் இங்கே குறிப்பிட்டு அவற்றை ஆதரிக்கும் மூகமாகச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.





முதற்கட்டமாக, பணியில் இருக்கிற அரசு ஊழியர் சொந்தமாக வீடு கட்டுவதற்காக அரசிடம் கடன் வாங்கி வீட்டைக் கட்டிவிட்ட பின்னால், பணியில் இருக்கும்போதே அவர் இறந்துவிட்டால், அவர் வாங்கிய கடனை ரத்துசெய்கிற முறையில் ஒரு திட்டம் அறிவிக்கப்பட்டிருப்பதற்காக நான் இந்த அரசை உளமாறப் பாராட்டுகிறேன், அதுமட்டுமல்ல, உயிர் காக்கும் மருந்துகளுக்கு வரிக் குறைப்பு அல்லது வரிச் சலுகை அளித்திருப்பதைப் பார்க்கும்போது, அதற்காக நான் இந்த அரசைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10-55)

வரி போடாமலே உள்ள ஓர் அரசை, வரியைக் குறைத்து இந்த நாட்டை ஆள்கிற திறமையான ஓர் அரசை யாராக இருந்தாலும், எந்த முகாமிலே இருந்தாலும் பாராட்டித்தான் தீர வேண்டும். அந்த அடிப்படையிலே நாம் பாராட்டுகிறபோது, எதிர்க்கின்ற முகாம்களையும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அவர்கள் எப்போதுமே எதிர்க்கின்ற சக்தியைப் பெற்றவர்களாக இருப்பதால்தான், எதிர்த்துக் கொண்டேயிருப்பதை வாடிக்கையாகக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நாம் பாராட்டக் கடமைப்பட்டவர்கள். பொதுமக்களின் பாராட்டைப் பெற்றவர்கள் என்ற அந்த அடிப்படையிலே பாராட்டிக் கொண்டிருக்கிறோம். இந்த அரசு பல புதிய திட்டங்களை இங்கே அறிமுகப்படுத்தியிருக்கிறது. புதிய வரிச் சலுகைகளைப் பார்க்கிறபோது, குழந்தைகள் பால் உணவிற்கு வரி குறைப்பு செய்திருப்பதற்காக நிச்சயமாக இந்த அரசை நாம் பாராட்ட வேண்டும்.

இந்த அரசு நல்ல முறையில் சத்துணவுத் திட்டத்தை இந்த நாட்டிலே நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது. எனக்கு முன் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள், இந்தச் சத்துணவுத் திட்டத்தின்கீழ் கொஞ்சம் முட்டையும், கொஞ்சம் பாலும் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். அவர்கள் அப்படிச் சொன்னபோது நான் பெருமைப் பட்டேன். இந்த மாமன்றத்தில் சத்துணவுத் திட்டத்தை வரவேற்கும் முறையில் ஒரு நல்ல யோசனையைச் சொல்லியிருக்கிறார்கள். அதே நேரத்தில் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு முன்பும், கொண்டு வந்ததற்குப் பின்பும் அதை எதிர்த்தவர்கள் இப்போது தலைகுனிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். சத்துணவுத் திட்டம் மேலும் வளர புதிய யோசனை சொன்னதற்காக நான் அவரைப் பாராட்டுகிறேன். சத்துணவுத் திட்டத்தைப்பற்றி நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இத்திட்டத்திலே நிறைய தவறுகள் நடக்கின்றன. தவறு

செய்கிறவர்களைச் சுட்டிக்காட்டும்போது, அப்படித் தவறு செய்தவர்களை தற்காலிகமாக வேலை நீக்கம் செய்கிறார்கள். அவர்கள் பிறகு திரும்பவும் வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள். அதனால் திருடுகிறவர்கள் திருடிக் கொண்டே இருக்கிறார்கள். உண்மையாகவே திருடுகிறவர்களைக் கண்டு பிடித்தால், அவர்களை உடனடியாக வேலை நீக்கம் செய்ய வேண்டும் என்று இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். முதலில் தற்காலிக வேலை நீக்கம் செய்துவிட்டு மீண்டும் அவர்களைப் பணியில் அமர்த்துவதால் திருடுகிறவர்கள் திருடிக்கொண்டே இருப்பதைப் பார்க்கிறோம். ஆகவே அவர்களை வேலை நீக்கம் செய்ய வேண்டுமென்று இந்த அரசை நாம் பாராட்ட வேண்டும்.

முகவை மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் எப்போதும் வானத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிற மாவட்டங்கள். இம்மாவட்டங்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக் கின்றன. இரண்டு, மூன்று ஆண்டுகளாக மழை பெய்யாததால், அவை வறட்சிக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் நான் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். புரட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராக அப்போது இல்லை. அந்த நேரத்தில் எங்கள் மாவட்டத்தில் வறட்சி கடுமையாக இருந்தது. அப்போது புரட்சித் தலைவர் அவர்கள் தனது சொந்தப் பணத்தை அளித்து கஞ்சி ஊற்றி அங்குள்ள மக்களைக் காப்பாற்றியது எனக்கு நினைவு வருகிறது. அந்தப் பணியில் நானும் அப்போது பங்கேற்றேன். பலருக்குக் கஞ்சி ஊற்றி அந்தப் பகுதியில் வறட்சி இருக்கிறது என்பதை அரசாங்கத்திற்குச் சுட்டிக்காட்டிய செயல் நினைவுக்கு வருகிறது. அப்படிப்பட்ட புரட்சித் தலைவர் இன்றையதினம் முதலமைச்சராக இருக்கிறார்கள். ஆகவே எங்கள் மாவட்டத்தை வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

பசும்பொன் முத்துராம்லிங்கம் மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். அங்கே 'சிப்காட்' நிறுவனம் இருக்கிறது. அந்த நிறுவனம் ஆரம்பித்த காலத்திலேயிருந்து இன்று வரை வளர்ச்சி பெற்றதாகத் தெரியவில்லை. அங்கே கொலைதான் நடக்கிறது. அங்கே ஒரு புதிய ஆலையைத் திறக்கிறேன் என்று சொல்லி ஒரு மினி சிமெண்ட் தொழிற்சாலையை ஆரம்பித்தார்கள். அதில் கொலைதான் நடந்தது. ஆனால் அந்த ஆலை விருத்தியாகவில்லை.



ஆகவே அங்கேயுள்ள 'சிப்காட்' நிறுவனம் மேலும் வளர இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் இந்த அரசு நல்ல அரசு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு. ஆகவே எங்கே மாவட்டத்திற்கு நல்ல காரியங்களை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், இராமநாதபுரத்திலே அச்சங்குளம் கிராமத்தில் ஒரு கூட்டுறவு நூற்பாலை இருக்கிறது. முகவை மாவட்டத்திலே உள்ளதைப் போலவே பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்திலும் சிப்காட்டின்கீழ் ஒரு கூட்டுறவு நூற்பாலையை இந்த அரசு ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்லாமல், எங்கள் பகுதியில் கரும்பு வளர்ச்சி அதிகமாக இருக்கிறது. அங்குள்ள கரும்பு மதுரைக்குச் செல்கிறது, அலங்காநல்லூருக்குச் செல்கிறது. ஆகவே மானாமதுரையில் 'சிப்காட்' நிறுவனத்தின்கீழ் ஒரு சர்க்கரை ஆலையை நிறுவ வேண்டும் என்று இந்த

(முற்பகல் 11-00)

அரசை பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அது மட்டு மல்ல. இந்த கடலோரப் பகுதியிலே நெடுஞ்சாலைகள் உருவாக்கப்பட்டிருக் கின்றன. இராமநாதபுரத்திலேயிருந்து கன்னியாகுமரி வரையிலும் இந்த நெடுஞ்சாலை கடலோரப்பகுதியில் போடப்பட்டிருக்கின்றது. இராமேஸ்வரம் செல்கின்ற யாத்திரிகர்கள் கன்னியாகுமரிக்கும், திருச்செந்தூருக்கும் ஒரு நாளில் நூற்றுக்கணக்கான பஸ்களில் பிரயாணம் செய்துகொண்டிருக் கின்றார்கள். இதுபோன்று வாகனங்கள் போகின்ற அந்தக் கடலோரப் பகுதியில் உள்ள தேசிய நெடுஞ்சாலைகள் செப்பனிடப்படாமல் இருக்கின்றன. அந்த நெடுஞ்சாலைகளைச் செப்பனிட வேண்டும் என்று மாநில அரசு மத்திய அரசுக்கு எடுத்துச்சொல்லி, அந்தச் சாலைகளை மிகச்சிறப்பான முறையிலே செப்பனிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. சுற்றுலாத் துறை மூலம் செய்யவேண்டியதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கடலாடித் தொகுதி இருக்கின்றது. அதற்குப் பக்கத்தில் நல்லதண்ணீர் தீவு என்று ஒன்று இருக்கின்றது. முன்பு சட்ட மன்றப் பேரவையிலே கூட உறுப்பினர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் அந்தப் பிரச்சினையைக் கொண்டுவந்து பேசியிருக்கிறார்கள். நல்லதண்ணீர் தீவுக்கு ஒரு சுற்றுலா மையம் வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த அவையில் பிரதான எதிர்க்கட்சியான காங்கிரசையும், அதற்கு அடுத்து இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தையும் சார்ந்த உறுப்பினர் ஒருவர்கூட இல்லை. வெளிநடப்பு செய்திருக்கின்றார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :** அவர்கள் தொடர்ந்து பணியாற்றவேண்டியது அவர்கள் கடமை. அவர்கள் வாக்கெடுப்புக்குப் போயிருக்கின்றார்களா என்பதுபற்றித் தெரியவில்லை. அதைப்பற்றி அவைக்கு ஒன்றும் தெரியாது.

**திரு. ஆர். இராஜேந்திரன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறையின் சார்பில் அந்த கடலாடித் தொகுதியில் இருக்கின்ற . . .

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** மாற்றுத் தலைவர் அவர்களே, அவைக்குத் தெரியாது என்பது எனக்குக்கூட தெரியும். ஆனால் அதைப்பற்றி தாங்கள் என்ன அபிப்பிராயம் தெரிவிக்கின்றீர்கள் என்றுதான் நான் கேட்கிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :** நான் இப்போது தலைவர் பொறுப்பிலே இருப்பதால், அதுபற்றி கருத்து சொல்வதற்கில்லை.

**திரு. ஆர். இராஜேந்திரன் :** அந்த கடலாடித் தொகுதியில் உள்ள நல்ல தண்ணீர் தீவை சுற்றுலாத் துறை ஏற்றுக்கொண்டு அதைச் சுற்றுலா மையமாக ஆக்க வேண்டும். எட்டு ஆண்டுக்காலமாக அந்தப் பகுதி சரியாகச் செப்பனிடப் படவில்லை. அந்த நல்லதண்ணீர் தீவு ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருக் கின்றது. பக்கத்திலே உப்புத்தண்ணீர் தீவு இருக்கின்றது. அந்தத் தீவு மீனவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக இருக்கின்றது. அந்தப் பகுதியில் படகிலே போகின்றவர்களுக்குக்கூட நல்ல தண்ணீர் கிடைக்கின்ற தீவாகவே அது இருந்துகொண்டிருக்கின்றது. அதனால்தான் அதற்கு நல்லதண்ணீர் தீவு என்று பெயர் வந்திருக்கின்றது. ஆகவே அதை மாநில அரசு அதனை சுற்றுலாத் துறையின்கீழ் கொண்டு வந்து ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தூத்துக்குடி துறைமுகம், இப்போது கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரைக்கும் அகல ரயில்பாதை போடப்படுகிறது. அதற்கான வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அந்த அகல ரயில் பாதையை தூத்துக்குடியிலிருந்து இராமேஸ்வரம் வரைக்கும்கூட இணைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து, சேது சமுத்திரத் திட்டம். இந்தத் திட்டம்பற்றி பல ஆண்டுகளாகவே பேசிக்கொண்டிருக்கிறோம். பலரால் அதுபற்றிப் பேசப் படுகின்றது. மாநிலங்கள் அவையில்கூட இந்தத் திட்டத்தைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்கின்றார்கள். சேது சமுத்திரத் திட்டம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றது. அது கொள்கை அளவிலேதான் இருக்கின்றதே தவிர, செயல் வடிவிலே அதை இதுவரையிலும் கொண்டு வந்ததாகத் தெரிய வில்லை. இப்போதும் நாம் அதைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கின்றோம். மாநிலங்கள் அவையிலும் அதை நிறைவேற்றுவதுபோலப் பேசிக்கொண்டிருக் கின்றார்கள். இதுபோன்ற திட்டத்தை நமது மாநில அரசும் வலியுறுத்தி செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இதிலே நான் ஒன்றை மட்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967 ஆம் ஆண்டில் முதலமைச்சராக வந்தார்கள். என்னுடைய ஞாபகம் சரியாக இருக்குமானால், 1968 என்று நினைக்கின்றேன், சிவகங்கைச் சீமையிலே ஒரு 'எழுச்சி நாள்' என்று எழுப்பினார்கள். அந்த எழுச்சி நாளை தூத்துக்குடித் துறைமுகத் திட்டத்தையும் சேலம் இரும்பாலைத் திட்டத்தையும் வலியுறுத்தும் நாளாகக் கருதினார்கள். அப்படி எழுச்சி நாள் என்று எடுத்துக்கொண்ட பிறகுதான், இன்றையதினம் தூத்துக்குடி துறைமுகத் திட்டமும் சேலம் இரும்பாலைத் திட்டமும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. இதை

(முற்பகல் 11-05)

மைய அரசு எண்ணிப்பார்க்க வேண்டும். அப்படி ஒரு எழுச்சி நாளை நமது அரசும், நமது முதல்வரவர்களின் தலைமையிலே அறிவித்து, மக்களை கிளர்ந்து எழச் செய்து, தூத்துக்குடித் துறைமுகத் திட்டத்தையும், சேலம் இரும்பாலையையும் பெற்றதுபோல, சேது சமுத்திரத் திட்டத்தைப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த அவையிலே பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த வரவு-செலவுத் திட்டம் தமிழகத்திற்கு ஒரு வரப்பிரசாதமாக இருக்கிறது. நல்லபல திட்டங்களை இந்த அரசு நிறைவேற்றக் காத்திருக் கிறது. இந்த நிதிநிலை அறிக்கையிலே ஏழைகளின் நலன் கருதி, வரிகள் குறைக்கப்பட்டிருப்பதற்காக தமிழக அரசைப் பாராட்டி, என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, தமிழக அரசினுடைய 1986-87 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை குறித்து தெரில் கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைத்

[திரு. எல். ஜெயச்சந்திரன்] [1986 மார்ச் 20

தெரிவித்துக்கொள்கிறேன். தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையிலே பொதுவாக வரிகள் போடாதது குறித்து நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இதை வரவேற்கிறேன். வரிகள் போடாததற்காக உண்மையிலேயே நான் தமிழக அரசைப் பாராட்டுகிறேன். பல்வேறு முனைகளிலே பல்வேறு பொருள்களின் மீது வரிகள் போடுவதால் ஏழைகள் கஷ்டப்படவும், வியாபாரிகள் வியாபாரத்தில் நஷ்டம் அடையவும் நேரிடும். அவர்கள் கஷ்டத்தை உணர்ந்து, தமிழக அரசு வரிகள் போடுவதைத் தவிர்த்திருக்கிறது. அண்மையிலே மத்திய அரசு நிதிநிலை அறிக்கையை அளிப்பதற்கு முன்பாக பெட்ரோலியம் பொருள்களுக்கு எக்சைஸ்-டியூட்டியை பெரிய அளவிலே உயர்த்தியதால், அனைவரும் வருத்தம் அடையும் அளவுக்கு விலைகள் உயர்ந்தன. இருந்தாலும்கூட, நமது மாநில அரசு அதை எல்லாம் கவனத்திலே கொண்டு, மக்கள் நலன் கருதி, நிதிநிலை அறிக்கையில் வரிகளைப் போடாமல் இருக்கிறது. ஒருசிலவற்றுக்கு மட்டும் வரிகளைக் கூட்டியிருக்கிறார்கள் குறிப்பாக 10 பொருள்களுக்கு அறவே வரியை நீக்கியிருக்கிறார்கள். அதற்காகப் பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன் குறிப்பாக 41 உயிர் காக்கும் மருந்துகள், குழந்தைகளுக்கான பால் உணவுப் பொருள்கள், விவசாயிகளின் உபயோகத்தில் இருக்கும் டிரெயிலர்கள், வியாபாரிகளுக்கு உதவுகிற ஜெனரேட்டர்கள், பிராசசிங் மெடிரியல்ஸ், தமிழகத்திலே உருவாக்கப்படும் மின்னணுப் பொருட்கள் ஆகியவற்றுக்கு வரிகளைக் குறைத்திருக்கிறார்கள். மற்ற மாநிலங்களைப் பார்க்கும்போது, நமது மாநிலத்தில் தயாராகும் மின்னணுப் பொருள்களின் விலை அதிகமாக இருக்கிறது. ஆகவே நமது மாநிலத்தில் உற்பத்தியாகும் மின்னணுப் பொருள்களை யாரும் வாங்குவதில்லை என்பதை மனதிலே கொண்டு, அவற்றுக்கு வரியைக் குறைத்திருக்கிறார்கள். அதற்கும் என் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழக அரசு அண்மையிலே அறிவித்த அறிவிப்பின்படி, '1987 சனவரி 1 ஆம் தேதி முதல் மதுவிலக்கைக் கொண்டு வருவோம்" என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதனால் இந்த வருடம் 60 கோடி ரூபாயும், 1987-88 ஆம் ஆண்டில் 250 கோடி ரூபாயும் இழப்பு ஏற்படுமென்று கூறியிருக்கிறார்கள். இதை எப்படி ஈடு செய்ய இருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. இந்த நிதி நிலை அறிக்கையிலே 20 கோடி 'ஷார்ட்-பால்'. இப்படி இருக்கும்போது இந்த ஆண்டு 60 கோடி ரூபாயையும், அடுத்த ஆண்டு 250 கோடி ரூபாயையும் எப்படி ஈடு செய்யப் போகிறார்கள் என்பது தெரியவில்லை. இதற்காக தனிப்பட்ட முறையில் வரிகள் போடுவார்களா என்பதும் தெரியவில்லை.



[1986 மார்ச் 20 [திரு. எல். ஜெயச்சந்திரன்]

பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு எல்லாம் அரசு வழி வகை செய்திருக்கிறது. ஆனால் இந்த இழப்பை எவ்வாறு சரி செய்யப்போகிறார்கள் என்பதைத்தான் நான் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். அது குறித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் அதைக் குறித்துக் கொண்டு, சம்பந்தப்பட்ட வணிக வரித் துறை அதிகாரிகளோடு கலந்து பேசினால், நிச்சயமாக உதவிகரமாக இருக்குமென்று நான் கருதுகிறேன். தனிப்பட்ட முறையிலும் என்னுடைய கருத்துக்களை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ஆட்டோமோபைலிலிருந்து சிறிய ரேடியோ வரை வாங்குவதாக இருந்தாலும், விற்பனை வரி என்பது பெரிய அளவுக்கு இங்கே இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் அண்டை மாநிலமான பாண்டிச்சேரியில் உள்ள விற்பனை வரியைப் பார்க்கும்போது, அங்கே மிக மிகக் குறைவாக இருக்கிறது. அது சிறிய மாநிலமாக இருந்தாலும், பல்வேறு வியாபாரமக்களையும், பல்வேறு துறை வல்லுநர்களையும் கலந்து பேசி, ஒரு முடிவெடுத்து, அதன் பிரகாரம் விற்பனை வரியைக் குறைத்தால், இந்த அளவுக்கு வியாபாரம் நடக்க ஏதுவாக இருக்குமென்று முடிவெடுத்து, செயல் படுகிறார்கள். அது தங்கள் மாநிலத்திற்கு வருவாயைத் தேடித் தருமென்று உணர்ந்து, நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்வதற்கு முன்பு, அனைவரையும் கலந்து பேசுகிறார்கள். ஆனால், தமிழகத்தைப் பொறுத்த

(முற்பகல் 11-10)

வரையில், அதுபோல் கருத்துக்களைப் பேசுகிறார்களா, பொருளாதார நிபுணர்களையும் வல்லுநர்களையும் கலந்து பேசுகிறார்களா என்பதுபற்றித் தெரியவில்லை. அதனால்தான் நான் முன்பே ஆளுநர் உரையின்போது பேசுகிறபோது, ஒன்றைக் குறிப்பிட்டேன். தமிழக அரசு பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு பல கோடி ரூபாய் செலவு செய்கிறது. நாம் ஏற்கெனவே பிளானிங் கமிஷன் என்று வைத்திருக்கிறோம். அதிலே முன்பு ஒன்பது உறுப்பினர்கள் இருந்தார்கள். ஆனால் இப்போது மூன்று உறுப்பினர்கள்தான் இருக்கிறார்கள். இம்மாதிரி பல கோடி ரூபாய்க்கான வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றும்போது, திட்டக் குழுவிலுள்ள நிபுணர்களின் மேலான ஆலோசனைகளை எல்லாம் பெற வேண்டுமென்று கூறியிருக்கிறேன்.

அடுத்து, அண்மையில் இருக்கின்ற பாண்டிச்சேரியில் விற்பனை வரியை எடுத்துக்கொண்டால், அங்கே அனைத்துப் பொருள்களுக்கும் வரி குறைவாக இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், நான் சார்ந்திருக்கின்ற ஆட்டோமோபைல் தொழிலை எடுத்துக்கொண்டால்,

[திரு. எல் ஜெயச்சந்திரன்] [1986 மார்ச் 20

எனக்கு அதுபற்றித் தெரியும் என்பதால் தெளிவாகச் சொல்கிறேன். அங்கே ஆட்டோமொபைல் சம்பந்தப்பட்ட பொருள்களை விற்பனை செய்ய பல தனிப்பட்டவர்கள் வியாபார இடங்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். தனிப்பட்டவர்கள் வியாபார இடங்களை ஆங்காங்கே நடத்துவது என்பது நடைமுறையில் உள்ள ஒன்றுதான். ஆனால் தமிழக அரசுக்குச் சொந்தமான தமிழ் நாடு அக்ரோ இன்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷனே பாண்டிச்சேரியில் ஓர் கிளை அலுவலகத்தை வைத்துக்கொண்டு டிராக்டர்களை வாங்குகிறார்கள். தனிப்பட்டவர்கள் இவ்வாறு வியாபார இடங்களை வைத்துக்கொண்டிருப்பது வியாபார நோக்கத்தோடு. ஆனால் ஓர் அரசு நிறுவனமே இவ்வாறு செய்கிறது என்றால், இவ்வாறு டிராக்டர்களை வாங்கி விற்பதன் மூலம் பொதுமக்களுக்கு ஏறக்குறைய ஒரு டிராக்டரின் மூலம் நான்கு ஆயிரம் ரூபாய் வரை மீதம் வருகிறது. ஆனால் இவ்வாறு அவர்கள் ஒரு கிளை அலுவலகத்தை பாண்டிச்சேரியில் வைத்துக்கொண்டு வியாபாரம் செய்வதை நான் தவறு என்று சொல்லவில்லை. ஏன் மூன்று வருடங்களுக்கு முன்பு பாண்டிச்சேரியில் அவர்கள் பிரான்ச் ஆபீஸ் ஆரம்பித்தார்கள் என்று பார்க்க வேண்டும். பொது மக்களுக்கு டிராக்டர் போன்றவற்றை வியாபாரம் செய்வதற்குத்தான் அவ்வாறு ஆரம்பித்தார்கள். காரணம் அங்கே விற்பனை வரி மிகவும் குறைவு. ஏன் விற்பனை வரியை தமிழகத்திலும் குறைத்திருக்கக்கூடாது? இதன்மூலம் நாம் பல கோடி ரூபாய்களை பாண்டிச்சேரிக்கு ஆண்டுதோறும் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். எதனால் இந்த விற்பனை வரியில் வித்தியாசம் இருக்கிறது, எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது என்பதை எல்லாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இதுபற்றி வல்லுநர்களின் கருத்துக்களைக் கேட்க வேண்டும். பாண்டிச்சேரி சிறிய மாநிலமாக இருந்தாலும்கூட, விற்பனை வரி மூலம் அவர்களுக்குப் பெருவாரியான வருவாய் வருகிறது. நாமும் அவர்கள் அளவிற்கு விற்பனை வரியைக் குறைக்காவிட்டாலும்கூட ஓரளவிற்காவது குறைத்தால், நிச்சயமாக நம்முடைய வருவாய் உயரும். அதுவும் மதுவிலக்கை அமுல்படுத்த இருக்கும் நிலையில், ஆண்டுதோறும் 250 கோடி ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்படும் நிலையில், இந்த விற்பனை வரியை ஓரளவிற்குக் குறைப்பதன் மூலம் அரசுக்கு நிச்சயமாக வருவாய் பெருக வாய்ப்பிருக்கிறது. அதுபோல் அசோக் லேலெண்ட் போன்ற நிறுவனங்கள்கூட தங்களுடைய உற்பத்திப் பொருள்களை பாண்டிச்சேரிக்குச் சென்று விற்கிறார்கள். தமிழகத்தைவிட அங்கே சென்று வாங்கினால், 15 ஆயிரம் ரூபாய் வரை குறைவாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். இப்படி எல்லாம் செய்வதன் மூலம் தமிழக அரசு தன்னுடைய வருவாயை இழந்துகொண்டிருக்கிறது. ஆட்டோமொபைல் சாதனங்கள் மட்டுமல்ல, மின் விசிறிகள், ரேடியோ,



1986 மார்ச் 20] [திரு. எல். ஜெயச்சந்திரன்]

டெலிவிஷன் போன்ற பொருள்களையும் பாண்டிச்சேரிக்கு சென்று வாங்குகிறார்கள். ஆகவே, இதுகுறித்து நம்முடைய நிபுணர்களைக் கலந்து ஆலோசித்து ஓரளவிற்காவது விற்பனை வரியைக் குறைத்தால், நிச்சயமாக ஓரளவு நம்முடைய வருவாய் பெருக வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். விற்பனை வரியை நாமும் குறைத்திட

(முற்பகல் 11-15)

நடவடிக்கை எடுத்தால், நிச்சயமாக நாம் வருவாயைப் பெருக்கிட அது வழிவகுக்கும் என்று கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதைப்பற்றிப் பரிசீலிக்க தனியாக ஆலோசகர்களைப் போட்டால்கூட நல்லதென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோலவே, விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தேவையான உபகரணங்களின் விலை பாண்டிச்சேரியில் கம்மியாக இருக்கிறது. காரணம் அவற்றிற்கு அங்கு வரி கிடையாது. அதுபோல் நாமும் இங்கே செய்வதற்குத் தீவிரமாகச் சிந்திக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். இதை நான் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறுவதற்குக் காரணம், இந்த ஆண்டு நாம் மதுவிலக்கை மீண்டும் கொண்டு வரவிருப்பதால், இந்த ஆண்டு சுமார் 60 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படும் என்றும், அடுத்த ஆண்டு சுமார் 250 கோடி ரூபாய் இழப்பு ஏற்படும் என்றும் கூறியிருக்கிறார்கள். எனவே அதை ஈடு கட்டுவதற்கு உதவும் வகையில் இவற்றைச் செய்திட வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மோட்டார் வாகன வரி குறித்து தெரிவிக்க விரும்புகிறேன். முன்பொரு முறை இதுதொடர்பான சட்ட முன்வடிவு வந்தபோது கூட கூறினேன். இப்போது மீண்டும் மாண்புமிகு அவை முன்னவர் மூலமாக மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நம் தமிழகத்தில் மினி பஸ்கள் நிறைய இருக்கின்றன. ஸ்டாண்டர்ட் 20, மடாடார், மகிந்திரா முதலிய மினி பஸ்கள் இருக்கின்றன. பொதுவாக இவற்றில் சுமார் 12 அல்லது 14 இருக்கைகள் வைத்து இவை ஓடிக்கொண்டிருக்கின்றன. நமது தமிழக அரசு அவற்றில் ஆறு பேர்கள்தான் செல்லலாம் என்று விதி நிர்ணயித்திருக்கிறது. ஆனால் அண்டை மாநிலங்களான புதுவை, ஆந்திரா ஆகியவற்றைப் பார்த்தால், அங்கே அதில் 10 அல்லது 12 பேர் செல்லலாம் என்று விதி ஏற்படுத்தியிருக்

[திரு. எல். ஜெயச்சந்திரன்] [1986 மார்ச் 20

கிறார்கள். இவ்வாறு நம் தமிழகத்தில் ஆறு பேர்தான் செல்லலாம் என்று கூறி அதற்குத் தகுந்தவாறுதான் வரி விதித்திருக்கிறார்கள். அதாவது ஆறு பேர் செல்லும் வாகனத்திற்கு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை 150 ரூபாய்தான் வரி என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் வாகனத் தயாரிப்பாளர்களோ அவற்றில் 12 பேர் அல்லது 14 பேர் வரை செல்லக்கூடிய அளவுக்கு அவற்றைத் தயாரிக்கிறார்கள். வண்டியை உபயோகிப்பவர்களும், வண்டி உரிமையாளர்களும் அவ்வாறுதான் பயணிகளைக் கொண்டு செல்கிறார்கள். இதில் அவர்களுக்கு ஏற்படும் சிக்கல் என்னவென்றால், அவர்கள் அண்டை மாநிலங்களுக்குச் செல்லும்போது, இந்த வாகனங்களை அங்குள்ள போலீஸ்காரர்களும், மோட்டார் வாகன ஆய்வாளர்களும் பறிமுதல் செய்து, மூவாயிரம் ரூபாய், நான்காயிரம் ரூபாய் தண்டத்தொகை (பெனல்ட்டி) கட்ட வேண்டுமென்று செய்து விடுகிறார்கள். இதனால் வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் பொதுமக்கள் மிக மிகப் பாதிக்கப்படுகிறார்கள், கஷ்டப்படுகிறார்கள். இந்த வரியை உயர்த்தினால், அதற்கு அவர்கள் சிறிதும் வருத்தமடைய மாட்டார்கள். எதிர்ப்பும் தெரிவிக்க மாட்டார்கள். மாறாக வரிகளை உயர்த்தினால், அதை ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறார்கள்.

இப்போது 6 பேர் செல்வதற்கு மூன்று மாதங்களுக்கு 150 ரூபாய் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாகனத் தயாரிப்பாளர்கள் 12 அல்லது 14 பேர் செல்கிறமாதிரிதான் இவற்றைக் கட்டுகிறார்கள். இப்போது ஒரு சீட்டுக்கு 25 ரூபாய் என்று வைத்திருக்கிறார்கள். இதை 50 ரூபாய் என்று ஏற்றி 12 இருக்கைகள் கொண்ட வாகனத்திற்கு மூன்று மாதங்களுக்கு 600 ரூபாய் என்று உயர்த்தினால், அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு மட்டும் ஒரு வாகனத்திற்கு 2,400 ரூபாய் வருவாய் வரும். தமிழகத்தில் சுமார் 10,000 வாகனங்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. இவற்றைப் பார்க்கும்போது, ஆண்டு ஒன்றுக்கு சுமார் 2½ கோடி ரூபாய் மிக எளிதாக வரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இதை என் அவர்கள் ஏற்றுவதற்கு யோசிக்கிறார்கள் என்று எண்ணிப் பார்க்கிறபோது, இவ்வாறு 12 பேர் செல்ல அனுமதி கொடுத்துவிட்டால், இவர்கள் பேருந்துகளைப்போல் இவற்றை ஓட்ட ஆரம்பித்து விடுவார்களோ என்கிற ஐயம் இருக்கும் போலிருக்கிறது. நான் தனியாகப் பேசும்போது கூட அதைச் சொன்னார்கள். அவ்வாறு ஓட்டிச்சென்றால், அதைத் தடுக்கும் வண்ணம் சட்டம் இருக்கிறது, துறை இருக்கிறது. அதன்மேல் நடவடிக்கை எடுக்க முடியும். எனவேதான் நான் மாண்புமிகு அவை முன்னவர் மூலம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



1986 மார்ச் 20] [திரு. எல். ஜெயச்சந்திரன்]

(முற்பகல் 11-20)

மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்கு நான் கூறுவது, இந்த 2½ கோடி ரூபாய் இதன்மூலம் அரசுக்கு வருகிறது. இந்த வரியை உயர்த்துவதன் மூலமாக நமது அரசு அந்த மினி பஸ்ஸை வைத்திருப்பவர்களுக்கு நன்மைதான் செய்கிறதே தவிர, வரியை ஏற்றுவதனால் அவர்களுக்கு ஒரு சிறிதளவு தொந்தரவும் கொடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோன்று முன்பு விற்பனை வரிபற்றி, ஆட்டோமொபைல்பற்றி எல்லாம் இங்கே குறிப்பிட்டேன். இன்னொரு உதாரணத்தையும் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தென்னாற்காடு மாவட்டம் கடலூரில் சிப்காட் இருக்கிறது. இந்த சிப்காட் இன்டஸ்டிரியல் எஸ்டேட்டில் ஒரு பெரிய ரசாயனத் தொழிற்சாலை இருக்கிறது. அந்த இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்டில் அந்தத் தொழிற்சாலைதான் மிகப் பெரிய தொழிற்சாலை. அந்தத் தொழிற்சாலையை ஆரம்பித்து, அவர்கள் தயாரித்த பொருள்களை எல்லாம் விலைக்கு வெளியிலே விற்றுக் கொண்டிருக்கிறார்கள். பெரிய அளவில் மூலதனத்தைப் போட்டு அவர்கள் வியாபாரத்தைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வியாபாரத்தைப் பெரிய அளவில் செய்தாலும், அதற்குரிய விற்பனை வரி நமக்குக் கிடைக்கிறதா என்றால், நிச்சயமாக நமக்குக் கிடைக்கவில்லை. மீண்டும் அந்த விற்பனை வரி பாண்டிச்சேரி மாநிலத்திற்குத்தான் செல்கிறது. காரணம் அவர்கள் அப்போது ஆரம்பித்த பிறகு தமிழக அரசை அணுகினார்கள். குஜராத் மாநிலத்தில் இதுபோன்ற தயாரிப்புகளுக்கு விற்பனை வரி மிகக் குறைவாக இருக்கிறது; தமிழக அரசும் அதை அனுசரித்து, அந்த வரியைக் குறைக்கவில்லை என்றாலும், குஜராத் மாநிலத்தில் உள்ள அளவுக்காவது, தமிழக அரசு கொடுத்தால்தான் வியாபாரத்தில் நிச்சயமாக அவர்கள் போட்டியிட முடியுமென்றும் நமது அரசிடம் வேண்டிக் கேட்டுக்கொண்டார்கள். ஆனால் அவர்களுடைய கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. அதற்கு அவர்கள் என்ன செய்தார்கள்? அவர்கள் பாண்டிச்சேரியில் ஒரு கிளை நிறுவனத்தை ஆரம்பித்து, கடலூரில் தயாரிக்கும் அனைத்துப் பொருட்களையும் பாண்டிச்சேரிக்கு மாற்றி, பாண்டிச்சேரியிலிருந்து அவர்களுடைய தயாரிப்புப் பொருட்களை விற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஏறத்தாழ ஒரு மாதத்திற்கு பல லட்ச ரூபாய் அவர்கள் விற்பனை வரியாக பாண்டிச்சேரி மாநிலத்திற்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதுபோன்று பலவிதமான பொருட்கள், ஆட்டோமொபைல் மற்றும் நிறைய பொருட்களைப்பற்றிச் சொல்லிக்கொண்டே

[திரு. எல். ஜெயச்சந்திரன்] [1986 மார்ச் 20

போகலாம். அதற்காகத்தான் நான் ஒன்று கூற விரும்புகிறேன். நமது அரசு நல்ல ஒரு வல்லுநரையும், ஒரு பொருளாதார ஆலோசகரையும் வைத்துக் கொண்டு இதுபற்றி தீவிரமாகப் பரிசீலித்தால், நிச்சயமாக அந்த வருவாய் எல்லாம் நம்முடைய தமிழகத்திற்குத்தான் வரும். அந்த வரி தமிழக அரசுக்கு வந்தால், நல்ல பல வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றவும், ஒரு வாய்ப்பாகவும் இருக்கும். மேலும் நமது அரசுக்கு மது விலக்கினால் ஏற்படும் இழப்பைச் சரிக்கட்டவும் அது வழிவகை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மெய் ஒரு பாகம்

வளர்ச்சித் திட்டங்கள், வளர்ச்சி நிவாரணப் பணிகள், நலிந்தோருக்கான நல்வாழ்வுப் பணிகள், ஏழ்மைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்களுக்கு உதவி வழங்கும் திட்டங்கள் ஆகியவைகளை நல்லமுறையில் செயல்படுத்த மத்திய அரசு ஒரு பங்கைத் தர வேண்டுமென்று மாநில அரசு கேட்டிருக்கிறது. மத்திய அரசும் நமது மாநில அரசுக்கு முழு ஒத்துழைப்புக் கொடுத்து இது போன்ற நல்ல திட்டங்களை எல்லாம் மாநில அரசு நல்லமுறையில் செய்வதற்கு முழு ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்ரீலங்கா அகதிகளைப்பற்றியும், ஸ்ரீலங்கா தமிழர்களைப்பற்றியும் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். பத்திரிகையில் அவர்கள் அங்கே படும் இன்னல்கள், படுகொலைகள் எல்லாம் தினம் தினம் வந்து கொண்டிருக்கின்றன. அது குறித்து மாநில அரசு முழு முயற்சி எடுத்துக் கொண்டிருந்தாலும், நமது மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் டெல்லி சென்று பேசிக் கொண்டிருந்தாலும், மத்திய அரசு இதுபற்றி உடனடியாக நடவடிக்கை எடுத்து, ஸ்ரீலங்கா தமிழர்கள் படும் இன்னல்களைத் தவிர்க்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கூட ஸ்ரீலங்கா அகதிகள்பற்றி இங்கே தெளிவாக எடுத்துக் கூறினார்கள். அகதி முகாம்களில் அவர்கள் படும் இன்னல்கள் எல்லாம் பத்திரிகைகளில் வந்து கொண்டிருக்கின்றன. அதையெல்லாம் நம்முடைய தமிழக அரசு தீவிரமாகக் கவனித்துக் கொண்டிருந்தாலும், மேலும் அவர்களுக்குக் கொடுக்கப்படும் உதவிப் பணத்தைப் பெறுவதில் இடையில் தரகர்கள் இடைஞ்சலாக இருக்கிறார்கள் என்றுதான் பத்திரிகையில் வருகிறது. அந்தக் குறைகளையெல்லாம் அரசு கவனித்து, ஸ்ரீலங்கா தமிழர்களுக்கு நல்ல ஒரு வழி செய்து தரவேண்டுமென்று கேட்டுக்



1986 மார்ச் 20] [திரு. எல். ஜெயச்சந்திரன்]

அடுத்து, முக்கியமாக தமிழகத்தில் மட்டுமல்ல, அகில இந்திய அளவிலே ஜனத்தொகைக்கு அடுத்தபடியாகக் கருதப்படும் ஒரு பெரிய அபாயம் வேலையில்லாத் திண்டாட்டம். இன்று அதைப்பற்றி நிதிநிலை அறிக்கையில் ஒன்றும் குறிப்பிடப்படாதது சற்று ஏமாற்றமாக இருக்கிறது. வேலையில்லாத பட்டதாரிகள் படித்துப் பட்டம் பெற்று பல ஆண்டுகளாகக் காத்திருந்தும், எந்த ஒரு வேலையும் இல்லாமல் அவர்கள் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துவிட்டு எப்போது அவர்களுக்கெல்லாம் வேலை கிடைக்கும், எப்போது அவர்களுக்கெல்லாம் நல்ல காலம் வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நமது அரசு பல்வேறு வழிகளில் உதவித் தொகையெல்லாம் அளித்து வந்தாலும், அவர்களுக்கு விரைவில் வேலை கிடைப்பதற்கு, அனைவருக்கும் வேலை கிடைப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அனைவருக்கும் வேலை கொடுப்பது என்பது கடினம்தான் என்பதை நான் மனப்பூர்வமாக உணர்கிறேன். படித்தவர்கள் எல்லோருக்குமே அரசே வேலை கொடுத்திட

(முற்பகல் 11-25)

முடியாது என்பதை நான் பரிபூரணமாக உணருகிறேன். ஆனால் எந்தெந்தத் துறையின் மூலம் அவர்களுக்குத் தமிழக அரசு உதவ முடியுமோ அப்படியெல்லாம் உதவ வேண்டும் என்று மட்டும் கேட்டுக்கொள்கிறேன்.

மறைந்த பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் ஆரம்பித்து வைத்த சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலமாக இன்றைக்கு ஆயிரக்கணக்கான படித்த பட்டதாரி இளைஞர்கள், வாலிபர்கள் பல்வேறு தொழில்களைத் தொடங்கியிருக்கிறார்கள். தமிழக அரசும் அதுபோன்ற திட்டம் ஒன்றை உருவாக்க முடியவில்லை என்றாலும்கூட, வேறு எந்த விதத்தில் அவர்கள் தொழில் தொடங்க உதவிட முடியும் என்று பார்த்து அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போதே அரசின் சார்பில் உதவி செய்கிறார்கள். ஆனால் அதில் என்ன இன்னல் என்றால், படித்த இளைஞர்கள் தொழில் தொடங்க வங்கிகளையோ அல்லது அரசு நிறுவனங்களையோதான் அணுக வேண்டியிருக்கிறது. அவர்களின் மூலமாகக் கடன் வாங்க, முதலில் 'மார்ஜின் மணி' என்று 25 சதவீதம் கட்ட வேண்டியிருக்கிறது. அதற்கான பணம் அத்தகைய படித்த பட்டதாரி இளைஞர்களிடம் இருப்பதில்லை. சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வங்கி உதவியை எதிர்பார்க்கும் இளைஞர்களுக்கு மார்ஜின் மணியைக் கட்டுவதற்கான வசதி இல்லை. அந்த மார்ஜின் மணியைக்கூட நாமே கொடுக்க வேண்டும் என்றுகூட நான் சொல்லவில்லை. ஆனால் அவர்களுக்கு அதைக்கூட

அரசாங்கம் கடனாகக் கொடுத்தால் நிச்சயமாக அவர்கள் அந்தப் பணத்தைப் பலனாகவே திருப்பிக் கொடுத்துவிடுவார்கள். இதைக் குறித்து தமிழக அரசு தனிமையாகச் சிந்தித்து உதவி செய்வதற்கு முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அவையில் இப்போது வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் அவர்களும் இருப்பதால், அதுபற்றிய ஒரு கருத்தையும் இந்த நேரத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன். பல வருடங்களாகப் படித்த பல பட்டதாரிகள் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் தங்களின் பெயர்களைப் பதிவு செய்துவிட்டு நேர்முக அழைப்பை எதிர்நோக்கிக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப் பதிவு செய்து கொண்டவர்கள் எல்லோருக்கும் அத்தகைய வாய்ப்பு கிடைப்பதுயில்லை. வேலையும் கிடைப்பதுமில்லை. அப்படியே தப்பித் தவறி அவர்களுக்கு ஆண்டுகள் பல கடந்த பின்னர் வேலைக்காக நேர்முக அழைப்பு வரும்போது, அந்தச் சந்தர்ப்பத்தை அவர்கள் பயன்படுத்திக் கொள்ள முடியாத நிலை வருகிறது. கேட்டால் அவர்கள் அதற்குள்ளாக வேலையில் சேருவதற்கான வயது வரம்பைத் தாண்டிவிட்டார்கள் என்று சொல்லி விடுகிறார்கள். அந்தக் காரணத்தாலே அவர்களுக்கு நேர்முக அழைப்பு அனுப்பப்படுவதில்லை. இவ்வாறு 10, 12 ஆண்டுகள் காத்துக் கொண்டிருந்தாலும்கூட, எப்படியும் ஒளிமயமான எதிர்காலம் வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தாலும்கூட, இறுதியில் வயதாகிவிட்டது என்று சொல்லி அவர்கள் வாய்ப்பை இழக்கிற நிலைமைதான் இருக்கிறது. எனவே இப்படி 10, 12 ஆண்டுகள் காத்துக் கிடந்தவர்களின் நிலைமைகளைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு வயது வரம்பிலிருந்து விலக்களிக்க வேண்டும் அல்லது அந்த விதியை அவர்களுக்குச் சாதகமாகத் தளர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக் குறித்து யோசித்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வேலையில்லாப் பட்டதாரிகளுக்குத் தொழில் தொடங்குவதற்கு தொழில் துறையின் மூலம் பல வகைகளில் உதவ வேண்டும். அவர்களைப் பொறுத்த வரையில், சில சலுகைகளைக் கொடுக்க வேண்டும். விதிமுறைகளில் சற்று விலக்களிக்க வேண்டும். அப்படிச் செய்து வங்கிக் கடனையோ, அரசு நிறுவனங்களிலிருந்து கடனையோ பெறுவதற்கு வசதி செய்து கொடுத்தால், பலர் புதிதாகத் தொழில் தொடங்க முன்வருவார்கள். இப்போது இருக்கிற விதிமுறைகள் காரணமாக புதியதாகத் தொழில் தொடங்க வருகிறவர்கள்கூட தொழில் தொடங்காமல் போய்விடுகிறார்கள். அதன் காரணமாக அவர்கள் எல்லாம் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் காத்துக் கொண்டிருக்கிற நிலைமை



தொடருகிறது. அப்படி இல்லாமல், நீண்ட காலமாக, பல ஆண்டுகளாக இவர்கள் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து காத்துக் கொண்டிருப்பவர்கள் என்று சான்றிதழ் அளித்து, அவர்களுக்காவது சற்று விதிமுறைகளை மாற்றம் செய்து, சலுகை அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்காக அவர்களுக்கு கேரண்டாரே வேண்டாம் என்று சொல்லவில்லை. வேறு சில விதிமுறைகள் இருக்கின்றன. அவற்றைப் பொறுத்தவரையில், தளர்த்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால், அவர்கள் அரசு வேலையில் போய்ச் சேர வேண்டாம் என்ற எண்ணம் ஏற்படும். அதற்குப் பதிலாக தொழில் தொடங்க முன்வருவார்கள். இரண்டு அல்லது மூன்று பேராவது அவர்களாலே வேலை வாய்ப்புப் பெறுவதற்குச் சந்தர்ப்பம் ஏற்படும். அதன் காரணமாக நாடு முன்னேறும் என்று இந்த நேரத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, கிருஷ்ணா நதிநீர்த் திட்டம்பற்றி நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நாம் இதற்காக ஆந்திர மாநிலத்திற்குக் கடந்த சில ஆண்டுகளில் பல கோடி ரூபாய்களைக் கொடுத்திருக்கிறோம். என்றாலும் அந்தத் திட்டம் வேகமாகச் செயல்படாமல் இருப்பதால், விரைவில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இதைக் குறிப்பிடும்போது, இது தொடர்பாக இன்னொரு கருத்தையும் தெரிவிக்க விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது, வீராணம் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக தயாரிக்கப்பட்ட பெரிய பெரிய ராட்சதக் குழாய்கள் இன்றைக்கும் தென்னாற்காடு மாவட்டத்தில் பல இடங்களில் பரிதாபகரமான நிலையில் இருக்கின்றன என்பதைப் பார்க்கிறோம். அப்படிப்பட்ட குழாய்களை வைத்துக் கொண்டு வீராணத்திலிருந்து தஞ்சை, தென்னாற்காடு, வடாற்காடு மாவட்டத்தில் உள்ளவர்களுக்குக் குடி தண்ணீர் அளிப்பதற்குப் பயன்படுத்த முடியுமா என்பதையாவது அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அல்லது நெய்வேலியிலிருந்து வெளியேறும் தண்ணீரை இந்த ராட்சத குழாய்களைப் பயன்படுத்தி விவசாயிகளுக்குக் கொண்டு வந்து கொடுத்து விவசாயத்திற்குப் பயன்படுத்த முடியுமா என்பதையும் அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பயனில்லாமல் அந்தக் குழாய்களை அங்கே விட்டு வைத்திருப்பதைவிட அவற்றை எப்படிப் பயன் உள்ள வகையில் பயன்படுத்துவது என்பதைக் குறித்து அரசு பரிசீலிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அடுத்து வட ஆற்காடு மாவட்டம் ஆம்பூர் நகரில்,

**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயச்சந்திரன் அவர்கள் பேசும்போது, வீராணம் திட்டக் குழாய்களைப்பற்றிக் குறிப்பிட்டார். அந்த வீராணம் திட்ட ஊழல் காரணமாக பல அதிகாரிகள்கூட வேலையிலிருந்து நீக்கப்பட்டு விட்டிருக்கிறார்கள். அவர்களையும் விட்டுவிட வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்ல விரும்புகிறாரா அல்லது அந்தக் குழாய்களை பயன்படுத்துவதைப்பற்றி மட்டுமே குறிப்பிடுகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11-30)

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** அதிகாரிகளை விட்டுவிடுவதா இல்லையா என்பதைப்பற்றி நான் கருத்து சொல்ல விரும்பவில்லை. அது அரசு எடுக்க வேண்டிய முடிவு. பல கோடி ரூபாய் செலவு செய்து செய்யப்பட்ட அந்தக் குழாய்கள் சேத்தியாதோப்பில் அப்படியே கிடக்கின்றன. இந்தக் குழாய்களை வேறு பணிகளுக்காகப் பயன்படுத்தலாமே என்பதுதான் என்னுடைய கருத்து.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** வீராணம் திட்டத்திற்காக போடப்பட்ட குழாய்களைப் பயன்படுத்தாமல் இருப்பதற்குக் காரணம் அரசியல் உள்நோக்கம் அல்ல. அந்தக் குழாய்கள் பயனற்ற முறையில், தரமற்ற முறையில் தயாரிக்கப்பட்டதன் காரணமாகத்தான் அவ்வாறு போடப் பட்டிருக்கிறது. ஆகவே சென்னைக்குக் கொண்டு போனாலும், வட ஆற்காட்டுக்குக் கொண்டு போனாலும், அதனுடைய தரம் அப்படியேதான் இருக்கும். ஆகவேதான் பயன்படுத்தாமல் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, அந்தக் குழாய்கள் வீராணம் திட்டத்திற்கேற்ப சரியாகத் தயாரிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். குறிப்பாக வீராணம் ஏரியிலிருந்து ஏற்றப்படும் தண்ணீர் அழுத்தச் சக்தியைத் தாங்கும் அளவிற்கு அக்குழாய்கள் இல்லையென்று தெரிகிறது. அதை மற்றப் பகுதிகளில் பயன்படுத்தலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிறார். அப்படி மற்றப் பகுதிகளுக்கு இதைப் பயன்படுத்தினால், பொது மக்களுடைய பணம் வீரயம் ஆகாமல் இருக்குமல்லவா? ஆகவே இதைச் செய்ய அரசு முன்வருமா என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறார்.



**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் சொல்வதைப் போன்று, வேறு பணிகளுக்குப் பயன்படுத்த முடியுமா என்று ஆலோசிக்கப்பட்டது. அப்படிப் பயன்படுத்துகிறபோது, இரண்டு குழாய்கள், மூன்று குழாய்கள் என்று குறைந்த அளவு குழாய்களைக் கொண்டு போக வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. மற்ற இடங்களுக்கு இந்தக் குழாய்களை கொண்டு செல்வது மிகப் பெரிய வேலையாக இருக்கிறது. மிகப் பெரிய சுமையாக இருக்கிறது. அதிகச் செலவாகிறது. ஆகவே இப்படிப்பட்ட சிக்கல்கள் இந்தக் குழாய்க்குள்ளே இருப்பதால்தான், இந்தக் குழாய்கள் இருக்கின்ற இடத்திலேயே இருக்கின்றன.

THIRUMATHI TARA CHERIAN : In that case, instead of allowing them to go waste, will it be possible for the Government to advertise them and sell the whole thing in auction, so that we may avoid the incurring of losses to some extent ?

*** மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போன்று, இதை அறிவித்து ஏலத்திலே விடலாம் என்றால், அதை யாராவது எடுத்துக்கொள்ளலாம் என்று கருதினால், அவர்கள் எதற்காக எடுத்துக்கொள்வார்கள், எதற்காகப் பயன் படுத்துவார்கள் என்பதை எப்படிக் குறிப்பிட்டு ஏலம் விடுவது என்பதிலே தான் பிரச்சினை இருக்கிறது.

**திரு. எஸ். ஆர். இராதா :** மாற்றுத் தலைவர் அவர்களே, ஏலத்தில் விடுவது என்று யோசித்தால், இதிலே உள்ள காண்ட்ராக்டர்கள் ஏலம் விடுவதையே தடுத்துவிடுவார்கள்.

THIRUMATHI TARA CHERIAN : I want to know whether it will be possible for the Government to scrutinise and see whether instead of wasting them some hing could be done to use them for the benefit of the people. Otherwise, it is a great loss to allow them to lie in the open without any use.

*** மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லுவதைப் போன்று அரசுக்கு மிகப் பெரிய இழப்பு ஏற்பட்டுவிட்டது என்பது எல்லோரும் அறிந்த ஒன்று. ஆனால் அந்த இழப்பை ஈடு செய்ய முயற்சிகள் எடுக்கும்போது, மேலும் இழப்பு வந்து [illegible]

(திரு. இராம. வீரப்பன்) [1986 மார்ச் 20

குழாய்களை யாராவது வாங்குவதற்கு ஏலம் விடுவது என்று பொது அறிவிப்புச் செய்யும்போது, இந்தக் குழாய்களை எந்தப் பணிக்காகப் பயன்படுத்துவது என்று அறிவிப்பு செய்வது முக்கியமான பணி. மாண்புமிகு உறுப்பினர்கள் வேறு பகுதிகளுக்கு இதைப் பயன்படுத்தக்கூடாது என்று கேட்டார்கள். இதைத்தான் நாங்கள் நீண்டகாலமாகப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். 'கல்வெர்ட்' போன்ற சிறிய பணிகளுக்குப் பயன்படுத்த முடியுமா என்று பரிசீலிக்கச் சொன்னோம். இந்தக் குழாய்களை எடுத்துக் கொண்டு போய் மற்றோர் இடத்தில் சேர்ப்பது 'யானையைக் கட்டித் தீனி போடுவது போல' இருக்கிறது. ஆகவே இதை எடுத்துக் கொண்டு போவதை விட, அந்தந்தப் பகுதிகளிலேயே குறைந்த செலவிலேயே செய்து கொள்ளலாம் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இப்படி பல சிக்கல்கள் இதிலே வந்து புகுந்து கொண்டிருக்கின்றன. ஆகவே முன்னேயும் போக முடியவில்லை. பின்னேயும் வர முடியவில்லை. 'முன்னே போனால் கடிக்கிறது, பின்னே சென்றால் உதைக்கிறது' என்ற சிக்கலில் அரசு மாட்டிக்கொண்டு தவிக்கிறது.

(முற்பகல் 11-35)

திரு. அ. ப. சிவராமன்: மாற்றுத் தலைவர் அவர்களே, வீராணம் குழாய்களை அந்தப் பகுதியிலே வாழ்கின்ற மக்கள் குடியிருப்பதற்கும், அதை நெல் குதிராகப் பயன்படுத்துவதற்கும், வைக்கோல் போட்டுக்கொள்வதற்கும் கேட்கின்றார்கள். இந்த அரசாங்கம் அதை இனாமாகத் தர முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எல். ஜெயச்சந்திரன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அந்தக் குழாய்களைப்பற்றிக் குறிப்பிடும்போது, நெய்வேலியிலிருந்து அவர்கள் கூட ஒரு கருத்து தெரிவித்திருக்கின்றார்கள். கிராமங்களுக்குக் குடிநீர்த் தேக்கமாக அல்லது 'வாட்டர் டேங்க்' ஆக ஆக்க பரிசீலிக்கலாம் என்று அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். நம் முன்னவர் அவர்கள் கூறியதை முழு மனதுடன் நான் ஏற்றுக்கொள்கிறேன். காரணம் அதை எடுத்துச் செல்வதற்கு பெருஞ்செலவு ஆகும். அதற்கு ஒரு கிரேன் வேண்டும். அதற்குத் தனியாக லாரி வேண்டும். இருந்தாலும் அதைப் பார்க்கும்போது மிகவும் பரிதாபமாக இருக்கின்றது. அதை வைத்துக்கொண்டு அதை எந்த அளவுக்கும் பயன்படுத்தலாம் என்பதை மீண்டும் சிந்திக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர்ப் பிரச்சினை பற்றிக் கூறும்போது, வட ஆற்காடு மாவட்ட



1986 மார்ச் 20]

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: சில பொருள்கள் வரலாற்றுச் சின்னங்களாக இருப்பது தவிர்க்க முடியாத ஒன்று. வரலாற்றுச் சிறப்பாக இருக்கும் என்பதற்காக அது அப்படியே இருக்க இங்கே பாதுகாப்பு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எல். ஜெயச்சந்திரன்: வட ஆற்காடு மாவட்டம் ஆம்பூர் பகுதியில், குடிநீர்த் தட்டுப்பாடு பல வருடங்களாகவே இருந்துகொண்டு வருகின்றது. அதற்கு முக்கிய காரணம் என்னவென்று ஏற்கெனவே அவையில் பலமுறை பேசியிருக்கிறேன். மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பாலாற்றில் தோல் பதனிடும் ஆலைகளிலிருந்து வரும் கழிவு நீர் அந்தப் பாலாற்றில் கலப்பதால் ஏற்படும் நிலையைப்பற்றிச் சொல்லியிருக்கின்றார்கள். அந்த நீரை பொதுமக்கள் யாரும் குடிப்பதில்லை. இன்னும் பத்து ஆண்டுகளில் அதை யாரும் உபயோகிக்க முடியாது என்று சான்றிதழ்கள் கூட வழங்கியிருக்கின்றார்கள் என்று சொல்லியிருக்கின்றார்கள். இந்த அவையிலே கூட பேசியிருக்கிறோம். 'பொல்யூஷன் கன்ட்ரோல்' துறை மூலம் நடவடிக்கை எடுத்துவருகிறோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இருந்தாலும் இப்போது அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு ஒரு பெரிய பிரச்சினை குடிநீர்த் தட்டுப்பாடுப் பிரச்சினை. இதை முக்கியமாகக் கூறுவதற்குக் காரணம் நம்முடைய தமிழக அரசு அந்தப் பாலாற்றின் மேலே ஒரு பாலம் கட்டிக் கொண்டிருக்கின்றது. அந்தப் பாலத்தை கட்டும்போது சிமென்டில் அந்த பாலாற்று மண்ணும் பாலாற்று நீரும் இருக்கக்கூடாது என்று அவர்கள் கூறியிருக்கின்றார்கள். அங்கே அந்த பாலாற்று மண்ணையும் பாலாற்றுத் தண்ணீரையும் பயன்படுத்தக்கூடாது என்று சொல்கின்றார்கள்.

பிறகு இன்றைக்கு ஆம்பூரிலிருந்து ஒரு குடிநீர்த் திட்டம். அங்கே பிருந்து தண்ணீர் எடுத்து வருவதற்கு ஒரு திட்டத்தை ஏற்பாடு செய்திருக்கின்றார்கள். அந்தத் திட்டமும் காலாவதி ஆகி அப்படியே இருக்கின்றது. மிக விரைவில் அந்தத் திட்டத்தை எடுத்துக்கொண்டு வந்து, அந்தக் குடிநீர்ப் பிரச்சினையை அங்கே சமாளிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே அரசைக் கேட்டுக்கொள்கிறேன். பாலாற்றிலிருந்து வரும் கழிவு நீர்ப் பிரச்சினையை மிகமிக விரைவில் கவனிக்க வேண்டும். அதன்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆம்பூரில் மட்டுமல்ல, வாணியம்பாடி, ராணிப்பேட்டை போன்ற பகுதிகளிலும் இந்தப் பிரச்சினைகள் இருக்கின்றன. இந்த மாமன்றத்திலும் வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலும் இதைப்பற்றி நாங்கள் பேசிவருகிறோம்.

[திரு. எல். ஜெயச்சந்திரன்] [1986 மார்ச் 20

அங்குள்ள அதிகாரிகளிடம் கூறி அதன்மீது விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோன்று பாலாற்றுப் பிரச்சினையால் ஆம்பூர் பகுதி விவசாயமும் பாதிக்கப்பட்டிருக்கின்றது; கடந்த ஐந்து, ஆறு ஆண்டுகளாகவே விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கின்றது. விவசாயப் பெருங்குடி மக்களும் அங்கே மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். அதற்கும் உதவவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மின் சக்தியைப்பற்றிச் சொல்கிறேன். அனல்மின் நிலையத்தைப் பற்றிச் சொல்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் அதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். கடலூரிலே ஒரு அனல் மின் சக்தி நிலையம் வர இருக்கின்றது என்று சொல்லியிருக்கின்றார்கள். அதற்கு என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். நெய்வேலியிலிருந்து அதிக மின் உற்பத்தி செய்வதற்கு மத்திய அரசிடம் உரிமையைக் கேட்டிருப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். நெய்வேலி மின் சக்தியை நாம் முழுமையாக உபயோகப்படுத்துகிறோம். நெய்வேலியிலே மின் உற்பத்திக்காக இரண்டாவது சுரங்கத்தை ஆரம்பித்திருக்கின்றார்கள். இரண்டாவது தெர்மல் ஸ்டேஷனை ஆரம்பித்திருக்கின்றார்கள். முன்பு மூன்று, நான்கு மாதங்களுக்கு முன் ஏற்பட்ட பிரச்சினை, அதாவது அந்த நெய்வேலி சுரங்கப் பகுதிக்கு வருகின்ற வாடிக்கையாளர்கள் வசதிகளுக்காக என்று இடங்களை ஒதுக்கியிருந்தார்கள். அந்த இடங்களில் கட்டிடம் கட்ட இடம் ஒதுக்கியிருந்தார்கள். ஆனால் அந்த இடங்களை எல்லாம் இதுபோன்ற சுரங்கத்திற்காகத்தான் கொடுத்தோமே தவிர, தனியாருக்கு நாங்கள் கொடுக்க விரும்பவில்லை என்றும் தாங்கள் கொடுக்க மாட்டோம் என்றும் அரசு சொல்லி

[முற்பகல் 11-40]

அதைத் தடுத்துவிட்டது. ஆனால் நெய்வேலி நிலக்கரிச் சுரங்க நிர்வாகத்தினர் யாருக்குக் கொடுத்தார்கள் என்றால், அந்தப் பகுதி மக்களுக்குக் கொடுத்தார்கள். ஒர்க்-ஷாப் வைக்க, சர்வீஸ் ஸ்டேஷன் வைக்க, ஓட்டல் வைக்க அந்த நிலங்களை அவர்களுக்குக் கொடுத்தார்கள். அந்த உரிமங்களை எல்லாம் ரத்து செய்ததாக நான் அறிகிறேன். அதை மீண்டும் கொடுக்க வேண்டுமென்று நெய்வேலி நிலக்கரிச் சுரங்க நிர்வாகத்தினர் கேட்கிறார்கள். பல்வேறு வாடிக்கையாளர்களின் நலன் கருதி, அந்த இடங்களை அந்தப் பகுதி மக்களுக்குக் கொடுக்க, அந்த உரிமங்களைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1986 மார்ச் 20] [திரு. எல். ஜெயச்சந்திரன்]

அடுத்து, காவல் துறைக்கு நிதிநிலை அறிக்கையில் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். சட்டம், ஒழுங்கைப் பாதுகாக்க இப்போது இருக்கும் காவலர்களின் எண்ணிக்கை நிச்சயமாகப் போதாது. மேற்கொண்டு காவலர்களை நியமிக்க வேண்டும். அதற்குப் பல கோடி ரூபாய் செலவாகும். இருந்தாலும், சட்டம் ஒழுங்கைக் காப்பதற்கு மேலும் காவலர் எண்ணிக்கையைக் கூட்ட வேண்டும். சப்-இன்ஸ்பெக்டர்களைப் புதிதாக நியமிக்க தேர்வு நடத்தி ஒரு வருடமாகி விட்டது என்று நினைக்கிறேன். அந்த நியமனங்கள் இன்னும் செய்யப்படவில்லை. அவர்களையும் விரைவிலே நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காவல் துறையிலே ஓர் அங்கமாக இருக்கும் ஊர்க் காவல் படையைச் சேர்ந்தவன் என்ற முறையில் சொல்கிறேன். அவர்களுக்குக் கொடுக்கப்படும் தினப்படியை உயர்த்த வேண்டும். மாதத்திற்கு நான்கு 'கால்-அவுட்' இருக்கிறது. அதற்காக தமிழக அரசு அவர்களுக்குக் கொடுக்கும் தினப்படி ஆறு ரூபாயாகும். இன்னும் 1½ ரூபாய் கொடுத்தால், தினப்படி ரூ. 7.50 கிடைக்கும். அப்போது, மத்திய அரசும் தன்னுடைய பங்காக ரூ. 7.50 கொடுக்கும். ஆக அவர்களுக்கு 15 ரூபாய் கிடைக்க வழிவகை செய்யலாம். இந்த நேரத்தில் மாண்புமிகு அவை முன்னவரவர்களைக் கேட்பது, அவர்களுக்கு ரூ. 1.50 சேர்த்துக் கொடுத்து, அதன்மூலம் மத்திய அரசு ரூ. 7.50 கொடுக்கச் செய்து, மொத்தம் 15 ரூபாய் தினப்படி அவர்கள் வாங்க வழிவகை செய்து, உதவ முன்வர வேண்டுமென்பதுதான்.

அடுத்து, கல்வி பற்றி பல்வேறு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைச் சொன்னார்கள். பல கோடி ரூபாயை கல்விக்காகச் செலவு செய்தாலும், அதை ஒரு செலவினமாகக் கருதக் கூடாது, ஒரு மூலதனமாக அதைக் கருத வேண்டும். அறிவுச் செல்வம், கல்விச் செல்வம் இருந்தால்தான், நமது மாநிலத்தை, நமது நாட்டைக் காப்பாற்ற உதவிகரமாக இருக்கும். இப்போது நாம் ஒதுக்கும் பணம் ஆசிரியர்கள், மற்ற அலுவலர்களுடைய சம்பளத்திற்கே சென்றுவிடுகிறது. வளர்ச்சிப் பணிகளுக்கும், கட்டிடங்கள் கட்டவும் போதுமா என்றால் இல்லை. இந்த ஆண்டு, பள்ளிக் கட்டிடங்களுக்காக ஒரு கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். அதை மேலும் அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நேரத்தில் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரும் பல்வேறு நிதிகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே ஒவ்வொரு வருடமும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் 10 பள்ளிக் கட்டிடங்களை அவர்களுடைய முயற்சியிலே கட்ட வேண்டுமென்று சொன்னால், வருடா வருடம் 10 கட்டிடங்கள் வர வழிவகை ஏற்படும் வகைச் செய்ய வேண்டும்.

மாண்புமிகு தலைவர் (திரு. சி. இராசலிங்கம்): மாண்புமிகு உறுப்பினர்கள் கட்டுப்பட்ட நேரத்தில் பேசிக்கொண்டிருக்கிறார்கள். விரைவில் முடிக்க வேண்டும்.

திரு. எல். ஜெயச்சந்திரன்: அடுத்து, பல்வேறு ஆசிரியர்களின் பணியிடங்கள் என்று பார்க்கும்போது, 40,000 பணியிடங்கள் இருக்கின்றன. ஆனால் நாம் கொடுத்திருக்கும் பணியிடங்களின் எண்ணிக்கை 725 தான். இது கல்வித் தரம் குறைய காரணமாக இருக்கிறது. ஒரு ஆசிரியருக்கு 30 மாணவர்கள் என்று இருக்க வேண்டும். இன்றைக்கு 130 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் கற்றுக் கொடுக்கும் சூழ்நிலை இருக்கிறது. அதையும் குறைக்க வேண்டும். ஏற்கனவே படித்து, பட்டம் பெற்ற பட்டதாரிகள் நிறைய பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் வேலை வாய்ப்பு கொடுத்தால் நல்லது.

அடுத்து, ஆசிரியர்கள் பல்வேறு பிரச்சினைகளை வைத்து போராட்டம் நடத்தி, அது முடிந்து, தமிழக அரசு ஒரு நபர் குழுவை அமைத்திருக்கிறது. ஒரு நபர் குழுவின் அறிக்கை பிப்ரவரி மாதமே வருமென்று எதிர்பார்த்தோம். இப்போது மார்ச் 31-க்குள் வருமென்று கூறியிருக்கிறார்கள். அந்தக் குழுவின் அறிக்கை விரைவிலே வர வேண்டும். அறிக்கை மாத்திரம் கொடுத்தால் போதாது. அவர்களுடைய நீண்ட நாள் கோரிக்கைகளை ஏற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 5—9—1985 அன்று, ஆசிரியர் தினத்தன்று, மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் சென்னையிலே பல்வேறு சலுகைகளை அளித்தார்கள். அந்தச் சலுகைகள் பற்றிய விவரங்களும் ஒரு நபர் குழுவிற்குச் சென்று விட்டது. மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவித்த சலுகைகள் பற்றியாவது இந்தக் கூட்டத் தொடர் முடிவதற்குள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்

(முற்பகல் 11-45)

கொள்கிறேன். அறிவித்த சலுகைகளைத் தவிர மற்ற சலுகைகளை எல்லாம் கட்டாயம் ஒரு நபர் குழுவின் பரிந்துரை வந்தவுடன் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வொக்கேஷன் ட்ரெயினிங் கோர்ஸ் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் குறிப்பிட்டார். இத்தகைய பயிற்சிப் பள்ளிகளை ஆரம்பித்திருப்பதற்காக நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். நானும் மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்களும் கடந்த முறை ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தோம்.





அதில் தமிழகத்தில் தனிப்பட்டவர்கள் எல்லாம் வியாபார நோக்கத்தோடு ஆசிரியர் பயிற்சி நிலையங்களை ஆரம்பித்திருப்பதைத் தடை செய்ய வேண்டுமென்று கேட்டிருந்தோம். அதுபற்றி உடனடியாக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் உறுதிமொழி அளித்தார்கள். அதற்கேற்ப அதைத் தடை செய்திருக்கிறார்கள். அதனால்தான் இந்த முறை 200 மேல்நிலைப் பள்ளிகளில் வொக்கேஷன் ட்ரெயினிங் கோர்ஸ் என்கிற வகையில் பயிற்சிப் பள்ளிகளை ஆரம்பித்திருக்கிறார்கள். அதற்காக நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கு மீண்டும் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம், அரசாங்கமே பயிற்சிப் பள்ளிகளை ஆரம்பித்திருப்பதால் தனிப்பட்டவர்களால் வியாபார நோக்கத்தோடு ஆரம்பிக்கப்படும் நிலை நின்று விட்டது. அதோடுகூட 300 மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டுமென்று நிர்ணயித்திருப்பதால் இத்தகைய பயிற்சிப் பள்ளிகளில் படித்து வருகிறவர்கள் மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதன் மூலம் தரமான கல்வியை மாணவர்கள் பெற முடியும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் நேற்றையதினம் பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். இவ்வளவு நாட்கள் ஆகியும் தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள கடலூரில் மேற்பட்டப் படிப்பு படிக்க வாய்ப்பில்லை. அதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கடலூரிலுள்ள பண்ணையாறு பாலத்திற்காக இரண்டு கோடி ரூபாய்க்கு வழிவகை செய்திருக்கிறார்கள். அது போதாது. அதற்கு இன்னும் அதிகமாக நிதி ஒதுக்க வேண்டும். இதுபோல் எங்கெல்லாம் தேவையோ அங்கெல்லாம் பாலங்களைக் கட்டிக் கொடுப்பதுடன், சாலைகளையும் அபிவிருத்தி செய்ய வேண்டும். சாலைகளின் அபிவிருத்திக்காக இன்னும் அதிகமான நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

அடுத்து, விளையாட்டுத் துறையை எடுத்துக்கொண்டால், இப்போது விளையாட்டு மேம்பாட்டுக் கழகம் என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தியிருக்கிறோம். விளையாட்டு மேம்பாட்டுக் கழகத்திற்கு ஒதுக்கியிருக்கும் தொகை குறைவு. அதற்கும் அதிகமாக ஒதுக்கி நம்முடைய விளையாட்டு வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் அவர்கள் தமிழ்நாட்டு அளவில் விளையாட முன் வருவார்கள். அந்தவகையில் தமிழ்நாட்டு அளவில் விளையாடுவதோடு தேசிய அளவிலும் விளையாடி நம்முடைய மாநிலத்திற்கு நல்ல பெயர் எடுக்க வேண்டும். அதற்காக இன்னும் அதிகமாக நிதி ஒதுக்க வேண்டும்.

சென்னையில் மட்டுமல்ல, எல்லா மாவட்டங்களுக்கும் விளையாட்டு மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் உதவி அளிக்க வேண்டும். ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் அவசியம் விளையாட்டு அரங்கம் மற்றும் நீச்சல் குளம் அமைக்க வேண்டும்.

அடுத்து, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், நானும் அண்ணாமலைப் பல்கலைக் கழகம்பற்றி ஒன்றைக் குறிப்பிடுகிறேன். அங்கே மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் அந்த மெடிக்கல் காலேஜை வேறொரு பல்கலைக் கழகத்தோடு இணைக்க வேண்டுமென்று சொல்வது எனக்கு வியப்பாக இருக்கிறது. அந்தப் பல்கலைக் கழகத்தில் ஏற்கெனவே என்ஜினியரிங், டென்டல் போன்ற படிப்புகள் இருக்கின்றன. அந்தவகையில் மெடிக்கல் காலேஜும் அங்கே ஒரு பேக்கல்டியாக இருக்க வேண்டும். வேறு பல்கலைக் கழகத்துடன் அதனை இணைக்காமல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துடன்தான் அதனை இணைக்க வேண்டுமென்று சொல்லி, வாய்ப்பளித் தமைக்கு நன்றி கூறி, இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று அமைகிறேன்.

மாண்புமிகு திரு. நா. இராமசாமி: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயச்சந்திரன் இங்கே பேசும்போது, அகதிகளுக்குக் கொடுக்கப்படுகிற பணத்தில் இடைத் தரகர்கள் புகுந்து விடுகிறார்கள் என்று பத்திரிகையில் செய்தி வருவதாகக் குறிப்பிட்டார். தமிழகத்திலுள்ள 165 முகாம்களிலும் முறையாக வட்டாட்சித் தலைவரின் கட்டுப்பாட்டின்கீழ் நேரடியாகப் பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது. ஆகவே, எந்த இடைத் தரகரும் இடையே புக முடியாது. முறைகேடுகளுக்கும் வழி இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-50)

திரு. வி. வி. வி. ஆனந்தம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக் களைத் தெரிவிக்க வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் 1987 ஆம் ஆண்டு ஜனவரி முதல்நாள் முதல் மதுவிலக்கு அமல்படுத்தப்படும் என்று ஒரு நல்ல செய்தி அறிவிக்கப் பட்டிருக்கிறது. இதைக் கண்டிப்பாக அமல்நடத்த வேண்டும். ஒத்தி வைக்கக் கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் ஏழைகளுக்கு எத்தனை நன்மைகள் செய்தாலும், அவை அவர்கள் கைக்குப் போய்ச் சேர வேண்டுமானால், மதுவிலக்கு அவசியம் இருக்க வேண்டும். இல்லாவிட்டால்,





அரசாங்கம் செய்யும் வளர்ச்சிப் பணிகள் அவர்களைச் சென்று அடையாது. மதுவிலக்கு, ஏழைகளுக்கு நல்வாழ்வளிக்க மிகவும் அவசியமாகும். மதுவிலக்கைக் கொண்டு வருவதற்கு மத்திய அரசு உதவி செய்யாவிட்டாலும் கூட, மாநில அரசு அதனை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்தில் மூதறிஞர் இராஜாஜி அவர்கள் முதன்முதலாக மதுவிலக்கை அமலுக்குக் கொண்டு வந்தார்கள். அப்போதுதான் அதனால் ஏற்படும் வருவாய் இழப்பை ஈடுகட்டுவதற்காக விற்பனை வரியைக் கொண்டு வந்தார்கள். விற்பனை வரி ஏற்பட்டதன் நோக்கமே மதுவிலக்கை அமல் படுத்தத்தான். ஆனால் அதையும் ரத்து செய்துவிட்டு, விற்பனை வரியையும் தொடர்ந்து வசூலிப்பதில் எந்தவித தார்மீக நியாயமுமில்லை.

இந்த நிதிநிலை அறிக்கையில் இறுதியாக 12.24 கோடி ரூபாய் பற்றாக் குறை ஏற்படும் என்று காட்டப்பட்டிருக்கிறது. ஆனால் விற்பனை வரி வசூலாலும், தற்போது விற்பனை வரியை மாற்றி அமைத்திருப்பதன் மூலமாகவும் மேற்படி பற்றாக்குறை நிச்சயமாக நீங்கிவிடும் என்று கருதுகிறேன்.

அடுத்து, ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். விற்பனை வரியின் வீதத்தைக் குறைத்தால், நேர்மையான வணிகம் ஊக்குவிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். வரிவீதம் கூடுதலாகும்போதுதான், வரி ஏய்ப்பு களும் அதிகமாகின்றன. குறிப்பாக மூதறிஞர் இராஜாஜி அவர்கள் விற்பனை வரியைக் கொண்டு வந்தபோது, வரி ஏய்ப்பு இல்லை. வரிவீதம் கூடிக் கொண்டே போகும்போதுதான் வரி ஏய்ப்புகளும் கூடிவிட்டன. எனவே விற்பனை வரிவீதத்தை அதிகரிக்காமலிருப்பது, நேர்மையான விற்பனை யாளர்களுக்கு ஊக்கமளிப்பதாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நிதிநிலை அறிக்கையில் பல்முனைவரிகள் பல ஒருமுனைவரிகளாக மாற்றப்பட்டிருக்கின்றன. இதனை நான் பாராட்டுகிறேன்.

அடுத்து, விற்பனை வரி கட்டுவதற்காக பதிவு செய்வதற்கான பதிவுக் கட்டணம் ஆண்டு ஒன்றுக்கு பத்து ரூபாய் என்றிருந்ததை நூறு ரூபாய் என்று உயர்த்தியிருக்கிறார்கள். அதுபோல் கிளைகள் அல்லது கிடங்கு களுக்கான கட்டணம் ஆண்டு ஒன்றுக்கு ஐந்து ரூபாய் என்றிருந்ததை இருபது ரூபாய் என்று உயர்த்தியிருக்கிறார்கள். இந்த அளவுக்கு இவற்றை உயர்த்த வேண்டிய அவசியம் இல்லை. பத்து ரூபாய் என்றிருப்பதை இருபது ரூபாய் என்றும், ஐந்து ரூபாய் என்றிருப்பதை பத்து ரூபாய் என்றும்

[திரு. வி. வி. வி. ஆனந்தம்] [1986 மார்ச் 20

ஆக்கலாம். இல்லாவிட்டால் இவ்வாறு உயர்த்தியிருப்பது சிறு வியாபாரிகளுக்குப் பெருஞ் சுமையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, தற்போது ரூ. 3 இலட்சமாக இருந்த விற்பனை வரி விலக்கு வரையறை இனி ரூ. 10 இலட்சம் ஆகும் என்று மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. இதை நான் வரவேற்கிறேன். ஆனால் அதே சமயத்தில் நியாயமான முறையில் வணிகம் செய்து, அரசுக்கு வணிக வரியை ஈட்டித் தருபவர்களுக்கு எந்தவித உபகாரமுமில்லாமல், அவர்கள் சம்பாத்தியத்தில் இலாபம் இருந்தாலும் இல்லாவிட்டாலும்கூட, அந்த வரியை வணிகர்கள் செலுத்த வேண்டிய கட்டாயமிருக்கிறது. ஆகவே கூடுதல் விற்பனை வரியை அவர்கள் வசூலிக்கும் உரிமையும் அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இப்போது நாம் பாரத தேசத்தில் பசுமைப் புரட்சியின் காரணமாக உணவுப் பொருள்கள் பெரிய அளவில் உற்பத்தியாகிவிட்டன. குறிப்பாக கோதுமை, அரிசி ஆகியவை பஞ்சாப், அரியானாவில் உற்பத்தி செய்யப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. இந்த நிலைமையில் நாம் உணவுப் பொருள்களுக்கு ஏற்படுத்தியிருக்கின்ற கட்டுப்பாடுகளை நீடித்துக் கொண்டிருக்க வேண்டுமா என்று கேட்க விரும்புகிறேன். ஏனென்றால் அதனால் விவசாய உற்பத்தியாளர்களுக்கு பெரிய அளவில் பயனேதுமில்லை. பஞ்சாப், அரியானா மாநிலங்களில் அரிசி, நெல், கோதுமைப் பண்டங்கள், வணிகப் பயிர்கள் (கமர்ஷியல் கிராப்கள்) என்கிற முறையில் இலாபகரமாக உற்பத்தி செய்து விற்க முடிகிறது. ஆனால் அதே சமயத்தில் நம்முடைய மாநிலத்தில் விவசாயிகளுக்குப் போதுமான விலை கிடைப்பதில்லை. அவர்கள் நெல் உற்பத்தி செய்வதற்கு ஊக்கம் அளிக்கப்படவில்லை. அதுமட்டுமல்ல.

(முற்பகல் 11-55)

நெல் உற்பத்தி அதிகமாக இல்லாததால், பல்வேறு அரிசி ஆலைகளும் இங்கு சரிவர இயங்காமல் இருக்கின்றன. ஆகவே இந்த லெவி முறையினால் விவசாயிகளுக்குக் குறைந்த விலையும், உணவுப் பொருட்கள் கொள்முதல் செய்யப்படும் விலைக்கும் உபயோகிப்பாளர்களுக்கு விற்கப்படும்போதான விலைக்கும் ஒரு பெரிய வித்தியாசம் இருக்கிறது. ஆகவே, இந்த முறை ஊழல்களுக்கும் காரணமாகிறது. இந்த லெவி முறையை ரத்து செய்துவிட்டு உணவுக் கட்டுப்பாடு அனைத்தையும் நீக்கி, போக்குவரத்துக் கட்டுப்பாட்டையும் நீக்கினால், நிச்சயமாக உபயோகிப்பதற்கும், உற்பத்தி செய்வதற்கும் இது ஒரு பெரிய வரப்பிரசாதமாக அமையும். உதாரணமாக இங்கு ஜனதா



1986 மார்ச் 20] [திரு. வி. வி. வி. ஆனந்தம்]

ஆட்சியில், மைய சர்க்காராக இருந்தாலும் சரி, மாநில சர்க்காராக இருந்தாலும் சரி, கட்டுப்பாடுகளை அகற்றியதால் எந்தவிதக் கேடும் வரவில்லை. அதைவிட்டு இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? அந்தக் கட்டுப்பாடுகளை அகற்றியபோது, விலைகள் உயரவில்லை; பண்டங்கள் தரமாகவும், தாராளமாகவும், தேவைக்கு ஏற்பவும் கிடைத்துக் கொண்டிருந்தன. ஆகவே இந்தக் கட்டுப்பாடுகளை நீக்குவதற்கு இது ஒரு சரியான தருணம். இதை அரசு ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், அத்தியாவசியப் பொருட்கள் சட்டம் என்று ஒன்று இருக்கிறது. அதில் பல கெடுபிடிகள் இருக்கின்றன. அதோடு இப்போது ஒரு புதிய உத்தரவு வந்திருக்கிறது. ஒரு மொத்த வியாபாரி இன்னொரு மொத்த வியாபாரிக்கு சரக்குகள் கொடுக்கக் கூடாது என்றிருக்கிறது. வியாபாரம் என்றால், உற்பத்தி செய்பவர்கள் மொத்த வியாபாரிகளாகக் கருதப்படுவார்கள். அவர்களிடமிருந்து இன்னொரு மொத்த வியாபாரி வாங்குகிறார். அவர் பல்வேறு இடங்களுக்கு அனுப்புகிறார். உதாரணமாக மதுரையிலிருந்து ஒரு வியாபாரி மற்ற நகரங்களுக்கு—பெரியகுளம், திருமங்கலம், தேனி போன்ற இடங்களுக்கு—மொத்த வியாபாரிகளுக்கு அனுப்புகிறார். அந்த மொத்த வியாபாரி சில்லரை வியாபாரிக்கு அனுப்புகிறார். அதற்குப் பின்னால் நுகர்வோருக்குப் போகிறது. இம்மாதிரியான ஒரு தடை ஏற்படுவதால் நேரான, சீரான வணிகம் பாதிக்கிறது. நேரடியாக உற்பத்தியாளர்களிடமிருந்து மொத்த வியாபாரிகளுக்கு, சில்லரை வியாபாரிகளுக்கு அந்தச் சரக்குகள் சேருவதற்குத் தடைகள் ஏற்படும். சில்லரை வியாபாரிகளுக்கு அந்த அளவுக்கு வாங்கும் சக்தி இருக்காது. ஜனங்களுக்குப் பொருட்கள் தாராளமாகக் கிடைப்பதில் சிரமம் ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன். அந்த உத்தரவை நமது மாநிலம் அமுலாக்க வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த உணவுப் பொருட்களைப் பொறுத்தவரையிலும் அத்தியாவசியச் சட்டத்தைப் பொறுத்தும், நமது மாநில சர்க்கார் கன்கரண்ட் சட்ட முறையைக் கடைப்பிடிக்க வேண்டியிருப்பதால், மைய அரசின் ஆலோசனையைக் கேட்டுத்தான் நடக்க வேண்டியிருக்கிறது. நமது அரசு மத்திய அரசை இந்த உணவுப் பொருள் கட்டுப்பாடுகளை நீக்குவதற்கும், இம்மாதிரியான தடைகளை நீக்குவதற்கும் ஆலோசனை சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது சாலைப் போக்குவரத்தின் முக்கியத்துவம் அதிகரித்துவிட்டது. முன்பெல்லாம் அநேகமாக சரக்குகள் ரயில் மூலமாகத்தான் வரும். இப்போது லாரிகள் போக்குவரத்து மிகவும் அதிகமாகிவிட்டது. குஜராத், மத்தியப் பிரதேசம், ஆந்திரா, மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களிலிருந்து தென் மாநிலங்களுக்கு லாரி மூலமாகத்தான் சரக்குப் போக்குவரத்து இருக்கிறது. அதுமாதிரி இங்கிருந்து வட மாநிலங்களுக்கு சரக்குப் போக்குவரத்தும் லாரி மூலமாகத்தான் அதிகரித்திருக்கிறது. இப்போது லாரிப் போக்குவரத்துகள் அதிகரித்துவிட்டன. அதற்கேற்ப சாலைகளினுடைய வசதிகள் அதிகரிக்கப்பட்டிருக்கின்றனவா என்றால், இல்லை; சாலைகள் விரிவாக்கப்பட்டிருக்கின்றனவா என்றால், நிச்சயமாக இல்லை. மேலை நாடுகளில் இருப்பதுபோல போவதற்கு ஒன்றும், வருவதற்கு ஒன்றுமாக என்று சாலைகள் அமைத்தால், வாகனப் போக்குவரத்தை மீட்டுக்கொள்வதோடு சாலை விபத்துக்களும் தவிர்க்கப்படும். இப்போது தினசரி பேப்பர்களில் சுமார் 4 சாலை விபத்துக்களைப்பற்றிப் படித்துக் கொண்டிருக்கிறோம். சாலை விபத்துக்களால் அரிய உயிர்கள் இறக்க நேரிடுகின்றன என்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். சாலைப் போக்குவரத்து போதுமானதாக இல்லாதது சாலை விபத்திற்குக் காரணமாக இருக்கிறது. டில்லி, ஆக்ரா போன்ற இடங்களில் போவதற்கு ஒன்றும், வருவதற்கு ஒன்றுமாக சாலைகள் அமைத்திருக்கிறார்கள். அந்தமாதிரியாக இங்கு சென்னையிலிருந்து விழுப்புரம் வரை போவதற்கும், வருவதற்கும் ஒன்றுமாக தனித்தனியாக சாலைகள் இருந்தால், போக்குவரத்து துரிதமாகவும், சீராகவும், விபத்துக்கள் இல்லாமலும் நடைபெற உதவியாக இருக்கும். அந்தமாதிரியாக மாற்றி போக்குவரத்தையும் நாம் வரையறுக்க வேண்டும். குறிப்பாக கிழக்குக் கடற்கரைச் சாலைத் திட்டம் நீண்ட நாட்களாக வலியுறுத்தப்பட்டும், மத்திய சர்க்கார் அதற்குத் தகுந்த உதவி செய்யாததால், கிழக்குக் கடற்கரைச் சாலை பூர்த்தி பெறாமல் இருக்கிறது. பக்கிங்காம் கால்வாயை சாலைப் போக்குவரத்திற்கு ஏற்றவாறு சீராக்கி, அதை மரக்காணம் வரை போக்குவரத்திற்கு ஏற்ப சீர்படுத்த வேண்டுமென்ற திட்டம் கிடப்பிலே இருக்கிறது. அதையும் துரிதப்படுத்த வேண்டும்.

மேலும் நெடு நாட்களாக, ஏறக்குறைய 20 ஆண்டுகளாகச் சொல்லப்பட்டு வந்த சேது சமுத்திரத் திட்டம் இதுவரை எந்தவித ஒப்புதலும் இல்லாமல் தேங்கிக் கிடக்கிறது. நமது மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் இதுகுறித்து மைய சர்க்காருக்கு அறிவித்திருப்பதாக நான் செய்தித்தாளில் பார்த்தேன். நமது அரசு இதற்கு ஒட்டுமொத்தமாக இரு சபைகளிலும் ஒரு தீர்மானம் நிறைவேற்றி வலியுறுத்தலாமென்று கேட்டுக்கொள்கிறேன்.



(நண்பகல் 12-00)

நமது மாநிலத்தில் பெரிய நீர்ப்பாசனத் திட்டம் ஏதும் இப்போது நிறைவேற்றப்படவில்லை. அதைப்போலவே நமது மாநிலத்தில் பெரிய மின்சார உற்பத்தித் திட்டம் ஏதும் நிறைவேற்றப்படவில்லை என்ற நிலைதான் இருக்கிறது. எனவே புதிய நீர்ப்பாசனத் திட்டங்களை உருவாக்கி, நீர் சேதாரம் இல்லாமல் சிக்கனமாகப் பாதுகாக்கும் வகையில் கால்வாய்களைப் பலப்படுத்தும் திட்டங்களை அமுல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் மேற்குநோக்கிப் பாயும் நதிகளை தமிழகத்திற்குத் திருப்பி விடுவதன் காரணமாக, நமது மாநிலத்தில் உள்ள வறட்சியான பகுதிகளுக்கு ஒரு பெரிய வரப்பிரசாதமான நிலை ஏற்படும் என்று சொல்லி, அண்மை மாநிலத்தோடு இது குறித்து பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று இங்கே வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்து, ஒகேனக்கல் மின் திட்டத்தைப்பற்றி வெகு காலமாக நாம் பேசி வருகிறோம். அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலமாக நமது மின்பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு வழி ஏற்படும். எனவே அந்தத் திட்டம் குறித்து அண்டை மாநிலமான கருநாடகத்திடம் பேச்சு வார்த்தை நடத்தி அதைச் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டு வளர்ச்சிக்கும், தொழில் வளர்ச்சிக்கும் மின் சக்தி அவசியமாகிறது. அதோடு எரிபொருள் சக்தியும் தேவைப்படுகிறது. இன்றையதினம் எரிபொருள் பற்றாக்குறை நாட்டில் பெரிய அளவில் இருக்கிறது. ஒரு பக்கம் காடு வளர்ப்பில் ஈடுபடுகிறோம். இன்னொரு பக்கம் காடுகளை அழித்துக் கொண்டிருக்கிறார்கள். விறகு விலை ஏறுவதால், காடுகளை அழிக்கிறார்கள். எனவே இப்படிப்பட்ட எரி பொருள்களுக்கு மாற்று சக்தியாக சூரிய சக்தி, காற்று சக்தி மற்றும் சாண எரி வாயு சக்தி போன்றவைகளில் நமது மாநிலம் கவனம் செலுத்த வேண்டும். அவைகளுக்கு முதலிடம் கொடுத்து அவைகளை உபயோகிக்க முன்வருவோருக்கு மான்யம் வழங்க வேண்டும். குஜராத் மாநிலத்தில் இப்படித்தான் மிகப் பெரிய சோலார் எனர்ஜி இயந்திரம் வைத்திருக்கிறார்கள். நமது மாநிலத்தில் நீண்ட நெடிய கடற்கரைச் சாலை இருக்கிறது. அதிலே காற்று இயந்திரம் வைத்து நீர் இறைப்பதற்குப் பெரிய அளவில் அவைகளைப் பயன்படுத்தலாம். அதையே விவசாயிகளும் பயன்படுத்தினால், அதன் மூலம் நீரை இறைப்பதற்கும் உதவியாக இருக்கும். இப்படிப்பட்ட முயற்சிகளுக்கு எல்லாம் அரசு ஊக்கம் அளிக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

[திரு. வி. வி. வி. ஆனந்தம்] [1986 மார்ச் 20

இறுதியாக அரசாங்கத்தின் எல்லாத் திட்டங்களும் சீராக நடைபெற மக்களிடத்தில் அமைதி இருக்க வேண்டும். அவர்கள் அமைதியாக நல்வாழ்வு வாழ்வதற்கு காவல் துறை சிறப்பாகப் பணியாற்ற வேண்டும். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல், இன்றைக்கு காவல் துறையில் போதிய காவலர்கள் இல்லை என்ற குறை இருக்கிறது. அதே சமயத்தில் காவல் துறையினர் நேர்மையாகவும் நியாயமாகவும் அவர்களுடைய கடமையைச் செய்வதற்கு இடைஞ்சலாக அரசியல் தலையீடு அதிக அளவில் இருக்கிறது. பொய் வழக்குகளை காவல் துறையினர் அதிகமாகப் போடுகிறார்கள். முறையான வழக்குகளை அவர்கள் பதிவு செய்வதில்லை. இதற்கு அரசியல் தலையீடு இருக்கிறது. குறிப்பாக ஒரு குற்றமும் செய்யாத ஒருவரை குண்டர்கள் சட்டத்தின் கீழ் கைது செய்து வழக்கு தொடர்ந்தார்கள். எங்கள் இயக்கத்தைச் சேர்ந்த ஒருவரைச் சிறையிலிட்டார்கள். பிறகு அவர்கள் கோர்ட்டில் 'ரிட் பெட்டிஷன்' போட்டு, வெற்றி பெற்று, இப்போது சிறையிலிருந்து வெளியே வந்திருக்கிறார்கள். இதே மாதிரி பலர்மீது காவல் துறை உண்மைக்கு மாறான வழக்குகளைப் போட்டிருக்கிறது. பின்னாலே அவைகள் எல்லாம் உண்மைக்கு மாறானவை என்று ஆகிவிட்டது. இது காவல் துறைக்கே இழுக்கு தேடுகிறது. ஆனால் இதற்குக் காரணம் அரசியல்வாதிகள் தலையீடுதான். ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் தூண்டுகிறார்கள். உண்மைக்கு மாறான வழக்குப் போட அவர்கள் தூண்டுதலாக இருக்கிறார்கள். ஆகவே காவல் துறையினர் நல்ல முறையில் செயல்படுவதற்கு ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களும் சரி, மற்ற கட்சியைச் சார்ந்தவர்களும் சரி, தலையீடுவதைத் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜேப்பியார்** : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, ஆளும் கட்சியின் தூண்டுதலால் எதிர்க் கட்சிக்காரர்கள் பாதிக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். தயவுசெய்து ஆதாரம் இல்லாமல் எதையும் சொல்லக்கூடாது. விவரம் தெரிந்த அவர் போகிற போக்கில் ஆளும் கட்சியினர் தலையிடுகிறார்கள் என்று சொல்வது சரியில்லை என்று மட்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. வி. வி. வி. ஆனந்தம்** : மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் இங்கே குறுக்கிட்ட காரணத்தால், நான் அவருக்குச் சில குறிப்பான ஆதாரங்களைக் கொடுக்க முடியும். ஆனால் நான் இங்கே பொதுவாக ஆளும் கட்சியைச் சார்ந்த எல்லோரும் அப்படிச் செய்கிறார்கள் என்று சொல்லவில்லை. ஆளும் கட்சியினராலும் சரி எதிர்க் கட்சியினர் ஆனாலும்



1986 மார்ச் 20] [திரு. வி. வி. வி. ஆனந்தம்]

சரி, பொறுப்பான எம்.எல்.ஏ., எம்.எல்.சி. பதவி வகிப்பவர்களானாலும் சரி, அவர்கள் காவல் துறையில் தலையிடக் கூடாது என்றுதான் கூற விரும்புகிறேன்.

**திரு. அ. ப. சிவராமன்** : ஆளும் கட்சியினர் தலையீடு என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படிச் சொன்னது சரி என்று ஒப்புக் கொள்கிறாரா அல்லது அதை மறுக்கிறாரா என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**திரு. வி. வி. வி. ஆனந்தம்** : குறிப்பாக விருதுநகரில் எங்கள் இயக்கத்தைச் சார்ந்த சிலர்மீது வழக்குப் போட்டார்கள். அதில் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள்தான் தலையிட்டார்கள் என்று நான் உறுதியாகச் சொல்கிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா** : தலைவர் அவர்களே, ஆளும் கட்சியினர் தலையிட்டார்கள் என்று சொல்வதற்கும், அவர்கள் தவறான முறையில் காரியங்களைச் செய்தார்கள் என்று சொல்வதற்கும் இடையே நிறைய வித்தியாசம் இருக்கிறது. ஒரு சம்பவத்தில் காவல் துறையினர் நடவடிக்கை எடுக்காமல் போய் அதற்காக ஆளும் கட்சியினர் தலையிட்டு அதற்குப் பிறகு அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கலாம். நான் கேட்க விரும்புவது ஆளும் கட்சியினர் தவறுக்குத் துணைபோனார்களா என்பதுதான். அதுதான் கேள்வி.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்)**: மாண்புமிகு உறுப்பினர் ஆளும் கட்சியினர் தலையிட்டார்கள் என்று சொல்வதைத் தவிர்த்து, "ஆளும் கட்சியினர்" என்று குறிப்பிடாமல் பேசுவது நல்லது.

**திரு. வி. வி. வி. ஆனந்தம்**: மாற்றுத் தலைவர் அவர்களே, பொதுவாக அரசியல்வாதிகள் தலையீடு கூடாது என்றுதான் நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-05)

ஏனென்றால் அரசியல் செல்வாக்கு உள்ளவர்கள் காவல் துறையில் தலையிட்டு . .

**திரு. ஆர். டி. சீத்தாபதி**: மாற்றுத் தலைவர் அவர்களே, அரசியலில் பொது வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளவர்கள் சில முக்கியமான பிரச்சினைகளில் தலையிடுவது வழக்கம். ஆகவே அரசியல் தலையீடு இருக்கவே கூடாது என்பதல்ல. பொது வாழ்க்கையில் உள்ளவர்கள் தலையிடாமல் எப்படி இருக்க முடியும்? சில நல்ல காரியங்களுக்காக தலையிடத்தான் வேண்டும்.

**திரு. வி. வி. வி. ஆனந்தம்:** ஆங்காங்கே உள்ள குறைகளைச் சுட்டிக் காட்ட சட்டமன்றம் இருக்கிறது. அமைச்சர்கள் இருக்கிறார்கள், மேலதிகாரிகள் இருக்கிறார்கள். மேலதிகாரிகள் மூலமாகச் சொல்வது நலமாக இருக்கும்.

**திரு. ஆர். டி. சித்தாபதி:** மாற்றுத் தலைவர் அவர்களே, அரசாங்கமும், முதலமைச்சரும் இருப்பது வேறு விவகாரம். உள்ளூரில் பிரச்சினை என்று வரும்போது, பொதுத் தொண்டன் என்ற முறையில், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினராக இருந்தாலும், திராவிட முன்னேற்றக் கழகத்தினராக இருந்தாலும், அவ்வப்போது தலையிடுகிறார்கள். பொது வாழ்க்கையில் அறிஞர் அண்ணா அவர்களிடமும், புரட்சித் தலைவர் அவர்களிடமும் நாங்கள் படித்த பாடம் இதுதான்.

**திரு. வி. வி. வி. ஆனந்தம்:** மக்கள் குறைகளை அரசுக்குச் சொல்லுவது, சம்பந்தப்பட்ட துறையில் உள்ளவர்களுக்கு எடுத்துச் சொல்லுவது என்பது மக்கள் பிரதிநிதிகளுடைய கடமை என்பதை ஒத்துக்கொள்கிறேன். தவறுதலான முறையில் அந்தத் தலையீடு இருக்கக் கூடாது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விருதுநகரில் அவருடைய கட்சியைச் சார்ந்த ஒருவர் மீது ஏதோ தவறான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி காவல் துறையினர் ஒரு சட்டத்தின்கீழ் கைது செய்தார்கள்; பிறகு நீதிமன்றத்தாலே விடுவிக்கப்பட்டார்கள் என்று குறிப்பிட்டார். காவல் துறையினர் தங்களுக்குக் கிடைக்கிற ஆதாரங்களை வைத்துக்கொண்டு, அவர்கள் ஈடுபட்ட குற்றங்களை வைத்துக்கொண்டு நடவடிக்கை எடுக்கிறார்கள். வேறு அரசியல்வாதிகளோ, ஆளும் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களோ, மாண்புமிகு உறுப்பினர் சார்ந்துள்ள கட்சியைச் சார்ந்த வேறு உறுப்பினர்களோ வேறு ஓரிடத்தில் அப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்கு உள்ளாகலாம். குறிப்பிட்ட கட்சியினர்—அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும் அவர்கள்—சொல்லுகிற குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதில்லை. ஒருவர் நீதிமன்றத்தாலே விடுவிக்கப்பட்டார் என்ற காரணத்தாலே அவர் குற்றவாளி அல்ல, குற்றங்களைச் செய்யவில்லை என்று நாம் முடிவு எடுக்க முடியாது. ஏனென்றால், குற்றம் செய்கிறவர்கள் பல நேரங்களில் தப்பித்துக்கொள்கிறவாறு செய்கிறார்கள். அதற்குத் தடையங்கள், சாட்சியங்கள் கிடைப்பதில்லை. நீதிமன்றம் தடையங்களையும், சாட்சியங்களையும் குறிப்பிட்டுக் கேட்கிறது. தடையங்கள், சாட்சியங்கள் கிடைக்காத சூழ்



நிலையில் குற்றவாளிகள் விடுதலை ஆகிறார்கள். ஆகவே விடுதலை ஆகிறவர்கள் குற்றம் செய்யவில்லை என்பது பொருள் அல்ல. குறிப்பிட்ட நிகழ்வில் என்ன நடந்தது என்பது தெரியாது. ஆனால் காவல் துறையினர், ஆதாரங்கள் இருந்து, சமுதாயத்திற்கு விரோதமான காரியங்களில் ஈடுபடுகிறார்கள் என்று தெரிந்ததற்குப் பிறகுதான் அப்படிப்பட்ட ஒரு விசேஷமான சட்டத்தின்கீழ் கைது செய்கிறார்கள்.

**திரு. வி. வி. வி. ஆனந்தம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்தை ஏற்றுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த மாநில அரசு விற்பனை வரியில் செய்த மாற்றங்களுக்காக நான் ஏற்கெனவே கூறியபடி வரவேற்பையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன். விற்பனை வரியில் ஏற்படும் இழப்புகளை ஈடு செய்யும் வகையில் மாற்றங்கள் செய்திருப்பதால், அந்த இழப்புகளுக்குரிய நிவாரணத்தைப் பெற்று அடுத்த ஆண்டு இறுதியில் உபரி பட்ஜெட்டாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். கூடுதல் வரி விதிப்பு இல்லாமல் மக்களுக்கு நன்மை செய்யக்கூடிய நல்லதொரு வரவு-செலவுத் திட்டத்தை அமைத்தமைக்கு நான் இந்த அரசைப் பாராட்டி அமைகிறேன். வணக்கம்.

**திரு. மு. மாசிலாமணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் பேசுவதற்கான வாய்ப்பு நல்கியமைக்கு என்னுடைய நன்றியை மிகப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையை கடந்த 17-ஆம் தேதி நடமாடும் பல்கலைக் கழகம் என்று பேரறிஞர் அண்ணா அவர்களால் பாராட்டு பெற்ற, புரட்சித் தலைவர் அவர்களுடைய அன்புத் தம்பியான டாக்டர் நாவலர் அவர்கள் சமர்ப்பித்தார்கள். நான் அன்றாடம் பஸ்களில் பயணம் செய்யும்போது, அந்த பஸ்களில் பயணம் மேற்கொண்ட மக்கள் எல்லாம், 'இந்த நிதிநிலை அறிக்கை ஏழைகளின் வாழ்விற்காக, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் நல்வாழ்விற்காகக் கொண்டுவரப்பட்ட நிதிநிலை அறிக்கை' என்றும் இந்த நிதிநிலை அறிக்கையிலே கொண்டுவரப்பட்டுள்ள வரி விலக்குகளைப் பாராட்டி பேசிக்கொண்டு வந்ததையும் நான் காதாரக்

(பிற்பகல் 12-10)

காதாரக் கேட்டேன். நான் யார் என்று தெரியாமல் இருந்தும்கூட பலர் புகழ்ந்து பாராட்டினார்கள். இந்த நிதிநிலை அறிக்கை கடந்த தேர்தலுக்கு முன்னாலே வந்திருக்குமானால், இப்போது குறைந்திருக்கின்ற நம்முடைய எண்ணிக்கை அதிகமாக இருந்திருக்கும் என்று ஒருவர் சொன்னார். அதற்காக

நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி இந்த நிதிநிலை அறிக்கை பாராட்டுகின்ற அளவிலேதான் இருக்கின்றது, பள்ளத்திலே வாழ்கின்ற ஏழை எளிய மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், பொருளாதார மேம்பாடு அடையாமல் இருக்கின்ற பெயர், முடி திருத்துவோர், சலவைத் தொழில் செய்வோர், விஸ்வகர்மா சமுதாயத்தினர், மீனவ சமுதாயத்தினர் இப்பேர்ப்பட்ட சமுதாயத்தினர் எல்லாம் இன்றையதினம் புரட்சித் தலைவர் அவர்களின் அரசைப் பாராட்டிக்கொண்டிருக்கின்றார்கள். அவர் ஆட்சியி மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள் றேன்.

இன்னொன்றை இந்த நேரத்தில் குறிப்பிட்டுச் சொல்வது என்னுடை கடமையாகும். கடந்த ஆண்டில் இதே மாதிரி நிதிநிலை அறிக்கையி பேசும்போது வண்ணை பகுதியிலே, ஹார்பர் பகுதியிலே, குறிப்பாக வட சென்னை பகுதியிலே வாழ்கின்ற மக்கள் எல்லாம் சித்த மருத்துவம் மூலமாக இந்திய மருத்துவம் மூலமாகப் பலன் அடையவேண்டும் என்று இந்த அவை யிலே கேட்டுக்கொண்டேன். புரட்சித் தலைவர் அவர்கள் அரசிலே அவருக்கே உரித்தான முறையிலே, அவர்கள் அரசிலே இடம் பெற்றிருக்கின்ற மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் ஹண்டே அவர்கள் மூலமாக இன்றைய தினம் வட சென்னையிலே 2 மருத்துவ மனைகள் தொடங்குவதற்கான கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. அதற்காக என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

இன்னொன்று, டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் என்னையும் திரு. கோலப்பா அவர்களையும், திரு. அங்கமுத்து அவர்களையும் எங்களைத் தெரியாமல் இருந்தவர்களை, இந்த மேலவையின் அங்கத்தினர்கள் ஆக்கி தெரியச் செய்திருக்கின்றார்கள். இந்த அவை உறுப்பினர்கள் என்று வந்த நாளிலிருந்து எங்கள் கவனத்திற்கு பழனி கோயில் பணியாளர்கள் ஒரு மனுவைக் கொடுத்திருந்தார்கள். அந்தப் பழனி கோயிலில் பணியாற்றும் சுமார் 360 முடி திருத்தும் தொழிலாளர்கள், அங்கே வருகின்ற யாத்ரீகர் களுக்கு மொட்டை அடிக்கின்ற பணியிலே ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள். புரட்சித் தலைவர் அவர்கள் அரசுக்கு முன்னாலே இருந்தவர்கள் ஆண்டு கொண்டிருந்தவர்கள் இதைப்பற்றி செவி சாய்க்காமல் இருந்தார்கள் என்பதை எடுத்துச்சொல்லி அதை அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவந்தார்கள். இந்த அவைக்கு முன்னவராகவும், புரட்சித் தலைவர் அவர்களின் அன்புத் தம்பி யாகவும், அடக்க உணர்வோடும், கடமை உணர்வோடும் இருக்கும் முன்னவர் அவர்கள், அறநிலையத் துறையை மேற்கொண்டு இருந்த காலத்தினாலேயே, அவரிடம் அந்த மனுவை நான் தந்தேன். அவர்கள் அங்கேயுள்ள அறநிலையத் துறை ஆணையாளர், என்டோமென்ட் கமிஷனர் அவர்களையும், தக்கார் அவ...

களையும் அழைத்துச் சொல்லுங்கள் என்று சொல்லி, அவரும் அதற்கான உத்தரவையிட்டிருக்கிறார்கள். இன்றையதினம் அறநிலை நிருவாகத்தில் பணியாற்றுகின்ற அந்தத் தொழிலாளர்கள் பலன் பெற்றிருக்கிறார்கள். மொட்டையடித்தால் ரூ. 2 வந்தால் அதில் தொழிலாளர்களுக்கு ரூபாய் 1¼, மீதம் ரூ. ¾ கோயில் வளர்ச்சிக்கும் போகின்றது. புரட்சித் தலைவர் அவர்கள் அரசில் நம்முடைய முன்னவர், செய்தித் துறை அமைச்சர், அறநிலையத் துறையை இயக்கிக்கொண்டிருக்கின்ற மதிப்பிற்குரிய அண்ணன் திரு. ஆர். எம். வீ. அவர்கள் உத்தரவினால் இன்றையதினம் அது ரூ. 3 ஆக ஆக்கப்பட்டிருக்கின்றது. அது பாராட்டுதற்குரியதாகவும் இருக்கிறது. அங்கே உள்ளவர்கள் எல்லாம் அதைப் பாராட்டியிருக்கிறார்கள். இன்னொரு கருத்தையும் நான் சொல்வதற்கு விரும்புகிறேன். நான் பழனிக்குப் போயிருந்தபோது, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த, காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்த, கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த அனைத்துத் தொழிலாளர்களையும் அழைத்து அவர்கள் இந்தச் செய்தியை சொன்ன நேரத்திலே அவர்கள் சொன்னார்கள். "நாங்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், முதலிலே புரட்சித் தலைவர் அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவியுங்கள்" என்று சொன்னார்கள். அவர்கள் இன்னொரு குறையையும் அப்போது சொன்னார்கள். கோயில் பக்தர்கள் தை மாதம், ஆடி மாதம், மாசி மாதம் கிருத்திகை தினங்களில்தான் வருகின்றார்கள். ஆண்டு வருமானத்தில் அதிகமான வருமானம் வருகின்ற மாதங்கள் அந்த மாதங்கள் தான். அந்த மாதங்களைத் தவிர மற்ற மாதங்களில் பக்தர்கள் குறைவாக வருவதால் வருமானம் குறைகிறது. ஆகவே எங்களுக்கு ஆண்டுதோறும் மொத்தமாக வருவதில் எங்கள் பணத்திலேயே, மாதம் ரூ. 400 வீதம் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று சொன்னார்கள். தை மாதம், ஆடிமாதம், மாசி மாதம் இந்த மாதங்களில் முருகனைத் தரிசிக்க அதிகமான பக்தர்கள் வருகின்றார்கள். அந்த மாதங்களில் அவர்களுக்கு ரூ. 600, ரூ. 500, ரூ. 400 என்று வருகின்றது. மற்ற மாதங்களில் ரூ. 150 தான் வருகின்றது என்று தெரிவித்தார்கள். இது குறித்து அவர்கள் மனு கொடுத்திருக்கின்றார்கள். நான் தக்கார் அவர்களிடம் சொன்னேன். அவர் "புரட்சித் தலைவர் அவர்களிடம் தெரிவியுங்கள்" என்று சொன்னார்கள். அவருக்குத் தெரிந்தாலே

(பிற்பகல் 12-15)

போதும் என்று சொன்னார்கள். "அவருக்குத் தெரிந்தாலே போதும், தொழிலாளர்கள் துயர்படுவதை அவரால் தாங்கிக்கொள்ள முடியாது" என்று சொன்னேன். அருமை அண்ணனிடத்திலும் சொல்லியிருக்கிறேன். அதையும் நிறைவேற்றித் தந்தால் அவர்களுக்கு நலமாக இருக்கும். 3 ரூபாய் பெறுவதால்

மகிழ்ச்சி அடைகிறார்கள். அதோடு போனசும் தருகிறார்கள். இந்த ஆண்டு வரலாறு காணாத அளவுக்கு போனஸ் பழநி திருக்கோவிலில் தந்திருக்கிறார்கள். அதற்காக புரட்சித் தலைவர் அரசுக்கு என்னுடைய சமுதாயத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், தமிழகத்தில் 1977 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றது. மாண்புமிகு எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களால் உருவாக்கப்பட்ட அரசில் அனைத்துத் தரப்பினருக்கும் பல்வேறு நல்ல பணிகளை மேற்கொண்டு, அவற்றைச் சிறப்பாகவும், செம்மையாகவும் நிறைவேற்றி வந்திருக்கிறது. இருந்தாலும், இன்னமும் ஆதி திராவிட மக்களும், குறிப்பாக முடி திருத்துபவர்களும், சலவையாளர்களும் பொருளாதாரத்திலே மேம்பாடு அடைய முடியாத நிலையில் இருக்கிறார்கள். சென்னை மாநகராட்சிப் பகுதியில் 15,670 சலூன்கள் இருக்கின்றன. அந்தச் சலூன்களில் உள்ள தொழிலாளர்கள் பெரும்பாலானவர்கள் நம்பக்கம் இருந்தாலும், முதலாளிகள் சிறுபான்மையினராக இருந்தாலும், அவர்கள் இந்த இயக்கத்திற்கு உறுதுணையாக இருக்க மறுப்பதோடு, ஒரு குறையைச் சொல்லுகிறார்கள். இந்த ஆட்சி வந்த பிறகுதான் 'டிரெயினேஜ்' கட்ட வேண்டுமென்று சொல்லி வழக்கு போடுகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். புரட்சித் தலைவர் அரசு இங்கே இடம் பெறாதபோது, அதாவது 1972-லிருந்து 1978 முடிந்து நான் வெளியே வந்த பிறகு, மாண்புமிகு அமைச்சரவையில் இப்போது இடம் பெற்றுள்ள அமைச்சர் டாக்டர் காளிமுத்து அவர்கள், அப்போது உள்ளாட்சிப் பொறுப்பை ஏற்றிருந்தார்கள். அவர்களைச் சந்தித்து ஒரு மனு கொடுத்தேன். இந்த முறை அதிகாரிகளால் கூறப்பட்டிருக்கிறது. சிறிய சலூன் வைத்திருப்பவர்கள், வீட்டுக்காரரின் அனுமதி கேட்டு 'டிரெயினேஜ்' சிஸ்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று சொல்லுகிறார்கள். வீட்டுக்காரரிடம் கேட்டால், உடனே காலி செய், பெட்டிக் கடைக்காரன் தயாராக இருக்கிறான், 5,000 ரூபாய் பகடி தருகிறான் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். இந்த நிலையில் சேனிடரி இன்ஸ்பெக்டர்கள் 'டிரெயினேஜ்' ஏன் பொருத்தவில்லை என்று கேட்டு, வழக்கு மன்றத்திலே கொண்டுபோய் நிறுத்தி, 'டிரெயினேஜ்' கட்ட அவகாசம் கொடுக்காமல், 400 ரூபாய், 500 ரூபாய் அபராதம் விதித்துவிடுகிறார்கள். அதனால் திருவல்லிக்கேணி, சேப்பாக்கம், மயிலை பகுதிகளில் பாதிக்கப்பட்டு, பலர் வழக்கு மன்றத்திற்குப் போய், அந்தத் தொகையைச் செலுத்தி இருக்கிறார்கள். அவர்களும் மனு தந்திருக்கிறார்கள். உடனடியாக அன்றைய தினம் அந்தத் துறைப் பொறுப்பு வகித்த மாண்புமிகு அமைச்சர் டாக்டர் காளிமுத்து அவர்கள் 'நிறுத்தி வையுங்கள்'



என்று உத்தரவிட்டார்கள். ஆனால் போன மாதத்திலிருந்து சில பகுதிகளில் சானிடரி இன்ஸ்பெக்டர்கள் தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி, துஷ்பிரயோகம் செய்வதாக மீண்டும் தகவல் கிடைத்திருக்கிறது. அதை எங்கள் இதய தெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களிடம் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னொன்று, வட சென்னையில் எம்ப்ளாய்மெண்ட் அலுவலகம் ஒன்று இருந்தது. அதை கடந்த 1½ ஆண்டுக்கு முன்னால், அடையாரில் ஈராஸ் தியேட்டருக்குப் பக்கத்தில் கொண்டு போய் வைத்திருக்கிறார்கள். வட சென்னையில் படித்த மாணவர்கள், ஹார்பர் தொழிலாளர்கள் பதிவு செய்ய வேண்டுமென்று சொன்னால், அதற்கு அங்கேதான் போக வேண்டும். இதனால் அவர்கள் ரொம்பவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதிகாரிகளைக் கேட்டால், இடமில்லை என்று சொல்லுகிறார்கள். வட சென்னைப் பகுதியில் இருக்கிறவர்கள், தென் சென்னை கோடியில் உள்ள அடையாருக்குச் செல்வதைத் தவிர்க்க, வட சென்னைப் பகுதியிலே அதை வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதையும் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்று, நிதிநிலை அறிக்கையில் ஏழைகள் உபயோகிக்கின்ற பொருள்கள்மீது வரி விலக்கு செய்திருக்கிறார்கள். நாட்டுச் சர்க்கரைக்கு வரி விலக்கு செய்திருக்கிறார்கள். நேற்று சில மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள். வெல்லமும் ஒன்றுதான், சர்க்கரையும் ஒன்றுதான் என்று வெல்லமும் இனிப்புதான், நாட்டுச் சர்க்கரையும் இனிப்புதான், பூரா சர்க்கரையும் இனிப்புதான். காரத்தில் 18 வகைகள் உண்டு. கசப்பில் 18 வகைகள் உண்டு. இனிப்பிலும் பல வகைகள் உண்டு. நேற்று ஒருவர் பேசினார். அதற்கும் இனிப்பு, இதற்கும் இனிப்பு. வெல்லத்தை லேகியத்தில்

(பிற்பகல் 12-20)

கலந்து கொடுப்பார்கள். நாட்டு சர்க்கரையை கசப்பான மருந்தை கொடுத்தற்குப் பின்னாலே குழந்தையின் வாயில் கொடுப்பார்கள். அதுபோல் கற்கண்டு வேறு ஒரு இனிப்புப் பொருள். அந்த வகையில் நுரை ரப்பர், நாட்டு சர்க்கரை போன்றவற்றுக்கு சலுகை அளித்திருக்கிறார்கள். எங்களைப் போன்றவர்கள் எல்லாம் கட்சிப் பணியாற்றும்போது, அன்றைக்கு வரவேற்பு கொடுக்க வேண்டுமென்றால், வளைவுகள் அமைக்க 500 ரூபாய்தான் ஆகும். ஆனால் இன்றைக்கு 1500 ரூபாய் ஆகும். சட்டங்களுக்கு சலுகை அளித்திருக்கிறார்கள். கண்ணாடிச் சட்டம் போட வேண்டுமென்றால், இன்றைக்குச் செலவு அதிகமாகிறது. அதற்காக சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமா? ஏழையெளிய இசைக் கலைஞர்கள் பயன்படுத்துகின்ற இசைக் கருவிகளான நாதஸ்வரம், தவில் போன்றவற்றை எடுத்துக் கொண்டால்,

[திரு. மு. மாசிலாமணி] [1986 மார்ச் 20

அமுற்றைச் செய்ய வேண்டுமென்றால், ஆயிரம் ரூபாய் ஆகும். முடி திருத்து வோர்களுக்கு ஆண்டுதோறும் இலவசமாக அரசு கருவிகளை அளித்து வருகிறது. நாதஸ்வரம் ஊதுகிறவர்களுக்கு 58 வயது வரை வயது முடியாது. அவர்களுக்கு 10 வயது வரைதான் ஊதுவதற்கான சக்தி இருக்கும். ஆகவே அவர்களுக்குச் சலுகைகள் அளிக்கும்போது, இதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

அடுத்து, இழுவை வண்டிகள், பாக்குச் சீட்டுகள் போன்றவற்றுக்கு எல்லாம் சலுகை அளித்திருக்கிறார்கள். இன்றையதினம் ஏழையிலிருந்து பணக்காரன் வரை 100 ரூபாய் வரை பரிசுச் சீட்டு வாங்குகிறார்கள். இப்படிப்பட்ட பொருள்களுக்கெல்லாம் 5 சதவிகித பலமுனை விற்பனை வரியை 8 சதவிகித ஒருமுனை விற்பனை வரியாக மாற்றியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சலுகையை அளித்திருப்பதன் மூலம் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு இழப்பு ஏற்படுகிறது என்று பார்த்தால், 20 கோடி ரூபாய்க்கு வருவாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இது ஒரு பெரிய காரியம்தான். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் எவ்வளவு கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டாலும் கூட, பரவாயில்லை, ஏழையெளிய மக்களுக்கு நன்மை அளிக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் இதனை நடைமுறைப்படுத்தியிருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை அதிகாரிகளை அழைத்து, ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுவதால் அரசுக்கு எவ்வளவு வருவாய் இழப்பு ஏற்படும் என்று கேட்டபோது, அவர்கள் 40 கோடி ரூபாய் இழப்பு ஏற்படும் என்று சொன்னார்கள். அப்போது பேரறிஞர் அண்ணா அவர்கள் ஏழையெளிய மக்களுக்கு ஒரு படி அரிசித் திட்டத்தின் மூலம் எவ்வளவு இழப்பு ஏற்பட்டாலும் கூட, அதனை ஈடுகட்டத் தயார் என்று சொன்னார்கள். அதே வழியில் ஆட்சி செய்யும் நம்முடைய முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இவ்வளவு வருவாய் இழப்பையும் பொருட்படுத்தாமல், ஏழையெளிய மக்களின் நலனுக்காக இச்சலுகையை அளித்திருக்கிறார்கள்.

இன்றைக்கு நாட்டிலே நூற்றுக்கும் மேற்பட்ட பிற்பட்ட சமுதாயத்தினர் இருக்கிறார்கள். அவர்களின் நலனுக்காக 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அது போதுமானதாக இல்லை. இன்னும் கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டும். அதுபோல் மிகவும் பிற்படுத்தப்பட்ட 39 சமுதாயம் இருக்கிறது. இவர்கள் எல்லாம் பின்னி பிணைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களுக்காகவும் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். இன்றைக்கு இந்த அரசின் நல்ல பல திட்டங்களை ஏழையெளிய மக்கள் குறிப்பாக மகளிர் எல்லாம் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். மேம்பாட்டுக்குரிய பல திட்டங்களை எல்லாம் இந்த அரசு நடைமுறைப்படுத்தியிருக்கிறது. ஆகவே "எப்பொருள் யார்யார்



1986 மார்ச் 20] [திரு. மு. மாசிலாமணி]

வாய்க் கேட்பினும் அப்பொருள்—மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்பதற்கேற்ப தூற்றுவார் தூற்றட்டும், போற்றுவார் போற்றட்டும், என் பணி ஏழையெளிய மக்களுக்காகத் தொண்டாற்றுவதே என்கின்ற தத்துவத்தின் அடிப்படையில், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆற்றுகின்ற நல்ல பணியை இன்றையதினம் நாட்டிலுள்ள நல்லவர்கள் எல்லாம் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-25)

நாங்கள் கமிட்டி கூட்டங்களுக்கு வெளிமாநிலங்களுக்குச் செல்கிறபோது; கல்கத்தா போனாலும் சரி, சண்டிகார் போனாலும் சரி, அங்கேயெல்லாம் நம் போக்குவரத்துத் துறையின் சிறப்பைப்பற்றித்தான் கேட்கிறார்கள். "போக்குவரத்துத் துறையை எப்படி நீங்கள் இவ்வளவு சிறப்பாகச் செயல்படுத்துகிறீர்கள் ?" என்றுதான் கேட்கிறார்கள். கல்கத்தாவில் பஸ் புறப்பட்டுச் சென்றால் திரும்பி வந்தால்தான் நிச்சயம் என்கிறார்கள். ஆனால் தமிழகத்தில் போக்குவரத்துத் துறை சிறப்பாக இயங்கி வருகிறது என்று பாராட்டுகிறார்கள்.

மாநகரங்களில் மக்கள்தொகை எண்ணிக்கை பெருகிக்கொண்டே வருகின்றது. பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் பணியாற்றுகின்ற தோழர்கள் அத்தனை பேரும் மிகச் சுறுசுறுப்பாகச் செயல்பட்டு வருகிறார்கள். ஆனால் பேருந்துகள் இன்னும் போதுமான அளவுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாலை நேரங்களில் ஊழியர்களும், தொழிலாளர்களும், தாய்மார்களும் வேலைக்குச் சென்று திரும்புகிற நேரங்களில் மிகவும் அவதிக்குள்ளாகிறார்கள். இதனைச் சரிப்படுத்தும் வகையில் அதிகப் பேருந்துகளை மேலும் விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் மதுரை, அண்ணா மாவட்டங்களில் பேருந்துகள் ஒவ்வொன்றிலும் இரண்டு நடத்துநர்கள் இருந்து செயலாற்றுவதுபோல, பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலும், ஒவ்வொரு பேருந்திலும் இரண்டு நடத்துநர்களைப் பயன்படுத்தினால், மிகச் சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறேன். அவ்வாறு செய்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த அளவுக்குப் பேசுவதற்கு வாய்ப்பு நல்கிய மாமன்றத்தின் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன். நன்றி. வணக்கம்.

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு ஒரு வாய்ப்பளித்ததற்காக நான் உங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. எஸ். ஆர். இராதா] [1986 மார்ச் 20

இந்த நிதிநிலை அறிக்கையின்மீது இன்றைக்குக் கருத்துக்கள் பல்வேறு விதமாகத் தெரிவிக்கப்படுகின்றனவென்று சொன்னாலும், இதைப் பார்க்கிற ஒவ்வொரு அரசியல்வாதியும் அவரவர்களுக்குரிய கண்ணோட்டத்தோடு இதை விமர்சனம் செய்துகொண்டிருக்கிறார்கள். இதுபோன்று ஒவ்வொரு ஆண்டு நிதிநிலை அறிக்கை வெளியிடும்போதும், பல்வேறு அரசியல் தலைவர்கள் தயாராகக் கருத்துக்கள் சொல்வதற்கு உட்கார்ந்திருப்பதும், அவர்களைச் சுற்றி பத்திரிகை நிருபர்கள் தயாராக இருப்பதும், அதுபோல் தொலைக்காட்சி நிலையத்தாரும், அகில இந்திய வானொலி நிலையத்தாரும் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று கேட்பதற்கும், தயாராக இருப்பதும் ஆண்டுதோறும் நடைபெற்றுக்கொண்டுதான் வருகின்றன. நானும் ஒவ்வொரு ஆண்டும் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன். ஒவ்வொரு ஆண்டும் நிதிநிலை அறிக்கை வெளியாகிறபோதும் அவர்கள் சொன்ன கருத்தைத்தான் திரும்பத்திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கிறார்களே தவிர, எதிர்க் கட்சிக்காரர்கள் கொஞ்சம் மாற்றிக்கூட கருத்துக்கள் சொல்வதில்லை. எந்த ஆண்டு கேட்டாலும் எதிர்க் கட்சித் தலைவர் 'சப்பு' என்றிருக்கிறது என்றுதான் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். 'சப்பு' என்றிருப்பதைக் கொஞ்சம் மாற்றி 'கப்பு' என்று சொன்னால்கூட கேட்பதற்குக் கொஞ்சம் நன்றாக இருக்கும். ஆனால் எந்த ஆண்டு கேட்டாலும், இதே கருத்தைத்தான் சொல்கிறார்கள். சென்ற ஆண்டு என்ன சொல்கிறார்களோ அதையேதான் இந்த ஆண்டும் சொல்கிறார்கள். இதையேதான் இதற்கு முந்தைய ஆண்டுகளிலும் சொல்லிக் கொண்டிருந்திருக்கிறார்கள். அங்கே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அறிக்கையை வாசிக்க ஆரம்பித்த ஒரு சில நிமிடங்களிலேயே தங்கள் கருத்துக்களைச் சொல்ல ஆரம்பித்து விடுகிறார்களே தவிர, நிதிநிலை அறிக்கையை முழுமையாகப் படித்துவிட்டு, அதில் என்ன என்ன அம்சங்கள் இருக்கின்றன, இதை யார் யார் ஏற்றுக்கொள்வார்கள் என்று அறிந்து சொல்கிற அளவுக்கு எதிர்க்கட்சித் தலைவர்கள் முன்வருவதில்லை. அவ்வாறு முன்வருவார்களானால், நான் நிச்சயமாக அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அவ்வாறில்லாமல், ஏதோ வாடிக்கையாக தங்கள் கருத்துக்களைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்களே தவிர, நிதிநிலை அறிக்கையை முழுமையாகப் படித்துத் தெரிந்து சொல்கிற நிலையில் அவர்கள் இல்லை என்பதைக் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.

சென்ற முறை உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்ட நேரத்தில், "இந்தத் தேர்தல் நடைபெறுமா? இது எப்படி நடைபெறும்? எத்தனையோ காலமாக ஏமாற்றிக்கொண்டிருக்கிறார்கள். இந்த



1986 மார்ச் 20] [திரு. எஸ். ஆர். இராதா]

ஆண்டும் ஏமாற்றப் போகிறார்கள்" என்று சொன்னவர்கள் எல்லாம், தேர்தல் நடந்து வெற்றி பெற்ற பின்னால், "பார்த்தீர்களா, எங்களுக்குப் புது வாழ்வு வந்துவிட்டது; நாங்கள் பெரிய வெற்றியே பெற்றுவிட்டோம். இதை யாரால் பெற முடியும்? அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம தோற்றுவிட்டது; மிகப் பெரிய இடங்களை இழந்துவிட்டது" என்கிற கருத்துக்களையெல்லாம் பலமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-30.)

இந்தக் கருத்துக்கு இன்றைக்கு பத்திரிகைத் துறையிலே இருப்பவர்கள் வேண்டுமென்றே ஒரு பெரிய முக்கியத்துவம் கொடுத்து ஆளும் கட்சி ஒரு பெரிய இழப்புக்கு ஆளாகி விட்டது; பெரிய தோல்வியைச் சந்தித்து விட்டது என்ற அளவிற்கு இன்றைக்கு செய்திகள் பல பத்திரிகைகளில் வருகின்றன. சில பத்திரிகைகள், நடுநிலைப் பத்திரிகைகள் என்று கருதப்படுகின்ற பத்திரிகைகளும்கூட, ஏதோ தலைப்புகள் போடுவதில் நடுநிலையாக இருக்கின்றனவே தவிர, அதிலே இருக்கிற ஆசிரியர் ஏதோ ஒன்றைச் சார்ந்து இருந்துகொண்டு, அவர் தன்னை நடுநிலையாக ஆக்கிக்கொண்டு, செய்திகள் அத்தனையும் நடுநிலைமை தவறி, மோசமாக, அக்கிரமமான செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால் நான் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு ஆளும் கட்சியாக இருக்கிற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 1972-லே துவக்கப்பட்ட நேரத்தில் இந்தக் கட்சிக்கு 11 நகராட்சி மன்றத் தலைவர்கள் கிடையாது என்பது எந்தப் பத்திரிகைக்காரருக்கும் தெரியாது. அதுபோல இன்றைக்கு 180-க்கும் அதிகமான ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவர்கள் இருக்கிறார்களே, 1972 ஆம் ஆண்டிலே இந்த இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில்—நான் நிச்சயமாக இங்கே சொல்கிறேன்—எந்தப் பெருந் தலைவர்களும் எங்களுக்கில்லை. அன்றைக்கு யாராவது பெருந் தலைவர்கள் எங்கள் கட்சியிலே சேரமாட்டார்களா என்று பல பெருந் தலைவர்களை நாங்கள் தேடிப் பார்த்தோம். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே சேருவதற்கு அன்றைக்கு எண்ணிக்கைக்குரிய பெருந் தலைவர்கள்கூட எங்கள் இயக்கத்திற்கு வரவில்லை என்பதை நான் பத்திரிகைக்காரர்களுக்காகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் பெருந் தலைவர்கள் இல்லாமல், நகராட்சித் தலைவர்கள் இல்லாமல், இந்த இயக்கத்தை ஒரு சாதாரண நிலையிலேதான் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் அன்றைக்குத் துவக்கினார்கள். அன்றைக்கிருந்த நகராட்சித் தலைவர், ஆலந்தூரிலே இருக்கிற திரு. மோகனரங்கம் பாதி நிலையிலே தான்

[திரு. எஸ். ஆர். இராதா] [1986 மார்ச் 20

பதவியை இழந்தார், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வந்தார் என்ற காரணத்திற்காக. பெரியகுளத்தில் இருந்த திரு. மேத்தா நகராட்சித் தலைவராக வந்தார். சில ஆண்டுகள்தான் இருக்க முடிந்தது. அதுபோல் பாளையங்கோட்டையிலே இருக்கிற திரு. நாராயணன். இந்த அளவிற்குத் தான் எங்களுக்கு நகராட்சித் தலைவர்கள் இருந்தார்களே தவிர, ஏதோ இந்த நகரத்திலே இருக்கிற நாங்கள் தலைமைப் பதவியை 98 நகரசபைகளிலும் தாங்கிக்கொண்டு இருந்தவர்களைப் போலவும், அவைகள் அத்தனையையும் இழந்து விட்டதைப் போலவும் இன்றைக்குப் பத்திரிகையிலே செய்திகள் வருகின்றன. நான் ஒன்றை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். புரட்சித் தலைவர் . எம்.ஜி.ஆர். அவர்கள் கோட்டையிலே இருந்துகொண்டு, சாதாரண உறுப்பினராக இருந்துகொண்டு, அன்றைக்கு இந்தக் கணக்கைக் கேட்டே கேள்வியை ஆரம்பித்தார்கள். முதன் முதலிலே தமிழ்நாட்டிலே ஒரு புரட்சி எழுந்தது. அன்றையதினம் வரையிலே கலைஞர் கருணாநிதி ஆட்சியை யாராலும் அசைக்க முடியாது என்ற நிலை இருந்து, அந்த நிலையினில் புரட்சித் தலைவர் எழுப்பிய அந்தக் கேள்விதான் கலைஞர் கருணாநிதியை 1976 ஆம் ஆண்டிலே இந்தக் கோட்டையிலே இருந்து அகற்றியது. ஆனால் இன்றைக்கு வரையிலே அவர் முயற்சித்துக் கொண்டிருக்கிறார், எப்படியாவது கோட்டைக்கு வந்துவிட வேண்டுமென்று. அவர் காலையிலே வந்து போகலாமே தவிர, கோட்டையிலே இருக்கிற நாற்காலிக்கு, அவருக்கு இடமிருக்கிறதா என்றால், அவருக்கு இடமில்லை. ஆனால் எங்கோ நகராட்சியிலே சில இடங்களிலே சில பேருக்கு இடம் கிடைத்துவிட்டது என்பதனாலே இன்றைக்கு நடையே கொஞ்சம் மாறி, வேகமாக நடந்து கொண்டிருக்கிறார். அதையும் நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் நான் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக் கொள்வேன். புரட்சித் தலைவர் அவர்கள் கோட்டையிலே இருந்த கருணாநிதியிடம்தான் அன்றைக்குக் கணக்குக் கேட்டாரே தவிர, நகராட்சியிலே இருக்கிற தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கிற பெரும் தலைவர்களிடம் அன்றைக்கு கணக்குக் கேட்கவில்லை. அவர்கள் போனால் போகிறார்கள் என்று விட்டுவிட்டோம். ஆனால் அன்றைக்கு யாரைக் கேட்டோம் தெரியுமா? இதே மாநகராட்சியிலே அன்றைக்கு ஆண்டுகொண்டிருந்த திராவிட முன்னேற்றக் கழகத்திடம் கணக்குக் கேட்டோம். அன்றைக்குக் கேட்ட நேரத்திலேதான் இந்த மாநகராட்சியிலே மஸ்டர் ரோல் வழக்கு நடைபெற்று மிகப் பெரிய ஊழல் நடந்து, பல கோடிக்கணக்கான ரூபாய்களை மாநகராட்சி உறுப்பினர்கள் கொள்ளையடித்தார்கள். அவர்கள் பல பேர்



1986 மார்ச் 20] [திரு. எஸ். ஆர். இராதா]

(பிற்பகல் 12.35)

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவித்து, எந்தக் கலைஞர் கருணாநிதி அந்த மஸ்டர் ரோல் வழக்குக்குத் துணையாக இருந் தாரோ, அதே கருணாநிதியை விட்டு அந்த மாநகராட்சியை கலைக்கிற அளவிற்கு நாங்கள் நிலையை உருவாக்கினோம் . . . .

திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்: மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் இந்த மன்றத்திலே நீண்ட நாட்களாக இருப்பவர்கள். அதைப்போல் அமைச்சருடைய பொறுப்பிலேயும் இருந்தவர்கள். இந்த மஸ்டர் ரோல் வழக்கைப்பற்றிச் சொல்கின்ற நேரத்திலே, அவர்களைச் சார்ந்திருக்கிற கட்சிக்காரர்களும் அந்த வழக்கிலே சம்பந்தப்பட்டு, அவர்கள் மீதும் நட வடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இந்த மாமன்றத்திலே உறுப்பினராக இருக் கின்ற எங்களுடைய கட்சித் தலைவர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர் களை, அவர்கள் அவர்களுக்குரிய முறையிலே கருணாநிதி என்றெல்லாம் சொல்கின்றார்கள். ஒரு பொறுப்பிலே இருந்து, இந்த மன்றத்திலே ஒரு அமைச்சராக இருந்து, இன்றைக்கு ஒரு சாதாரண உறுப்பினராக இருக்கிற வர்கள், அவர்கள் பேசுகின்ற நேரத்திலே இப்படிக் குறிப்பிடுகின்றார்கள். அதைத் தங்களுடைய கவனத்திற்கு மட்டும் கொண்டு வருகிறேன்.

(பிற்பகல் 12-35)

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு உறுப்பினர் திரு. மிசா கணேசன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். நான் "கருணாநிதி" என்று சொன்னதற்காக அவர் வருந்துவதாகத் தெரிகிறது. அவர் வருந்துவதாக இருந்தால், நானும் வருந்துகிறேன். ஆனால் நான் அவருடைய தகவலுக் காக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன் . . .

திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்: மாற்றுத் தலைவர் அவர்களே, பொதுவாகவே நான் இந்த மன்றத்திற்கு வந்த பிறகு பார்த்ததைச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக இங்கே நாம் ஓர் உறுப்பினரை விளிக்கிறபோது கூட, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் என்றுதான் சொல்வோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் என்றுதான் சொல்லுவோம். ஆக, அந்த அடிப்படையில்கூட சொல்லாமல் ஏதோ "கருணாநிதி" என்று சொல்வது எந்த வகையில் சரி என்றுதான் எனக்குப் புரியவில்லை. நாங்கள்கூட திருப்பிச் சொல்ல முடியும். ஆனால் அந்த மாதிரி பக்குவத்தில் நாங்கள் இல்லை என்பதை மட்டும் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

[1986 மார்ச் 20

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு உறுப்பினர் திரு. பிசா கணேசன் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நான் ஏதோ அவரைக் குறைத்து மதிப்பிடுவதாகவோ அல்லது அவரை இழிவாக நினைக்கிறேன் என்றோ தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் அவர்கள் கருத வேண்டாம். அவரைவிட நான் கலைஞரைப்பற்றி உயர்வாகத் தெரிந்து கொண்டிருக்கிறேன். உயர்வாகப் பழகிக் கொண்டிருக்கிறேன். உயர்வாக நினைக்கிறேன். ஆனால் பேசுகிற நேரத்தில் அப்படித் தவறாக "மாண்புமிகு" என்ற வார்த்தை விடப்பட்டிருந்தால், அவரே மனதுக்குள் அதைச் சேர்த்து எழுதிக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர் "மாண்புமிகு" விலிருந்து குறையக்கூடாது என்பதில் நான் மிகவும் கவனமாக இருக்கிறேன். அதில் அவரைவிட நான் அதிகமான கவனத்தோடு இருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இருந்தாலும் அவருடைய தகவலுக்காக நான் ஒன்றைச் சொல்ல விரும்பு கிறேன். நேற்றைக்குப் பேசிய பேச்சில்கூட—சுருக்கெழுத்தாளர் எழுதியதில் "உறுப்பினர் திரு. கருணாநிதி" என்று குறிப்பிடப்பட்டிருந்தது. நான் இப்போதுகூட அதை மாற்றி எழுதிக் கொடுத்திருக்கிறேன். "மாண்புமிகு கலைஞர்" என்று எழுத வேண்டுமே தவிர "மாண்புமிகு கருணாநிதி" என்று கூட எழுதக்கூடாது என்று அடித்து எழுதிக் கொடுத்திருக்கிறேன். ஒரு மணி நேரத்திற்கு முன்னால்தான் அதைச் செய்தேன். எனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் அவர்கள் அதைப் பார்க்க வேண்டும் என்றால்கூட பார்த்துக் கொள்ளலாம்.

நான் இதையெல்லாம் சொல்வதற்குக் காரணம், மாண்புமிகு கலைஞர் அவர்கள்மீது எனக்கு இருக்கிற அன்பை நான் வெளிக்காட்டுவதில் நான் நிச்சயமாகத் தயங்க மாட்டேன். ஏனென்றால் இப்போது அவருக்குப் புது வாழ்வு வந்து விட்டதற்காக நான் அவரிடம் ஓடிப் போகிறவன் அல்ல. அவருக்குப் புது வாழ்வு வந்து விட்டது என்பதற்காக அவரை இப்போதே சிலர் தாஜா செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். "நீங்கள் வந்தாலும் வருவீர்கள்" என்று கை கொடுப்பார்கள். ஆனால் அப்படியே அவர் என்றைக்காவது வந்தாலும்கூட, நான் என்னுடைய எதிர்ப்புணர்ச்சியைக் குறைத்துக் கொள்வேனா என்றால், குறைத்துக்கொள்ள மாட்டேன். காரணம் அது கொள்கையில் ஏற்பட்டிருக்கிற தகராறு. அது கொள்கைத் தகராறாக இருப்பதால், அதிலிருந்து நான் மாற்றிக்கொள்ள மாட்டேன் என்று தெரி வித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1986 மார்ச் 20] [திரு. எஸ். ஆர். இராதா]

மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் அவர்கள் இன்னொன்றையும் குறிப்பிட்டார். அன்றைக்கு மஸ்டர் ரோல் வழக்கில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களும் இருந்தார்கள் என்று குறிப் பிட்டார். நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அது எங்களுக்கும் தெரியும். ஆனால் அதை புரட்சித் தலைவரின் கவனத்திற்கு அன்றைக்கே கொண்டு வந்தார்கள். அதற்கு அவர் என்ன பதில் சொன்னார் தெரியுமா? அவர்கள் யாராக இருந்தாலும் சரி, அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வந்து சேர்ந்தவர்களே தவிர, மஸ்டர் ரோல் வழக்கு எந்த இயக்கத்திலே ஆரம்பித்தது என்றால், திராவிட முன் னேற்றக் கழகத்தில்தான் என்று குறிப்பிட்டார். அந்த அடிப்படையில்தான் என்னுடைய குற்றச்சாட்டே அமைந்திருக்கிறது. அந்த இயக்கத்தில் இருந் தாலே தவறு செய்கிறார்கள், அந்தக் கட்சியில் இருக்கிற காரணத்தாலேயே தப்பு செய்கிறார்கள், அந்தக் கட்சியில் இருக்கிற காரணத்தாலேயே கொள்ளை அடிக்கிறார்கள், என்ற குற்றச்சாட்டோடுதான் நாங்கள் இந்தக் கட்சியையே ஆரம்பித்தோம். அந்த அடிப்படையில்தான் வட்டச் செயலாளராக இருந்த நான் அவரைப் பார்த்து "நமது கட்சியில் இருப்பவர்கள் கொள்ளை அடிக்கி றார்கள், தவறு செய்கிறார்கள், அவர்களையெல்லாம் கண்டியுங்கள், அவர்கள் மீது நடவடிக்கை எடுங்கள், அவர்களைத் திருத்துங்கள்" என்று மாண்புமிகு கலைஞர் கருணாநிதி அவர்களிடத்தில் எத்தனையோ முறை முறையிட்டேன். ஆனால் அன்றைக்கு மாண்புமிகு கலைஞர் கருணாநிதி என்ன சொன்னார் தெரியுமா? என்ன செய்தார் தெரியுமா? அவர்களையெல்லாம் தட்டிக் கொடுத்து ஆசிர்வாதம் செய்து, 'செய்தது போதாது, இன்னும் கொஞ்சம் அதிகமாகச் செய்யுங்கள், அப்போதுதான் நமக்கு வாழ்வு கிடைக்கும்" என்று சொல்லி பல பேரைப் பாழாக்கிவிட்டதன் விளைவுதான் கோட்டையிலிருந்த மாண்புமிகு கலைஞர் இன்றைக்கு அண்ணா சாலையில் போய் உட்காருகிற நிலைக்கு வந்து விட்டார். அதற்காக நான் வருத்தப் படுகிறேன். அதை நான் பெருமையாகக் கருதவில்லை. ஏனென்றால் திராவிட இயக்கத்தில் இருக்கிற மாண்புமிகு கலைஞர் அவர்களைக் கோட் டையில் இருந்து பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டு, அதற்காகப் போராடி யவர்களில் ஒருவராக இருந்தவன் நான். இன்றைக்கு அவர் அண்ணா சாலையில் நிற்கிறார் என்று சொல்லுகிற நேரத்தில் அதற்காக நான் வருத்தப் படுகிறேனே தவிர, அதைப் பெருமையாக நான் எடுத்துக்கொள்ளவில்லை. இதைச் சொல்வதற்குக் காரணம் நான் அன்றைக்கே சொன்னேன். "இந்த நிலையில் இருக்கிற மாநகராட்சியைக் கவனியுங்கள்" என்றேன். அன்றைக்கு மாநகராட்சி கலைக்கப்பட்டது. ஆளும் கட்சியாக இருந்த திராவிட முன்

[திரு. எஸ். ஆர். இராதா] [1986 மார்ச் 20

னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் ஊழல் செய்தார்கள், தவறு செய்தார்கள் என்ற ஒரே காரணத்திற்காக அன்றைக்கு மாநகராட்சி கலைக்கப்பட்டது. ஆனால் இன்றைக்கு என்ன சொல்லப்படுகிறது ? ஏதோ நாங்கள் தோற்று விட்டோம் என்று சொல்லுகிறவர்களுக்கு நான் சொல்கிறேன். நாங்கள் இல்லாத இடத்தைப் பிடித்திருக்கிறோம். நாங்கள் மாநகராட்சிகளில் இருந்த தில்லை. நகராட்சிகளில் இருந்ததில்லை. ஒன்றியங்களில் இருந்ததில்லை. ஆனால் அந்த இடங்களையெல்லாம் இன்றைக்குப் புதிதாகப் பிடித்திருக்கி றோமே தவிர, இந்த இயக்கம் எந்த இடத்தில இருந்த இடத்தை இழந்திருக் கிறது ? ஒரு இடத்தைக்கூட இழக்கவில்லை என்பதை நாட்டுக்குத் தெரி விக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பத்திரிகைக்காரர்கள் மனமுவந்து இதைப் போடுவார்களானால், அது நாட்டுக்குச் செய்கிற நல்ல காரியமாக அமையும் என்று கருதுகிறேன். ஏனென்றால் பத்திரிகைக்காரர்கள் என்ன நினைக்கி றார்கள் என்றால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இழந்துவிட்டது என்று நினைக்கிறார்கள். விரல் விட்டுச் சொல்லுங்கள். அண்ணா தி.மு.க. சார்பில் பெருந்தலைவர்களாக இருந்தவர்கள் 1974-75-ல் யார் யார் ? அப்போது எங்களிடத்தில் யாருமே இல்லை. அது உங்களுக்குத் தெரியாது . . .

(பிற்பகல் 12-40)

"நாங்கள் கோட்டையைப் பார்த்து கேள்வி கேட்டோம். கேள்வி கேட்ட கோட்டையைப் பிடித்துவிட்டோம். இதுவரை நாங்கள் ஒன்றியத்தையும், நகராட்சியையும் பார்த்து கேள்வி கேட்கவில்லை. அந்த வாய்ப்பு இப்போது எங்களுக்குக் கிடைத்திருக்கிறது. இன்றைக்கு கேள்வி கேட்க ஆரம்பித்திருக் கிறோம்; இனி கேள்வி கேட்கப் போகிறோம்" என்று திருநெல்வேலி பொதுக் கூட்டத்திலேயே சொன்னேன். இனிமேல் நகராட்சியைப் பார்த்துக் கேட் போம், எங்களால் அப்படி கேள்வியைக் கேட்க முடியும் என்பதைச் சொல்லு கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள், குறிப்பாக மாண்புமிகு உறுப் பினர் திரு. கணேசன் போன்றவர்கள் வருத்தப்படக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். "நீங்கள் தவறுக்குத் துணை போகிறீர்கள் ; நீங்கள் அநியாயக்காரர்களுக்கு உதவி செய்கிறீர்கள் ; நீங்கள் கொள்ளைக்காரர்கள் பக்கத்திலே நிற்கிறீர்கள்" என்பது எங்களுடைய குற்றச்சாட்டு. இதற்கெல் லாம் ஆதாரங்கள் தர எத்தனையோ உண்டு என்றாலும், எடுத்துக்காட்டுக்காக ஒன்றைச் சொல்லுகிறேன்.



1986 மார்ச் 20] [திரு. எஸ். ஆர். இராதா]

கும்பகோணம் நகரசபைத் தலைவர் பதவிக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணையோடு காங்கிரஸ்காரரை வைத்து வெற்றி பெற்றார்கள். வெற்றி பெற்று இன்னும் சில நாட்கள்கூட ஆகவில்லை. கும்பகோணம் நக ராட்சி மன்றத்தின் முதல் கூட்டத்தைக் கூட்டியிருக்கிறார்கள். அங்கே யிருக்கிற நகராட்சியினுடைய கடைகளை, மார்க்கெட்டை, காய்கறி விற்கும் சந்தையை ஏலம் விட்டிருக்கிறார்கள். தேர்தலுக்கு முன்பாகவே ஏலம் விடப் பட்டிருக்கிறது. யார் யாரோ கொள்ளையடிக்கிறவர்கள் தேர்தலுக்கு முன்னாலேயே ஏலம் எடுத்துவிட்டார்கள். குறைவான தொகைக்கு ஏலம் எடுத்திருக்கிறார்கள் என்று நகராட்சி மன்றக் கூட்டத்திலே, அதாவது முதல் கூட்டத்திலேயே எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. அங்கேயுள்ள 36 உறுப்பி னர்களில் இரண்டே உறுப்பினர்கள்தான் பழைய உறுப்பினர்கள். அதிலே பதினைந்து பேர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள். தேர்த லுக்கு முன்பே ஏலம் எடுத்ததை அங்கீகரிக்கவில்லை என்று நகராட்சித் தலைவர் குறிப்பிடுகிறார்கள். புதிய உறுப்பினர்கள், "இது நகராட்சிக்கு நஷ்டமாக இருக்கும், ஆகவே இந்த ஏலத்தை ஒப்புக்கொள்ள வேண்டாம், ஏலம் இல்லாமல் நகராட்சியே நேரிடையாகக் கடைகளை நடத்தினால், சோஷ லிசத்திற்கு வழி வகுக்கும்" என்று கூறியிருக்கிறார்கள். உடனே தலைவர் ஓட்டிற்கு விட்டிருக்கிறார். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தி லிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 8 பேர், அண்ணா திராவிட முன்னேற்றக் கழ கத்திலிருந்து பிரிந்து போய் எதிர்த்துப் போட்டியிட்டு வெற்றி பெற்ற 3 பேர், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஐந்து பேர், மற்றும் மூவர் ஆக மொத்தம் 19 பேர் நகராட்சியே நேரிடையாகக் கடைகளை நடத்த வேண்டும் என்ற தீர்மா னத்திற்கு ஆதரவாகப் பேசியிருக்கிறார்கள், ஓட்டளித்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் காண்ட்ராக்ட் டுக்கு விட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள், வாதாடியிருக்கிறார்கள். அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர், "கலைஞர் கருணாநிதி மறுபடியும் ஏலம் விட வேண்டும்" என்று சொல்லியிருக்கிறார், "நீங்கள் ஏன் இந்த காண்ட்ராக்டுக்கே கேட்கிறீர்கள், வேறு காண்ட்ராக்டருக்குக் கொடுத் தால் என்ன" என்று கேட்டிருக்கிறார். "கலைஞர் கருணாநிதி வேறு ஊருக்குச் சொல்லியிருக்கிறார், கும்பகோணத்திற்குச் சொல்லவில்லை" என்று சொல்லியிருக்கிறார்கள். பிறகு அந்த 19 பேருடைய ஆதரவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அப்படி தீர்மானம் நிறைவேறிய பிறகு, காண்ட்ராக்ட ருக்குச் செய்தி சென்றது. "பணம் கொடுத்து தேர்தலை நடத்தியவன் நான், என்னை காற்றில் விட்டுவிட்டு நகராட்சியா நடத்தப் போகிறீர்கள், கொண்டு வா அந்தப் பயல்களை" என்று அவர் சொன்ன பிறகு, எல்லோரையும் அவர்

[திரு. எஸ். ஆர். இராதா] [1986 மார்ச் 20

(பிற்பகல் 12.45)

முன்னால் கொண்டு வந்து நிறுத்தி, பிறகு 24 மணி நேரத்திற்குள் அவசர அவசரமாக ஒரு கூட்டத்தைக் கூட்டியிருக்கிறார்கள். நகராட்சியினுடைய அவசரக் கூட்டம் என்ற தலைப்பில் இந்தக் கடைகளை நகராட்சியே நடத்தலாம் என்று முடிவு செய்யப்பட்டது. இதே பொருள் பற்றி 24 மணி நேரத்திற்கு முன்னதாக திராவிட முன்னேற்றக் கழகத்தினரின் தூண்டுதலின் பேரில், பல அடியாட்களை வைத்துக்கொண்டு இந்தத் தீர்மானத்தை மாற்ற முயற்சி எடுத்திருக்கிறார்கள். அதைக் கண்டு அண்ணா தி.மு.க. தொண்டன் துடித்தான், துவண்டான், அங்கலாய்த்தான், ஆனால் அவனால் ஒன்றும் செய்ய முடியாமல் வெளிநடப்பு செய்திருக்கிறான். இன்றைக்குத் தீர்மானம் நிறைவேறிவிட்டது. வெற்றி பெற்று எத்தனை நாட்கள் ஆயிற்று ? இன்னும் நன்றிகூட சொல்லவில்லை. இதற்குள்ளாகவா இப்படி நடப்பது? அதுவும் நான் உள்ள கும்பகோணத்திலா ஆரம்பிக்க வேண்டும்? கும்பகோணத்தில் இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார்கள். மற்ற ஊர்களில் என்னென்ன செய்யப் போகிறார்களோ ? நகராட்சிகளையும், பஞ்சாயத்துக்களையும் விற்றுவிடமாட்டார்களா ? பத்திரிகைக்காரர்களுக்குச் சொல்லுகிறேன்—இது தோல்வியல்ல இந்த இயக்கத்திற்குக் கிடைத்த நல்ல வாய்ப்பு. நிச்சயமாக இந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் தங்களுக்குக் கிடைத்துள்ள இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி எல்லா நகராட்சிகளையும் பார்த்து கேள்வி கேட்பார்கள். புரட்சித் தலைவர் முன்பு பொங்கி எழுந்ததைப்போல 'எங்கே கணக்கு' 'எங்கே கணக்கு' என்று இந்த இயக்கம் கேட்கும் காலம் வந்துவிட்டது என்பதற்காக நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். ஆகவே எங்களுடைய குரல் பலமாக ஒலிக்கப் போகிறதே தவிர, நாங்கள் தாழ்ந்துவிட்டோம் என்ற நிலை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் தேர்தலில் ஓட்டுக் கணக்கு சொல்கிறார்கள். தி.மு.க.வுக்கு இவ்வளவு வோட்டு வந்துவிட்டது என்று சொல்கிறார்கள். மொத்தத்திலே நகராட்சி ஒன்றியங்களிலே பார்த்தால், வாக்குப் பதிவே குறைந்துவிட்டது. என்றைக்கோ போடப்பட்ட வாக்காளர் பட்டியலை வைத்து இந்தத் தேர்தல் நடத்தப்பட்டது. அதிலே நாம் அதிகமாகக் கவனம் செலுத்தும் நிலைமையிலே இல்லை அப்போது. அவசர அவசரமாக "எப்படியாவது இந்தத் தேர்தலை நடத்தியாக வேண்டும். இது ஒரு மிகப் பெரிய களங்கத்தை உண்டாக்கிக்கொண்டிருக்கிறது. அந்தக் களங்கத்தைப் போக்குவதற்கு சின்னஞ்சிறு தவறுகள் இருந்தாலும், அந்தத் தவறுகளை மறந்துவிட்டு, பெரிய தவறுகளைத் திருத்துவது" என்ற நோக்கத்திற்காக தேர்தல் நடத்தியாகவேண்டும் என்பதற்காக அவசரம் அவசரமாகத் தேர்தலை நடத்தி



1986 மார்ச் 20] [திரு. எஸ். ஆர். இராதா]

யிருக்கிறோம். சில பல குறைபாடுகள் இருக்கலாம். தேர்தல் பற்றிச் சிந்திக்கின்றபோது, இருக்கின்ற பல்வேறு குறைபாடுகளை நாம் மாற்றிக் கொள்ளவும் வாய்ப்பிருக்கின்றது. நகராட்சித் தலைவர் தேர்தல், நகராட்சி உறுப்பினர்கள் தேர்தல் இவற்றில் உள்ள பிரச்சினை என்னவென்று சொன்னால், நகராட்சி மன்றத் தேர்தலுக்கு 24 நாட்கள் அவகாசம் கொடுத்தார்கள். ஆனால் நகராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு அது தேவையில்லை. நகரமன்றத் தேர்தலுக்கு 24 நாட்கள் கொடுத்துவிட்டு நகரமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு 10 நாட்கள் தவணை கொடுத்திருந்தால், இந்த 24 நாட்களில் யார் அந்த நகரத்திலே தலைவர் தேர்தலுக்கு நிற்கின்றார்கள் என்று ஏற்றுக்கொண்டிருக்கலாம். பூசணிக்காய்க்கு 24 நாட்கள் கொடுத்துவிட்டு, இருக்கின்ற தேசிய சின்னத்திற்கு எல்லாம் குறைந்த நாள் தவணை கொடுத்திருக்கின்றார்கள். அரசியல் சின்னத்தை விட்டுவிட்டிருக்கின்றார்கள். இந்தப் பூசணிக்காயும், புடலங்காயும் இரண்டும் வெளியிலே வந்து, கடைசியிலே இதுதான் சின்னம் என்று சொல்கின்ற அளவுக்கு வந்துவிட்டன. எதைக் கேட்டாலும் 'கப் சாசர்' என்று சொல்கின்றார்களே தவிர, உதய சூரியன் என்று சொன்னால், உதயசூரியன் வேண்டாம், கப் சாசருக்குப் போவோம், கப் சாசரைப் பாருங்கள் என்ற அளவுக்கு வந்துவிட்டது. அந்த சுயேச்சைச் சின்னத்தைத் தான் அவர்கள் வெளிப்படுத்தும் நிலை வந்தது. அதுதான் நடைமுறையிலே ஏற்பட்டிருக்கின்ற விளைவு என்று சொல்லிக்கொள்கிறேன். அதையெல்லாம் எதிர்காலத்திலே, வருகின்ற காலத்திலே மாற்றிக்கொள்ள முடியும். இதிலே என்னுடைய கருத்தைச் சொல்வதாக இருந்தால், மாநகராட்சித் தேர்தல் சில மாதங்களில் நடைபெறப் போகிறது. அந்தத் தேர்தலில்கூட, தலைவர் தேர்தலிலே நேரடித் தேர்தல் வருமானால், மாநகராட்சிக்கு 3 ஆண்டு பதவிக் காலம் கொடுத்து, அதுகூட நேரடித் தேர்தலாக வருமானால், பொதுமக்களே வோட்டுப் போடுகின்ற நிலை வருமானால், நான் நிச்சயமாகச் சொல்கிறேன் "மாநகராட்சி யார் கைக்குப் போகும் என்பதைப் பார்த்துவிடலாம்." அதே போல மாநகராட்சித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளர்களுக்கு கட்சிச் சின்னங்களை எடுத்துவிட்டு, பூசணிக்காய் சின்னத்தைக் கொடுப்பார்களானால் யார் யார் என்ன ஆவார்கள் என்பது எனக்குத் தெரியும்.

சென்னை மாநகரத்தில் மட்டும் கட்சிச் சின்னங்களை எடுத்துவிட்டு தேர்தல் நடத்தினால், அதிலே எந்தக் கட்சி கட்டுப்பாட்டுக்கு வருகிறது என்பதை நாட் கணக்கிட்டுப் பார்ப்பதற்கு முடியும். தேர்தல் முடிந்ததற்குப் பின்னால் கணக்குப் பார்க்க வாய்ப்பிருக்கும்.

[திரு. எஸ். ஆர். இராதா] [1986 மார்ச் 20

கும்பகோணம் நகராட்சிக்கு என்ன நிலை கொடுத்தார்களோ, திருநெல்வேலி நகராட்சிக்கு என்ன நிலை கொடுத்தார்களோ, அதே நிலையை சென்னை நகராட்சிக்கும் கொடுங்கள். மதுரை நகரத்திற்கும் கொடுங்கள். கோயம்புத்தூர் நகராட்சிக்கும் கொடுங்கள். இங்கே இருக்கும் உறுப்பினர்களுக்கு மட்டும் கட்சிச் சின்னத்தை வைப்பார்களானால், ஒரு கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடுவார்கள். இவர்களைச் சேர்த்து ஆக்குங்கள். எந்தக் கட்சியில் வேண்டுமானாலும் எத்தனை பேர் வேண்டுமானாலும் போட்டி போடட்டும். அவர்களில் தேர்தலில் வெற்றி பெற்று வருபவர்கள் பொதுவாக இருக்கட்டும். நான் உள்ளபடியே சொல்வேன், அப்படி இருப்பது சரியா, தவறா என்று சொன்னால், பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்றைக்கு "ஊராட்சியைப் பொறுத்தவரையில், இந்த நகராட்சியிலே கட்சிகள் தேவையில்லாத ஒன்று" என்று சொன்னார்கள். அதையேதான் அண்ணா அவர்கள் வற்புறுத்தி வற்புறுத்திச் சொன்னார்கள். அதைத்தான் புரட்சித் தலைவர் எப்படியாவது நிறைவேற்ற வேண்டும் என்று கட்சி அடிப்படையில் தேர்தல் வேண்டாம் என்று சொன்னார்கள். அப்படிச் சொல்வதற்குக் காரணம் எங்களுடைய கட்சி வராது என்று கருதியல்ல. நகராட்சியிலே, உள்ளாட்சித் துறையிலே கட்சி தேவையில்லை என்ற காரணத்தினாலேயே 'வேண்டாம்' என்று சொன்னார்கள். ஏனென்றால் அண்ணா அவர்கள் சொன்னார்கள். உடனே கலைஞர் அவர்கள் "இல்லையில்லை. கட்சி இல்லாமல் நடத்த முடியாது" என்றார்கள். அது அண்ணா சொன்னால் என்ன, யார் சொன்னால் என்ன என்ற அளவில் பேசினார்கள். அவருக்குத் துணை போகின்றவர்கள் சிலர் காங்கிரஸ் கட்சியிலே இருக்கின்றார்கள். அவர்கள் துணையோடு, தலைவர் தேர்தலுக்காவது கட்சிக்குக் கொடுங்கள் என்று கேட்டதன் அடிப்படையிலே, வேறு வழியில்லாமல் கட்சி அடிப்படையில் தலைவர்கள் தேர்தல் அளவுக்கு வந்தது. இன்றைக்கு என்ன ஆகிறது என்றால், உட்கார்ந்திருக்கின்ற தலைவர் கட்சிக்காரன், கீழே உட்கார்ந்து—இருக்கின்ற உறுப்பினர்கள் அத்தனை பேர்களும சுயேச்சை சின்னத்திலே ஜெயித்தவர்கள். நாளைக்கு ஏதாவது பிரச்சினை என்றால், காண்ட்ராக்ட் பிரச்சினை அல்லது வேறு ஏதாவது பிரச்சினை என்று வந்தால், நிச்சயமாகச் சொல்கிறேன், யாராவது ஒரு காண்ட்ராக்ட்காரன் முயற்சி செய்யும் நிலை வருமானால், உறுப்பினர்களே மாறி, "கட்சியோ என்னவோ நீ உன் வேலையைப் பார்" என்று சொல்கின்ற நிலைமைகள் வருமா வராதா என்று கேட்டால், நான் "அது வரும்" என்றுதான் சொல்வேன். அது எனக்குத் தெரியும். காரணம் 12 ஆண்டுக் காலம் உள்ளாட்சித் துறையிலே கும்பகோணத்திலே உறுப்பினராக இருந்திருக்கிறேன். அங்கே காங்கிரஸ் 26 பேரை வைத்துக்கொண்டு அன்றைக்கு



1986 மார்ச் 20] [திரு. எஸ். ஆர். இராதா]

கட்டுப்பாடாக இருக்க முடியவில்லை. அப்படி நடத்த முடியாத நிலையில் இருந்தது எனக்குத் தெரியும.

(பிற்பகல் 12-50)

நான்தான், அந்தக் குழப்பங்களிலே அவ்வப்போது புகுந்து விளையாடிக் கொண்டிருப்பேன். யார், எந்த நேரத்திலே குழப்புவார்களோ என்ற நிலை அன்றைக்கு இருந்தது. காங்கிரஸ் நகராட்சியை எதிர்க்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்திற்காக குழப்பம் இருக்கும் இடங்களிலே எல்லாம் நான் நின்றுகொண்டிருப்பேன். அதனால் பல பேர்கள் என்னை ஒரு குழப்பவாதியாகக் கருதிக் கொண்டிருப்பார்கள். அன்றைக்கு கும்பகோணத்திலே திரு. கருப்பையா மூப்பனார் அவர்கள் இருந்தார்கள். இன்றைக்கு அஸ்ஸாம் பிரச்சினையையும், பஞ்சாப் பிரச்சினையையும் பார்க்கும் திரு. கருப்பையா மூப்பனாருக்கு, அன்றைக்கு கும்பகோணத்திலே காங்கிரஸ் பிரச்சினையைப் பார்க்க முடியாமல், கடைசியிலே மூன்று தலைவர்களை மாற்றினார்கள். மாதாமாதம் பணம் கேட்கச் சொல்வேன். தலைவரே என்ன வாங்குவது, நீங்களும் கேளுங்கள் என்று சொல்வேன். கேட்கவில்லை என்றால், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் கையெழுத்து வாங்கு என்பேன். பேப்பர் தயாராக கையிலே வைத்திருப்பேன். கையெழுத்து வாங்குவேன். உடனே அது மூப்பனாருக்குத் தெரியும். உடனே அழைத்துப் பேசுவார். ஒரு மாதம் ஓடும். திரும்பவும் அடுத்த மாதம் கையெழுத்து வாங்குவேன். கடைசியிலே எல்லாத் தலைவர்களும் சொன்னார்கள், பெரிய தலைவலி, இந்தப் பதவியே வேண்டாம் என்று சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்கள். நான் இதைச் சொல்வதற்குக் காரணம், இந்த நிலை இன்றைக்கு வராதா என்பதற்காகத்தான். ஒரே ஒரு பாதுகாப்பு. தலைவர் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர், அதனால் அவரை ஒன்றும் செய்ய முடியாது என்று நேற்றைக்குச் சொன்னார்கள். தலைவர்தான் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரே தவிர, பெரும்பான்மை இல்லை என்றால், எந்தத் தலைவரும் எந்த ஆட்சியையும் நடத்த முடியாது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். நகராட்சியிலே முதல் தீர்மானம் வருகிறது. நான் எழுந்து முன்மொழிவேன். "இந்த நகராட்சித் தலைவர் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்ற காரணத்தாலே, அவர் தலைமை தாங்கக்கூடாது" என்று சொல்லுவேன். ஒரு ஆளை விட்டு வழி மொழியச் சொல்வேன். ஓட்டுக்கு விடச் சொன்னால், 21 பேர் அதை ஆதரிப்பார்கள், அங்கே உட்கார்ந்திருக்கிற தலைவரை கீழே உட்காரச் சொல்வேன். மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, நான் உங்களைச் சொல்லவில்லை. (சிரிப்பு) அப்படிப்பட்ட நிலைமை வந்துவிட்டால், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் அங்கே செயல்பட முடியுமா என்றால், செயல்பட முடியாது.

இன்றைக்கு இருக்கிற பல நகராட்சிகளிலே தலைவர் மட்டும் வந்திருக்கிறார். உறுப்பினர்கள் யார் என்றால், வேறு யாரோ. பல கட்சிகளுக்கும் அந்த நிலைமைதான். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கோ, காங்கிரசுக்கோ, தி.மு.க.-வுக்கோ மாத்திரமல்ல, எல்லாக் கட்சிகளுக்கும் அந்த நிலை வந்திருக்கிறது. தலைவர்தான் ஜெயித்திருக்கிறார். இந்த நிலைமையைச் சிந்திக்கும்போது, ஒன்றை நாம் இன்னும் மனதிலே வைத்துக்கொள்ள வேண்டும். இன்னும் மாநகராட்சித் தேர்தல் இருக்கிறது. நான் நிச்சயமாக ஒன்றைச் சொல்லிக்கொள்வேன். இதிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய நிலையை இழக்க வில்லை என்பதை மீண்டும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. அருணாசலம் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். "மதுவிலக்கு பற்றி முன்னாலேயே சொல்லியிருந்தால், இன்னும் அதிக அளவுக்கு வெற்றி பெற்றிருப்பீர்கள்" என்று சொன்னார்கள். இப்படி கொஞ்சம் தோல்வி என்று தெரிந்ததற்குப் பின்னாலே, அவர்களாக சில காரணங்களைச் சொல்லுகிறார்கள். இப்படிச் செய்திருக்கலாம், அப்படிச் செய்திருக்கலாம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் எங்களைப் பொறுத்த வரையில், தோல்வி என்ற நிலையிலேகூட சிந்திக்காமல், நாங்கள் பெற்றிருப்பது புதிதாகப் பெற்றுள்ள பதவிகள் என்றும், இதில் எங்களுக்கு இருக்கும் மகிழ்ச்சி பல அண்ணா தி.மு.க. தொண்டர்களை, சாதாரணமானவர்களை பெருந்தலைவர்களாகப் பார்க்கிறோம் என்பதுதான். பல பேர் நகராட்சி மன்றத்தில் உறுப்பினராக வந்திருக்கிறார்கள். பெரும் தலைவராகி ஜீப்பிலே போகும்போது, எங்களுக்கு மகிழ்ச்சி. புரட்சித் தலைவரோடு தொண்டாற்றி வந்தவர்களுக்கு இன்றைக்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்ற அளவுக்கு இதை பெருமையாகக் கருதுவோம். இதைப் பயன்படுத்தி ஏழை எளியவர்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்பது தான் எங்கள் சிந்தனை. ஆனால், நான் பகிரங்கமாகச் சொல்கிறேன், திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கும் தலைவர்கள், பல பேர்களுடைய பெயர்களைப் பார்த்தேன், அத்தனை பேரும் பழையவர்கள்தான். மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் அவர்கள் மன்னித்துக்கொள்ள வேண்டும், அவர்கள் தவறு செய்ய மாட்டார்கள் என்பதற்கு உத்திரவாதம் தர முடியுமா? இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் கலைஞர் கருணாநிதி அவர்கள் வேகமாகச் சொல்லக் காரணம் என்ன? "நான் கண்காணிக்கப் போகிறேன், நான் பார்த்துக் கொள்வேன்" என்று சொல்வதற்குக் காரணம், தவறுகளை உடனே ஆரம்பித்துவிடுவார்கள் என்பதற்காகத்தான். அவர்களை யாரும் கட்டுப்படுத்த முடியாது. ஏனென்றால் பரம்பரை பரம்பரையாக ஊறி வந்த



வழக்கம். பல நகராட்சிகளில் உள்ள டி.பி.யில் இன்றைக்கே தூங்க ஆரம்பித்து விட்டார்கள். யாரும் கேட்க முடியாது அவர்களை. கேட்டால், நகராட்சி மன்ற உறுப்பினர்கள் தூங்குகிறார்கள் என்று சொல்லிவிட்டு, நான்கு ரூம்களில் படுத்துக் கிடக்கிறார்கள். பல காரியங்கள் நடக்க ஆரம்பிக்கிறது. தலைவர் ஒரு ரூமில் படுத்துக் கிடக்கிறார், உறுப்பினர் ஒரு ரூமில் படுக்கிறார், என்ற நிலையை இன்றைகக்கே உருவாக்கியிருககிறார்கள். அதனால்தான் நான் கண்காணிப்புக் குழு போடுவேன், வருமானத்திற்கு வழி சொல்லப் போகிறேன் என்று தலைவர் சொல்கிறார் என்றால், நீங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். இன்றைக்கு தெரிந்தோ தெரியாமலோ நீங்களாகவே நகராட்சி விவகாரத்தில் தலையிடும் நிலைமை வந்திருக்கிறது. இன்றைக்கு நகராட்சி என்றால், அந்தந்த ஊரிலே உள்ள சாதாரணப் பிரச்சினை. இது அரசியல் பிரச்சினை அல்ல. ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினையில் கலைஞர் அவர்கள் தலையிட்டால், நான் பெருமையாகக் கருதுவேன். மாண்புமிகு அமைச்சர் திரு. இராமசாமி அவர்கள் இங்கே பதில் சொல்லும்போது, ஸ்ரீலங்கா தமிழ் அகதிகள் பற்றிச் சொல்லும்போது, கலைஞர் அவர்கள் கேள்விகள் கேட்பார் என்று நான்கூட நினைத்தேன். ஸ்ரீலங்கா பிரச்சினையைப் பற்றிப் பேசினால், நாமும் கேட்டுக் கொண்டிருக்கலாம். ஆனால் நகராட்சிகளைக் கண்காணிக்கப் போகிறேன் என்று சொன்னதால் தான், நான் இங்கே இதைப்பற்றிக் குறிப்பிட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. ஆலந்தூரிலும், தாம்பரத்திலும் கண்காணிக்கப் போகிறார்களா? நாட்டுக்காக, பொதுப் பிரச்சினைக்காக கண்காணிக்கப் போகிறேன் என்று சொன்னால், நான் கூட வரவேற்பேன். இது அப்படிப் பட்டதல்ல. ஊரில் இருக்கிற ஒரு பிரச்சினை. இன்றைக்கு வருமானத்தைப் பெருக்க வேண்டுமென்றால், அதற்கான வழிவகைகளைக் காண வேண்டுமே தவிர, அதை விட்டுவிட்டு மாலை போடாத முதலாளிகளுக்கு எல்லாம் நோட்டீஸ் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவனவன் ஆயிரம், இரண்டாயிரத்தை கவரில் போட்டு கொடுத்துக் கொண்டிருக்கிறான். இப்படி யெல்லாம் செய்து ஏற்கெனவே வந்துகொண்டிருக்கின்ற சொத்து வரிகளை இழக்கப் போகிறார்களா? நான் சொல்கிறேன், இதுசம்பந்தமான விவரங்கள், கண்காணிக்கின்ற அதிகாரம் எல்லாம் கலைஞருடைய கையில் இல்லை. மாண்புமிகு அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் கையில்தான் அதற்கான அதிகாரம் இருக்கிறது. கலைஞர் ஒன்றைக் கேட்டுத்தான் பெற முடியும். அவரால் ஒன்றையும் பார்க்க முடியாது. ஆனால் முழு விவரமும் எங்கேயும் இருக்கிறது. ஏதாவது இடத்தில் கணக்குப் பார்க்கும்போது,

[திரு. எஸ். ஆர். இராதா] [1986 மார்ச் 20

(பிற்பகல் 12-55)

வருவாய் குறைவாக வருகிறது என்றால், உடனே ஏன் குறைவாக வருகிறது என்று கேட்கும் நிலையில் நாங்கள் இருக்கிறோம். ஏதாவது நகராட்சியிலே ஏன் சொத்து வரி குறைவு ஏற்பட்டது என்று விளக்கம் கேட்டு, மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் அவர்கள் விளக்கம் கேட்டால், "இதோ பார் ப.உ.ச. நகராட்சியை கலைக்க சதி செய்கிறார்" என்று ஆரம்பிப்பார்கள். இப்படியெல்லாம் சொல்லி கொஞ்சம் நாளைக்குத்தான் அரசியலை ஓட்டலாம். இப்பொழுது அவர்களுக்கு ஏற்பட்டிருப்பது புதிதாக வந்திருக்கும் தரித்திரம் என்று தான் நான் சொல்வேன். இந்நிலை அவர்களுக்கு இழிவை ஏற்படுத்திவிடும். இதிலே நல்லமுறையில் பணியாற்றி யாராவது பெயர் எடுத்தார்கள் என்றால், அந்த நண்பர்களை நான் போற்றுவேன், பாராட்டுவேன். திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிற அத்தனை நண்பர்களும் அயோக்கியமானவர்கள் என்றோ மோசமானவர்கள் என்றோ நான் சொல்ல மாட்டேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மிசா கணேசன் மாதிரி நல்லவர்களும் இருக்கத் தான் செய்கிறார்கள். நிச்சயமாக எந்தக் கட்சியில் இருந்தாலும், அவர்கள் தவறு செய்யாதவர்கள் என்றால், அவர்களை நண்பர்களாக, தோழர்களாக ஏற்றுக்கொள்வதிலே எனக்கு மாறுபாடு கிடையாது. ஆனால் உள்ளபடியே என்ன நடைபெறுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். "நான் அதிகமாக இனிமேல் கவனிப்பேன், கண்காணிப்பேன், நீங்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும், வெகு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும், இல்லாவிட்டால் ஏமாந்துவிடுவீர்கள்" என்றெல்லாம் வெற்றி பெற்ற பிறகு சொல்கிறார்கள் என்றால், இதைப்பற்றிக் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நான் சொல்கிறேன், அவர்களுக்கு பயம் வந்துவிட்டது. இல்லாவிட்டால் இப்படிச் சொல்வார்களா ? எங்களைப் பொறுத்தவரையில், தேர்தல் நடந்து விட்டது, நாங்கள் பெரிய தோல்வி அடைந்து விட்டோம், பெரிய இழப்பு ஏற்பட்டு விட்டது என்கிற நிலையில் நிச்சயமாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இல்லை என்பதை திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு இன்னொன்றையும் நான் சொல்வேன். எங்கள் இயக்கத்தைப் பொறுத்தவரையில், இது தேர்தலிலே வெற்றி பெறுவதற்காக ஆரம்பிக்கப்பட்ட இயக்கமல்ல. நான் ஆரம்பக் கால தொண்டன். அந்த முறையில் ஒன்றைச் சொல்கிறேன். நாங்கள் ஒரு கொள்கைக்காகத்தான் இந்த இயக்கத்தை ஆரம்பித்தோம். ஏதோ பதவிகள் வரும், லாபம் வரும், சுகத்தை அனுபவிக்கலாம் என்ற அடிப்படையில் அல்ல நாங்கள் எங்கள் இயக்கத்தை ஆரம்பித்ததன் நோக்கம். எந்த இடத்தில் நாங்கள் இருந்தாலும், நாங்கள்



1986 மார்ச் 20] [திரு. எஸ். ஆர். இராதா]

பேரறிஞர் அண்ணாவின் கொள்கையையும், பெரியார் கொள்கையையும் உறுதியாகச் சொல்வோம் என்ற அடிப்படையில் தான் எங்கள் இயக்கத்தை நடத்திக்கொண்டிருக்கிறோம். பதவி கிடைக்கும் என்பதால் சேர்ந்திருக்கிறோம் என்று சொன்னால், நான் அவர்களுக்குச் சொல்வேன்—1972 ஆம் ஆண்டு எங்களைப் போன்றவர்கள் எல்லாம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய இயக்கத்திலே இணைகின்ற நிலை வந்திருக்காது. அன்றைக்கு இந்த இயக்கத்திலே சேர்வதற்கு யார் யார் எப்படியெல்லாம் பயந்தார்கள். இந்த இயக்கத்திலே சாயங்காலம் சேர்கிறார்கள் என்றால் அடுத்த நாள் காலையில் அவர்கள் என்ன பாதிப்புக்கு உள்ளாவார்கள் என்பதையும் இன்றைக்கு எண்ணிப்பார்க்கிறேன். சிதம்பரம் நகராட்சியின் துணைத் தலைவரை பெருமையோடு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் கொண்டு வந்து சேர்க்கிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொடர்ந்து 24—3—1986 அன்று பேசுவார்.

மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. மீண்டும் அவை 24—3—1986 திங்கட்கிழமை, காலை 10 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-00)

## 4. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

170. சேலத்திலுள்ள திருவாளர் அண்ணா போக்குவரத்துக்கழகத்திற்குச் சொந்தமான சில வண்டிகளைப் பொறுத்தவரையில் 1979-80 ஆம் ஆண்டுக்குரிய கூடுதல் மேல் வரியை காலங்கடந்து செலுத்தியதற்காக அக்கழகம் செலுத்தத்தக்க அபராதக்கட்டணத்தொகையைச் செலுத்துவது தொடர்பாக, உள்துறையின் 6—1—1986 ஆம் நாளிட்ட 20 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

171. தமிழ்நாடு உணவுப்பொருள் வழங்கல் கழகத்தின் 1980-81 ஆம் ஆண்டிற்கான ஒன்பதாவது ஆண்டறிக்கை (தமிழ் மற்றும் ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச்சட்டம் 1/1956) 619 (ஏ) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

172. டான்சி நிறுவனத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான பத்தொன்பதாவது ஆண்டறிக்கை (தமிழ் மற்றும் ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச்சட்டம் 1/1956) 619 (ஏ) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

173. கூத்தாநல்லூர், தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகத்தின் 1978-79 ஆம் ஆண்டிற்கான ஐந்தாவது ஆண்டறிக்கை (தமிழ் மற்றும் ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச்சட்டம் 1/1956) 619 (ஏ) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

174. கூத்தாநல்லூர், தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகத்தின் 1979-80 ஆம் ஆண்டிற்கான ஆறாவது ஆண்டறிக்கை (தமிழ் மற்றும் ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச்சட்டம் 1/1956) 619 (ஏ) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

175. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் 1984-85 ஆம் ஆண்டிற்கான முப்பத்தாறாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச்சட்டம் 1/1956) 619 (ஏ) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

**ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.**

**இல்லை.**

923/86

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# தமிழ்நாடு
# சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE COUNCIL DEBATES

# செயலக வெளியீடு
# OFFICIAL REPORT

**திங்கட்கிழமை, மார்ச் 24, 1986-தொகுதி 221 எண் 4.**
**Monday, 24th March 1986-Volume 221 No. 4.**

சட்டமன்ற மேலவைச் செயலகம்.
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009.

**LEGISLATIVE COUNCIL SECRETARIAT.**
**Fort St. George, Madras-600 009.**

விலை ரூ. 2.75]

## பொருளடக்கம்


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1 | வினாக்கள்—விடைகள் .. .. .. | 301—310 |
| 2 | 1986–87 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீது பொது விவாதம் | 310—370 |
| 3 | 1985–86 ஆம் ஆண்டு இறுதித் துணை மதிப்பீடுகளை அளித்தல் | 370—373 |
| 4 | மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களுக்கு டாக்டர் பி. சி. ராய் தேசிய விருது கிடைத்தமைக்குப் பாராட்டு | 378—879 |
| 5 | அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. | 379—380 |


143544

# தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

திங்கட்கிழமை, 1986 மார்ச் 24.

பங்குனி 10, குரோதன, திருவள்ளுவராண்டு-2017.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் உள்ள மேலவை மண்டபத்தில், முற்பகல் 10-00 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவர் (திரு. ஜி. சுவாமிநாதன்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### *Amount due to Neyveli Lignite Corporation.*

* 91 *Q*. Thiru S. J. SADIQ PASHA, Thiru L. JAYACHANDRAN and Thiru A. P. SIVARAMAN (on behalf of Thiru C. R. LAKSHMIKANDHAN): Will the Hon. the Minister for Electricity be pleased to state :

(*a*) whether it is a fact that the cumulative dues of the Tamil Nadu Electricity Board to the Neyveli Lignite Corporation, for the supply of power, stood at Rs. 88 crores, at the end of 1984 ; and

(*b*) if so, the steps taken to clear the dues ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) இல்லை. 1984 ஆம் ஆண்டின் இறுதியில் நிலுவையிலுள்ள தொகை ரூ. 39.91 கோடி மட்டுமே.

(இ) நிலுவைத் தொகை படிப்படியாகச் செலுத்தப்பட்டு வருகிறது.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கடன் தொகை முன்பு 88 கோடி ரூபாயாக இருந்தது என்று சில பத்திரிகைகள் வாயிலாக அறிந்தேன். இப்போது அந்தத் தொகை குறைவாக இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படியானால் பத்திரிகையில் வந்தது தவறா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** நெய்வேலி நிலக்கரி நிறுவனம் முன்பு யூனிட்டுக்கு அதிகக் கட்டணம் கேட்டார்கள். அந்த அடிப்படையில் அவர்கள் தொகையைக் கணக்கிட்டு மின் வாரியத்திற்கு அனுப்பினார்கள். அந்த உயர்ந்த கட்டணம் தர மின் வாரியம் ஒப்புக்கொள்ளவில்லை. ஏற்கெனவே தருகிற கட்டணத்தைக் கொடுத்துக்கொண்டு வருகிறோம். ஆக, இரண்டுக்கும் இருக்கிற வேறுபாடு காரணமாக கூடுதலான நிலுவை

ஏற்பட்டது. அண்மையில் நெய்வேலி நிறுவனத்திற்கும் மின் வாரியத்திற்கும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அதன்படி 32 கோடி ரூபாய் தான் நிலுவை இருக்கிறது.

**திரு. அ. ப. சிவராமன் :** நெய்வேலி அனல்மின் நிலைய இரண்டாவது பிரிவு அண்மையில் மின் உற்பத்தியைத் துவக்கியிருக்கிறதா ? அங்கே உற்பத்தியாகும் மின்சாரத்தை, தமிழ் நாட்டுக்குக் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசை, மாநில அரசு வற்புறுத்துமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** ஒரு இயந்திரம் மின் உற்பத்தியை சில தினங்களில் துவங்க இருக்கிறது. இரண்டாவது அனல் மின் நிலையத்தில் உற்பத்தியாகும் மின்சாரம் முழுவதையும் தமிழ் நாடு அரசுக்குத் தரவேண்டுமென்று இந்திய அரசை வற்புறுத்தி வருகிறோம். ஆனால் அனல் மின் நிலையத்தின் மின்சாரத்தை மற்ற மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டுமென்று இந்திய அரசு சொல்லி வருகிறது.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** நெய்வேலி நிறுவனத்திற்கு தமிழ் நாடு அரசு அதிக நிலுவைத்தொகை வைத்திருப்பதால்தான், தமிழ் நாட்டுக்கு மின்சாரம் கொடுப்பதைக் குறைத்து, மற்ற மாநிலங்களுக்குக் கொடுக்கிறார்கள் என்று பரவலாக வெளியில் பேசுகிறார்கள். அது உண்மையா ? அப்படியானால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மின்கட்டண நிலுவைக்கும் மின்சாரப் பங்கீட்டுக்கும் சம்பந்தம் இல்லை. ஆகவே வதந்திகளை நம்ப வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. அ. ப சிவராமன் :** அண்மையில் மின்சார வாரியம் தரவேண்டிய பாக்கி அதிகமாக இருப்பதாக நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தாரும், மத்திய அமைச்சரும் சொல்லிவருகிறார்கள். அப்படி அதிக பாக்கி இருப்பதற்குக் காரணம், நாம் அதிகத் தொகைக்கு ஒப்புக்கொண்டிருக்கிறோம் என்பதுதான். அப்படியானால் இப்போது யூனிட் ஒன்றுக்கு எவ்வளவு தருகிறோம், முன்பு என்ன தொகை கொடுத்தோம் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** முன்பே நான் குறிப்பிட்டதைப் போல, இது கணக்கில் வந்த தவறுதான். தொகை காரணமாக தவறு வரவில்லை. நெய்வேலி நிலக்கரி நிறுவனத்திற்கு, சராசரியாக யூனிட் ஒன்றுக்கு 42.51 காசு தரவேண்டுமென்று கேட்டார்கள். நாம் அதை மாற்றி, 1984-ம் ஆண்டுக்கு 36.05 காசு வீதமும், 1985-க்கு 39.02 காசு வீதமும்,



1986-க்கு 42.05 காசு வீதமும், 1987-க்கு 45.75 காசு வீதமும் கொடுப்பதன் மூலம், சராசரியாக 41 காசு வீதத்தில் நான்கு ஆண்டு காலத்திற்கு ஒப்பந்தத்தை உருவாக்கியிருக்கிறோம்.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இந்த நெய்வேலி நிறுவனம், பழுப்பு நிலக்கரியை வெட்டி வெளிமாநிலங்களுக்கு மத்திய அரசு மூலம் அனுப்புகிறது. ஆகவே அதற்கு தமிழக அரசுக்கு ராயல்டி தொகை ஏதாவது தருகிறார்களா ? மின்சாரம் நாம் கேட்டால், மற்ற மாநிலங்களுக்குக் கொடுக்க வேண்டியிருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆகவே நம்முடைய மாநிலத்தில் வெட்டியெடுக்கும் பழுப்பு நிலக்கரிக்கு ராயல்டி கொடுக்கவில்லையென்றால், என்ன காரணம் ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** ராயல்டி கொடுப்பது என்பது இப்போது இல்லை. லாபத்தில் பங்கு தரவேண்டுமென்று ஏற்கெனவே ஒப்பந்தம் அதாவது ஒரு உறுதி தரப்பட்டிருக்கிறது. லாபத்தில் பங்கு தரவேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறோம்.

(முற்பகல் 10-05)

**திரு. அ. ப. சிவராமன் :** துணைத் தலைவர் அவர்களே, நெய்வேலியில் மூன்றாவது சுரங்கத்தை வெட்டி, மேலும் ஒரு மின் நிலையத்தை ஏற்படுத்த மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** துணைத் தலைவர் அவர்களே, மின் பற்றாக்குறையை இல்லாமல் செய்வது மிகமிக அவசியத் தேவை என்று நாம் கருதுகின்றோம். வருகிற ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதற்கான ஆரம்பப் பணிகளுக்காவது நிதி ஒதுக்குவது மிகவும் தேவை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் டில்லி செல்கிறபோது, மாண்புமிகு பிரதமர் அவர்களிடத்தில் இக்கருத்து வலியுறுத்தப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**தொழிலாளர் வருங்கால வைப்புநிதி, ஓய்வூதியத் திட்டங்களில் முறைகேடுகள்.**

* 92 வினா.—திரு. அ. ப. சிவராமன் (திரு. க. சுப்பு சார்பில்): மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாடு மின்சார வாரியத்தில், தொழிலாளர் வருங்கால வைப்புநிதி மற்றும் ஓய்வூதிய திட்டங்களில், முறைகேடுகள் நடந்திருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

### தொழிற் சங்கம்.

*** 93 வினா.**—திரு. ஆர். டி. சித்தாபதி : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

ஒரு தொழிற்சாலையில், ஏழு தொழிலாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டால், தொழிற் சங்கம் அமைக்க உரிமை உண்டு என்பதை மாற்றி, இருபது தொழிலாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டால்தான், தொழிற் சங்கம் அமைக்க அங்கீகாரம் அளிக்க வேண்டும் என்று மத்திய அரசு, மாநில அரசை வற்புறுத்தியுள்ளதா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** இல்லை.

**திரு. ஆர். டி. சித்தாபதி :** துணைத் தலைவர் அவர்களே, ஒரு தொழிற் சாலையில் ஏழு தொழிலாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டால், தொழிற் சங்கம் அமைத்துக்கொள்வதற்கான உரிமை இப்போது தமிழகத்தில் இருக்கிறது. அதை 20 பேர்களாக மாற்றி அமைக்க வேண்டுமென்று மத்திய அரசின் தொழிலாளர் நல அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. அஞ்சையா அவர்கள் வாக்குறுதி தந்திருக்கிறார்கள். அது உண்மையா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** துணைத் தலைவர் அவர்களே, அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

### டாக்டர் சாந்தப்பா குழு அறிக்கை.

*** 94 வினா.**—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்) : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாட்டிலுள்ள இரசாயன தொழிற்சாலைகளில், வாயு கசிவு போன்றவைகளால் ஏற்படும் ஆபத்துக்களைத் தவிர்ப்பது பற்றி, டாக்டர் சாந்தப்பா குழு, இடைக்கால அறிக்கை ஒன்றை, அரசுக்குத் தந்துள்ளது என்பது உண்மையா ?





(இ) ஆம் எனில், அதன்மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** (அ) ஆம்.

(இ) இது ஒரு இடைக்கால அறிக்கை. குழுவின் அறிக்கையில் கூறிய விபத்து தடுப்பு முறைகளைக் கடைப்பிடிப்பதற்காக அறிக்கையின் நகல் சம்பந்தப்பட்ட தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**திரு. அ. ப. சிவராமன் :** துணைத் தலைவர் அவர்களே, இரசாயனத் தொழிற்சாலைகள் சம்பந்தமாக டாக்டர் சாந்தப்பா குழு கொடுத்த அறிக்கையின் நகல், தகவல் அறிய மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தரப்படுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** துணைத் தலைவர் அவர்களே, டாக்டர் சாந்தப்பா தலைமையிலான குழு, இரசாயனத் தொழிற்சாலைகளில் வாயு கசிவு போன்றவைகளால் ஏற்படும் ஆபத்துக்களைத் தவிர்ப்பதுபற்றி, ஓர் இடைக்கால அறிக்கையைத்தான் கொடுத்திருக்கிறது. முழு அறிக்கையைக் கொடுக்க இருக்கிறது. தமிழ் நாட்டில் 42 இரசாயனத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அவற்றில் ஏறத்தாழ ஒன்பது தொழிற்சாலைகள் சென்னையில் மணலியைச் சுற்றி அமைந்திருக்கின்றன. தற்போது மேற்படி குழு ஆய்வு செய்து அளித்துள்ள இடைக்கால அறிக்கை இந்த ஒன்பது தொழிற்சாலை களைப்பற்றித்தான். மற்றும் மேற்படி குழு தூத்துக்குடி, மேட்டூர் போன்ற பகுதிகளில் இருக்கிற பிற தொழிற்சாலைகளைப்பற்றியும் ஆய்வு செய்து விரைவிலே முழு அறிக்கை கொடுக்க இருக்கிறது. அப்போது இந்த மன்றத்திற்குத் தகவல் அனுப்பப்படும்.

### மருதுபாண்டியர் சகோதரர்களின் வாரிசுகளுக்கு நிதி உதவி.

*** 95 வினா.**—திரு. எல். ஜெயச்சந்திரன் (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் சார்பில்) : மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சிவகங்கை, மருதுபாண்டியர் சகோதரர்களின் வாரிசுகளுக்கு நிதி உதவி அளிக்க, தமிழக அரசு திட்டமிட்டுள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** (அ) மற்றும் (இ) மருது பாண்டியர் வாரிசு என வந்த உரிமைக் கோரிக்கைகளைப் பரிசீலித்தபின் 202 நபர்களை மருது பாண்டியர் வாரிசுகள் என அரசு ஏற்றுக்கொண்டு அவர்களின் குடும்பங்களுக்கு தனி அரசியல் ஓய்வூதியமாக மாதம் ரூ. 150 19—7—1982 முதல் வழங்கி வருகிறது.

### சாலையோர உணவகங்கள்.

* 96 வினா.—திரு. அ. ப. சிவராமன் (டாக்டர் இரா. சனார்த்தனம் சார்பில்) : மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

உதகமண்டலம்-மைசூர் சாலையில், சாலையோர உணவகங்கள் அமைக்கும் கருத்தாரு அரசின் ஆய்வில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** ஆம். ரூபாய் 12 லட்சம் மதிப்பீட்டில், கூடலூரில் சாலையோர விடுதி கட்டும் திட்டம் சுற்றுலாத் துறையினால் தயாரிக்கப்பட்டுள்ள பெரும் திட்டத்தில் சேர்க்கப்பட்டு ஆய்வில் உள்ளது.

**திரு. அ. ப. சிவராமன் :** துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலையோர உணவகங்கள் அரசால் நடத்தப்பட இருக்கின்றனவா அல்லது தனியாரால் நடத்தப்பட இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி சுற்றுலாத் துறையினரால் நடத்தப்படவிருக்கின்ற சாலையோர உணவு விடுதிகளைப் பற்றியது. ஆகவே இந்த விடுதிகள் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பிலே நடத்தப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற சாலையோர 'மோடல்களை' தமிழகத்தில் வேறு எந்த மாவட்டங்களில் ஆரம்பிக்க இருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி கூடலூரைப்பற்றியது. ஆகவே தனிக் கேள்வி போட்டால் விவரங்களைச் சேகரித்துத் தர இயலும்.



### *Common Good Fund.*

* 97 Q.—Thiru K. SUBBU : Will the Hon. the Minister for Excise, Handlooms and Textiles be pleased to state—

(*a*) whether any amount has been collected towards " Common Good Fund " from the weavers from their wages ; and

(*b*) if so, whether there is any proposal with the Government, to bring the said fund, under the Labour Welfare Fund ?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** (அ) மற்றும் (இ) இல்லை.

### புதிய ஜவுளிக் கொள்கை.

* 98 வினா.—திரு. சி. இராமலிங்கம் (டாக்டர் இரா. சனார்த்தனம் சார்பில்) : மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி, நெசவாலைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மத்திய அரசு அறிவித்துள்ள புதிய நெசவுக் கொள்கை (Textile, Policy) இம்மாநில கைத்தறியாளரைப் பாதித்து உள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** (அ) ஆம். இந்திய அரசின் புதிய ஜவுளிக் கொள்கை குறிப்பாக தமிழகத்தில் கைத்தறியை பாதிக்கும் வகையில் இருக்கிறது.

(இ) இந்திய அரசின் புதிய ஜவுளிக் கொள்கை ஜவுளி ஆலைகளுக்கே அதிக அனுகூலமாக இருக்கிறது. எனவே, கைத்தறியைக் காப்பாற்ற பாரதப் பிரதமர் பல சலுகைகள் அடங்கிய புதிய கைத்தறிக் கொள்கையை அறிவிக்க வேண்டும் என்று தமிழக அரசு வலியுறுத்தியிருக்கிறது.

(முற்பகல் 10-10)

**திரு. க. சுப்பு :** துணைத் தலைவர்வர்களே, மத்திய அரசு அறிவித்துள்ள புதிய கைத்தறிக் கொள்கையில் துணிகளுக்கு மட்டும் சாதகமாக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எந்தெந்த வழிகளில் ஆலைத் துறைக்கு வசதியாகவும், கைத்தறித் துறைக்குப் பாதகமாகவும் உள்ளது என்பதை விளக்கமாக அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** துணைத் தலைவரவர்களே, பதில் மிகவும் நீளமாக இருக்கும். குறிப்பாக இந்தப் புதிய ஜவுளிக் கொள்கை

இப்போது ஆலைகளுக்கு மிகக் குறைந்த விலையில் வரி இல்லாமல், கஸ்டம்ஸ் டியூட்டி இல்லாமல் அயல் நாடுகளிலிருந்து மெஷின்களை இறக்குமதி செய்வதற்கும், இஷ்டப்படி எவ்வளவு வேண்டுமானாலும் துணிகளைத் தயாரிக்கலாமென்றும் மத்திய அரசு போட்டிருக்கிறது. ஏற்கெனவே ஆலைகள் குறிப்பிட்ட அளவுக்கு மேல் துணியை நெய்யக்கூடாது என்று ஒரு கட்டுப்பாடு இருந்தது. அது கைத்தறிக்கு சௌகரியமாக இருந்தது. அந்தக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டுவிட்டது. அதைப்போலவே அவர்கள் மில்களை நவீனமயமாக்க உலகத்தில் எந்தப் பகுதியிலிருந்தும் புதிய இயந்திர பாகங்களை வரவழைக்கலாம். அதற்கு சலுகைகளும் மத்திய அரசு கொடுக்கிறது. ஆனால் கைத்தறியைப் பாதுகாக்கவும், போற்றவும் தமிழக அரசு சார்பில் புதிய அம்சங்கள் அடங்கிய கீழ்க்கண்ட சலுகைகளை நமது அரசு கேட்டிருக்கிறது :—

1. விசைத் தறியை சிறு தொழில் என்று பிரகடனப்படுத்தி அதற்கு உரிமம் வழங்குவது, கட்டுப்படுத்துவது போன்ற அதிகாரத்தை மாநில அரசுக்கு வழங்க வேண்டும்.

2. 1985 ஆம் ஆண்டு கைத்தறிக்கு ஒதுக்கப்பட்ட ரகங்களை விசைத் தறியில் உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்களை மாத்திரம் தற்போது தண்டிக்க உள்ள விதியுடன் மேற்படி ரகங்களை வைத்திருப்பவர்கள், விற்பவர்கள், விற்க முயலுபவர்கள் ஆகிய அனைவரையும் தண்டிக்கத் திருத்தம் கொண்டு வருவதுடன், மேற்படிக் குற்றங்களைக் கண்டுபிடித்து, வழக்காடும் அதிகாரங்களையும் மாநில அரசுக்கு உடனடியாக வழங்க வேண்டும்.

3. மைய அரசு, மாநில அரசு தங்களது துணித் தேவைகளுக்கு 50 சதவீதம் கைத்தறித் தயாரிப்புகளை வாங்க வேண்டும்.

4. ஆரம்ப கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் 50 சதவீத துணிகள் வாங்கிய பாக்கி, ரிபேட்டுக்கு வழங்க வேண்டிய பாக்கி ஆகியவைகளை காலதாமதமின்றி கொடுக்க, கோ-ஆப்டெக்ஸ் போன்ற நிறுவனங்களுக்கு 50 கோடி ரூபாய்க்குக் குறையாமல் சுழல் நிதி ஏற்படுத்த வழிவகை செய்ய வேண்டும்.

5. நலிந்த ஜவுளி ஆலைகள் மறுமலர்ச்சி பெற 2,500 கோடி ரூபாய் திரட்ட உத்தேசித்து இருப்பதுபோல, கைத்தறிக்கு ஆயிரம் கோடி ரூபாய்க்குக் குறையாமல் நிதி திரட்ட வேண்டும்.



6. ஐந்தாண்டுத் திட்டங்களில் கிராமப் புறங்களில் மின் இணைப்பு இல்லாமல், குறைந்த முதலீட்டில் அதிக வேலை வாய்ப்புத் தரக்கூடிய அற்புதமான கைத்தறித் தொழிலுக்கு முக்கியத்துவம் கொடுத்து பணம் கணிசமாக ஒதுக்க வேண்டும்.

7. அயல்நாட்டுக்கு ஏற்றுமதிக்கு ஊக்கம் அளிக்க வேண்டும்.

இதுமாதிரி பல அம்சங்கள் நிறைந்த சலுகைகள் கொடுக்க வேண்டுமென்று பாரதப் பிரதமருக்கு தமிழக அரசு கடிதம் எழுதியிருக்கிறது.

திரு. எம். பி. சுப்பிரமணியம் : துணைத் தலைவரவர்களே, மைய அரசுக்குக் கூறிய ஆலோசனைகளில், தேவைகளில் 50 சதவீதம் கைத்தறியிலிருந்து வாங்க வேண்டுமென்று சொல்லியதற்கிணங்க, தமிழக அரசு இப்போது 50 சதவீதம் வாங்கிக் கொண்டிருக்கிறதா ? அப்படியென்றால் எவ்வளவு தொகை ஆண்டு ஒன்றுக்கு அதற்காகச் செலவு செய்யப்படுகிறது ? ஏன் முழுவதுமாக அதை வாங்குவதற்கு தமிழக அரசு முன்மாதிரியாக இல்லை ? அதை ஏன் மத்திய அரசுக்கு விளக்கக்கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : துணைத் தலைவரவர்களே, தமிழக அரசு 10 சதவீதம், மத்திய அரசு 10 சதவீதம் ஆக 20 சதவீதம் சில்லரை வியாபாரத்திலும், மொத்த வியாபாரத்தில் 15 சதவீதத்திலும், மைய அரசு 50 சதவீதம், மாநில அரசு 50 சதவீதம் பங்குகொள்ள வேண்டுமென்ற முறையில்தான் இதுவரை நடைமுறை இருந்துவந்தது. இப்போது மைய அரசு அந்த ரிபேட் கொடுத்த நாட்களைக் குறைத்ததுடன், மொத்த வியாபாரத்தில் கொடுத்துவந்த அந்த ரிபேட் சலுகையையும் கிடையாது என்று சொல்கிறது. தமிழக அரசைப் பொறுத்தவரையில், 50 சதவீதத்திற்கு மேலே வாங்கிக்கொண்டிருக்கிறது.

திரு. க. சுப்பு : துணைத் தலைவரவர்களே, நமது தமிழக அரசு மைய சர்க்காரிடம் கேட்டிருக்கிற அந்தப் பரிந்துரைகளில், சாதாரண எளிய மக்கள் பயன்படுத்தக்கூடிய கன்ட்ரோல்டு கிளாத்தை குறிப்பிட்ட அளவு நெய்து தர வேண்டுமென்ற விதியை, அனைத்திந்திய கைத்தறியாளர்களின் தலையில் சுமத்தியிருக்கிறார்கள். இதை மாற்ற வேண்டுமென்று கோருவதோடு, மில் துறையைப் பொறுத்தவரையில், அது "சிக் இன்டஸ்ட்ரீஸ்" என்று சொன்னால், நிர்வாகத் தரப்பிலே எந்தக் காரணமும் கேட்காமல், அவர்கள்

[1986 மார்ச் 24

அடிப்படையிலே அதற்கு விளக்கம் கேட்காமலே அப்படிப்பட்ட நலிந்த மில்களை மூடிவிடலாம் என்பது இந்தப் புதிய ஜவுளிக் கொள்கை. அப்படி இந்தப் புதிய கொள்கையிலே கைத்தறித் துறையையும் மாற்ற வேண்டும். அதுமாதிரி கன்ட்ரோல்டு கிளாத் உற்பத்தி செய்யக்கூடிய பஞ்சை கைத்தறித் துறைக்கு மாற்றுவது என்பதும் அவர்களைப் பாதிக்கக்கூடிய விஷயம். இந்த இரண்டையும் எடுத்து விட வேண்டுமென்று நமது அரசு மைய அரசிடம் வற்புறுத்தியிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-15)

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : கண்ட்ரோல்டு கிளாத் என்னும் ஜனதா துணி வகையை பூராவாக கைத்தறிக்கே ஒதுக்குவதால் தமிழ் நாட்டிற்குப் பயனில்லை என்று தமிழக அரசு மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறது. அதைப் போல் 60 நாட்களுக்கு ரிபேட் கொடுக்க வேண்டும் என்றும் 15 சதவீதம் மொத்த வியாபாரிகளுக்குக் கொடுத்தால் நல்லது என்றும் ஏழைகளுக்குத் தரமில்லாத துணியைக் கொடுப்பதைவிட தரமான துணியைக் கொடுக்கலாம் என்றும் எழுதியிருக்கிறோம்.

திரு. அ. ப. சிவராமன் : கைத்தறியாளர்களைப் பவர் லூம் துறைக்கு மாற்ற அரசு முயன்று வருகிறதா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : அதுபற்றி அரசு இன்னும் முடிவெடுக்கவில்லை.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வினாக்கள் 99 மற்றும் 100 ஆகியவை ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. 1986-87 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

அவர் ஏற்கெனவே 35 நிமிடங்கள் பேசி முடித்திருக்கிறார். எனவே இன்றைக்கு மிகவும் குறைவான நேரம் எடுத்துக்கொண்டு பேசி முடிக்க வேண்டும். காரணம் இன்றைக்கு இன்னும் நிறைய பேர்கள் பேசுவதற்கு இருக்கிறார்கள்.



1986 மார்ச் 24]

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அன்றைக்கு எடுத்துக் கொண்டதாகச் சொல்லப்படும் 35 நிமிடங்களையும் சபையின் கணக்கில் வைக்க வேண்டுமே தவிர, என்னுடைய கணக்கில் அல்ல. நான் அன்றைக்குப் பேசியதெல்லாம் முன்னுரைதான். அன்றைக்கு அவையை நான் சிதம்பரத்தில் விட்டுவிட்டுப் போனேன். சிதம்பரம் சம்பவத்தைச் சொல்ல விரும்புகிறேன் என்று சொல்லி, என்னுடைய பேச்சை முடித்தேன்.

அன்றைக்கு என்ன நடந்தது என்றால், அப்போதிருந்த சிதம்பரம் நகரமன்றத் துணைத் தலைவர் அவர்களும் உறுப்பினர்களும் வெற்றுத்தாளில் கையெழுத்துப் போட வைத்து, அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்ற ஒரே காரணத்திற்காக அவர்களின் பதவி அன்றையதினம் கலைஞர் கருணாநிதி அவர்களாலே பறிக்கப்பட்டது. அப்படி உறுப்பினர் பதவிகளும் பறிக்கப்படுகிற அளவுக்குத்தான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலைமை இருந்தது. எனவே இன்றைக்கு எங்கள் கட்சிக்கு வந்திருக்கிற பதவிகள் அனைத்தும் ஏற்கெனவே எங்கள் கட்சிக்கு இல்லாதவை. இந்த இயக்கத்திற்கு இதுவரை இல்லாத பதவிகளைத்தான் இன்றைக்கு நாங்கள் பெற்றிருக்கிறோம் என்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த நேரத்தில் இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில், நகரமன்றத் தலைவர்கள் பதவிகளையும் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களின் பதவிகளையும் பல இடங்களில் அது இழந்திருக்கிறதே தவிர, அது ஒன்றும் அன்றைக்கு இல்லாததை இன்றைக்குப் புதிதாகப் பெற்றுவிடவில்லை என்பதையும் இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல. இன்றைக்கு எப்படி இந்தத் தேர்தலில் ஒரு நிலைமை உருவானதோ அப்படித்தான் சென்ற முறையும் ஏற்பட்டது. சென்ற தேர்தலில்—பேரூராட்சிகளுக்கான தேர்தல் நடைபெற்றபோது—அப்போது ஆளும் கட்சியாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் பெரும்பான்மை கிடைக்கவில்லை என்று அப்போது பத்திரிகைகளால் எழுதப்பட்டது. அன்றைக்கு எதிர்க் கட்சியாக இருந்த காமராஜர் காங்கிரஸ் கட்சிக்குப் பெரும்பான்மை கிடைத்துவிட்டது என்ற தகவல் வெகுவாகப் பரப்பப்பட்டது. அப்போது என்ன நடந்தது என்பது எனக்கு நன்றாக நினைவில் இருக்கிறது. அப்போது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பெரிய ஊர்வலம் ஒன்றை ஏற்பாடு செய்து, அதிலே கழகத்தின் பெருந்தலைவர்களை உட்கார வைத்து வண்டியிலேற்றி காட்டியது எனக்கு நன்றாக நினைவிலு

இருக்கிறது. என்பதைத்தான் சொல்லுகிறேன். இன்றைக்கு இந்தக் கணக்கை வைத்துக்கொண்டு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றுவிட்டது என்று சொல்லுவது ஒரு தவறான தகவலை வெளி உலகத்திற்கு விளம்பரம் ஆகக் காட்டுவதே தவிர வேறு அல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல, இந்தத் தேர்தலில் எந்த அளவுக்கு அரசியல் கட்சிகள் மக்களாலே ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டைக் குறிப்பிட விரும்புகிறேன். தமிழகத்தில் பேரூராட்சித் தலைவர்களுக்கான தேர்தல்களின் முடிவுகளைப் பார்த்தால், அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களை விட சுயேச்சைகள்தான் அதிகமான அளவுக்கு பேரூராட்சித் தலைவர்களாக வெற்றி பெற்று வந்திருக்கிறார்கள். அந்தத் தேர்தலில் பல கட்சிகள் தோற்றிருக்கின்றன. பொதுமக்கள், உள்ளாட்சித் தேர்தல்களைப் பொறுத்த வரையில், கட்சிகளைப் பொறுத்தவரையில், நிச்சயமாக ஏற்றுக்கொள்ள வில்லை என்பதுதான் உண்மை. இதுதான் மக்களுடைய முடிவு என்கிற அடிப்படையில் எதிர்காலத்திலாவது பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கையின்படி உள்ளாட்சித் தேர்தல்களில் கட்சிகளே இல்லாத அளவுக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு கருத்தையும் சிலர் சொல்லுகிறார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் இந்தத் தேர்தலில் கலந்துகொள்ளவில்லை. அதனால் கூட அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றி வாய்ப்பு குறைந்து விட்டது என்று சொல்லுகிறார்கள் அல்லது நினைக்கிறார்கள். இன்றைக்கு புதிதாக திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நகர மன்றங்கள் கிடைத்திருக் கின்றன அல்லது ஊராட்சி ஒன்றியங்கள் கிடைத்திருக்கின்றன என்றால், அதற்காக நாங்கள் பயந்து போய் கலக்கப்பட வேண்டிய அவசியமில்லை

(முற்பகல் 10-20)

இதற்கு எங்களுக்கு வழிவகுக்க வேண்டும் என்பதற்காக புரட்சித் தலைவர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கும்போதே நகராட்சித் தலைவர்கள் என்னென்ன ஊழல்களைச் செய்வார்கள், காண்ட்ராக்டில் எப்படி கொள்ளையடிப்பார்கள் என்பதையெல்லாம் எடுத்துக் காட்டுகிற வகையில், ஒரு படத்தைத் தயாரித்து நாட்டுக்குத் தந்திருக்கிறார்கள். அந்தப் படம் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் உள்ள நகராட்சிகளில் எல்லாம் ஓடினால் போதும் மூன்று நாட்களில் அவர்கள் இருந்த இடத்திற்கே திரும்ப அனுப்பப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆட்சியைப் பொறுத்த வரையில், வெற்றி பெற்ற நிலையைப் பார்க்காமல்,



உள்ளாட்சி மன்றங்களுக்கு உதவ வேண்டுமென்ற அடிப்படையில், ஒரு நல்ல ஏற்பாடாக எல்லா நகராட்சி மன்றங்களுக்கும் வசதி வர வேண்டும் என்ற அடிப்படையில், சினிமாவிற்கு பத்து சதவீதம் கூட்டுக் கட்டணம் இந்த நிதி நிலை அறிக்கையின் வாயிலாக விதிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதன் மூலம் நகராட்சிகள் எந்தக் கட்சியின் கையில் இருந்தாலும், அனைத்து நகராட்சிகளுக்கும் வருமானம் பெருகுவதற்கு இந்த ஆட்சி வழி வகுத்திருக்கிறது. யார் எங்கே இருக்கிறார்கள் என்பதைப் பார்க்காமல், நகராட்சி நிர்வாகங்கள் ஒழுங்காக நடைபெற வேண்டும் என்பதிலே புரட்சித் தலைவரின் அரசு அக்கறை காட்டியிருக்கிறது என்பதைத் தான் இது எடுத்துக்காட்டுகிறது.

நிதி இலாக்காவைப் பொறுத்த வரையில், நிதி நிலை அறிக்கையை மிகச் சிறப்பாகத் தயாரித்து அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையே கூட இந்தத் தேர்தலுக்குக் கொஞ்ச நாட்களுக்கு முன்பு வெளி யிடப்பட்டு, பிறகு தேர்தல் நடத்தப்பட்டிருக்குமானால், ஆளும் கட்சியி னுடைய வெற்றி இன்னும் பிரகாசமானதாக இருந்திருக்கும் என்பது என்னுடைய கருத்து என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிதித் துறையைப் பொறுத்த வரையில், அது இந்த அரசினுடைய ஓர் அங்கமாக இருக்கிறது. நிதித் துறையிலிருந்து ஓய்வு பெற்ற ஒரு பெரிய அதிகாரி நிதித் துறையைப்பற்றி ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். நிதிச் செயலாளர், நிதியமைச்சர் ஆகியவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்றால், "டிசம்பர் மாதத்திலிருந்து பிப்ரவரி மாதம் வரையில் நாங்கள் எல்லா அதிகாரங்களையும் பெற்று தனி நிலையில் இருப்போம்" என்று சொல்லி யிருக்கிறார்கள். அதற்கு உதாரணம் சொல்லும் நோக்திலே "காட்டிலே உள்ள யானைக்கு எந்த அளவிற்கு மரியாதை இருக்குமோ அந்த அளவிற்கு மரியாதை எங்கள் இலாக்காவிற்கு இருக்கும். நிதிநிலை அறிக்கை வெளி யான பிறகு, நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்த இரண்டு, மூன்று மாதங் களுக்கு சர்க்கஸ் யானையைப் போல எல்லோருக்கும் வளைந்து கொடுக்கும் நிலை வரும். அதற்குப் பிறகு மூன்று மாதங்கள் சர்க்கஸ் யானை என்ற நிலை மாறி, கோயில் யானையாக மாறி, போகிற வருகிற குழந்தைகளிடம் தும்பிக்கையை நீட்டி பத்து காசு யானைப் பாகனிடம் கொடுக்கும் நிலை எங்கள் இலாக்காவிற்கு வரும்" என்று வேடிக்கையாகக் குறிப்பிட்டிருந்தார். அதைத்தான் நான் குறிப்பிட்டுக் கூறவேண்டும்.

இந்த நிதித் துறை எப்படிச் செயல்படுகிறது என்பதைப்பற்றி குற்றச் சாட்டாக இங்கே எடுத்துச் சொன்னார்கள். நிதித் துறை சரியாகச் செயல் படவில்லை, அரசாணை வெளியிடவில்லை என்ற குறைகள் பல பேருக்கு

[திரு. எஸ். ஆர். இராதா] [1986 மார்ச் 24

இருக்கின்றன. ஆனால் நான் பெருமையாக ஒன்றைச் சொல்லுவேன். நம்முடைய நிதியமைச்சரைப் பொறுத்த வரையில், யாராக இருந்தாலும், எப்படிப்பட்டவராக இருந்தாலும், பாகுபாடு இல்லாமல் பொது நிலையில் நின்று செயல்படுகிறார் என்பதற்கு நானே ஒரு உதாரணமாக இருக்கிறேன் என்பதை இந்த மாமன்றத்திற்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதை இங்கே சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன்.

நான் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்து விலகி மீண்டும் எம்.எல்.சி. பதவியைத் தொடருகிற நேரத்தில், ஒரு புதிய வீட்டிற்குக் குடியேற வேண்டிய நிலை இருந்தது. அங்கே 'எலெக்ட்ரிக் ஹீட்டர்' இல்லை. அங்கே ஹீட்டரை வைக்க வேண்டுமென்று கேட்டபோது, இலாக்கா இதற்குப் பரிந்துரை செய்து கடைசியில் கோப்பு நிதியமைச்சருக்கு வந்த நேரத்தில்—"ஒரு எம்.எல்.சி. க்கு ஹீட்டர் வைத்தால், பிறகு எல்லா எம்.எல்.சி. க்களுக்கும், எம்.எல்.ஏ. க்களுக்கும் வைக்க வேண்டிய நிலை வரும், அவர்களும் கேட்பார்கள், ஆகவே இதை ஏற்க இயலாது" என்று நிதி இலாக்காவைச் சேர்ந்த ஒரு அதிகாரி எழுதிய பரிந்துரையை அப்படியே ஏற்று, யார் என்று பார்க்காமல் பொது நிலையிலே இருந்து, எம்.எல்.சி. யாக இருந்தாலும் தரக்கூடாது என்று "ஏற்க இயலாது" என்று ஆணையிட்டவர் மாண்புமிகு நிதியமைச்சர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது எனக்கே ஏற்பட்ட அனுபவம். ஆறு இடங்களில் ஹீட்டர் இருந்து திடீரென்று ஹீட்டர் இல்லாத நிலைமைக்குத் தள்ளப்பட்டாலும், கொஞ்சமும் மாற்றிக்கொள்ளாமல், புரட்சித் தலைவரின் பக்கத்திலே இருக்கிறேன் என்ற காரணத்திற்காக தைரியமாக என்னால் வாழ முடிந்தது. இன்றைக்கு அதிகாரிகளாக இருந்தாலும், யாராக இருந்தாலும் இலஞ்சத்தின் பெயரால், ஊழலின் பெயரால் இருக்கக்கூடாது என்பதுதான் எங்களுக்கு வேண்டியது. ஏதோ அரசியல்வாதிகள் இலஞ்சம் வாங்குகிறார்கள், ஊழல் செய்கிறார்கள் என்றால், அவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும், கண்டிக்க வேண்டும். தண்டிக்க வேண்டும் என்பதிலே புரட்சித் தலைவர் உன்னிப்பாக,

(முற்பகல் 10-25)

கூர்மையாக இருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் இந்த நிதிநிலை அறிக்கையிலே பேசுகின்றபோது அதிகாரிகளைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். நேர்மையான, நியாயமான அரசியல்வாதி என்று கேட்டுக்கொள்கிறேன். அரசியல்வாதிகளுக்குக் கொஞ்சம் உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1986 மார்ச் 24] [திரு. எஸ். ஆர். இராதா]

இந்த நிதிநிலை அறிக்கையிலே பல்வேறு செய்திகள் இருக்கின்றன. அந்நிய நாட்டிற்கு அத்தியாவசியமான பொருள்களைப்பற்றி விளக்குகின்ற வகையில் சில செய்திகளையும் கொடுத்திருக்கின்றார்கள். நம்முடைய நிதி நிலை அறிக்கையிலே விரிவாகக் கொடுத்திருக்கின்றார்கள். அதற்கு நம்முடைய நிதி இலாக்காவினையும் நமது நிதி அமைச்சர் அவர்களையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிலே ஒன்று, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். தன்னாட்சி வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். இதிலேகூட இங்கே பேசிய உறுப்பினர்கள் தன்னாட்சி என்றால் என்ன என்ற விளக்கத்தைக் கேட்டுப் பிரச்சினை எழுப்பினார்கள். அதைப்பற்றி விளக்கமாக எடுத்துக்கூற வாய்ப்பில்லை என்றாலும், நான் அதிலே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆங்கிலத்திலே கொடுத்த வார்த்தைகளை தமிழிலே வார்த்தைகளாக்கி அதையே அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசியல் கொள்கையாக நாங்கள் அன்றைக்கே ஏற்றுக்கொண்டிருக்கிறோம். கட்டுண்டு வாழ்வோம், பிரிவினை நாடோம், சமநிலையிலே இணைவோம் என்றோம். அந்தக் கொள்கையை அன்றைக்கு நாங்கள் ஏற்று இன்றும் நாங்கள் அந்தக் கொள்கைக்காகப் பாடுபட்டுக்கொண்டிருக்கிறோம். இதிலே அவர்களுக்கு தன்னாட்சி என்றால் என்ன என்று புரியவில்லை என்றால், அவர்களுக்கு நாங்கள் புரியச்செய்யவேண்டிய நேரத்தில் புரிய வைப்போம் என்பதை நான் சொல்லிக்கொள்வேன்.

இன்னொரு கொள்கை, நல்ல கொள்கை. அதை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். உயிர்ப் பிரச்சினை என்ற அளவுக்கு இருக்கின்ற ஸ்ரீலங்கா வாழ் தமிழர்கள் பிரச்சினை. இந்த நிதி நிலை அறிக்கையிலே ஒன்றைக் குறிப்பிட்டுக் கூறுகிறேன். அது பாராட்டுவதற்குரிய ஒன்று. நிதிநிலை அறிக்கையிலே வரவு செலவுக் கணக்கு மட்டோடு நின்றிருக்க வேண்டும் என்று இல்லாமல், தமிழர்களுடைய உயிர் பிரச்சினை என்ற அளவுக்கு நம் தமிழர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள், அவர்கள் உயிர்களை, உடைமைகளை இழந்துகொண்டிருக்கின்றார்கள் என்பதைசுட்டிக் காட்டுகின்ற வகையில் ஸ்ரீலங்கா வாழ் தமிழர்களுடைய பிரச்சினைகளை சுட்டிக்காட்டி அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று இங்கே எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். நாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூற விரும்புவதற்குக் காரணம் என்ன என்றால், இன்றைக்கு அரசியல் வாதிகள் தாங்கள் தப்பித்துக்கொள்ள ஒவ்வொரு கருத்தைச் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். ஒவ்வொரு அரசியல் கட்சியிலும் ஒவ்வொரு கருத்து வலியுறுத்தப்படுகின்றது. ஸ்ரீலங்காவிலே இருக்கின்ற தமிழர்களுடைய

ஒற்றுமையைப் பற்றி, அங்கே போராடுகின்ற விடுதலைப் புலிகளிடையே இருக்கின்ற ஒற்றுமையைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருப்பதை விட நான் கேட்கின்ற கேள்வி என்னவென்றால் தமிழகத்திலே உள்ள அரசியல்வாதிகளிடையே ஏன் ஒற்றுமை வரவில்லை என்பதுதான். அதற்குக் காரணம் என்னவென்றால், இங்கே இருக்கின்ற தமிழர்கள் அதை நினைத்த நோக்கில் ஒரு பிரச்சினையாக ஆக்குகின்றார்கள். தமிழகத்தில் தேர்தல் ஒன்றையே கருத்தாகக் கொண்டு அவர்கள் ஒவ்வொரு கருத்தைச் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். ஒத்துப்போகின்ற அளவுக்கு அவர்கள் வரவில்லை. அதற்குக் காரணம் என்ன என்பதை அரசியல் தலைவர்கள் அனைவரும் சிந்திக்க வேண்டும். அதற்கு நான் சொல்லும் காரணம் அவர்களுக்கு அரசியல் சாதகமாக, அவர்களுக்குப் பக்கத்திலேயே இருக்க வேண்டும் என்று நினைக்கின்றார்கள். தமிழர்கள் என்று நினைக்கின்ற நாம் ஸ்ரீலங்கா தமிழர்களுக்குச் செய்கின்ற உதவி என்று கருதினால், நம்மிடையே எந்தக் கருத்து வேறுபாடு இருந்தாலும், அந்தக் கருத்து வேறுபாடுகளை மறந்து நாம் அவர்களுக்காக ஒன்றுபடுகிறோம் என்பதை நினைத்து நாம் நிச்சயமாகப் பணியாற்றிருக்கலாம். கலைஞர் அவர்கள் எதிர்க் கட்சியிலே இருக்கின்ற நிலையில் ஸ்ரீலங்கா பிரச்சினையைத் தீர்க்கவேண்டுமென்பதற்கு ஸ்ரீலங்காவிலே போராடும் மக்கள், விடுதலைப் புலிகள் போரிடுவதற்கு போராடுவோம் என்பதை விட தமிழகத்தில் இருக்கின்ற அரசியல்வாதிகளிடையே அரசியல் கொள்கைகளில், கருத்துக்களில் ஒரு உடன்பாடு காண வேண்டும். ஒரு நல்ல உடன்பாட்டிற்கு அரசியல் கட்சிகளைக் கொண்டுவர வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். அதுதான் ஸ்ரீலங்கா தமிழருக்கு நாம் செய்கின்ற உண்மையான தொண்டாகும் என்பதை நான் இங்கே குறிப்பிட்டுக் கூறுவேன். நாம் தேர்தல் நேரத்தில் ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினையை வைத்து வோட்டு வாங்குவோம், யாருக்கு எந்த இடம் என்ற நிலையிலேதான் இருக்கின்றோம். அந்த நேரத்தில் ஸ்ரீலங்காவிலே கொலை செய்யப்படுகின்ற தமிழர்களைப் பற்றி கவனத்திற்கு வருவதில்லை. தேர்தல் முடிந்த பிறகு ஸ்ரீலங்கா வாழ் தமிழர்கள் பிரச்சினையைப் பற்றிப் பேசுகின்றார்கள். அரசியல் லாபத்திற்காகப் பேசிக்கொண்டிருக்கின்றார்கள். ஸ்ரீலங்கா தமிழர்கள் மீது அவர்களுக்கு உளப்பூர்வமான அக்கறை இருக்க வேண்டும். நான் அரசியல் தலைவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். கூடிப் பேசுவோம் என்ன

(முற்பகல் 10-30)

தகராறு என்பனதப்பற்றி. அடிப்படையிலேயே தகுந்த அளவுக்கு ஒற்றுமையோடு கூடிப் பேசுவோம். நாம் அதற்காகப் போராடுவதற்காக, பாடுபடுவதற்காக முன்வர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்வேன்.



இதை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், முதலமைச்சராக இருக்கும் இந்த நல்ல காலத்தில் நிச்சயமாக ஏற்றுக்கொள்வார். ஸ்ரீலங்கா தமிழர்களுக்காக எல்லாக் கட்சிகளும் சேர்ந்து நல்ல திட்டத்தை உருவாக்கினால், அது எத்தகைய திட்டமாக இருந்தாலும், அதை ஏற்று செயல்படும் அளவுக்கு அவர் இருப்பாரே தவிர, தனக்குப் பதவிதான் வேண்டும், தனக்கு பதவிதான் பெரிது என்ற நிலையில் அவர்கள் இருக்க மாட்டார்கள் என்று தெரிவிக்க விரும்புகிறேன். இப்படி கொள்கைகளைப்பற்றித் தெரிவித்திருக்கும் இந்த நிதி நிலை அறிக்கை திட்டங்களைப் பற்றியும் பல்வேறு இடங்களில் தெரிவித்திருக்கிறது. விவரங்களை நிதிநிலை அறிக்கையிலே தந்திருக்கிறார்கள்.

ஒரு நல்ல கொள்கை அறிவிப்பு செய்யும் வகையிலே, மதுவிலக்குக் கொள்கையில் இந்த ஆண்டு 50 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டாலும், மதுவிலக்கை விரைவிலே அமுல்படுத்துவோம் என்ற அறிவிப்பு தமிழகத்திலே இருக்கும் தமிழனுக்குக் கொடுத்துள்ள மிகப் பெரிய இனிமையான செய்தி என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்வேன். ஏனென்றால் மதுவிலக்குக் கொள்கையிலே நான் அதிகமான அளவுக்கு தீவிரத் தன்மை உள்ளவன் என்பதைக் குறிப்பிட வேண்டும். ஏனென்றால் ஏழை எளியவர்களைப் பாதிக்கும் நிலையில், எத்தனையோ குடும்பங்கள் இதனால் அழிந்து கொண்டிருக்கின்றன என்பது என்னைப்போன்ற சாதாரண நிலையில் உள்ளவர்களுக்குத் தெரியும். தெளிவாகச் சொல்ல வேண்டுமென்றால், நான் சொல்வேன் நான் ஒரு குடிகாரன் மகனாக இருந்து பாதிக்கப்பட்ட நிலையில் இலட்சக்கணக்கான சொத்துக்களை இழந்து, பிறகு அரசியலுக்கு வரும் நிலை ஏற்பட்டு, இன்றைக்கும் என்னுடைய தந்தையார் அன்றைக்கு குடித்ததால் பாதிக்கப்பட்டிருக்கிறேன். ஆதலால் இந்தக் கொள்கையிலே நான் தீவிரமாக இருக்கிறேன். என்னை மாற்றிக்கொள்ள முயன்றாலும், என்னால் முடியவில்லை. இதனால் 60 கோடி ரூபாய் இழப்பு என்னும்போது, பத்திரிகையில் ஒரு செய்தியைப் பார்த்தேன். ஆண்டுக்கு 250 கோடி ரூபாய் நஷ்டம் என்று பத்திரிகையிலே செய்தி போடும்போது, சாதாரண நடுத்தர வர்க்கத்திலே இருக்கிறவர்கள், யார் எக்கேடு கெட்டுப் போனால் என்ன, இதனால் இவ்வளவு ரூபாய் இழப்பு ஏற்படுகிறதே என்று சொல்லுகிறவர்கள் இருக்கிறார்கள். அடுத்த வீட்டுக்காரனைப் பற்றிக் கவலைப்படுகிறவர்கள் அல்ல அவர்கள். எதிர் வீட்டுக்காரன் எப்படிப் போனால் என்ன, என் வாழ்க்கைக்கு உத்திரவாதம் இருக்கிறது என்று நினைத்து, சிலர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் தமிழகத்திலுள்ள பல கோடிக்கணக்கான ஏழை எளிய மக்களின் குடும்பங்கள் எந்த அளவுக்கு இதனால் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதை நேரடியாக அறிந்தவன். சாராயக் கடைகளை மூடிவிட்டால்

கள்ளச் சாராயம் குடிக்க மாட்டார்களா என்று கேட்கலாம். நிச்சயமாகக் குடிப்பான். ஆனால் எத்தனை பேர் என்பதை சதவிகிதக் கணக்கிலே பார்க்க வேண்டும். குடிக்கின்ற அத்தனை பேரும் மீண்டும் குடிப்பார்களா என்றால், பல பேர் குடிக்க மாட்டார்கள். நானே சொல்வேன், என்னுடைய தந்தையார் முழு நேரக் குடிகாரராக இருந்தார். போலீசுக்குப் பயந்து குடிப்பதை நிறுத்திவிடுகிற நிலையிலே அவர் இருந்தார். ஆதலாலே கொஞ்சம் பேர் மாறுவார்கள்; கொஞ்ச பேர் தவறு செய்வார்கள். அப்படித் தவறு செய்பவர்களின் குடும்பத்தில் உள்ள தாய்க்கும், குழந்தைகளுக்கும்கூட பாதுகாப்பு இருக்கிறது. குடித்துவிட்டு மனைவியையும், குழந்தைகளையும் அடிக்கும் தைரியம் அவர்களுக்கு வராது. காரணம், மதுவிலக்கு அமுலில் இருக்கிறது. எங்கே போலீஸ் வந்துவிடுமோ என்று அஞ்சி, மனைவியைக் கெஞ்சித்தான் குடிக்க வேண்டும். மனைவியை எதிர்த்துக் குடிக்கும் தைரியம் அவர்களுக்கு வராது. இன்றைக்கு என்ன செய்கிறான்? குடித்துவிட்டு மனைவியை அடிக்கிறான். அதனால்தான் தாய்மார்கள் வெதும்பிப் போயிருக்கிறார்கள். அவர்களுடைய நிலையை உணர்ந்து, நீண்ட போராட்டத்திற்குப் பின்பு இன்றைக்கு இனிய அறிவிப்பாக இதை வெளியிட்டதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதைப்போல மேலும் ஒரு நல்ல செய்தி இருக்கிறது. மத்திய அரசு இந்த நிதி இழப்புக்காக 50 சதவிகிதம் நிதி உதவி தரப் போகிறார்கள் என்ற செய்தியைப் பார்க்கும்போது, நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். எத்தனை கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், மத்திய அரசு நல்ல காரியங்கள் செய்தால், அதை நாம் பாராட்ட வேண்டும். மத்திய அரசு இந்த நல்ல கொள்கைக்கு நிதி உதவி தரும் அரசாக இருப்பதால், அந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதைப்போல இன்னும் பல்வேறு திட்டங்கள் இந்த நிதி நிலை அறிக்கையிலே தெளிவாகச் சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றன.

(முற்பகல் 10-35)

இதிலே திட்டங்கள் என்ற அளவிலே இல்லாமல் சலுகைகள் என்ற அளவிலே பல சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்வேன். வணிக வரித் துறையை எடுத்துக்கொண்டால், பல பெரிய சலுகைகளை, எதிர்பார்த்ததற்கு அதிகமாகவே இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திலே இந்த அரசு அறிவித்திருக்கிறது. இது குறித்து நான் பெருமைப்படுகிறேன்.

நிதிநிலை அறிக்கையில் 10 பொருள்களுக்கு 25 ஆம் பக்கத்தில் வரிவிலக்கு தரப்பட்டிருக்கிறது என்ற செய்தி உள்ளபடியே அந்தப் பொருள்களை வணிகம் செய்பவர்களுக்கு எவ்வளவு மகிழ்ச்சியை அளிக்கும் என்பதுபற்றி நான் சொல்லவேண்டியதில்லை. ஆனால் அதன் நிலைபற்றி இந்தப் புத்தகத்தைப் புரட்டிப் பார்க்கிறவர்களுக்குத் தெரியாது. அதுபோல் பல்வேறு பொருள்களுக்கு வரி மாற்றம் செய்வது பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. ஐந்து சதவிகிதம் பலமுனை வரி என்பது 8 சதவிகிதம் ஒருமுனை வரி என்று மாற்றம் செய்யப்பட்டிருப்பதுபற்றி ஒரு நண்பர் விமர்சனம் செய்யும்போது, தாயும் மகளும் பெண்கள்தான் என்று வேடிக்கையாகச் சொன்னார். ஐந்து சதவிகித விற்பனை வரி பலமுனையாக இருப்பது 8 சதவிகிதம் ஒருமுனை விற்பனை வரியாக ஆகிறது என்றால், அது ஒருமுனையானால் என்ன பலமுனையானால் என்ன, மொத்தத்தில் அதிகம் தானே ஆகியிருக்கிறது என்று அந்த நண்பர் வேடிக்கையாகச் சொன்னார். அந்த நண்பர் அவையில் இல்லாவிட்டாலும், அவர் காதுக்கு என் செய்தி போகுமென்ற நம்பிக்கையில் சொல்கிறேன். ஐந்து சதவிகித பலமுனை விற்பனை வரி என்றால், கும்பகோணத்திற்கு அருகிலுள்ள ஒரு கிராமத்தில் சக்கரை வெல்லம் தயாரிக்கப்படுகிறது என்று வைத்துக்கொள்வோம், அதை கும்பகோணத்திற்கு விற்க கொண்டு வரும்போது, 5 சதவிகித விற்பனை வரி செலுத்த வேண்டும். கடைக்கு அது செல்லும்போது 5 சதவிகித விற்பனை வரி செலுத்த வேண்டும். அந்தக் கடையிலிருந்து வாங்கிச் செல்கிற சிறிய கடைக்காரர் 5 சதவிகித வரி செலுத்த வேண்டும். இப்படி 15 சதவிகித வரி செலுத்த வேண்டியிருந்தது. அதுமட்டுமல்ல. ஓர் இடத்திலிருந்து பொருளை மற்றொரு இடத்திற்குக் கொண்டு போகும்போது, வணிக வரித் துறையினரால் வணிகர்கள் எவ்வளவு தொல்லைகளுக்கு ஆளானார்கள், கஷ்டப்பட்டார்கள் என்பதெல்லாம் அந்த வணிகர்களுக்குத்தான் தெரியும். ஆனால் உள்ளபடியே தாயும் மகளும் பெண்கள்தான் என்று பேசுகிறவர்களுக்கு அதுபற்றித் தெரியாது. அப்படி நண்பர் பேசியதைக் கேட்டுக்கொண்டிருந்த என்னுடைய வணிக நண்பர் ஒருவர் மாண்புமிகு உறுப்பினர் அப்படி வேடிக்கையாகப் பேசியதைவிட, அப்பனும் மகனும் ஆண்கள்தான் என்று பேசியிருக்கலாமே என்று சொன்னார். அப்படி என்றால், மனைவியையும் மாமியாரையும் ஒன்றாகத்தான் கருதுகிறார் என்றா அர்த்தம் என்கிற விவரம் தெரியவில்லை. ஏனென்றால் மனைவி எங்கேயும் வரலாம். ஆனால் மாமியார் சில குறிப்பிட்ட இடங்களுக்கு மட்டும்தான் வரலாம். இரண்டுக்கும் வித்தியாசம் தெரியாமல், மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறாரா என்று அந்த வணிக நண்பர் வேடிக்கையாகக் குறிப்பிட்டார். அதுபோல் எவ்வளவோ பொருள்களுக்கு இந்த மாநிலத்தில் அந்தப் பொருள்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும், வரிச் சலுகைகள் இந்த அரசால் அளிக்கப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உதாரணம் சொல்வதில் தவறில்லை. மனைவியும் மகளும் என்கிற உதாரணத்தைச் சொல்வது சரியில்லை. உறுப்பினர் இல்லாததால் அவர் பதில் தர முடியாது. உறுப்பினர் பேசும்போது கொஞ்சம் பார்த்துப் பேச வேண்டும். உறுப்பினர் அவையில் இருந்தாலும் இல்லாவிட்டாலும், அவர் மனதை புண்படுத்தாத அளவுக்கு உதாரணம் கொடுக்க வேண்டும்.

**திரு. எஸ். ஆர். இராதா :** யார் மனதையும் புண்படுத்தக் கூடாது என்று கொஞ்சம் சிந்தித்து யோசித்து வணிகர் ஒருவர் குறிப்பிட்டதைத்தான் சொன்னேன். இன்னும் விளக்கமாகச் சொல்லியிருந்தால், அது திரு. இராகவானந்தம் அவர்கள் பேசுவதுபோல் இருக்கும் என்பதால், அதை விளக்கமாகச் சொல்லாமல் விட்டுவிட்டேன். இல்லாவிட்டால் மோசமாக இருந்திருக்கும் என்ற அடிப்படையில்தான் அதைச் சொன்னேன்.

இன்றைக்கு 10 பொருள்களுக்கு வரி நீக்கம் செய்திருக்கிறார்கள். வெள்ளி கெட்டிக்கு வரி நீக்கம் தந்திருக்கிறார்கள். அது எனக்குத் தெரிந்த ஒரு நண்பருடைய தொழில். இதுபற்றி அந்த நண்பர் சொல்லும்போது, இதற்குக் காரணமான மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு தன்னுடைய பாராட்டினைத் தெரிவித்தார். "ஏழு, எட்டு ஆண்டுகளாக இந்தச் சலுகையை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்தோம், இப்போது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில்தான் இந்தச் சலுகையைத் தந்திருக்கிறார்கள், ஆகவே அவர்களுக்கு எங்களுடைய பாராட்டுக்கள்" என்று அப்போது அந்த நண்பர் தெரிவித்தார். இதைப்பற்றிய விவரத்தை அவரிடம் கேட்டேன். அஸ்ஸாம், உத்தரப் பிரதேசம் போன்ற மாநிலங்களிலிருந்து வெள்ளியை வாங்கி வந்து சேலத்தில் செயினாகவும் கெட்டியாகவும் மாற்றுகிறார்கள். இவ்வாறு சேலத்தில் தயாரித்த வெள்ளிப் பொருள்களை மீண்டும் அந்த மாநிலங்களுக்கே கொண்டு போய் விற்றுக்கொண்டிருக்கிறார்கள். இங்கே அவர்கள் யாருக்கும் அதனை வியாபாரம் செய்யவில்லை. அவர்கள் தயாரிக்கும் வெள்ளியை இங்கே யாருக்கும் கொடுக்கவும் இல்லை.

(முற்பகல் 10-40)

முழுக்க முழுக்க வெளி மாநிலத்திலேயே வாங்கி, இங்கே செய்து, வெளி மாநிலங்களுக்கே அதைத் தருகிற தொழில். அதன் மூலம் கிடைக்கிற வெறும் கூலியை மட்டும் அவர்கள் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அளித்த சலுகைகள்பற்றி அவர்கள் சொல்லும்போது, "எங்களுக்குச் சலுகை கொடுத்தால் மட்டும் போதாது, பாதுகாப்பும் கொடுக்க வேண்டும்" என்று சொல்கிறார்கள். அதனால் தொழிலும் வளரும் என்று எடுத்துக் காட்டினார்கள். இதைச் சொல்வதற்குக் காரணம், வெளி மாநிலங்களுக்கு





நம்முடைய தொழில் திறமையைக் காட்ட வேண்டுமென்பது மட்டுமல்ல, அவர்களுக்குப் பாதுகாப்பும் அளிக்க வேண்டுமென்பதற்காகத்தான், வெளி மாநிலங்களுக்கு அந்தத் தொழிலை செய்வதன்மூலம் இங்கேயும் தொழில் வளர்ச்சி பெருகும் என்று எடுத்துக் காட்ட விரும்புகிறேன். எந்தத் தொழிலாக இருந்தாலும், அரசு கொடுக்கும் சலுகைகளால்தான் அந்தத் தொழில் பாதுகாப்பு பெறுகிறது. அப்படி அவர்களுக்கு உதவி செய்வதன் மூலம் புதிய தொழில் உற்பத்திக்கும் நாம் உதவி செய்தவர்களாக ஆகிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதன் காரணமாக இந்தியா, ஜப்பான் நாட்டைப்போல் மாற வாய்ப்பு இருக்கிறது. அதேபோல் இன்றைக்கு இந்த மாநிலத்தில் இருக்கிற வணிகர்களுக்குக் காட்டியிருக்கிற சலுகைகள் தூய்மையானதாக உள்ளன. இதை அரசியல் காரணங்களுக்காக யாரும் மறுக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால் இங்குள்ள சில வணிகர்கள், அரசியல் வாதிகளைப்போல், தவறான கண்ணோட்டத்தில் பார்த்து முன்பு சொன்னதுபோல், இந்தச் சலுகை அளித்ததிலும் ஏதோ தவறு நடந்திருக்கிறது என்று நினைக்காமல், நிச்சயமாக இதை ஒரு தூய்மையான நோக்கத்தோடு கொடுக்கப்பட்ட சலுகையாகக் கருதவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு சில வணிகர்கள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் அரசியல் வாதிகளைப் போலப் பேசுகிறார்கள். அறிக்கை விடுகிறார்கள். இன்றைக்கு முழுநேர அரசியல்வாதியைப்போல அவர்களும் மாறி வருகிறார்கள். உண்மையிலேயே வணிகர்களுக்கு இந்த அரசு ஏராளமான சலுகைகளை வழங்கியிருப்பதை அவர்கள் பாராட்ட மறுக்கிறார்கள். அரசு செய்கிற நல்ல காரியங்களை அவர்கள் ஏற்றுக்கொள்ள முன்வர வேண்டும். அரசுக்கு அவர்கள் துணையாக இருக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் பல்வேறு திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். அரசு ஊழியர்கள் இறந்துவிட்டால், அவர்கள் குடும்பத்திற்குத் தரப்படும் தொகையை பத்தாயிரத்திலிருந்து இருபதாயிரம் ரூபாயாக உயர்த்தியும், மீண்டும் ஓய்வு பெறும்போது 5,000 ரூபாய் வரை அவர்களுக்கு உதவித்தொகையும் வழங்குவதோடு, வீடு கட்டும் முன்பணம் பெற்றவர்கள் பணியிலிருக்கும்போது இறந்துவிட்டால், அவர்கள் வாங்கிய கடனில் மீதமுள்ளதை வட்டியுடன் தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்ற சலுகையைத் தந்திருக்கிறார்கள். இதைக்கூட ஒரு சிலர் கேலி

[திரு. எஸ். ஆர். இராதா] [1986 மார்ச் 24

பேசுகிறார்கள். இது என்ன பெரிய சலுகை என்று கேட்கிறார்கள். வட்டி வாங்கும்போது, இந்தத் தொகை பெரியதாக இருக்க முடியாது என்று கேலி பேசுகிறார்கள். எதற்கெடுத்தாலும் வட்டிக்கணக்குப் பார்ப்பவர்கள் அரசியலுக்கு வரக்கூடாது. அரசாங்க வருமானத்தையெல்லாம் வட்டிக்கு விட்டு ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்கலாம் என்று சொல்வதுபோல் நமது பேச்சுக்கள் அமையக்கூடாது. இதே போன்ற ஒரு விவாதத்தில் நான் முன்பொருமுறை சட்டமன்றத்தில் பேசும்போதுகூட, சிலர் நான் கடுமையாகப் பேசியிருக்கக்கூடாது என்றார்கள். நாம் கூட பார்க்கலாம், இப்போதுகூட வங்கிக்கு வங்கி அரை சதவீதம், ஒரு சதவீதம் வட்டி அதிகமாகக் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், இங்கே இருக்கிற சௌகார்பேட்டை சேட் கூட இன்னும் அதிகமான வட்டிக்குப் பணம் கொடுப்பார். அப்படி அரசாங்க வருமானத்தை அந்த சேட்டிடம் கொடுத்து அதிக வட்டி வாங்கி ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியுமா? சொல்லுங்கள். ஆகவே, இந்தக் கேலியும் கிண்டலும் அரசாங்கத்தைக் குறை சொல்வதற்காகச் செய்கிறார்கள் என்று எடுத்துக் கொள்ளலாமே தவிர, அரசாங்கத்தின் திட்டங்களையும் கொள்கைகளையும் குறை சொல்கிறார்கள் என்று எடுத்துக்கொள்ளவில்லை.

இன்றைக்கு சில பேர் நடுநிலையோடு இருக்கிறார்களா என்று பார்த்தால், காலையில் ஆசிரியர்களுக்குப் பாடுபடுவேன் என்று சொல்லிக்கொண்டு, மாலையில் அரசியல் கூட்டத்தில் பேசுகிறார்கள். எங்கே பார்த்தாலும் இப்போது அரசியல் வந்துவிட்டது. அரசியல் வாதிகள் தொழிற் சங்கத்தில் இருக்கும்போது, பாதி நேரம் தொழிற் சங்கம், பாதி நேரம் அரசியல் என்று இருப்பார்கள். சில நேரங்களில் கட்சிக்குப் பாதகம் வருமென்றால் கட்சியையும், தொழிற் சங்கத்திற்குப் பாதகம் வருமென்றால் தொழிற் சங்கத்தையும் காப்பாற்றுவது அவர்களின் கடமை. ஆனால் இப்போது அரசு ஊழியர்களை எடுத்துக்கொண்டாலும், ஆசிரியர் பிரச்சினையை எடுத்துக் கொண்டாலும், வணிகர்கள் பிரச்சினையை எடுத்துக்கொண்டாலும் அங்கே அரசியல்தான் முதலிடம் பெறுகிறது. தொழிற் சங்கத்தில் நடைபெறுகிற காரியம் இப்போது எங்கே பார்த்தாலும் நடக்கிறது. இதற்காக நான் வேதனைப்படுகிறேன். இப்போது தலைமைச் செயலகத்தில் ஊழியர்கள் போராட்டம் நடந்தபோது, அதைப்பற்றிப் பேசும்போது இங்கே குறைபட்டுக் கொண்டார்கள். இந்தப் போராட்டத்தில் புரட்சித் தலைவர் அவர்கள் அரசு சரியான முறையில் தீர்வு காணவில்லையென்று திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டார்கள், 1974 ஆம் ஆண்டு கலைஞர் அவர்கள் ஆட்சியில்



1986 மார்ச் 24] [திரு. எஸ். ஆர். இராதா]

(முற்பகல் 10-45)

இருந்தபோது, தலைமைச் செயலக ஊழியர்கள் போராட்டத்தைப் படமே எடுத்தார் என்றார். உலகத்தில் எவருமே சாதிக்காத காரியத்தை கலைஞர் சாதித்துக்காட்டியிருக்கிறார்கள் என்றார். அவ்வாறு படமெடுத்ததற்கான காரணம் என்ன? அவர்கள் போராடியபோது, அதைப் படம் எடுத்து அப்படத்தில் யார் யார் உருவம் தெரிந்ததோ அவர்கள்மீதெல்லாம் நடவடிக்கை எடுக்கப்பட்டதென்பதையும், அவர்கள் எவ்வளவு அல்லலுக்கு ஆளானார்கள் என்பதையும் யாரும் மறந்துவிடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இப்போது நடந்த போராட்டத்திற்கு என்ன காரணம்? எந்தவித அறிவிப்பும் இல்லாமல், யாரிடத்திலும் சொல்லாமல், ஏதோ ஒரு காரணத்திற்காக ஏதோ ஒரு காரியத்திற்காக திடீரென்று 'ஏழு அம்சக் கோரிக்கை' என்றும் 'ஒன்பது அம்சக் கோரிக்கை' என்றும், போராட்டத்தை ஆரம்பிக்கிறார்கள். இந்த அளவுக்கு இவர்களுக்குத் தைரியம் வருகிறதென்றால், அதற்கு யார் காரணம்?

தலைமைச் செயலகத்தில், ஒரு மாநிலத்தை ஆட்டிப்படைக்கின்ற இடத்திலே இருக்கிற அரசு ஊழியர்கள் இவ்வாறு போராடுகிறார்கள். தங்களை யாரும் கேட்கவேண்டிய அவசியம் இல்லை என்கிற அளவுக்கு அவர்களே சட்டத்தைக் கையில் எடுப்பார்களேயானால், அது எப்படிச் சரியாகும்? ஒரு தொழிற் சங்கவாதி என்கிற முறையிலே சொல்கிறேன். அதைப் பார்த்துக்கொண்டிருக்க வேண்டுமென்ற நிலை நிச்சயமாக ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகும். ஒரு தொழிற் சங்கமாக இருந்தாலும், ஓர் அரசியல் கட்சியாக இருந்தாலும், கட்டுப்பாடு என்பது வேண்டும். கட்டுப்பாடு என்று வருகிற நேரத்தில், ஓர் அரசியல் கட்சியில் இருக்கிறவன் அந்தக் கட்சிக்குக் கட்டுப்பட்டு, அந்தக் கட்சியின் கொள்கைகளை, திட்டங்களை விஸ்வாசத்தோடு நிறைவேற்றுபவன்தான் ஓர் உண்மையான கட்சிக்காரனாக இருக்க முடியுமே தவிர, நான் கட்சியின் கட்டுப்பாட்டுக்குள் வரமாட்டேன், நான் பதவியை மட்டும்தான் சுவைப்பேன் என்று சொல்கிறவன் நிச்சயமாக ஒரு கட்சிக்கு உரியவனா என்றால் இல்லை. அதேபோல் அரசு ஊழியர்கள் என்று சொல்கிறபோது, அரசு நடத்தை விதிமுறைகளை ஒழுங்காகக் கடைப் பிடிக்க வேண்டும். ஆனால் அவர்கள் என்ன செய்தார்கள்? திடீரென்று போராட்டம் நடத்துகிறார்கள். பத்திரிகைகளில் எல்லாம் வருகிறது. பெரிய தலைப்புகளில் வருகிறது. அதுவும் 'மாலைமுரசு' பத்திரிகைக்கு ரொம்ப சுவையான போராட்டம் இது. தலைப்புச் செய்தியாகப் போடுகிறார்கள். "தலைமைச் செயலகத்திலே ஆயிரக்கணக்கான ஊழியர்கள் போராட்டம்" போராட்டத்திலே என்ன பேசினார்கள் என்று பத்திரிக்கையிலே பார்க்கிறேன்.

[திரு. எஸ். ஆர். இராதா] [1986 மார்ச் 24

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் சினிமாவில் என்ன என்ன பாட்டுக்கள் பாடினார்களோ அந்தப் பாடல்களை எல்லாம் தலைமைச் செயலகப் போராட்டத்திலே பாடுகிறார்கள். அவ்வாறு அவர்கள் பாடியதன் நோக்கம் என்ன தெரியுமா? அந்தப் பாட்டுக்களைப் பாடுவதன் மூலமாக மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களைக் கேலி செய்ய வேண்டும் என்பது அவர்கள் எண்ணம். அந்தப் பாட்டுக்களைப் பாடுவதன் மூலமாக மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களைக் கேவலப்படுத்த வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு பாட்டாகப் பாடினார்கள். இந்த நிலைமையை நான் அன்றைக்குப் பார்த்தேன். போராட்டத்திலே இருந்த பல அரசு ஊழியர்கள்கூட சொன்னார்கள்: "என்ன இருந்தாலும் நாம் அரசின் சம்பளத்தை வாங்குகிறவர்கள். இவர்கள் இப்படி எல்லாம் செய்கிறார்கள். என்ன செய்வது? எங்களுக்கு வேறு வழி இல்லை. உள்ளே சென்று உட்காருவதற்கு விடமாட்டோம் என்கிறார்கள். வெளியே அழைத்துப் போய் விடுகிறார்கள்" என்று வேதனையோடு கண்ணீர் வடித்த பலரை எனக்குத் தெரியும். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை அவர்கள் இவ்வாறு எதற்காகக் கேலி செய்ய வேண்டும்? மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை அவர் சினிமாவில் பாடிய பாடல்களைக் கூறி கேலி செய்வார்களானால், நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருக்கலாம். ஆனால் கொஞ்ச காலத்திற்கு முன் சுமார் 40, 50 ஆண்டு காலத்திற்கு முன் அப்பாடல்களைச் சினிமாவில் பாடுவதற்கு அவர் எடுத்துக்கொண்ட நேரங்கள், உழைத்த உழைப்பு எவ்வளவு என்பது உங்களுக்குத் தெரியாது. இப்போது நீங்கள் பாடல்களை சர்வ சாதாரணமாகச் சொல்லலாம் ஆனால் அவர் அன்றைக்கு ஒவ்வொரு பாடலின் ஒவ்வொரு வரியையும் சினிமாவில் புகுத்துவதற்காக அவர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டார்கள் என்பது சற்று நினைத்துப்பார்த்தால் தெரியும். ஒன்றை நான் வேதனையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அன்றைக்கு அவர் பாடல்களைக் கேலி செய்யலாம். திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கிற பலபேர்கூட மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் பாட்டு என்று சொன்னாலே, அவர் நடித்த படம் என்று சொன்னாலே, அவற்றைப் பாடுவதோ, பார்ப்பதோ பாவம் என்று கருதுகிற அளவுக்கு ஒரு நிலைமையை வளர்த்து வைத்திருக்கிறார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆரம்ப காலங்களில் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களே, நான் அன்றைக்கு எடுத்துக் கொண்டதாகச் சொல்லப்படும் 31 ஒவ்வொரு காட்சியையும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உயிர்



1986 மார்ச் 24] [திரு. எஸ். ஆர். இராதா]

உண்டாக்கக்கூடிய அளவுக்கு உருவாக்கினார் என்பதை என்போன்ற சாதாரணத் தொண்டர்களுக்குத் தெரியும். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஒவ்வொரு பாடலையும் கேலி செய்கிறார்கள்.

சமீபத்தில் கோவைத் தம்பி அவர்கள் 'நல்லவன் வாழ்வான்' என்கிற ஒரு நிகழ்ச்சியை வானொலியில் ஒலி பரப்பினார். மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் தமிழகத்திற்கு வந்த அந்த நாளைக் கொண்டாடுகின்ற முறையில் ஒரு நிகழ்ச்சியை ஒலி பரப்பினார். அப்போது ஒரு பாடலை ஒலி பரப்பினார். "நான் சொத்துப் பிழைத்தவன், டா" என்கிற பாடலை ஒலி பரப்பினார். அந்தப் பாடலில் நான்காவதாகவோ அல்லது ஐந்தாவதாகவோ ஒரு வரி வருகிறது. உயிரைச் சாதாரணமாக

(முற்பகல் 10-50)

மதித்து, ஓடுகின்ற புகைவண்டிக்கு முன்னாலே தலையை வைத்து "தமிழ் காக்க எழும்பிய கூட்டமடா இது" என்று பாடுகிற பாட்டு. யாருக்காக இந்த வரியைச் சேர்த்தார் என்பது நாட்டுக்குத் தெரியும். ஆனால் அந்த வரிக்குரிய கலைஞர் இந்தப் பாட்டை இன்றைக்கு ஏற்றுக்கொள்வாரா என்றால், அது எம்.ஜி.ஆர். பாடினார் என்பதால் ஏற்றுக் கொள்ளமாட்டேன் என்று சொல்வாரே தவிர, அந்தப் பாட்டைப் பாடுவதற்கு புரட்சித் தலைவர் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பார் என்பது அவருக்கும் தெரியும். எங்களுக்கும் தெரியும். ஆனால் இன்றைக்கு அரசியல்வாதி கேலி பேசலாம். காரணம் அதை அரசியலாகச் செய்கிறார்கள். ஆனால் அரசு ஊழியர்களாக இருப்பவர்கள் பாட்டைப் பாடி, எம்.ஜி.ஆரைக் கேலி செய்து, அவர் உருவத்தை வர்ணித்துப் பேசுகிற நிலை இருக்கிறதே, அது உள்ளபடியே வேதனை தருகிற ஒன்று. அதை அன்றைக்குச் செய்தார்கள். செய்தார்கள் என்பதனாலே அவர்களைப் பழி வாங்க வேண்டுமா என்று என்னைக் கேட்டால், நான் தொழிற் சங்க ஊழியன் என்ற முறையிலேகூட சொல்வேன், எப்படிப்பட்டவராக இருந்தாலும் பழி வாங்குகிற நிலை வராது என்பது எனக்குத் தெரியும். புரட்சித் தலைவர் நடத்துகிற அரசில் எந்த நிலையிலும் அப்படிச் செய்ததில்லை. ஆனால் இன்றைக்கு எழுதி வாங்கியிருக்கிறோம் என்று சொன்னால், ஏதோ அவர்கள் எழுதிக் கொடுத்ததை வாங்கியிருக்கிறோமே தவிர, யாராவது மன்னிப்பு எழுதித் தாருங்கள் என்று கேட்கவில்லை. பழைய காலம் நமக்குத் தெரியும். இதே பட்டதாரி ஆசிரியர்கள், இன்றைக்கு "எங்களுக்கு யாரும் தேவையில்லை" என்று சொல்கிற தைரியத்திற்கு உள்ளாகிற அந்தப் பட்டதாரிகள் ஒரு காலத்திலே போராட்டம் நடத்துகிற நேரத்திலே எழுதி வாங்கிக்கொண்டு . . .

*மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :* இன்று 12 மணியளவில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் செலவு குறித்த இறுதி துணை விவா அறிக்கையை அளிக்க இருக்கிறார்கள். இன்னும் மூன்று அல்லது நான்கு உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். அதற்குள்ளாக அவர்கள் பேசி முடிக்க வேண்டும். ஆகவே உறுப்பினர் அவர்கள் விரைவாக முடித்துவிட வேண்டும்.

*திரு. எஸ். ஆர். இராதா :* துணைத் தலைவரவர்களே, மற்றவர்களுக்கு இடையூறாக இருக்கக்கூடாது என்பதனாலே இந்தப் பிரச்சினையோடு முடித்துக்கொள்கிறேன். அன்றைக்குப் பட்டதாரி ஆசிரியர்கள் மீது அவர்களே எழுதி வாங்கிய அந்தத் தாளைத் திரும்பப் பெற வேண்டுமென்பதற்காக போராட்டம் நடத்தி, கோரிக்கைகள் வைத்து, கடைசியிலே புரட்சித் தலைவர் கையிலே வந்ததற்குப் பின்னாலே தான் இந்த அரசு அவர்கள் கையிலே அந்தத் தாளைக் கொடுத்தது. இன்றைக்குப் பல பேர் குறை சொல்லலாம். தலைமைச் செயலக ஊழியர்களை என்ன செய்யப் போகிறார்களோ என்று. நான் நிச்சயமாகச் சொல்கிறேன். யாரும் கவலைப்பட வேண்டியதில்லை. புரட்சித் தலைவர் அத்தனை பேர்களையும் காப்பார் என்று சொல்லி, தலைவர் அவர்கள் கொடுத்திருக்கின்ற வேண்டுகோளை ஏற்று, ஒவ்வொரு இலாக்காவின் மானியம் வருகிற நேரத்தில், அந்த இலாக்காவைத் தனித் தனியாகப் பிரித்து, வகுத்து அதற்கான என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு விழைகிறேன் என்று தெரிவித்து, துணைத் தலைவரவர் அவர்களுக்குத் துணையாக இருக்க வேண்டுமென்பதற்காக . . . (குறுக்கீடு) கருத்துக்கள் இருக்கின்றன. கொள்கைக் குறிப்பின் மீது நான் என்னுடைய கருத்துக்களைக் கூறுகிறேன். நல்ல நேரத்திலே திரு. சாதிக் பாட்சா அவர்கள் நினைவுபடுத்தினார்கள். நாங்கள் மானியம் பெறாதவர்கள். அதனாலே கொள்கைக் குறிப்பின் மீதான விவாதத்திலே ஈடுபடுவோம் என்று தெரிவித்து என்னுடைய உரையை முடிக்கிறேன்.

Thirumathi TARA CHERIAN: Respected Deputy Chairman, I thank you for giving me an opportunity to participate in the general discussion on the Budget for 1986-87. We had a joint session of the Legislature and the Governor addressed us. After that, the Hon. the Finance Minister has presented us this Budget. I would like to congratulate our Hon. Deputy Chairman on his successful foreign tour and I am sure he has come back with very good ideas about how we can maintain and keep up the dignity of our House and the dignity of the Legislators as a whole. I must congratulate the Hon. the Finance Minister on having given us a balanced, tax-free Budget which has been well taken note of by the Press and the people, though not with glamorous results. With the implementation of the schemes in the Budget, the grievances of the down-trodden people will be removed and there will be eradication



of poverty and unemployment among educated and uneducated people. Our State which has proved to be an example to other States in many ways will continue to be so. We can see that the Government have committed themselves to provide a clean and active administration and I hope the Legislature and the people will give active support to the Government to achieve the said objective. This august body should exercise self-control over the speeches made so that they may keep up the dignity of the House, as was being maintained for years by the stalwart politicians who were Members of this House. I am sure that in keeping with the dignity, we will be able to talk on the particular subject that comes up before the House. I would like to bring this to the notice of the Hon. the

(முற்பகல் 10-55)

Leader of the House. References were made to some persons who could not defend themselves and who were not present in the House. I am sure that, from now onwards, we would be able to see that the dignity, decorum and the high standards of our Legislative Council are kept up.

Sir, if I remember correctly, last time the Commissioner and Secretary of the Finance Department gave us a little handbook which made it very easy for people like me to understand the Budget. Going through the Budget, it seems to me that the Budget proposals, if properly carried out and implemented in time, would give us a year of prosperity. Of course, for the Budget proposals to be successfully implemented, we should have no more droughts and unprecetiented floods and things like that. The State has registered a substantial increase in agricultural production. We have improved the industrial activity also to a very great extent. We have done these despite the floods that came suddenly and drought that seems to be worrying us perpetually. Planning and development are most important for the development of any country. I find from the Budget that various Plan allocations have been made. If they are properly utilised, we would be able to show a lot of progress.

I now come to the burning problem relating to the Tamils from Sri Lanka. Everyday, as soon as we open the newspapers, we find news about the killings that are going on in that country. Several thousands of our brothers and sisters who were living in Sri Lanka have now come over to our State. The influx of repatriates and refugees is mounting day by day. I had been to the Refugee Camp at Mandapam and, therefore, from my personal experience I can talk about the sorrow and the despair of the people who have come to

[Thirumathi Tara Cherian] [1986 மார்ச் 24

stay there. The Government of India have given us funds for running the Refugee Camps. Of course, I am also aware that the Chief Minister's Fund is also being utilised for helping those people. Perhaps, the amount that is available is not enough. Those people have been driven away from their homes in Sri Lanka and they have come to stay in a distant place in surroundings which are strange to them. The sufferings that they have gone through are certainly more than what they could bear. In this connection, I would like to state one thing. Since 1981, the Social Welfare Board has been running a small Health Unit at Mantapam. The Government did not find it feasible to run a Health Centre there. The Social Welfare Board is paying the doctor Rs. 1,800 a month. The Government have given him a place to reside. The Centre is functioning all the 24 hours in a day. With God's grace and with the help of the Red Cross organisation, the Social Welfare Board has been able to supply sizable quantities of good medicines for the use of the Centre in giving medical treatment to the refugees. The refugees are very grateful for these arrangements. I hope that the Hon. Ministers who visit the Mantapam Refugee Camp would be able to see the good work being done by this Health Unit.

Sir, I now come to the ethnic problem that exists in Sri Lanka. Of course, efforts are being taken to solve the problem. But, we are not very happy because there is not much of a reciprocity from the Sri Lanka Government. Our Prime Minister is doing his very best to solve the problem. But, if the situation does not improve, if the problem could not be solved through political means and if the killings are not stopped, perhaps, we may have to think of taking the matter to the United Nations.

As regards electricity, we know for certain that every effort is being made by the Government to generate more electricity in our State. Yet, I, think that enough efforts have not been made. This morning, in the area where I am residing, the lights went off at least ten times. Of course, the supply of electricity for domestic purposes is not very important. But it is very essential to supply electricity for agricultural and industrial purposes. For this purpose, we have to lay greater emphasis on the generation of thermal energy and solar energy. The Electricity Board which is the agency in charge of generating electricity should be asked to utilise both the old and new sources of energy. I think it will not be out of place for me to mention here that the private unit run by the Tatas in Bombay is doing much for increasing the supply of electricity. I



1986 மார்ச் 24] [Thirumathi Tara Cherian]

hope that we will also be able to take every possible step to improve the supply position of electricity. The expansion of the industrial sector and improvements in the agricultural sector could not be made

(முற்பகல் 11-00)

without electricity. I am sure they will be attended to. As far as possible, in respect of almost all the important heads, necessary provision has been made in the Budget by the Hon. the Finance Minister. The Finance Department, headed by the Commissioner and Secretary to Government, have worked hard to present this Budget and if the schemes are carried out and in time, with evaluation and monthly and periodical review by the senior officials, they would bring benefits to the people. The Commissioner and Secretary may, apart from working inside his Department, also take up the work of seeing whether the schemes are implemented in time because any work, not done in time, will not produce good results. Everywhere the State is expecting the people to take active part in the implementation of the programmes and this will have to be done for the good of the whole country. The Tamil Nadu Government have got a high reputation so far as the character and machinery of the Government is concerned. According to the challenge of time, the character and machinery will have to be changed. I am sure this will be done. There will have to be more active supervision by senior Ministers and Officials, so that the schemes may be properly carried out.

I would like to touch on a few more points. I would like to congratulate the Hon. the Health Minister who has been given Dr. B. C. Roy Award for the good humanitarian service he has done. I am sure the whole House will congratulate him on this. Speaking about the Health Department, I want to say that there is a definite improvement in the working of the Hospitals, since I had also on occasions visited the Hospitals at odd hours and I have personally seen the good work that is being done. We, of the Social Welfare Board, have been able to set up a Canteen in the Government Royapettah Hospital which is run by deaf girls of the Little Flower Convent. The said Hospital had no canteen for over 100 years either for the employees or for the public. Now the Canteen is catering to the needs of all the people, particularly the people who come from the rural areas. The Dean of the Government General Hospital had also requested for the starting of a canteen there and we will be able to provide a beautiful canteen, if the Government come forward to help us in all possible ways, including provision of

[Thirumathi Tara Cherian] [1986 மார்ச் 24

electricity. We will be able to run such canteens all over the State in the most hygienic way, providing good dishes to the people and, at the same time, providing employment to the deaf girls. In the Tamil Nadu Housing Board, the canteen is doing good service. There is a kiosk run by them just near my office also. In this manner we are able to provide employment to the handicapped and to rehabilitate them and, at the same time, get the greatest benefits out of them. If the Food Minister visits the Canteen run at the I.O.L. with subsidies, he will be convinced about the efficacy of it. We will be able to solve a lot of problems that we are facing. During the last two days or so, we have been seeing in the papers about the Report of the Comptroller and Auditor-General which had pointed out certain malpractices and non-user of certain costly medical equipments. I hope the Hon. the Health Minister will look into it and remove any bottle-necks in putting to use the technical equipments for the benefit of the patients.

(முற்பகல் 11-05)

For some reason or other, it has not been possible. I am sure that the Hon. the Health Minister will look into it and see that it is made possible. The expensive instruments should be put to use, especially for the benefit of the poor people who come to the Government General Hospital. As a woman, I am interested in the welfare of women. Here, it would not be out of place for me to say that cancer ranks fourth among the diseases which kill Indians in the urban areas. It seems that more and more women become victims to certain types of cancer. In Bombay, where I lived for some years, the Indian Cancer Society has been getting a lot of support from the Government and it has opened Centres in many places. Though cancer is killer-disease, if it is detected in time, it could be cured. Therefore, I request the Hon. the Health Minister to see that more Cancer Societies are established in Tamil Nadu, especially in those areas where the disease is largely prevalent.

Sir, I am now coming to a very ticklish point and that is about Prohibition. I am a mother and a grandmother and, therefore, I cannot stand the sight of a family being destroyed. But, I beg of the Government not to come to a hasty decision about re-introducing Prohibition. In his Budget Speech, the Hon. the Finance Minister has stated that there will be a revenue loss of Rs. 250 crores for the State if Prohibition is introduced again. That loss of revenue is going to be a gain to the goondas and persons who indulge in malpractices. Their pockets are going to bulge with money. At the same time, we are not going to stop people from drinking. A few days



1986 மார்ச் 24] [Thirumathi Tara Cherian]

back, I attended a seminar in which five eminent doctors from the United Kingdom participated. They made it very clear that smoking is more harmful than many evils including drinking. Therefore, we have to sit and think about the whole thing. Every time we introduce Prohibition, we quote Gandhiji and our respected Anna. I hope I may not be misunderstood if I quote a Tamil proverb which mentions about "வீட்டைக் கெடுக்க வந்த கோடாரிக் காம்பு". Like that Mahatma Gandhi also had one son who took to drinking. What is clear from this is that we cannot wipe out drinking. This was tried in other places. In our own State, this was tried by previous regimes, without much success. Therefore, let us not make this a political issue. That is all what I am requesting. How much have we allocated to the organisation known as Alcoholic Anonymous which is trying a educate people on the evils of drinking and is also adopting certain types of treatment by which people, could overcome the urge to drink? How much have we spent on publicity and propaganda to explain the evils of drink? Therefore, let us not rush into any decision to close the liquor shops, just because the ruling Party has announced it as its policy in one of the recent election manifestoes. We cannot have a unified Prohibition policy for the whole nation. The Union Government may, of course, give us some more funds to compensate the revenue loss. But, the amount which they give will not be equal to even a decimal fraction of what we are going lose. In that case, the only alternative may be to tax the people who are already on the brink of poverty. Moreover, the Government are going to close—I think I am corrent and I stand to correction—only the arrack shops and the toddy shops. The shops selling Indian-made foreign liquors are not going to be closed. As a result, only the poor man will be jailed if he drinks illicit liquor and the rich man will continue to have his pleasure. Just by quoting Gandhiji and Anna in season and out of season, we cannot wipe out the drink evil which has remained with us for many years. Moreover, none has succeeded in wiping out this evil. Therefore, I request the Government to have a second thought in this matter. We have to spend more on educating the people about the evils of drink. Especially, those living in the slum-areas should be told how drink has led to the disintegration of several families. We all know that several persons have died or have been incapacitated due to consumption of illicit liquor. Squrious liquor is prepared by adding up all sorts of waste material and by burying them under the ground. This is what is going to happen again if we re-introduce Prohibition in a haste. We cannot make people refrain from drinks just by law alone. By Prohibition law, we will only be putting

[Thirumathi Tara Cherian] [1986 மார்ச் 24

(முற்பகல் 11-10)

into prison the poor people who cannot defend themselves. I want to ask the Government whether they have been able to stop smoking which is more dangerous to health, though it is mentioned so on the packet itself. I would also like to draw the attention of the Government to the seeping of drugs into the school, about which I have already talked in this House. Have the Government done anything about it? Have the legislators thought about it? I am sorry to say that the problem of drug addiction among the students has not been looked into by the Government in a serious manner. The Headmaster of a School called the parents and showed them a packet containing drugs. He also told them that he found the small boys were addicted to it. This will have to be attended to seriously.

Now, I come to Panchayat Raj which has come to stay in our country. If democracy is to succeed in any country, it has to be nurtured from the grass-root level. For this Panchayat Raj is the correct answer. The Government should help the proper functioning of Panchayat Raj. I think the teachers of Panchayat Union Schools are getting their salaries from the Government direct. If that is the case, the Panchayat Union cannot have any disciplinary control over them. As in the case of others, the teachers may also commit certain acts which invite punishment. By the time charge is framed and action is taken, the teacher will get transferred or will retire from service. The payment of salaries to teachers should be through the Panchayat Union.

Noon Meal Scheme is a laudable scheme but this novel scheme was started some 25 years ago, when I was Mayor in Madras Corporation, in a small way. Therefore, there can be no two opinions that giving of nutritious meal to the children will make them healthy and will enable them to get good education.

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

But there are loopholes and draw-backs and they should be looked into and set right. Again, the Comptroller and Auditor-General has come out with a comment that money is wasted on this scheme. I know that there was a High Power Committee which recommended the use of lesser quantity of oil. The Committee did not meet for some time. I do not know whether that was implemented. The Comptroller and Auditor-General had remarked that on this account a few crores of rupees could have been saved. This will have to be looked into.



1986 மார்ச் 24] [Thirumathi Tara Cherian]

There is unemployment among the educated as well as the uneducated. If all the Budget schemes are implemented, we can achieve something.

In the Centre, there is a Minister for Human Resources and Human Development. In spite of being a legislator, I do not understand what the subjects are which are dealt with by the Department of Human Resources. I would appeal to the Hon. the Leader of the House to elucidate us on the subject so that we may be clear in our thinking. For the last 50 years, I am working for the handicapped people. If a handbook or literature is placed on the table of the House, we will be able to understand certain things.

The Central Social Welfare Board is an autonomous body created by Thirumathi Durgabai Deshmukh with the blessings of Pandit Nehru, who was then Prime Minister of India. When the State Social Welfare Board is doing something, we have to go to the Government. From time immemorial voluntary organisations are doing good work and there should not be any overlapping. The work of one organisation should be supplemented and complemented by the other organisation. The efforts of the various welfare agencies which are doing good work should be united together. The voluntary organisations are doing dedicated work. If their efforts are pooled together, we may be able to cover many people. There are certain institutions which are doing a missionary type of work. I am not referring to the Christian missionaries alone. There are some missions like the Ramakrishna Mission which are doing dedicated service, especially for the welfare of persons affected by leprosy. They do their work with a lot of dedication. Their workers do not follow any working hours. They do not start work at 10 a.m. and place their tools down at 6 p.m. as the Government agencies do. Of course, the Government are doing good work in this field through the Welfare Department and are helping many people. But, if the efforts of the voluntary organisations are also combined with the steps taken by Government more persons will be benefited.

Sir, for the past many years, I have been working for the welfare of the handicapped persons. Therefore, I know what they need. Comparatively speaking, I would say that the blind, the deaf and the physically handicapped are being looked after well by the Government. The Government have said that 3 per cent of the Government jobs would be reserved for the blind, the deaf and the physically handicapped. But, I would like the Government to

furnish a list of persons who have benefited by this policy of the Government. Sir, the one thing which I very much want to speak about is the welfare of the mentally retarded persons. I would say that, compared to other types of handicapped persons, very little has been done for the welfare of the mentally retarded. There are not many mentally retarded persons. If they are given proper attention and training, they will be able to behave like normal persons. I hope that a time will soon come when we will be able to do more for the welfare of the mentally retarded. There are some mentally retarded people whose parents are rich. They are left in the lurch after their parents die. The money left behind by the parents goes to someone's hands. Such mentally retarded persons, even though they come of rich parents, are not properly looked after even by their very close relations. Now, we have some modern medicines which can help the mentally retarded persons. Therefore, we should first look into the curative aspect of the question. Secondly, we should find out why people become mentally retarded. The World Health Organisation has chalked out a programme for seeing to it that at least 50 per cent of the handicapped persons are rehabilitated before 2000 A.D. Therefore, utilising the grants given by the World Health Organisation and also the allocations made by the Planning Commission, we should do our best for the welfare of the handicapped persons in our State. There are more than 10 million people who are handicapped and more than 2.5 million people who are mentally retarded. I am sure that something will be done for the welfare of these persons.

Sir, I would not take much of your time. We are having many national programmes and also useful State schemes for the uplift of the rural people. Now, there seems to be a yawning gap between the rural areas and the urban areas. Everything possible should be done to bridge that gap. If that is done, there may not be any necessity for people migrating from rural areas to cities, in search of jobs. At the same time, I would like to say that urban development is now being neglected to a great extent. Urban welfare and development has now become a subject of high priority. Now, cities and towns are growing in a haphazard way. More and more people come to the cities in search of jobs. This has resulted in an increase in the number of hut-dwellers and pavement-dwellers and they live in most unhealthy surroundings.

(முற்பகல் 11-20)

Not only that. The City has grown beyond its limits. I think the time has come for the Government to take a second look at the problem. We must have satellite towns around the City. There



are industries crowded inside the City and they should be dispersed outside the City. There is much talk about pollution and there should be deterrent punishment meted out to the offenders and it should be publicised so that they may not repeat it. The way of stopping it lies in giving deterrent punishment.

For housing, large sums are allocated. The Housing Board's work has enlarged. There must be a system to find out the most needy and most deserving cases for giving priority. In countries like the United Kingdom, there is a City Council which carefully goes into the cases in which priority should be given in allotment of houses. I do not say that the present procedure is not correct. We must try to improve it and correct it. I was the only woman Member in the City Improvement Trust, which was there before the formation of Housing Board. I know a Member can bring pressure for priorities on various grounds. Therefore, it is necessary that all sorts of malpractices should be put an end to and the money allotted should be properly utilised for housing. Sanitation should be improved. Milk distribution is much better now. Noise pollution is there. There is no beggar problem. There are so many things to be attended to. There is no social consciousness among many of the people, especially in urban areas. At least in villages, there are Grama Sevikas who are educating the people. There are several cases of exploitation of women and there is violence against them. We must do a lot to help the urban people. Registration of marriage should be made compulsory. It should be done as is the case with births and deaths. If marriages are registered, there will be no dearth of evidence in matrimonial cases. But the registration process should be simple. We should not ask them to pay a fee of Rs. 25 and go to the Sub-Registrar who is far away from the place.

If proper encouragement is given to us, we would be able to help, through our organisations, the marketing of the products manufactured by women and the conducting of exhibitions. Vocationalisation in schools has its own pros and cons. A review should be made to find out the number of students who had, after vocational education, secured employment in private and public sectors or in Government departments. The Government need not be shy in these matters and they can utilise the services of the non-officials who are experienced and see that the money is properly utilised. This can be done efficiently without bringing politics into it. I am sure.,.....

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): மாண்புமிகு உறுப்பினர் 32 நிமிடங்களாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். விரைவில் முடிக்க வேண்டும்.

திருமதி தாரா செரியன் : எனக்கு முன்னால் பேசியவர்கள் அதிக நேரம் பேசினார்கள். நீங்கள் சொன்னால் முடித்துக்கொள்கிறேன். நன்றி.

திரு. க. சுப்பு : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் மாநிலத்தின் நிதி நிலைமை மனநிறைவைத் தருவதாக இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆங்கிலத்தில் 'என்கரேஜிங்' என்று போட்டிருக்கிறார்கள். 'என்கரேஜிங்' என்ற வார்த்தைக்கு மனநிறைவா என்பது தெரியவில்லை. ஊக்கம் அளிக்கும் வகையில் பொருளாதார நிலைமை நிலவுவதாக சொல்லப்பட்டிருப்பதாகக் கருதுகிறேன். அந்த அடிப்படையில்தான் இந்த நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. காரணம், மாநிலங்களின் நிதிநிலை அறிக்கை, மத்திய நிதிநிலை அறிக்கையிலிருந்து விலகிச் செல்ல முடியாது. மத்திய அரசு என்ன நிலைமையைக் கொண்டிருக்கிறதோ அதை வைத்துத்தான் நாமும் நிதிநிலை அறிக்கையை வகுக்க முடியும்.

(முற்பகல் 11.15)

ஒருசில இடங்களிலே வேண்டுமானால், முக்கியத்துவம் கொடுப்பதில், நாம் கொஞ்சம் மாறுபட்டுச் செல்லலாமே தவிர, மொத்தத்தில் மத்திய அரசு என்ன கொள்கையைக் கடைப் பிடிக்கிறதோ அதையொட்டித்தான்—அவர்கள் எப்படி வரி விதித்திருக்கிறார்களோ, அவர்கள் எப்படி பொருளாதாரக் கொள்கையை அமைத்திருக்கிறார்களோ அதையொட்டித்தான்—நாமும் நம் நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்க முடியும். அவ்வாறுதான் நம் நிதிநிலை அறிக்கையும் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே பார்க்கிறபோது, மத்திய அரசைப் பொறுத்தவரையில், சில திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். சென்ற ஆண்டு மத்திய அரசு நீண்ட கால பொருளாதாரக் கொள்கையை அறிவித்தது. அதன் அடிப்படையிலேயே அவர்களது சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையும் வகுக்கப்பட்டது. இந்த ஆண்டும் நிதிநிலை அறிக்கை அதன் அடிப்படையிலேயே வைக்கப்பட்டிருக்கிறது. இவற்றை வரவேற்பவர்கள் யார், இவற்றால் வருத்தமடைபவர்கள் யார் என்று பார்த்தாலே, நாம் இந் நிதிநிலை அறிக்கைகளைப் பற்றிப் புரிந்து கொள்ள முடியும்.

சென்ற ஆண்டு மத்திய அரசு, நிதிநிலை அறிக்கையை அளித்தபோது, பெரிய தொழில் நிறுவனத்திற்கும் வசதி படைத்தவர்களுக்கும் ஏகபோக முதலாளிகளுக்கும், அதிகச் சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்கிற குற்றச்சாட்டு இருந்தது. அதிலே Monopolices and Restuctive Trade Practists Act கீழ் 20 கோடி ரூபாயிலிருந்து 100 கோடி ரூபாய் வரையில் சொத்து வைத்திருக்கக்கூடிய தொழில் நிறுவனங்களுக்கு விதிவிலக்கு அளிப்பதென்கிற கொள்கையை மத்திய சர்க்கார் அறிவித்தது. இவ்வாறு





பெருந்தொழில் நிறுவனங்களுக்கு 1,000 கோடி ரூபாய் வரை சலுகைகள் அளிக்கப்பட்டன. சென்ற ஆண்டே நாம் பார்த்தோம். இறக்குமதி செய்வதற்காக "Liberalisation of import" கொண்டு வந்தார்கள். இது குறித்து மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்கூட சொன்னார்கள். மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் ஜவுளிக் கொள்கை பற்றிக்கூட சொன்னார்கள். இவ்வாறு எந்தப் 'பாலிசியை' எடுத்துக் கொண்டாலும், கொள்கையை எடுத்துக் கொண்டாலும் அதுதான் வருகிறது. இறக்குமதியைத் தாராளப்படுத்துவது என்று கொள்கையைக் கொண்டு வந்ததற்குக் காரணம், ஏற்றுமதிகளை ஊக்கப்படுத்துவது என்றார்கள். ஏற்றுமதியை ஊக்கப்படுத்துவதற்கு 'மாடர்ன் டெக்னாலஜி' வேண்டும். நவீன தொழில் நுணுக்கங்கள் வேண்டும். அந்த அடிப்படையிலே இறக்குமதி செய்யப்பட வேண்டும் என்று கூறினார்கள். ஏற்றுமதி இண்டஸ்ட்ரிசுக்கு ஊக்கம் அளிப்பது என்ற முறையில் நூற்றுக்கு நூறு சதவீதம் ஏற்றுமதி செய்யக்கூடிய பொருள்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்குச் சலுகை தரப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் இன்றைக்கு 'எக்ஸ்போர்ட்' ஓரியன்டட் இன்டஸ்ட்ரிஸ் உற்பத்தி செய்கின்றன.

இவ்வாறு இவர்களுக்குச் சலுகைகள் கொடுக்கப்பட்டன. ஆனால் இவர்களுக்கு இந்தச் சலுகைகள் கொடுத்ததன் மூலம் சாதாரண ஏழை எளிய மக்களுக்குக் கொடுக்கப்பட்ட பல "Export Oriented Industries" சலுகைகள் எல்லாம் குறைக்கப்பட்டுவிட்டன. வறுமை ஒழிப்புக்குச் செலவிடப்பட்ட தொகை எல்லாம் குறைக்கப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு கொஞ்சம் ஆறுதல். வறுமை ஒழிப்புத் திட்டத்திற்காக முந்தைய ஆண்டு என்ன இருந்ததோ அதை அப்படியே நிலை நிறுத்தியிருக்கிறார்கள். அதனால் இந்த ஆண்டு கொஞ்சம் அதிகமாகப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதை வேண்டுமானால் கொஞ்சம் வரவேற்கலாம். அந்த அடிப்படையிலே கொஞ்சம் மத்திய சர்க்கார் பணம் நமக்கு வரும். ஆனால் 'இந்து' போன்ற பத்திரிக்கைகள் கூட இது ஏழை எளியவர்களை ஏமாற்றுவதற்காகக் கொண்டுவரப்பட்டதொன்று கூறுகின்றன. முதலில் கொடுக்க வேண்டிய சலுகைகளை எல்லாம் பெரும் முதலாளிகளுக்குக் கொடுத்துவிட்டார்கள். அதே நேரத்தில் வறுமை ஒழிப்புத் திட்டங்கள்" Anti-poverty measures. என்கிற அடிப்படையில் கொஞ்சம் பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். இவ்வாறு பெரிய தொழில் நிறுவனங்களுக்குச் சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

மத்திய அரசு இவ்வாறு நிதிநிலை அறிக்கையை அளித்திருக்கும்போது, நம் நிதிநிலை அறிக்கையை அதன் அடிப்படையில்தான் கொண்டுவர வேண்டுமா? அப்படியானால் நம் நிலைமை என்னவாவது? இவற்றையெல்லாம் நாம் பரிசீலிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

[திரு. க. சுப்பு] [1986 மார்ச் 24

மொத்தத்தில் மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், அதில் 3650 கோடி ரூபாய் பற்றாக்குறை காட்டப்பட்டிருக்கின்றது. ஆனால் நமக்கு 24 கோடி ரூபாய்தான் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. பரவாயில்லை. 3650 கோடி ரூபாயோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, 24 கோடி ரூபாய் பற்றாக்குறை பெரிய பற்றாக்குறை இல்லை. ஏன், 3650 கோடி ரூபாய் பற்றாக்குறையையே பெரிய பற்றாக்குறையாக 'இந்து', 'இண்டியன் எக்ஸ்பிரஸ்' போன்ற பத்திரிக்கைகள் எழுதவில்லை. காரணம், அவர்களுக்கெல்லாம் மிகப் பெரிய சலுகைகளை இந்நிதிநிலை அறிக்கை அறிவித்திருக்கிறது.

நேர்முக வரி மிகவும் குறைவு. மறைமுக வரிதான் 400 கோடி ரூபாய்க்கு மேலே போடப்பட்டிருக்கிறது. அதுவும் எப்படி வருகிறதென்று சொன்னால் அவையும் ஆயத் தீர்வை, சுங்கத் தீர்வை முதலியவற்றை அதிகமாக வசூலிப்பதன் மூலம் செய்யப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. மறைமுக வரியை அதிகமாக்குவதன் மூலமாக நேரடியாகப் பாதிக்கப்படக்கூடியவர்கள் யார் என்று பார்க்க முடியாவிட்டாலும், நாம் உணர முடியும். இண்டஸ்ட்ரியல் செக்டார்களுக்கு வழங்கப்பட்டிருக்கக்கூடிய சலுகைகள் அதிகம். ஆனால் ஏழை எளியவர்களுக்குச் சலுகைகள் என்று அளிக்கிறபோது மிகவும் பெயரளவிற்குத்தான் செய்திருக்கிறார்கள்.

மாத வருமானம் வாங்குகிறவர்கள் வருத்தப்படக்கூடாதென்பதற்காக 'ஸ்டாண்டர்ட் டிடக்ஷன்'-ஐ 6,000 ரூபாயிலிருந்து 10,000 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். இது வருமானம் வருகிறவர்களுக்குத்தான். வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு இதனால் என்ன இலாபம்? வறுமைக் கோட்டுக்குக் கீழேதான் நிறைய பேர் இருக்கிறார்கள்.

அதைபோலவே "Gift Tax" 5,000 ரூபாயிலிருந்து 20,000 ரூபாய்வரை கொடுப்பவர்களுக்கு அவர்கள் சலுகை காட்டியிருக்கிறார்கள். யார் Tax கொடுக்கப் போகிறார்கள்?

'பிராவிடண்ட் பண்ட்' வட்டி விதத்தை உயர்த்தியிருக்கிறார்கள். இவ்வாறு சில சலுகைகளை அறிவித்திருக்கிறார்கள். இவ்வாறு சில சில்லரைச் சலுகைகளை ஊழியர்களுக்கும், நடுத்தர மக்களுக்கும் அளித்துவிட்டு, அதிகச் சலுகைகளை பெரிய நிறுவனங்களுக்கு அளித்திருக்கிறார்கள்.

அதிலும் குறிப்பாக பொதுத் துறை நிறுவனங்களுக்கெல்லாம் பணம் ஒதுக்கப்பட்டிருப்பதை வைத்து 'இன்ப்ராஸ்ட்ரக்சர்தான்' செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் பிரைவேட் செக்டாருக்கு 1,60,000 கோடி ரூபாய்க்கு மேலே ஒதுக்கப்பட்டிருக்கிறது.



1986 மார்ச் 24] [திரு. க. சுப்பு]

இதற்கெல்லாம் Resources எங்கிருந்து கிடைக்கின்றன? சாதாரண உழைப்பாளி மக்களிடமிருந்துதான், அவர்களிடத்திலிருந்து வசூலிக்கப்படும் பணத்திலிருந்துதான். ஆனால் பட்ஜெட்டின் பலன்கள் இவர்களுக்குக் கிடையாது. நான் எதிர்பார்ப்பது என்னவென்றால், சாதாரண மக்களுக்கு எப்படி நிவாரணம் வழங்கப்படுகிறது என்று சொன்னால், பட்ஜெட் மூலம் அவர்களிடமிருந்து வசூலிக்கும் பணத்தின்மூலம் அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும். அவர்களுக்கு இதன்மூலம் வேலை வாய்ப்பை உருவாக்க வேண்டும்.

(முற்பகல் 11-30)

அந்த வகையில் கிராமப்புறங்களிலே, நகர்ப்புறங்களிலே உருவாக்கக்கூடிய வேலை வாய்ப்புத் திட்டம் இருக்கும் என்று நாம் எதிர்பார்த்தோம். ஆனால் இதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது? இது 'ஆன்ட்டி பாவர்ட்டி ஸ்கீம்'. வேலை வாய்ப்பு நிரந்தரமாக உருவாக்குவதற்குரிய வகையிலே அமைந்திருக்கவில்லை. ஏதோ ரோடு போடலாம். ரோடு போடுவதும் பாதி ரூபாயிலே போடலாம், பரவாயில்லை. அப்படியாவது போடுவதற்கு பரந்த மனப்பான்மை கிடையாது. அதிலே என்ன கணக்கு எழுதப்படுகிறது என்பது எல்லோருக்கும் தெரியும். கிராமப்புறங்களிலே இந்த ஸ்கீமிலே எப்படிப் பணம் செலவழிக்கப்படுகிறது என்பது குறித்து பாராளுமன்றத்திலே கூட விவாதம் வந்திருக்கிறது. பல பேர் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். இதில் பணம் ஒதுக்குவது பெரிதல்ல. அது எப்படிச் செலவழிக்கப்படுகிறது என்பதைக் கண்காணிக்க வேண்டும். அதற்கு ஒரு சரியான 'எபெக்டிவ் மெசினரி' இருக்க வேண்டும். இருக்கிறதா என்றால், அது சந்தேகத்திற்குரியது. அப்படிப்பட்ட மெசினரி இல்லாதபோது, பணத்தை ஒதுக்கி என்ன செய்வது?

இன்றைக்குக்கூட சில பேர் வருத்தப்பட்டுப் பேசியிருக்கிறார்கள். நம்முடைய மரியாதைக்குரிய காங்கிரசுக் கட்சி உறுப்பினர்கள்கூட சட்டமன்றப் பேரவையிலே சென்ற முறை பேசும்போதும் சரி, அதற்கு முன்னாலேயும் சரி, அரசாங்கத்தைப் பாராட்டி நன்றாகப் பேசினார்கள். ஆனால் இன்றைக்குக் கொஞ்சம் வருத்தத்தோடு கோயம்புத்தூரிலே பேசியிருக்கிறார்கள். அப்போது அமைச்சர் உட்பட பல பேர் பேசியிருக்கிறார்கள். அவர்கள் பேசும்போது, "பல திட்டங்களிலே தவறு நடக்கிறது. வறுமை ஒழிப்புத் திட்டங்கள் சரியாக நிறைவேற்றப்படுவதில்லை; பணம் சரியாகச் செலவழிக்கவில்லை" என்றெல்லாம் பேசுகிறார்கள். அது எதிலே இருந்து வருகிறதென்றால், பிரச்சினையை மட்டும் மையமாக வைத்துக்கொண்டு அது விமர்சிக்கப்பட்டால், ஆலோசிக்கப்பட்டால், அது வரவேற்கப்பட வேண்டியது. ஆனால் நாம் தோல்வியடைந்து விட்டோம்; ஒரு கட்சியோடு சேர்ந்ததால் தோல்வியடைந்து

விட்டோம். ஆகவே அப்படிப்பட்ட தோல்வி வந்தது" என்றால் அது 'அப்ஜெக்டிவ்' ஆக இருக்க முடியாது. 'சப்ஜெக்டிவ்' ஆகத்தான் இருக்க முடியும். அவர்கள் தோற்றுப் போனதனால், அந்த அடிப்படையிலே இருந்து பார்க்கிறார்கள். நாட்டினுடைய தேவையை முன்னிட்டுப் பார்ப்பது வேறு. வெற்றி தோல்வி என்பது சர்வ சாதாரணம். அதைப்பற்றி எடுத்துக் கொள்ளக் கூடாது. பஞ்சாபிலே காங்கிரஸ் வெற்றி பெற்றதா? அங்கே என்ன அ.தி.மு.க. வோடு கூட்டுச் சேர்ந்ததா? அஸ்ஸாமிலே காங்கிரஸ் வெற்றி பெற்றதா? காஷ்மீரிலே, ஆந்திராவிலே, கர்நாடகத்திலே, மேற்கு வங்கத்திலே, திரிபுராவிலே காங்கிரஸ் வெற்றி பெற்றிருக்கிறதா? இதெல்லாம் தோல்வி என்று காங்கிரஸ் எடுத்துக்கொள்ளக்கூடாது. மரியாதைக்குரிய பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் பஞ்சாபிலே தேர்தல் நடத்தப்போகும்போது, அங்கே தேர்தல் நடத்த வேண்டாமென்று காங்கிரஸ் கட்சியிலிருந்தவர்கள் கேட்டுக்கொண்டார்கள். ஆனால் அவர் ஒப்புக்கொண்டாரா? இல்லை. யார் தேர்தலிலே வெற்றி பெறுகிறார்கள் என்பதைவிட ஜனநாயகம் வெற்றி பெறுகிறதா என்பது தான் முக்கியம் என்று சொன்னார். யார் வருகிறார் என்பது முக்கியமல்ல. அந்த அடிப்படையிலே தேர்தலை அங்கே திரு. ராஜீவ் காந்தி நடத்தினார். அங்கே காங்கிரஸ் எதிர்க் கட்சியாக இருக்கலாம். ஆனால் உலக அரங்கில் ஒரு மரியாதை உயர்ந்து இருக்கிறது. இவ்வளவு குழப்பங்களுக்கு மத்தியிலேகூட அந்த மாநிலத்தின் ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதற்காக, பிரதமர் அவர்கள் விடாப்பிடியாக இருந்து அதைச் செய்தார்; அதைப் பாராட்ட வேண்டும். அதுமாதிரி அஸ்ஸாமில் தேர்தல் நடத்தினார். இதெல்லாம் பாராட்டப்பட வேண்டிய விஷயங்கள். அதுமாதிரி யாரைப் பாராட்டினாலும், பாராட்டாவிட்டாலும், தமிழகத்தைப் பொறுத்தவரையில்கூட, இப்போது இந்த அரசாங்கத்தை, முதல் அமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களை அனைத்துத் தரப்பினரும் மனம் திறந்து பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். என்ன காரணம்? உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்பட்டிருக்கிறது. இந்த உள்ளாட்சித் தேர்தல் நடக்குமென்று யாராவது நினைத்தார்களா? கடைசி நாள்வரை அறிக்கை விடவில்லையா? கோர்ட்டிலே 'ஸ்டே' வாங்கு வார்கள் என்று சொல்லவில்லையா? இந்த ஆட்சியாளர்கள் தாண்டிவிடுவார்கள் என்று எல்லாம் பிரசாரம் செய்யவில்லையா? இவ்வளவு இருந்தும், கேலிட் பொருளாக ஆகவில்லையா? பல நேரங்களில் நாம் தேர்தல் நடத்த வேண்டு மென்று முடிவு எடுக்கும்போது, நீதிமன்றம் அதை நிறுத்தி வைக்கவில்லையா? அதற்கெல்லாம் இந்த அரசாங்கம் பழி ஏற்றுக்கொள்ளவில்லையா? இருந்தாலும் இன்றையதினம் வாக்கு அளிக்கக்கூடிய உரிமையை 18 வயது உள்ளவர்களுக் கும் கொடுத்து—ரிசர்வேஷன் ஒரு வகையாகக் கடைப்பிடிக்க முடியாமல் ஸ்டே கொடுக்கப்பட்டிருந்தாலும்—ஒரு வழியாகத் தேர்தலை நடத்தி உள்ளாட்சி நிறுவனங்களிலே மக்களுடைய பிரதிநிதிகள் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்



முதலிலே உள்ளாட்சி நிறுவனங்களிலே ஜனநாயகத்தை உறுதியாக ஏற்படுத்தி, அதில் மக்கள் பங்கேற்கக்கூடிய ஒரு வாய்ப்பை அரசாங்கம் உருவாக்கிக் கொடுத்ததற்காக மனம் திறந்து பாராட்ட வேண்டும். அதுதான் வெற்றியே தவிர, அ.தி.மு.க. வெற்றி பெற்று விட்டது என்பதால் மட்டும் வெற்றியல்ல; தோற்றுப் போயிருந்தால் மட்டும் தோல்வியுமல்ல. இது ஒரு அரசியல் ரீதியாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய தேர்தலே அல்ல. எனக்குத் தெரியும். நானே பல ஊர்களுக்குப் போனேன். நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுடைய ஊருக்குப் போனேன். அங்கே பஞ்சாயத்துத் தலைவராக வந்திருப்பது யார் என்றால், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தம்பி. அதுவும் போட்டியில்லாமல். அந்த ஊரில் தி.மு.க. இல்லையா? இருக்கிறது. ஏன் போட்டி போடவில்லை? அவர் போட்டி போட வேண்டிய ஆளில்லை. அவரே வரட்டும் என்கிறார்கள். போட்டியில்லாமலேயே ஊராட்சி மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் பஞ்சாயத்து யூனியன் சேர்மன் பதவிக்கு காங்கிரசுக்காரர் நின்றார். அவருக்கு அந்த ஊரிலே கிடைத்த ஓட்டு 17. தி.மு.க. காரருக்குக் கிடைத்த ஓட்டு 400. என்ன காரணம்? ஒரு அன்புதான் காரணம். இங்கே தி.மு.க.வுக்கு, அ.தி.மு.கவிலே இருக்கக்கூடியவர்கள் அப்படி ஓட்டுப் போட்டுவிட்டார்கள். அ.தி.மு.க.-வில் நிற்கிற பஞ்சாயத்துத் தலைவருக்கு தி.மு.க.-காரர் விட்டுக் கொடுக்கிறார். இது என்ன அரசியல் ரீதியாக நடக்கிற தேர்தலா? இதை அரசியலாகக் கணக்குப் போட முடியுமா? முடியாது. இன்னொரு ஊருக்குப் போனோம். அது பரமக்குடியிலுள்ள நயினார்கோயில் பஞ்சாயத்து யூனியன். அங்கே ஒரு அ.தி.மு.க.-காரர் நிறுத்தப்படுகிறார். அவரை எதிர்த்து நி கிறவர் அ.தி.மு.க ஒன்றியச் செயலாளர். என்ன செய்ய முடியும்? ஓட்டைப் பிரித்ததனால் அ.தி.மு.க.-காரர் தோற்றுப் போனார். அதனால் கட்சி தோற்றுப் போய்விட்டது என்று அர்த்தமா? நமக்குள்ளே கட்சி இருக்கிறது அது தோற்றுப் போய்விட்டது. வேறு ஒன்றுமில்லை. இப்படி ஒன்றிரண்டு இருக்கலாம். இதை வைத்துக்கொண்டு நாங்கள் தோல்வியடைந்து விட்டோம் என்று வருத்தப்பட வேண்டியதுமில்லை; காங்கிரசும் வருத்தப்பட வேண்டியது மில்லை. அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால், அ.தி.மு.க.வோடு சேர்ந்ததனாலே நாங்கள் தோற்றுப் போய்விட்டோம் என்று நினைக்கிறார் கள். ஏன் தோற்றுப் போய்விட்டார்கள் என்றால், அ.தி.மு.க நிறைய திட்டங் களை நிறைவேற்றவில்லை என்று சொல்கிறார்கள். அப்படியென்றால் போன சட்டமன்றப் பேரவைத் தேர்தலிலே அ.தி.மு.க. எல்லாத் திட்டங்களையு நிறைவேற்றி இருந்ததா? இதையெல்லாம் அப்படிப் பார்க்கக்கூடாது. தோல் என்பதை அப்படி எடுத்துக்கொள்ளக்கூடாது. ஜனநாயக ரீதியாக மக் ளுடைய பிரதிநிதிகள் நிர்வாகம் நடத்துவதற்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையை உருவாக்கிக் கொடுக்கிறது.

முன்பு அசோக் மேத்தா கமிட்டியிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அங்கத்தினராக இருந்தார்கள். அது அருமையான பரிந்துரைகளைச் செய்திருந்தது. அந்தப் பரிந்துரைகளின் அடிப்படையில் இந்தத் தேர்தலை நடத்த வேண்டுமென்பது நம்முடைய வற்புறுத்தல். அந்த அடிப்படையில் பல திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. இன்னும் தேவையான அளவுக்கு, நாம் விரும்பக்கூடிய அளவுக்கு திருத்தங்கள் வந்து விட்டன என்று நாம் சொல்ல முடியாவிட்டாலும், அதற்கு அவகாசம் இல்லை. நாம் தேர்தல் எப்போது என்று நெருக்குகிறோம். இப்போது கர்நாடகத்திலே தேர்தல் நடக்கப் போகிறது. தேர்தலுக்கு அருமையான அடிப்படையை அமைத்திருக்கிறார்கள். அவர்கள் போட்டிருக்கும் சட்டத்தைப் பார்த்தால், நம்மைவிட ரொம்ப முற்போக்கான சட்டம். அது இன்னும் அமுலாக்கப்படவில்லை. அந்தச் சட்டத்தைப் பார்த்தால், அங்கே மாவட்ட அரசாங்கமே நடத்தப் போகிறார்கள். ஜில்லா பரிஷத் என்று சொன்னால், ஒரு மாவட்ட அரசாங்கம்

(முற்பகல் 11-35)

அதற்குக் கீழே பஞ்சாயத்து சமிதிகள். அவர்களே சொல்லுகிறார்கள் இந்த ஜனநாயகத்தை 4 தூண்கள் தாங்க வேண்டும் என்கிறார்கள். 4 பில்லர்கள் என்று குறிப்பிடுகிறார்கள். அதாவது மத்திய சர்க்கார், மாநில சர்க்கார், மாவட்ட சர்க்கார், இறுதியாக கிராம சர்க்கார் என்று இப்படி 4 தூண்கள் இந்த நாட்டைத் தாங்கிக் கொண்டிருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். கருநாடகத்தில் உள்ளாட்சி நிறுவனங்களுக்கு சட்டமன்றத்திலேயே நிதி ஒதுக்கீடு செய்து கொடுத்து விடுகிறார்கள். இங்கேயும் நாம் கொடுக்கிறோம். எப்படி? நம்முடைய பட்ஜெட்டிலேயே 'புரொவைடு' செய்கிறோம். அதாவது 'என்டெர்டெயின்மெண்ட் டாக்ஸ்'-ஐ 10 சதவீதம் உயர்த்தி அதை உள்ளாட்சி மன்றங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறோம். நம்மாலே வேறு ஒன்றும் செய்ய முடியாது. கேளிக்கை வரியைத்தான் உயர்த்திக் கொள்ளச் சொல்ல வேண்டும். அந்தத் தொகையைப் பயன்படுத்தி உள்ளாட்சி மன்றங்கள் வேலை செய்ய வேண்டும். இன்றைக்கு பஞ்சாயத்து யூனியன்களின் நிதிநிலைமை எப்படி இருக்கிறது என்பது நமக்கே தெரியும். அங்கே போகிற சேர்மென் அவர்களுக்கு 'சேர்' கூட சரியாக இருக்குமா என்ற சந்தேகம் இருக்கிறது. ஆனால் கருநாடகத்தில் இதற்காக சட்டம் போட்டே உள்ளாட்சி மன்றங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்து தருகிறார்கள். அதாவது தொகுநிதியிலிருந்து சட்டத்தின் மூலமாகப் பணம் ஒதுக்கீடு செய்கிறார்கள். ஆட்டோமெட்டிக்காக உள்ளாட்சி மன்றங்களுக்குப் பணம் போய்ச் சேர்ந்து விடுகிறது. அந்தப் பணத்தை வைத்துக்கொண்டு, அவர்கள் செலவழிக்கிறார்கள். அது சட்டமன்றத்திலேயே 'பாஸ்' ஆகிவிடுகிறது. அதாவது பைனான்ஸ்





பில்லோடு அதுவும் பாசாகிவிடுகிறது. இப்படிச் செய்வதன் மூலமாகத்தான் உள்ளாட்சி மன்ற நிர்வாகங்களில் மக்களுடைய பிரதிநிதிகள் அதிகமான அளவுக்குப் 'பார்டிசிபேட்' பண்ணுவதற்கு வாய்ப்பு அளிக்க முடியும். உள்ளாட்சி மன்றங்களில் மக்களின் பிரதிநிதிகள் அதிகமான அளவுக்குப் பங்கு பெற வேண்டும். ஏழை மக்களுக்காக நாம் திட்டமிடுகிறோம் என்றால், அதில் அவர்களும் பங்கேற்கிற திட்டம் இருக்க வேண்டும். இன்றைக்கு அப்படிப்பட்ட நிலைமை இல்லை. இதுவரை அப்படி வரவில்லை. ஆனால் நாம் முடிந்தவரை செய்கிறோம். உண்மையிலேயே அதிகாரம் தமிழகத்தில் மக்களுக்கு வந்துவிடவில்லை. ஏதோ நாம் ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டிக் கொண்டிருப்பதிலே பயன் இல்லை. அவர்கள் செய்துவிட்டார்கள், இவர்கள் செய்துவிட்டார்கள் என்று சொல்லிக் கொண்டிருப்பதில் பயன் இல்லை. காரணம் இங்கே சொல்லப்படுகிற இத்தனை குற்றச்சாட்டுகளும் இந்தியாவில் எல்லாப் பகுதிகளிலும் சொல்லப்பட்டன. இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களிலும் இப்படிப்பட்ட தவறுகள் நடைபெற்றிருக்கின்றன என்று சட்டமன்றங்களிலும் நாடாளுமன்றத்திலும் சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றன. இங்கே மட்டும் அவைகள் புதியவைகள் அல்ல. இதைச் சொல்லுவதாலே நான் அந்தத் தவறுகளையெல்லாம் நியாயப்படுத்துவதாகக் கருத வேண்டாம். தவறுகள் நடக்கத்தான் செய்யும். அதனைத் தவிர்க்க வழி என்ன? தேர்தல் நடத்தி மக்கள் பிரதிநிதிகளிடம் உள்ளாட்சி மன்ற நிர்வாகத்தை ஒப்படைப்பதுதான் வழி. அதற்காகத்தான் நாம் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களை நடத்தினோம். இன்றைக்கு வெற்றிபெற்று வந்தவர்களிடம் தேவையான அதிகாரங்களையும் நிதியையும் வழங்க வேண்டும். அந்த அமைப்புகள் பயனுள்ள வகையில் செயல்பட என்ன வழி என்று பார்க்க வேண்டும். அதற்கான ஆலோசனைகளை நாம் சொல்ல வேண்டும். அதுதான் இன்றைய தேவை. அதற்குப் பதிலாக நாம் தோற்றுவிட்டோமே என்று பேசிக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. நாம் இரண்டு பேரும் சேர்ந்தே இந்த நிலைமை என்றால், தனியாக இருந்திருந்தால் என்னவாகி இருக்கும் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், எத்தனையோ விமர்சனங்களுக்குப் பிறகு தேர்தலை நடத்தி உள்ளாட்சி மன்றங்களிடம் பொறுப்புகளை ஒப்படைத்திருக்கிறது. இதிலே ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் வருத்தப்படுவதற்கு ஒன்றுமில்லை. முன்பெல்லாம் "சுகாதாரம் மோசமாக இருக்கிறது, சுகாதாரக் கேடு அதிகமாக இருக்கிறது, இந்த ஊரில் குடிநீர் இல்லை, அங்கே கொசுத் தொல்லை அதிகமாக இருக்கிறது" என்று பேசிக் கொண்டிருந்தால், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அதற்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் இருந்தது. இப்போது அந்த அவசியம் அவருக்கு இல்லை. இப்போது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள்

தலைவர்களாக வந்திருக்கிறார்கள் என்றால், நாம் அவர்களைப் பார்த்துச் சொல்ல முடியும். "நாங்கள் வேண்டிய பணத்தைக் கொடுத்துவிட்டோம். நீங்கள் சரியாகச் செயல்படுங்கள்" என்று சொல்லிவிட்டால் போதும். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், பணத்தை ஒதுக்கீடு செய்ய வேண்டும். அவர்கள் சரியாகப் பணியாற்றுகிறார்களா என்று மேற்பார்வையிட வேண்டும். அந்த அடிப்படையில் பார்க்கும்போது, மத்தியிலே காங்கிரஸ் ஆட்சியும் மாநிலத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியும் இருந்து உள்ளாட்சி நிறுவனங்களில் திராவிட முன்னேற்றக் கழகம் இருந்தாலும், இவர்கள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து மக்களுக்குக் கூட்டுப் பொறுப்பு உடையவர்களாகச் செயல்பட வேண்டும். இதற்குத்தான் இன்றையதினம் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் வழிகோலியிருக்கிறது. அந்த அடிப்படையில் நாம் உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் நடத்தப்பட்டதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அடுத்து, பொதுத் துறை நிறுவனங்களைப் பற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அவைகள் எல்லாம் மோசமாகச் செயல்படுகின்றன. தவறுகள் அங்கே அதிகமான அளவுக்கு நடைபெறுகின்றன. அதிகமான அளவுக்கு அங்கெல்லாம் செலவாகிறது. அல்லது அவற்றின் நிர்வாகம் மோசமாக இருக்கிறது. எனவே அத்தகைய பொது நிறுவனங்களை மூடிவிடுவது நல்லது என்ற பிரச்சாரம் இன்றைக்கு கட்டவிழ்த்து விடப்பட்டிருப்பது எந்த வகையிலும் சரியில்லை. இன்றையதினம் நாம் 'ஹை டெக்னாலஜி டிரான்ஸ்பர்' என்று அமெரிக்காவிலிருந்து தொழில் நுட்பத்தை இங்கே இறக்குமதி செய்கிறோம். உலகத்திலேயே வேறு எங்கேயும் இல்லாத அளவுக்கு இந்தியாவில் தான் படிக்காதவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அதாவது உலக இல்லிட்டரசியில் 54 சதவீதம் 'இல்லிட்டரசி' இந்தியாவில்தான் இருக்கிறது என்று புள்ளிவிவரங்கள் சொல்லுகின்றன. இந்த நிலையில்தான் நாம் அயல்நாடுகளிலிருந்து 'ஹை டெக்னாலஜி டிரான்ஸ்பர்' செய்து கொண்டிருக்கிறோம். உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார். அந்த அடிப்படையில் நாம் 'ஹை டெக்னாலஜி டிரான்ஸ்பர்' என்று எல்லாவற்றையும் நாம் இறக்குமதி செய்து கொண்டிருக்கிறோம். டெக்ஸ்டைல் முதல் எல்லாவற்றையும் 'இம்போர்ட்' செய்து வருகிறோம். இன்றைக்கு 'இந்துஸ்தான் மெசின் டூல்ஸ்'-ல் 'ரிஸ்ட் வாட்ச்' ஒன்றைத் தவிர வேறு எதையும் அதிகமாகச் செய்ய முடியாது என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பாரத் எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தைப் பொறுத்த வரையில், 3 பிராஞ்சுகள் மட்டும் நன்றாக உற்பத்தி செய்து கொண்டிருக்கின்றன. மற்றவைகள் செய்ய முடியாது என்ற நிலைமை உருவாகியிருக்கிறது. அதைப் போலவே பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸ் நிறுவனத்தைப் பொறுத்த வரையும் சரி, அது ஒரு பெரிய எஞ்சினியரிங் இன்டஸ்டிரியாக இருந்தாலும், இந்த 7வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் 3-வது ஆண்டு கழித்துப் பார்த்தால் அதற்கு ஆர்டர்களே இருக்காது என்று இப்போதே சொல்லிவிட்டார்கள். அதன் டைரக்டர்களில் ஒருவரான திரு. ஸ்ரீதர் இப்போதே அபாய சங்கை ஊதி விட்டார். பெல் நிறுவனமானாலும் சரி, பி.ஹெச்.எல். நிறுவனமானாலும் சரி, ஹெவி எஞ்சினியரிங் நிறுவனமானாலும் சரி, இந்தியன் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனமானாலும் சரி, அவற்றின் கெப்பாசிட்டியைக் கூட நம்மாலே பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை. காரணம் இங்கே இருக்கிற பொருள் உற்பத்திக்குத் தேவையான மார்க்கெட் இல்லை. ஒவ்வொன்றிலும் 'இம்போர்ட்' முறையைக் கொண்டு வந்து விட்டதால், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி ஊக்குவிக்கப்படுவதால், இங்கே தொழில் முடங்கியிருக்கிறது. மூலதனப் பொருள்களை உற்பத்தி செய்வது கூட முடங்கிவிடுகிற நிலைமைதான் இருக்கிறது. மாநில அரசைப் பொறுத்த வரையில், நாமும் நமது பங்கைச் செய்ய வேண்டுமே என்று நன்றாக நடக்கிற பொதுத் துறை நிறுவனங்களை எல்லாம் தனியாரிடம் கொடுத்து விட்டு, நஷ்டத்தில் நடப்பதையெல்லாம் நாமே நடத்தலாம் என்று நடத்திக் கொண்டிருக்கிறோம். காரணம் அந்த அளவுக்குப் பரந்த மனப்பான்மை.



(முற்பகல் 11-40)

நஷ்டமாக இருந்தால் நாமே ஏற்றுக்கொள்ளலாம் என்று சொல்லலாம். ஆனால் நல்ல நிலைமையில் உள்ள பல தொழில் நிறுவனங்கள், ஒரு கோடி ரூபாய் லாபம் வரக்கூடிய பொதுத் துறையில் உள்ள பல நல்ல நிறுவனங்கள் இப்போது ஜாயின்ட் செக்டருக்குப் போகின்றன. ஜாயின்ட் செக்டர் என்றால் பிரைவேட் செக்டர்தான். அவர்கள் டெக்னிகல் எக்ஸ்பெர்ட்டாக இருந்தாலும் பரவாயில்லை. டாக்டர்களுக்குக் கூட தொழிற்சாலை ஆரம்பிக்க உதவி கொடுக்கிறார்கள். ஆரம்பிக்கும் தொழிலுக்குச் சம்பந்தமே இல்லாதவர்கள்கூட தொழிற்சாலையை ஆரம்பிக்க முயற்சி செய்கிறார்கள். ஏதோ தங்களுக்குள்ளே இன்ஃப்ளுயன்சை வைத்துக்கொண்டு அப்படி முயற்சி செய்கிறார்கள். ஆகவே இப்படி தமிழ்நாடு முதலீட்டுக் கழகத்தினுடைய பணத்தை, பொதுத் தொண்டு நிறுவனங்களிலிருந்து வரும் இலாபத்தை வைத்துக்கொண்டு, தனியாருக்கு தாரை வார்க்கும் அபாயம் ஏற்பட்டால், வருங்காலத்தில் நம்முடைய நிலைமை மிகவும் மோசமாகப் போகும். ஆகவே பப்ளிக் செக்டர் சார்பாக நாம் சேர்க்கும் ரிசோர்சை வைத்துக்கொண்டு பப்ளிக் செக்டரிலேயே லாபம் தரக்கூடிய தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டுமே தவிர, தனியாரிடம் கொடுக்கும் அபாயம் ஏற்படக்கூடாது.

ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளுடன் டெக்னிக்கல் கொலாபரேஷன் வைத்துக்கொண்டு பல தொழிற்சாலைகளை ஆரம்பிக்கிறோம். அப்படி ஆரம்பிக்கும்போது, நம்முடைய பணத்தைக் கொண்டுதான் டெவலப்மென்ட் ஆபிசர்கள் வெளிநாடு சென்று வருகிறார்கள்; அங்குள்ள நிலைமைகளைப் பார்த்து வருகிறார்கள். பிறகு ஒரு 'புராஜெக்ட் ரிப்போர்ட்' தயார் செய்கிறார்கள். அதை இரகசியமாக வெளியே விலைக்கு விற்றுவிடுகிறார்கள். அதை யாராவது இரண்டு பேர் வாங்குகிறார்கள். சமீபத்தில் "குட் நியூஸ்" என்று ஒரு செய்தியை பத்திரிகையில் பார்த்தேன். "குட் நியூஸ்" என்ற தலைப்பின் கீழ் 'டிட்கோவில் தொழிற்சாலைகளை ஆரம்பிக்கப் போகிறோம்' என்று ஆங்கிலப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்திருந்தார்கள். இதை நம்பி சிலர் 'டிட்கோ'-விடம் சென்று "நாங்கள் அந்தத் தொழிலை ஆரம்பிக்கிறோம், அதன் விவரங்கள் என்ன?" என்று கேட்கும்போது, "நாங்கள் அந்தத் தொழிலை யாருக்குக் கொடுப்பது என்று முடிவு செய்துவிட்டோம், ஏதோ விளம்பரம் கொடுக்க வேண்டுமே என்பதற்காக சும்மா விளம்பரத்தை பேப்பரில் போட்டோம்" என்று சொல்லுகிறார்கள். அவர்கள் "எங்கள் ஏரியாவில்தான் அந்த ரா-மெட்டீரியல்ஸ் இருக்கின்றன, ஆகவே எங்களுக்குத் தான் கொடுக்க வேண்டும்" என்று கேட்டு, கிடைக்காத காரணத்தால், தங்களுக்கு அந்த வாய்ப்பு கிடைக்காதா என்று ஏக்கத்தில் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட விரக்தி நம்முடைய தொழில் முனைவர்களிடத்திலே ஏற்பட நாம் விடக்கூடாது. வெளி மாநிலங்களிலிருந்து வருகிறவர்களுக்கெல்லாம் நம் மாநிலத்திலே வாய்ப்பு கிடைக்கிறது. அவர்கள் எப்படியோ தொழில்களை வாங்கிவிடுகிறார்கள்.

ஓட்டல் இண்டஸ்ட்ரீசை எடுத்துக்கொண்டாலும், மற்ற மாநிலத்தைச் சார்ந்தவர்கள்தான் இங்கே இருக்கிறார்கள். இதிலே நமக்கு தேசிய உணர்வு வருகிறது. சென்னையிலே உள்ள ஓட்டல்களில் 'ரூம்' வேண்டுமென்றால், அவர்களோடு ஏதாவது ஒரு தொடர்பு இருந்தால்தான் 'ரூம்' கிடைக்கும். இல்லையென்றால் தரமாட்டேன் என்று கூறுகிறார்கள். அதனால் இங்கேயுள்ள பணத்தையெல்லாம் அவர்கள் வெளி மாநிலங்களுக்குத்தான் எடுத்துச் செல்வார்கள். அதேபோல் தான் ஸ்டீல் ரோலிங் மில்களும். அது நமக்குத் தெரிந்ததுதான். இதே மாதிரி ஆயிரக்கணக்கான தொழிற்சாலைகளை வெளி மாநிலங்களிலிருந்து வருகிறவர்கள் வாங்குகிறார்கள். இந்த அபாயத்தைப் போக்கி நம்மவர்கள் இந்தத் தொழிலை நடத்த நாம் வழிவகை செய்ய வேண்டும்.

மேற்கு வங்கத்திலே உள்ள சர்க்காரும் இப்போது ஜாயின்ட் செக்டருக்குப் போய்விட்டது. "நாங்கள் இந்த ஊரில் மந்திரியாக இருந்தாலும், மேற்கு வங்கம் வறுமைக்குள்ளாக நாங்கள் விரும்பவில்லை. மத்திய சர்க்கார் வேறு நெருக்கடி கொடுக்கிறது. ஆகவே தொழில் முனைவர்களை அழைத்து வைத்துச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்திலே நாங்கள் இருக்கிறோம்" என்று சொல்கிறார்கள். நாமும் அதைப் போல எதையாவது காரணங்களைக் காட்டி, எங்களுக்கும் நிர்ப்பந்தம் இருக்கிறது என்று சொல்லி செய்யலாம். நிர்ப்பந்தத்தோடு கொடுப்பதற்கும் நிர்ப்பந்தம் இல்லாமல் மற்றவர்களுக்குக் கொடுப்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது. அவர்கள்கூட அது நல்ல கொள்கை என்று ஏற்றுக்கொண்டு ஜாயின்ட் செக்டரில் கொடுக்கவில்லை. அதில் உள்ள அபாயத்தை உணர்ந்தே, நிர்ப்பந்தத்தின் காரணமாக அப்படிச் செய்கிறார்கள். அங்கே கம்யூனிஸ்ட் சர்க்கார் நடைபெறவில்லை. கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர் முதலமைச்சராக இருக்கிறார் என்பதால் மட்டும் கம்யூனிஸ்ட் கட்சி வருமா? சோவியத் நாட்டில் நடப்பதைப் போல நடக்கவில்லை. நமது இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்குட்பட்டு, இந்திய அரசு போடக்கூடிய திட்டத்தின்படி, நமது நாட்டின் மொத்த பொருளாதாரத்தின் அடிப்படையில், அதன் கொள்கைக்கு உட்பட்டுதான் நடத்த முடியும். வேண்டுமானால் முடிந்த அளவிற்கு தவறுகளைக் குறைத்துக் கொண்டு அவர்கள் நடக்கலாம். அந்த வகையிலே ஜாயின்ட் செக்டருக்குப் போகிற நேரத்தில் அங்கே இருக்கக் கூடிய சூழ்நிலையில் வேண்டுமானால் ஜாயின்ட் செக்டரில் கொடுத்து பிரைவேட் செக்டர் கொள்ளையடிக்காமல் தடுக்க முடியும் என்ற போக்கு இருக்கிறது. தொழிலாளர்கள் நலனைப் பாதுகாக்க முடியும் என்ற நம்பிக்கை அங்கே இருக்கிறது. இங்கே அப்படி இல்லை. இங்கே ஏகப்பட்ட மூலதனத்தைப் போட்டு 'ஹை டெக்னாலஜி' என்ற வகையில் 40 பேருக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்த 6 கோடி ரூபாயைச் செலவழிக்கும் சூழ்நிலை இருக்கிறது. ஆகவே கைத்தொழில், கிராமத் தொழில் ஆகியவற்றை உருவாக்கினால்தான், இங்கே வேலை வாய்ப்பு பெருகும் என்பதைப் பார்க்கிறோம். அப்படிப்பட்ட நிலைமையில் மத்திய சர்க்கார் சொல்லிவிட்டது என்பதற்காக நாம் 'ஹை டெக்னாலஜி' என்று போக வேண்டிய அவசியமில்லை. எல்லாத் துறைகளிலும் நாம் அப்படிப் போவதில்லை. நம்முடைய கைத்தறி அமைச்சர் அவர்கள், மத்திய சர்க்காரின் 'டெக்ஸ்டைல் பாலிசி' எப்படி தவறானது என்று தெரிவித்தார்கள். அப்படிச் சொல்லும்போது, பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியுடன் தகராறு என்பது அல்ல. இதிலே தகராறு கிடையாது. ஆனால் அவர்களுடைய கொள்கையின் மூலமாக நம்முடைய

[திரு. க. சுப்பு] [1986 மார்ச் 24

தொழிற்சாலைகள் மூடப்படும் நிலை வருகிறது. லைசென்ஸ் இல்லாமல் உள்ள நிலையை மாற்றி, விசைத் தறிக்கு லைசென்ஸ் கொடுக்கச் சொல்லுகிறார்கள். பெரிய மெஷினரிகளை கட்டுப்பாடு இல்லாமல் 'இம்போர்ட்' செய்கிறார்கள். அதனால், இங்கேயுள்ள தொழிற்சாலைகளுக்குப் பாதகம் ஏற்படுகிறது. 'ட்ரக்' பாலிசியிலும் 60 வகையான மருந்துகளுக்கு டி-கண்ட்ரோல் செய்தார்கள். உயிர்காக்கும் 41 வகையான மருந்துகளுக்கு இதுவரை விதித்து வந்த 'எக்சைஸ் ட்யூட்டி' இல்லை என்று 'எக்செம்ஷன்' கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் கொடுத்த அதே 41 வகையான உயிர்காக்கும் மருந்துகளுக்கு—மற்ற மருந்துகள் எல்லாம் உயிர் காக்கவில்லையோ, என்னவோ—நாமும் விற்பனை வரியைக் குறைக்கிறோம் என்று சொல்லி, 10 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாகக் குறைத்திருக்கிறோம். இப்படி ஏற்கெனவே மத்திய சர்க்கார் எக்சைஸ் ட்யூட்டியிலிருந்து 'எக்செம்ஷன்' கொடுத்திருக்கும்போது, அதே பொருள்களுக்கு நாம் இன்னொரு சலுகையைக் கொடுக்க வேண்டிய அவசியம் என்ன? இதனால் நம்முடைய 'ஸர்சார்ஜ்' குறையும் வாய்ப்பு இருக்கிறதல்லவா? நாம் நல்ல நோக்கத்தோடு

(முற்பகல் 11-45)

சலுகைகளைக் கொடுக்கிறோம். மருந்து விலை குறையும் என்பதற்காக கொடுக்கிறோம். பொருள்களுக்கு விலைவாசி குறையும், உற்பத்தி பெருகும் என்றுதான் சலுகை கொடுக்கிறோம். அந்த நம்பிக்கையிலேதான் செய்கிறோம். ஆனால் எப்போதும்போல, இருக்கின்ற விலைவாசியை ஏற்றுகின்றார்களே தவிர வேறில்லை, பலவிதமான பொருள்களுக்கு வரியை மல்ட்டி பாயிண்ட்-லிருந்து சிங்கில் பாயிண்ட் என்று மாற்றியிருக்கின்றார்கள். அப்படியிருந்தும் விலைவாசியை வியாபாரிகள் இறக்கவில்லை. இது ஏன் என்று எனக்குப் புரியவில்லை. விலைவாசி குறையும் என்ற நம்பிக்கையில் செய்தாலும் அது குறையவில்லை. சிங்கில் பாயிண்ட்டை எந்த ஸ்டேஜிலே போடுகிறோம்? மொத்தத்திலே 'பர்ச்சேஸ்' பண்ணும்போது, மொத்த ஸ்டேஜிலே போடுகிறோமா? உள்ளூரிலே உற்பத்தி ஆகக்கூடிய பொருள்களுக்குப் போடுகிறோம். வெளி மாநிலங்களிலே உற்பத்தி ஆகக்கூடிய பொருள்களுக்கு எந்த ஸ்டேஜிலே போடுவது? அல்லது போடாமலே விட்டுவிடவேண்டியதாகக் கூட வரும். இங்கே உற்பத்தி கிடையாது. வெளிமாநிலங்களிலே இருந்து பொருள்கள் வந்துவிடுகின்றன. அதில் ஏதாவது அரசாங்கம் பரிசீலனை செய்திருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன். சில நேரங்களில் டிஸ்கிரிமினேட்டரியாகக் கூட போட்டிருக்கின்றார்கள். ஒன்றன்பின் ஒன்றாக ஆதாரவாக இருப்பவர்களுக்குக் கொடுக்கலாம். இதைத்தான் மாநில



1986 மார்ச் 24] [திரு. க. சுப்பு]

கூடிய அபாயம் இருக்கிறது. எந்த அடிப்படையிலே வரிவிதிக்கப்பட்டிருந்தாலும், விதிவிலக்களிக்கப்பட்டிருந்தாலும், அதனுடைய நோக்கம் விலைவாசிகளைக் குறைப்பது என்ற அளவிலேதான் செய்கின்றோம். அந்த அளவுக்கு விலைவாசி குறைந்திருக்கின்றதா என்பதைப் பார்க்க வேண்டும். இந்த வியாபாரிகளை நம்பித்தான் செய்கிறோம். அவர்களை நம்பவேண்டியது தான். அவர்களை நம்பித்தான் இரண்டு லட்சம் ரூபாய்க்கு மேல் இருப்பவர்களுக்கு வரிவிதிப்பு என்று முறைகளை வைத்திருக்கிறோம். அதற்கும் மேலே இருப்பவர்களுக்கு வரிவிதிப்பு முறை என்று வைத்திருக்கிறோம். 'ரெசிட்' என்றெல்லாம் இருந்தது. அதையெல்லாம் எடுத்துவிடுகிறோம். ரூபாய் 10 லட்சம் வரை ஸேல்ஸ் என்று வரும்போது, அதற்கு வரிவிதிப்பு முறை இருக்கின்றது. ரூ. 10 லட்சத்திற்கு மேலே ஸேல்ஸ் இருப்பவர்களுக்கு 'டேக்ஸ்' போடுகிறோம். அதற்குக் கீழே இருப்பவர்களுக்குக் கிடையாது. இப்படி எல்லாம் பல சலுகைகள் கொடுக்கிறோம். நம்பிக்கையோடுதான் செய்கிறோம். ஆனால் அந்த நம்பிக்கை என்றைக்காவது பலன் அளித்திருக்கின்றதா? அப்படி பலன் அளித்திருந்தால், இன்றைக்குக்கூட நாம் சலுகை அளிக்கிறதிலே தப்பு இல்லை.

இப்போது நம்முடைய மத்திய பட்ஜெட்டிலே அதிகச் செலவு பாதுகாப்புத் துறைக்கு இருக்கிறது. ரூ. 8,728 கோடி. போன முறை ரூ. 7,862 கோடி. இப்போது 11 சதவிகிதம், அதிலே உயர்த்தப்பட்டிருக்கின்றது. அதற்கு நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் நல்ல காரணம் சொன்னார்கள். "There may not be any compromise without security". Correct. 5,000 கோடி ரூபாய் மட்டுமல்ல, எத்தனை கோடி ரூபாய் வேண்டுமானாலும் ஒதுக்கலாம். நமக்கு 'செக்யூரிட்டி' தான் முக்கியம். பாதுகாப்புதான் முக்கியம். பாதுகாப்பை விட பணம் முக்கியமல்ல. பாகிஸ்தானிலே 'சோபிஸ்ட்டிகேட்டட் வெப்பன்ஸ்' பூராவும் கொண்டுவந்து குவித்துவிட்டிருக்கின்றார்கள். இது எல்லோருக்கும் தெரிந்ததுதான். உலகத்திலேயே பெரிய யு.எஸ். கப்பலை பாகிஸ்தானிலே கராச்சி துறைமுகத்திலே நிறுத்தி வைத்திருக்கின்றார்கள். பத்திரிகையிலே பார்க்கிறோம். யு.எஸ். கப்பல் என்டர்ப்ரைசஸ் கப்பலை நிறுத்தி வைத்திருக்கின்றார்கள். அதிலே இருக்கின்ற மாலுமிகள் எல்லாம் பாகிஸ்தானுக்கே வந்துவிட்டார்கள். ஏதோ உல்லாசமாக இருக்கலாமே என்று வந்திருப்பார்கள். அந்தக் கப்பல் அங்கே வந்து நிற்கிறது. அதே நேரத்திலே பாகிஸ்தான் கப்பல் இரண்டு ஸ்ரீலங்காவிற்குப் போயிருக்கின்றன. ஸ்ரீலங்காவிற்கு ஏன் போகின்றன என்றால், அதற்கு

முன்னாலே [illegible] இருக்கின்றார். ஆயுதங்கள் அங்கே போயிருக்கின்றார். இங்கிலாந்து அரசாங்கத்திற்கு உதவி செய்வதாக என்று அவர் சொல்லிவிட்டார். எதற்கு? தமிழர்களை அடிப்பதற்கு. வேறு எதற்கு உதவி செய்யப்போகிறார்கள்? உதவி செய்கிறோம் என்று சொல்லிவிட்டார். அங்கே போய் தமிழர்களை அடிக்கவேண்டியது. அங்கே மனித உரிமைகள் மீறப்படுகின்றன. அந்த நாட்டிலே போலீஸை வைத்துக்கொண்டு, இராணுவத்தை வைத்துக்கொண்டு அதனுடைய குடிமக்களையே கொலை செய்யக்கூடிய ஒரு சர்க்காருக்கு உதவிசெய்யக் கூடிய நிலையிலே இருக்கக் கூடியவர்களுக்கு "உதவி செய்கிறோம்" என்று சொல்லிவிட்டார்கள். யார் மனித உரிமையை மீறுகிறார்களோ, அவர்களுக்கு, இராணுவத்தையும் போலீசையும் வைத்துக்கொண்டு, குடிமக்களைக் கொலை செய்யக்கூடிய, மனித உரிமையை மீறக்கூடிய, படுகொலை செய்யக்கூடிய ஒரு சர்க்காருக்கு "உதவி செய்கிறோம்" என்று சொல்லியிருக்கின்றார்கள். அவர்கள் மனிதர்களாக இருக்க முடியுமா? நாம் அதைப்பற்றிச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒரு மனிதனாக இருக்கட்டும். வேறு ஏதாவதாகவாவது இருக்கட்டும். அவர்கள் அதை எப்படிச் செய்கின்றார்கள்? அவர்களுக்கு மனிதாபிமானம் கிடையாதா? சீனாவுக்குக் கிடையாதா? பாகிஸ்தானுக்குக் கிடையாதா? அமெரிக்காவுக்குக் கிடையாதா? அமெரிக்காதான் முதலிலே செய்தது. அதன் அதிகாரிகளை அனுப்பியது. இங்கிலாந்து பிரதமர் திருமதி தாட்சர் ஸ்ரீலங்கா பார்லிமெண்ட்டுக்குப் போய் பேசிவிட்டு வந்தாகிவிட்டது. பாதுகாப்பு அதிகாரிகளை அந்த நாடுகள் அனுப்பி வைத்திருக்கின்றன. அமெரிக்க அதிபரை போய் பார்த்துவிட்டு வந்தாகிவிட்டது. எல்லோரும் ஒன்று போல போயிருக்கின்றார்கள், உதவியும் செய்கின்றார்கள். எல்லோருமே போய் வந்துவிட்டார்கள். மிகவும் பயங்கரமான அணு ஆயுதங்களைத் தாங்கிய கப்பல் காரச்சி துறைமுகத்திற்கு எப்படி வருகிறது? இந்தியாவினுடைய இந்து மகாசமுத்திரம் அமைதி மண்டலமாக இருக்க வேண்டும் என்ற யோசனையை எப்படி அவர்கள் அமல்படுத்துகின்றார்கள் என்பதைப் பார்க்கிறோம். அந்தக் கருத்து நிராகரிக்கப்படுகிறது. ஆயிரம் மைல்களுக் கப்பால் உள்ள டிகோகார்சிய தீவுதான் அது இருக்கின்ற இடம். அங்கே ஆயிரம் மைல்களுக்கு அப்பால் அமெரிக்காவினுடைய அணு ஆயுதங்கள், பயங்கரமான ஆயுதங்கள் குவித்து வைக்கப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு திரிகோணமலை துறைமுகத்தைக் கைப்பற்றிவிட்டால், இந்தியாவுக்கு தீர்ந்தரமான ஆபத்து இருக்கின்றது. அந்த நிலைமைகளை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு செய்யப்படுகிறது. அந்த நோக்கத்தில் அச்சுறுத்தலும் செய்யப்படுகிறது. தொடர்ந்து செய்யப்படுகிறது. அப்படி



யெல்லாம் இந்தியா சுற்றி வளைக்கப்படுகிறது. இந்த முறையை இன்றைய நிலைமையைப் பார்க்கின்ற காரணத்தினால், பாகிஸ்தானுக்கு இவ்வளவு அதிகமான ஆயுதங்களைக் கொடுத்திருக்கின்றார்கள். அதே மாதிரி பாகிஸ்தானிலே யு.எஸ். கப்பல் எண்டர்பிரைசஸ் கப்பலை நிறுத்தி வைத்திருக்கின்றார்கள், சீனாவும் சுற்றி வளைத்துக்கொள்ள இருக்கின்றது. இவ்வளவு சூழ்நிலைகளுக்கு, நிர்பந்தங்களுக்கு இடையே யார் மிகுந்த ஆபத்திலே இருக்கின்றார்கள் என்றால், பார்டர் பகுதியில் இருப்பவர்கள் தான். பார்டர் பகுதியிலே இருப்பவர்கள் யார்? நாம் தான். வேறு யாரும் கிடையாது. இதற்கு முன்னாலே நம் பார்டரிலே யாரும் வரவில்லை. ஸ்ரீலங்காவிலேயிருந்து ஒரு அபாயம் வரும் என்ற நிலை இல்லாதபோது, நமக்குப் பாதுகாப்பு என்ற அடிப்படையிலே நாம் கேட்கவில்லை. இன்றைக்கு அப்படி இல்லை. எவ்வளவு 'சப்சிடி' கொடுத்தாலும், மற்ற எல்லோருக்கும் கொடுப்பதைவிட அதிகமாகக் கொடுக்க வேண்டும். அந்த நிலைமைக்கு நாம் வந்துவிட்டோம். அந்த முக்கியம் வந்தாகிவிட்டது. பஞ்சாப் பிரச்சினை முக்கியமாகிவிட்டது. ஏன் பஞ்சாபிலே இருக்கின்ற ஆளைக் கொண்டுபோய் பாகிஸ்தானிலே நிறுத்துகின்றார்கள்? அதுபோல ஸ்ரீலங்காவிலே இருந்து ஆளைக் கொண்டுபோய் அங்கே 'டிரெயினிங்' கொடுத்து திருப்பி ஆளை அனுப்புகிறான். இந்த இரண்டும் திருப்பித் திருப்பி சுற்றி வருகின்றன.

(முற்பகல் 11-50)

தமிழகத்தைப் பொறுத்தவரையில், இந்த அரசாங்கத்தின் சுமை அதிகமாக இருக்கிறது. எங்கே அபாயம் இருக்கிறது? தமிழர்கள் அங்கே தாக்கப் படுகிறார்கள் என்றால், இங்கே முதலிலே தாக்குதலுக்கு உள்ளாவது தமிழக சர்க்கார்தான். தமிழ் நாடு சர்க்கார் என்ன செய்கிறது என்பதுதான் கேள்வி. மக்களிடத்திலே இதையெல்லாம் விளக்கிச் சொல்ல முடியாது. நாம் என்ன செய்ய முடியும்? மத்திய அரசிடம் வலியுறுத்திச் சொல்ல முடியும். 'அவ்வளவுதானா?' என்று சொல்லலாம். அதற்கு எதற்கு இங்கே ஒரு அரசு இருக்க வேண்டுமென்று சொல்லலாம். அப்படிப்பட்ட நிர்ப்பந்தத்தைக் கொண்டு வந்து விட்டார்கள். இன்றைக்கு மேலும் என்ன அபாயம் வந்திருக்கிறது என்றால், இங்கே சிலர், "இந்திய இராணுவத்தை ஸ்ரீலங்காவிற்கு அனுப்புங்கள்" என்று சொல்லுகிறார்கள். இங்கே சொல்வது போதாது என்று, இந்தியாவைத் தாக்குவதற்கு ஸ்ரீலங்காவிற்குப் படை கொடுக்கிற அமெரிக்காவிலே உட்கார்ந்துகொண்டு சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். அமெரிக்காதான் ஸ்ரீலங்காவைத் தூண்டுகிறது. அமெரிக்காதான்

ஸ்ரீலங்காவிற்கு ஆதரவு கொடுக்கிறது. அமெரிக்கா தான் பாகிஸ்தானுக்கும் கொடுக்கிறது. அதுதான் சீனாவுக்கும் கொடுக்கிறது. இவர்கள் எல்லாம் சேர்ந்து ஒரு சதித் திட்டம் போடுகிறார்கள். அந்தச் சதித் திட்டம் தீட்டுகிற நாட்டிலே உள்ள பாஸ்டனில் நம் ஊர் அரசியல்வாதிகள் உட்கார்ந்துகொண்டு, 'மீட்டிங்' நடத்துகிறார்கள். 'மீட்டிங்' நடத்தி தமிழர்களைப் பாதுகாப்போம் என்கிறார்கள். எப்படி? 'தமிழர்களைக் கொலை செய்து பாதுகாப்போம்'. இப்படி நடந்து கொண்டிருக்கிறது. இந்த அபாயகரமான போக்குக்கெல்லாம் தாக்குதல் தமிழ் நாடுதான். இங்கேதான் எல்லா உளவு ஸ்தாபனங்களும் வேகமாக, உற்சாகத்தோடு வேலை செய்து கொண்டிருக்கின்றன. அப்படிப் பட்ட ஒரு இடத்திலே, மிக எச்சரிக்கையோடு செயல்பட வேண்டிய ஒரு இடத்திலே இந்த அரசுக்கு உதவி செய்ய மத்திய அரசு கடமைப் பட்டிருக்கிறது. மத்திய அரசுடைய பொறுப்பை அதிகமான அளவுக்கு ஏற்க வேண்டிய நிர்பந்தம் இந்த அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது. எல்லாவற்றையும் இவர்கள் பார்த்தாக வேண்டும். சும்மா சுற்றிக் கொண்டு வரட்டும் என்று விட முடியாது. பக்கத்திலே 'என்டர்பிரைஸ்' வந்துவிட்டது. தொழிலிலே இல்லை, கப்பலிலே 'என்டர்பிரைஸ்' வைத்திருக்கிறான். இனி வரும் அபாயத்திற்கு முதல் இலக்கு தமிழகம்தான்.

அடுத்து, தமிழகத்திற்கு வரும் 'அகதிகளுக்குக் கொடுக்கும் பணம் மற்றவர்களுக்குக் கொடுப்பதுபோல் இல்லை. காஷ்மீரிலிருந்து வரும் அகதிகளுக்குக் கொடுத்த மாதிரி, பங்களா தேஷ் அகதிகளுக்குக் கொடுப்பது போல் ஏன் இந்த அகதிகளுக்குக் கொடுக்கவில்லை? அவர்களுடைய வயிறு பெரிசு, இவர்களுடைய வயிறு சிறிசா? இவர்களைக் கவுரவமாக, மரியாதையாகப் பாதுகாத்து, ஸ்ரீலங்காவிற்குத் திரும்பிப் போக எல்லா உதவிகளையும் செய்வது எப்படி? மத்திய அரசுதான் உதவி அளிக்க வேண்டும். அந்த உதவிகள் தகுந்த அளவுக்கு இல்லாமல், குறைந்த அளவுக்குக் கொடுக்கப்படும் உதவிகளாக இருக்கின்றன. அகதிகளுக்குக் கொடுப்பதில்கூட, அவர்களுக்கு ஒரு மாதிரி, இவர்களுக்கு ஒரு மாதிரி இருக்கிறது. ஸ்ரீலங்காவிலிருந்து வந்த ரீப்பேட்ரியட்சை இங்கே குடியமர்த்தும்போது, மற்றவர்களுக்குக் கொடுக்கும் சலுகைகளை இவர்களுக்குக் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். அவர்களுக்கு இன்னும் அதிகமான வசதிகளைக் கொடுத்து ஏன் குடியமர்த்த மறுக்கிறார்கள்? இவர்கள் ரீப்பேட்ரியட்ஸ். அவர்களாக வரவில்லை. அகதிகளாவது, தாக்குதலுக்கு உட்பட்டு, இங்கே வருகிறார்கள். இவர்களைக் கவுரவ





மாகக் காப்பாற்றி அனுப்புவது என்பது தற்காலிக நடவடிக்கை. ஆனால் ரீப்பேட்ரியட்ஸ் என்னும்போது, ஸ்ரீலங்காவோடு மத்திய சர்க்கார் போட்ட ஒப்பந்தத்தின் விளைவாக, அவர்கள் தங்கள் சொத்து சுகத்தை எல்லாம் இழந்து, அந்த ஊரிலேயிருந்து இங்கே வந்திருக்கிறார்கள். அவர்களை வாழவைக்க, கவுரமாக நடத்த, அவர்களுக்கு இடம் கொடுக்க மத்திய அரசு முன்வர வேண்டும். எவ்வளவு தடவை சொல்லுவது? ஒருவேளை தெற்கேயிருந்து சத்தம் போடுவதால், சவுன்ட் குறைவோ, என்னவோ? இப்போது வடக்கே இருக்கிறவர்களும் சத்தம் போடுகிறார்கள். திரு. மொரார்ஜி தேசாய்கூட சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். புதிய கல்விக் கொள்கை பல பேர் கேலி பண்ணுவதாக இருக்கிறது. எல்லோருக்கும் இலவசமாக ஆரம்பக் கல்வி, கட்டாயக் கல்வி கொடுக்க வேண்டுமென்பதை மாற்றிவிட்டு, பணம் கொடுத்து படிக்க வேண்டுமென்று சொல்லுகிறீர்களே, இது அந்தக் கொள்கையிலிருந்து விலகிப் போவதாக இல்லையா என்று சொல்லுகிறார். இதில் இரண்டு மொழிகளை 'மீடியம் ஆஃப் இன்ஸ்டிரக்ஷன்' என்று போட்டிருக்கிறார்கள். ஒன்று ஆங்கிலம், மற்றொன்று இந்தி. இப்படி இல்லாமல், தாய்மொழிதான் பயிற்சி மொழியாக இருக்க வேண்டுமென்று ஏன் சொல்லவில்லை? இந்திக்கெல்லாம் விடை கொடுத்து ரொம்ப நாள் ஆயிற்றே? இதை யோசனை பண்ணிப் பார்க்க வேண்டாமா? தாய் மொழியில் கல்வி என்றால், இங்கே தமிழில் படிப்பான். ஆனால் இப்போது சொல்கிற கல்விக் கொள்கைப்படி பார்த்தால், ஆங்கிலம் அல்லது இந்தி என்று போட்டால், இந்தி அல்லது ஆங்கிலத்தை மீடியம் ஆஃப் இன்ஸ்டிரக்ஷனாக வைத்துக் கொள்ள வேண்டும். ஆனால் இந்தி மொழி பேசும் மாணவர்கள், அவர்களுடைய தாய்மொழியில் படிக்கலாம். இது 'டிஸ்கிரிமினேஷன்' இல்லையா? இதை வடக்கேயிருந்து வருகிறவர்கள் சொல்லி வருத்தப்படுகிறார்கள். இதில் ரொம்ப அபாயம் இருக்கிறது. இதற்குப் புதிய கல்விக் கொள்கை என்று பெயர் வைத்திருக்கிறார்கள். இது புதிய கல்விக் கொள்கை அல்ல. இது புதிரான கல்விக் கொள்கை; மக்களுக்கு எதிரான கல்விக் கொள்கை. இவ்வளவு நெருக்கடியான நிலையில் நாம் இருக்கும்போது, இப்படிப்பட்ட கொள்கையைக் கொண்டு வந்தால், எந்த அளவுக்கு அது நம்மைப் பாதிக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதனால் நம்முடைய நிதி நிலைக்கேற்ப, ஒரு வரையறைக்குள்தான் செய்ய முடியும். குழந்தைகளுக்கு சத்துணவு கொடுக்கலாம். 1 முதல் 8 வகுப்புவரை சத்துணவு கொடுக்கிறோம். அடுத்து, 10 ஆம் வகுப்புவரை 'இன்கிரீஸ்' பண்ணலாம். அடுத்தாண்டு, அதைப்பற்றிச் சொல்கிறேன். அவர்கள் ஸேல்ஸ் டாக்ஸிலேயிருந்து தப்பிக்க

அரசு செய்யலாம். இதைச் செய்வதே பெரிய விஷயம். இலவசமாகப் பாடப் புத்தகங்கள் கொடுக்கலாம். 1 முதல் 8 வகுப்புவரை கொடுத்திருக்கிறோம். இலவசமாக சீருடை வழங்கலாம். மிகுந்த சிரமங்களுக்கு இடையில், இதை மாணவர்களுக்குக் கொடுக்கிறோம். டாக்ஸ் கன்செஷன்—நமக்கு அதிகாரம் இருந்தால் கொடுக்கலாம். சில்வர் மெட்டிக்கு வரியில்லை. திருமணமான பெண்கள் இதை வரவேற்பார்கள். ஒரு பேராசிரியர் சொன்னார், திருமணமான பெண்கள் மட்டுமல்ல, கல்லூரிகளில் படிக்கும் மாணவிகள்கூட சில்வர் மெட்டி போட்டிருக்கிறார்கள் என்று. எனவே மாணவி

(முற்பகல் 11-55)

களும் இதைப் பாராட்டுவார்கள். சில்வர் மெட்டி என்பது ரொம்ப சின்ன விஷயம் என்று நினைத்தேன். இன்றைக்கு கல்லூரியில் படிக்கின்ற இளம் பெண்கள் எல்லாம் மெட்டி போட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தச் சலுகை கல்யாணம் ஆனவர்களுக்கு மட்டும் என்று இருக்கக் கூடாது. நமக்கு அதிகமாக நிதி ஆதாரம் தேவை. அதற்காக நாம் எல்லாவற்றிற்கும் சலுகை அளிக்க முடியாது. அதுபோல் பலமுனை வரியை ஒருமுனை வரியாக மாற்றியிருக்கிறோம். அதிலே சட்டச் சிக்கல்கள் இருந்தால், மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் பார்த்துக்கொள்வார்கள். நம்முடைய நிதி நிலையைப் பொறுத்தவரையில், ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டில் ரூபாய் 960 கோடி செலவிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்க, நாம் இறுதியாகச் செலவிடக் கூடிய தொகை ரூபாய் 1,069 கோடியாக அமையும். அதுபோல் 1986—87 ஆம் ஆண்டுத் திட்டம் செலவு ரூபாய் 1,153 கோடி என மத்தியத் திட்டக் குழு ஒப்புதல் அளித்திருக்க, இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 1,200 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் இரண்டு ஆண்டுகளில், நாம் திட்டங்களுக்காகச் செலவிடுவது ரூபாய் 2,269 கோடியாக அமையும் மொத்தத் திட்டச் செலவில் இது 39 சதவிகிதம் என்று நிதிநிலை அறிக்கையில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

அடுத்து, கல்வியைப் பொறுத்தவரையில், கல்விக்காக ஒன்றுமே செய்யவில்லை என்று இங்கே சில மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். நம்மிடம் இருக்கிற நிதி ஆதாரத்தை வைத்துத்தான், கல்விக்காக நாம் ஒதுக்க முடியும். அந்த அடிப்படையில் சென்ற ஆண்டு கல்வி மேம்பாட்டிற்காக ரூபாய் 468 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்க இந்த ஆண்டு ரூபாய் 551 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இருப்பதை வைத்துக் கொண்டு நல்லமுறையில் நிதி பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. அதோடு கூட 1986—87 ஆம் ஆண்டில் மாநில அரசின் நிதிநிலை மனநிறைவு அளிப்பதாக



இருக்கும் என்று தெரிவித்திருப்பதுடன், வருவாய்க் கணக்கில் உபரி ரூபாய் 223.25 கோடியாக உயரும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதுபோல் மூலதனக் கணக்கிலான செலவு ரூபாய் 172.44 கோடியாக உயர்ந்துள்ளது. அந்த அடிப்படையில் 1986-87 ஆம் ஆண்டிற்கான பற்றாக்குறை 4.79 கோடி ரூபாயாக இருக்கும் என்றும், துவக்கத்தில் ஏற்படக்கூடிய பற்றாகுறையான ரூபாய் 7.45 கோடியையும் சேர்த்துக்கொண்டால், 1986-87 வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 12.24 கோடி இறுதிப் பற்றாக்குறைவாக இருக்கும் என்றும் தெளிவாக வரவு-செலவுத் திட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. வருமான வரிகளை தீவிரமாக ஒழுங்குபடுத்துவதன் மூலமும் வருவாயைப் பெருக்க முடியும் என்று நம்பிக்கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டு வரிகளை உயர்த்தவில்லை. இன்னும் சொல்லப்போனால், நல்லமுறையில் வரிகளை சீரமைத்திருக்கிறோம். இவ்வாறு வரிகளை சீரமைத்ததன் காரணமாக அரசுக்கு ஏற்பட்ட வருவாய் இழப்பு 20 கோடி ரூபாய் தான். உற்பத்தியைப் பெருக்க வேண்டும், விலைவாசிகளைக் குறைக்க வேண்டும், தொழில்களை அதிகரிக்க வேண்டும் என்கிற அடிப்படையில் இந்த வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. தொழில்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டுமென்ற அடிப்படையில் சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. தொழில் முனைவோர்களுக்கு உள்ள சிரமங்களைக் குறைத்து, பண்டங்களை அதிக அளவில் உற்பத்தி செய்து, விலைவாசிகளைக் குறைத்து, அரசின் வருவாயை அதிகரிக்க வேண்டுமென்ற நல்ல அடிப்படையில் இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது. 10 பொருள்களுக்கு விற்பனை வரியை நீக்கி விட்டோம். உயிர்காக்கும் மருந்துகள் 41-க்கு 8 சதவிகித வரியை 4 சதவிகிதமாகக் குறைத்திருக்கிறோம். அதையும் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று, என்னைப் பொறுத்தவரையில், கேட்டுக்கொள்கிறேன். நாமெல்லாம் ஆயுர்வேதம் பற்றியும் சித்தா பற்றியும் சொல்கிறோம். இந்த மருந்துகளுக்கு எல்லாம் பெருமளவுக்கு அரசு சலுகைகள் அளிக்க வேண்டும். சலுகைகள் அளிப்பதுடன் நிறுத்திக் கொள்ளாமல், இந்தச் சலுகைகள் எல்லாம் ஏழையெளியவர்களுக்கு நேரடியாகப் போய் சேர்கின்றனவா என்றும் பார்க்க வேண்டும்.

அடுத்து, சில அரசாங்க ஆஸ்பத்திரிகளில் பணம் வாங்கப்படுவதாகச் சொல்கிறார்கள். அதுபோல் சில ஆஸ்பத்திரிகளில் டாக்டர்கள் வந்து பார்ப்பதே இல்லை என்று சொல்கிறார்கள். இன்னும் சில இடங்களில் டாக்டர்கள் 'அலோ மிஸ்டர் ராமசாமி, ஹௌ ஆர் யூ' என்று கேட்பார்கள். ஆனால் நம்மிடையே சாதாரண டாக்டர் என்று கருதப்படும் டாக்டர் நேவ்

களுக்குக் கணிக்கும் மருந்தைத்தான் அமெரிக்காவிலுள்ள 'எக்ஸ்பெர்ட் டாக்டர்' என்று கருதப்படும் டாக்டரும் கணிக்கிறார். ஆனால் அவர்கள் வசூல் செய்வதில்தான் குறியாக இருக்கிறார்களே தவிர, நோயாளிகளைச் சரியாக கவனிப்பதில்லை. இதையெல்லாம் நினைத்துப் பார்க்கும்போது,

(நண்பகல் 12-00)

அரசாங்க ஆஸ்பத்திரிகளில் எவ்வளவோ தேவலாம். அரசாங்க ஆஸ்பத்திரியில் 50 ரூபாய் கொடுத்து பார்த்துக்கொள்வதை விட்டுவிட்டு, தனியார் ஆஸ்பத்திரிகளில் போய் படுத்துக்கொண்டு, 1,000, 2,000 ரூபாய் என்று அபராதம் செலுத்துவதுபோல் செலுத்திவிட்டு, நோயையும் அதிகப் படுத்திக்கொண்டு வருவதைத்தான் நாம் பார்க்கிறோம். அரசாங்க ஆஸ்பத் திரிகளில் 50, 100 ரூபாய் என்று கொடுத்தாலே அற்புதமாகப் பார்க்கிறார்கள். இந்த ஐம்பதையும் நூறையும் பெரிதாக எடுத்துக்கொண்டு, தனியார் ஆஸ்பத்திரிக்குச் சென்று படுத்துக்கொண்டு, 1,000, 2,000 ரூபாய் என்று ஏன் அபராதம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. அதற்காக, அரசாங்க ஆஸ்பத்திரிகளில் ரூபாய் வாங்குவதை நான் நியாயப்படுத்த வில்லை. ரூபாயே வாங்கக்கூடாது என்று நாம் சொல்வதால், நிறைய பேர் 'டிரையினிங்' பெற்றவர்கள் வெளியில் போய்விட்டார்கள். அவர்கள் பிரை வேட்டாக பிராக்டீஸ் பண்ணினால், அவர்களைப் பொறுத்தவரையில், நிறைய பணம் கிடைக்கிறது. அப்படி வருமானம் வருகிற இடத்தைத்தான் அவர்கள் பார்ப்பார்கள். ஆனால் அரசாங்கத்தில் நாம் இந்த வருமானத்தைப் பெற முடியுமா என்றால், பெற முடியாது. பல்வேறு மருந்துகளுக்கு பல முனை வரியிலிருந்து விலக்களித்து, ஒருமுனை வரியாகப் போட்டிருக்கிறோம். ஆனால் இந்தச் சலுகைகள் மக்களுக்குப் போய்ச் சேருகின்றனவா என்று பார்க்க வேண்டும்.

அதேமாதிரி, குழந்தைகளுக்குப் பால் பொருட்கள்பற்றிச் சொல்லியிருக் கிறார்கள். அதெல்லாம் பால் கொடுப்பவர்களுடைய பிரச்சினை. பரிசுச் சீட்டுகளுக்கு 20 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக வரி குறைக்கப்பட்டிருக் கிறது. கேரளாவில் 20 சதவீதமே வரி போட்டிருக்கிறார்கள். பரிசுச் சீட்டுக்கு ஏன் வரியைக் குறைக்க வேண்டும்? ஏழைகள் கஷ்டப்படுகிறார்களா? கஷ்டப்படட்டுமே. அவர்களுக்கு லட்சம், பத்து லட்சம் ரூபாய் வரவேண்டு மென்பதானே பரிசுச் சீட்டை வாங்குகிறார்கள். ரூ. 1.20 கொடுக்க முடியாது என்று சொன்னார்களா? சில லாட்டரி ஏஜெண்டுகள் சில டிமாண்டு களை வைத்தார்கள். "லாட்டரிச் சீட்டுக்கு வரியைப் போட்டீர்கள்,





வரியைப் போட்டதால் வியாபாரம் படுத்துவிட்டது. அப்படி படுத்துக் கொண்டதால் முடியவில்லை" என்றார்கள். படுத்துக்கொண்டால் போய் கோழிப் பண்ணை வை. யார் வேண்டாம் என்று சொன்னார்கள்? லாட்டரிச் சீட்டு நடத்தி, 10 சதவீதம் என்பது 20 பர்சண்ட்டாக ஆகிவிட்டது என்று ரொம்ப கஷ்டப்பட்டு கேட்கிறார்கள். எதற்காக வரி விகிதத்தை நாம் இருபதிலிருந்து 10 ஆகக் குறைக்க வேண்டும்? அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோழித் தீவனத்திற்கு 5 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாக வரியைக் குறைத்திருக்கிறார்கள். அது நியாயமானதுதான். இல்லாமல் கூட செய்திருக்கலாம். இருந்தாலும் கோழி வளர்ச்சியை ஊக்குவிக்கக் கூடிய அளவிற்கு இந்த நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. காரணம், கோழி விலை பயங்கரமாக ஏறிவிட்டது. அதனால் சைவமாக மாறுவது ரொம்ப சௌகரியமாக இருக்கும் போல இருக்கிறது. வரிவிதிப்பு முறை களைப் பொறுத்தவரையில், எளிமைப்படுத்துவது என்ற அடிப்படையில் சில செய்திருக்கிறார்கள். அப்படிப் போடும்போது, இங்கே உற்பத்தியாகக்கூடிய சில பொருட்களுக்கு 10 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாகப் போட்டிருக் கிறோம். முக்கியமாக எலெக்ட்ரானிக் பொருட்களுக்குப் போட்டிருக்கிறோம். அதே நேரத்தில் வெளிமாநிலங்களிலிருந்து இங்கே வரும் பொருட்களுக்கு 10 சதவீதம் போடுகிறோம். ஒரே சீராக இருக்க வேண்டுமென்பதற்காகப் போடுகிறோம். ஆனால் சட்டப்படி அது செல்லுமா என்பது சந்தேகமாக இருக்கிறது. இந்திய அரசியல் சட்டம் ஆர்ட்டிகிள் 304(ஏ) வைப் பொறுத்த வரையில், ஒரு வகையில், பாரபட்சமாகப் போடுவதுபோல் தோன்றும். வெளி யிலிருந்து வருகிற பொருட்களுக்கு வரி போடலாம். ஆனால் எவ்வளவு போடலாம் என்றால், நம் ஊரில் அந்தப் பொருள்களுக்கு எவ்வளவு வரி போட்டிருக்கிறோமோ அதற்குட்பட்டுத்தான் போட முடியும். ஆனால் அதை அதிகப்படுத்திப் போடக்கூடிய அளவுக்கு நமக்கு அதிகாரம் இல்லை. அதிகாரம் இல்லாதது குறித்து ஏன் முயற்சிக்க வேண்டும்? அப்படி முயற்சி செய்கிறோமா என்று தெரியவில்லை. அல்லது அதிக அதிகாரம் கேட்பதற் காக இப்போது 'டிரை' செய்கிறோமா என்றும் தெரியவில்லை. ஒருவேளை நான் தவறாக இருந்தாலும், அந்த சந்தேகத்திற்கு விளக்கம் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனக்கு ஏற்பட்டிருக்கிற சந்தேகம் சாதாரண மனிதனுக்கு ஏற்பட்டிருக்கிற சந்தேகம்தான். அதேமாதிரி, இன்னொரு இடத்தில் வரி போடுவதைப் பொறுத்தவரையில், "பர்சேஸ் டாக்ஸ்" என்று சொல்லியிருக்கிறார்கள் ... 'சேல் டாக்ஸ்' என்பதே எங்கும் காணோம். வரி ... ஷெட்யூலைப் பார்த்தால், அதை மாநில

சர்க்கார் போட முடியாது. மத்திய சர்க்காரும் போட முடியாது. காரணம் அது கன்கரண்ட் லிஸ்ட்டில் இல்லை. அப்படி இரண்டு லிஸ்ட்டிலும் இல்லாத ஒரு வரியைப் போடுவதற்கு யாருக்கு அதிகாரம் இருக்கிறதென்றால், அது மத்திய அரசுக்குத்தான் இருக்கும். மத்திய அரசுக்குத்தான் அரசியல் சட்டப்படி அந்த அதிகாரம் இருக்கிறது. அப்படியே 'பர்ச்சேஸ் டாக்ஸ்' போட வேண்டுமென்று சொன்னால், நமக்கு எப்படி அந்த அதிகாரம் வரும் என்று தெரியவில்லை. 'பர்ச்சேஸ் டாக்ஸ்' என்பதை உண்மையிலேயே 'சேல்ஸ் டாக்ஸ்' என்று சொல்கிறோமா என்பதையும் பார்க்க வேண்டும். 'சேல்ஸ் டாக்ஸ்' தான் 'பர்ச்சேஸ் டாக்ஸ்' என்று சொன்னால், பலமுனையை ஒரு முனையாக்குவதில் என்ன அர்த்தம் இருக்கிறது? பலமுனையை ஒரு முனையாக ஆக்குகிறோம் என்று சொல்லி, வரியை உயர்த்தியிருக்கிறோம். அதே நேரத்தில் ஒருமுனை வரியோடு பர்ச்சேஸ் டாக்சையும் சேர்த்தால், அது பலமுனை விற்பனை வரியாக இருக்காதா? ஆகவே மாநில அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லாத ஒன்றில் ஏன் தலையிட வேண்டும் என்று தெரியவில்லை ஆனால் ரொம்பத் திறமையாகத்தான் நமது நாவலர் அவர்கள் போட்டிருக்கிறார். எப்படி போட்டிருக்கிறார் என்றால், "குஜராத்தில் இப்படிப் பண்ணியிருக்கிறார்கள்" என்கிறார். நல்லவேளை. குஜராத்தில் போட்டிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார். அதனால் நமக்கு என்ன வந்தது! அதிலே, மத்திய அரசின் ஒப்புதலைப் பெற முடியுமா என்று பார்க்கிறார். மத்திய அரசாங்கத்தின் ஒப்புதல் எப்போது நமக்குக் கிடைக்கும் என்று சொன்னால், அது கன்காண்ட் லிஸ்ட்டில் இருந்தால்தான் கிடைக்கும். இல்லையானால் கிடைக்காது. அப்படி அதன்மூலம் கிடைக்கும் வருமானம் சரியாக இருக்குமா என்பதைக் கருத்தில் கொண்டு வேறு ஏதாவது போட்டால், நன்றாக இருக்கும். அதுதான் லாட்டரிச் சீட்டு இருக்கிறது, மருந்துகள் இருக்கின்றன, அதில் போடலாம் என்று சொல்கிறார்கள். அதையும் பார்க்க வேண்டும். அதேமாதிரி, நம்முடைய மதுவிலக்குக் கொள்கையைப் பொறுத்த வரையில், ஒன்றைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். நாங்களே இந்த அரசாங்கத்தோடு சண்டை போட்டிருக்கிறோம். குடிக்க வேண்டுமென்று யாரும் சொல்லவில்லை. குடிக்கக்கூடாது என்றுதான் சொல்கிறோம். ஆனால் குடிக்கிறவர்களை ஒன்றும் செய்ய முடியாது. குடிக்கிறவர்களைத் தடுப்பதால், அடுத்த மாநிலத்திற்கு வருமானம் போகிறது. அங்கே போய்க் குடிக்கிறார்கள். கஷ்டப்படுகிறார்கள். ரொம்ப அசிங்கமாக இருக்கிறது. எடுத்ததற்கெல்லாம் திருப்பதி, திருப்பதி என்று சொல்லிக்கொண்டு போனார்கள். இதனால் திருப்பதி வெங்கடாசலபதி பெயரையே கெடுத்துவிட்டார்கள். சாமி கும்பிடப் போகிறேன் என்று சொல்லிவிட்டு, இவனே சாமி



யாடுகிறான். அப்படிப்பட்ட நிலைமையைத் தவிர்க்க வேண்டுமென்றும், ஏழைகள் சிறைச்சாலையில் அடைக்கப்படுகிறார்கள் என்றும், அவர்களுடைய குடும்பம் பாதிக்கபபடுகிறது என்றெல்லாம் சொல்லி, அதை மனதில் வைத்துத்தான் நாங்கள் திரும்பத் திரும்ப வற்புறுத்தினோம். கணவன் சிறையில் இருந்தால், மனைவியைக் காப்பாற்றுவது யார்? குடும்பத்தில் சம்பாதிக்கக் கூடிய கணவனை விட்டுவிட்டு ஒரு மனைவி என்ன செய்வாள்? கணவன் செய்த தவறுக்காக மனைவியைத் தண்டிக்க எந்த சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறது என்று எதிர்த் தரப்பிலிருந்து எல்லாக் கேள்வியையும் கேட்டு நெருக்கடி கொடுத்தோம். கடைசியில் அரசாங்கம் மதுவிலக்குக் கொள்கையைத் தளர்த்திக்கொண்டு வருகிறபோது, மகாத்மா காந்தியைக் கூப்பிடுகிறோம். என்ன காரணம்? அவர் வரமாட்டார் என்ற நம்பிக்கையில்தான் அதைச் செய்கிறோம். மகாத்மா காந்தி சொன்னார் என்றால், அவர்மாதிரி இப்போதும் குடிக்காதவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். ஆனால் குடிப்பவர்களை என்ன செய்ய முடியும்? உலகத்தில் பெரிய பெரிய நாகரிக நாடுகளிலேகூட குடித்துக்கொண்டிருக்கிறார்கள் என்கிறபோது, 54 சதவீதம் படிப்பறிவற்றவர் உள்ள நம் நாட்டில் குடிப்பவர்களைப்பற்றி நாம் என்ன சொல்ல முடியும்? இந்தக் காலத்திலும் நாம் இதையே பேசிக்கொண்டிருந்தால், அடுத்தவர்கள் பார்த்து சிரிக்க மாட்டார்களா? நமக்கு நிதி ஆதாரமே குறைவாக இருக்கிறது. எப்படி நாம் நம் திட்டங்களை நிறைவேற்றப் போகிறோமோ என்று அல்லலுற்றுக்கொண்டிருக்கும்போது, மதுவிலக்கை மீண்டும் கொண்டுவரச் சொல்லி நிர்ப்பந்தப்படுத்துகிறார்கள்.

(பிற்பகல் 12-05)

அதுவும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் மனதைச் சுடுவதற்கு எதைச் சொன்னால் முடியுமோ அதைச் சொல்கிறார்கள். இந்த வருமானம் இல்லாவிட்டால், பல வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதில் சங்கடங்கள் ஏற்படுமே. அதைப்பற்றியெல்லாம் அவர்களுக்குக் கவலை இல்லை. உண்மையில் யாரும் குடிக்கக்கூடாதென்ற நோக்கத்தோடு அவர்கள் சொல்கிறார்களா என்றால், இல்லை. சங்கடப்பட்டால் சங்கடப்படட்டுமே என்று இருக்கிறார்கள். அதுதான் அவர்கள் நோக்கம். குடிப்பதைத் தவறு என்று பிரச்சாரம் செய்யுங்கள். விற்பனை நிலையங்களைக் குறையுங்கள். கடைகள் நடுத்தெருவில் வாராமல் பார்த்துக்கொள்ளுங்கள். நெறிமுறைகளைச் சொல்லிக் கொடுங்கள். இவ்வாறெல்லாம் பிரச்சாரம் செய்யுங்கள். இத்தமாதிரி செய்யலாமே தவிர முற்றிலுமாக மதுவிலக்கை மீண்டும் கொண்டு வருவது தேவையில்லை என்று சொல்லிக்கொள்கிறேன். சுமார் 250 கோடி ரூபாய் இழக்க வேண்டி வரும் என்று சொன்னால், நமக்கு உண்மையிலேயே

[திரு. க. சுப்பு] [1986 மார்ச் 24

மிகவும் சங்கடங்கள் ஏற்படும். தொழிற்சாலைகள் வருவதில் பாதிப்பு ஏற்படும். பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் கூட சொன்னார். "மதுவிலக்கை மீண்டும் கொண்டுவந்தால் பனைமரத்தில் ஏறும் தொழிலாளர்களைப் பாதுகாப்பது எப்படி?" என்று கேட்டார். அந்தத் தொழில் நமக்குக் கேவலமாகப் படலாம். ஆனால் மதுமரத் தொழிலாளர்களுக்கு அதுதான் தொழில். பல பேர் அந்தத் தொழிலை நம்பியிருக்கிறார்கள். பல பேர் சாராயக் கடைகளை நம்பியிருக்கிறார்கள். சாராயக் கடைகளைச் சுற்றி சிறு சிறு கடைகளை வைத்திருக்கும் தாய்மார்கள் ஏராளம் பேர். அவர்கள் எல்லாம் டாட்டாவின், பிர்லாவின் குடும்பத்தைச சேர்ந்தவர்கள் அல்லர். சாராயக் கடைகளை நம்பி, இத்தாய்மார்களுக்கு சிறு வியாபாரம் செய்ய பல பேர் வட்டிக்குக் கடன் கொடுத்திருக்கிறார்கள். இவ்வாறு தமிழ் நாடு முழுவதும் இலட்சக்கணக்கான பேர் பிழைத்துக்கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் நாம் மறந்துவிடக் கூடாது.

குடிப்பது கெடுதல்தான். யாரும் மறுக்கவில்லை. பால் சாப்பிடுவது நல்லதுதான். ஆனால் யார் பால் கொடுக்கிறார்கள்? உடம்புக்கு நல்லது என்பதற்காக நல்லது எல்லாம் நமக்கு யாரும் கொடுத்து விடுவதில்லை. யாரோ சில பேர் வசதியுள்ளவர்கள் செய்கிறார்கள்.

கள், சாராயத்தை ஒழித்துவிட்டால், பிறகு பிராந்தி போன்று மது பானங்கள் விற்கும் கடைகளையும் ஒழித்து விடுவீர்களா என்று கேட்கிறார்கள். முடியாது. நினைத்தாலும் அது முடியாது.

மதுவிலக்குக் கொள்கையை மீண்டும் கொண்டு வரவேண்டுமென்றால், மாநில அரசுக்கு மத்திய அரசு நிதி உதவி செய்ய வேண்டும். காந்தி சொன்னார், அவர் கொள்கையைப் பின்பற்றுகிறோம் என்கிறபோது, அதனால் ஏற்படும் நிதி இழப்பையும் மத்திய சர்க்கார் ஈடு கட்ட வேண்டும். "We won't compromise on security" என்று சொன்னதுபோல் "We won't compromise on principles" என்றும் சொல்லலாம். நாட்டின் பாதுகாப்புக்காக 6,000 கோடி ரூபாய் செலவழிக்கிறார்கள். நாம் நூறு கோடி ரூபாய்தான் இதற்காகக் கேட்கிறோம். ஆகவே அதை மத்திய அரசு கொடுக்க வேண்டும்.

சமீபத்திய நிதிநிலை அறிக்கையில் மாநில சர்க்காருக்குப் பகிர்ந்தளிக்கக் கூடிய வரிகளை மத்திய சர்க்கார் இப்போது போடவே இல்லை. அதுதான், சொல்லப் "டேஞ்சரஸ்". பூராவும் எக்சைஸ் டூட்டி, கஸ்டம்ஸ் டூட்டி என்று



1986 மார்ச் 24] [திரு. க. சுப்பு]

தான் போட்டிருக்கிறார்களே தவிர, மாநில அரசுக்குப் பகிர்ந்தளிக்கக்கூடிய வரிகளைப் போடவே இல்லை. சென்ற தடவையாவது வருமான வரி வசூலில் 39 சதவீதம் அதிகமாக வசூல் செய்ததால், ஏதோ கொஞ்சம் நமக்கும் கிடைத்தது. ஆனால் இப்போது அதுவெல்லாம் இல்லை. இப்படிப்பட்ட நிலையில் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில்தான் நாம் இருக்கிறோம்.

குடிநீர்ப் பிரச்சினை என்றால்கூட, நாமாக ஒன்றும் செய்ய முடியவில்லை. நம் ஊரில் இருக்கிற காட்டில் கால்வாய் வெட்ட வேண்டுமென்றால்கூட, டில்லியிடமிருந்து அனுமதி வரவேண்டியிருக்கிறது. கால்வாய் இங்கே இருக்கிறது. காடு இங்கே இருக்கிறது. ஆனால் அனுமதிக் கடிதம் டில்லியிலிருந்து வர வேண்டியிருக்கிறது. நாம் என்ன அமெரிக்க நாட்டிலிருந்தா சர்க்கார் நடத்திக் கொண்டிருக்கிறோம்? கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்திற்கு மத்திய அரசு இசைவு அளிக்க வேண்டும். வனங்களை எல்லாம் மத்திய சர்க்கார் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து விட்டார்கள். இனி அதற்கும் அனுமதி பெற வேண்டும். நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி அதிகம். அங்கே ஒரு மின் உற்பத்தித் திட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்றால், அதற்கும் மத்திய அரசின் அனுமதி பெற வேண்டும்.

உண்மையிலேயே நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில், பக்ரா நங்கல் மாதிரியோ, சூப்பர் தெர்மல் பவர் ஸ்டேஷன் மாதிரியோ ஒன்றுமில்லை. இப்படி எல்லாம் இல்லாத ஒரு மாநிலத்தில் அதிகமான முதலீடுகளை மத்திய சர்க்கார் போட்டு மாநில அரசுக்கு நிறைய உதவிகளைச் செய்ய வேண்டும்.

அடுத்து, பாதுகாப்பு அடிப்படையிலே இன்றைக்கு ரொம்ப முக்கியமான பிரச்சினையாக இருப்பது, ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினை. ஸ்ரீலங்காவில் இருக்கக்கூடிய பிரச்சினைகளை தமிழர்களாகிய நம்மைவிட தமிழரல்லாத ஒருவர், குணசேகரா என்கிற ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் டில்லிக்குச் சென்று சொல்லியிருக்கிறார். அங்கே நிலைமை மிக மோசமாக இருக்கிறதென்று சொல்லியிருக்கிறார். மக்கள் நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறதென்று சொல்லியிருக்கிறார். "ஒரு சிவில் வார் வந்துவிடும் போலிருக்கிறது" என்று கூறியிருக்கிறார். இதில் உடனடியாகத் தலையிட்டு ஏதாவது செய்யவில்லை என்றால், ரொம்ப மோசமாகப் போய்விடும் என்று கவலையோடு சொல்லியிருக்கிறார்.

(பிற்பகல் 12-10)

அங்கே இருக்கிற சிங்களவர்களே மனம் மாறும்படி செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். தமிழர்களுக்கு மட்டும் சொல்லவில்லை. சிங்களவர்களே மனம் மாறி, நிலைமைகளை உணர்ந்துகொண்டு தமிழர்களுடைய நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளும்படி செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். தைரியமாகத்தான் சொல்லியிருக்கிறார். அதுமாதிரி ஸ்ரீலங்கா பாராளுமன்றத்திலே இருக்கிற ஒரே ஒரு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினரான அவர் அங்கே பேசியிருக்கிறார். "சிங்களவர்கள் எல்லாம் கேலி பேசினார்கள். கிண்டல் செய்தார்கள். நம் இனத் துரோகிகள்" என்று பேசினார்கள். நியாயமாகப் பேசினால் துரோகி என்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு முயற்சி ஸ்ரீலங்காவில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. சிங்களவர்கள் மத்தியிலே, சிங்களவர்களும், தமிழர்களும் சமரசப் போக்கோடு ஒன்றாக இருந்தால்தான் இந்த நாடு உருப்படும், பொருளாதாரம் இருக்கும், இல்லாவிட்டால் அழிந்து போகும் என்ற சிந்தனை இப்போது வளரத் தொடங்கியிருக்கிறது. மத்திய சர்க்கார் தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நாமும் சொல்லிச் சொல்லி அலுத்துப் போனோம். நாம் ஒன்றும் யோசிக்க வேண்டியதில்லை. சொல்கிற மாற்றத்தை எல்லாம் ஒத்துக்கொள்ளவில்லை. (மணி அடிக்கப்பட்டது). 1948-லே ஒரு இனப் படுகொலை நடந்தபோது, அதில் நாம் தலையிடுவது தவறில்லை என்று தீர்மானமே போட்டிருக்கிறோம். தலையிட்டால் என்ன என்று திரு. சுப்பிரமணியசுவாமி சொல்கிறார். நம் அரசு இன்னும் அதைவிட தீவிரமான நடவடிக்கை எடுத்திருக்கிறது. பொற்கோயிலின் உள்ளே புகுந்தால் என்ன ஆகுமென்று நமக்குத் தெரியும். சிரமம்தான். இன்றைக்கும் பஞ்சாபில் எலக்ஷன் நடந்து, சட்டசபை முற்றுகைப் போராட்டம் நடந்து, டெய்லி சுட்டுக்கொண்டிருக்கிறார்கள். பஞ்சாப் பூராவும் காலியாகிவிடுமோ என்று நினைக்கக்கூடிய அளவுக்கு வன்முறையாளர்களின் அட்டகாசம் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. பொற் கோயிலுக்குள்ளே நாட்டின் பாதுகாப்பை உத்தேசித்து நுழைய வேண்டிய கட்டாயம் சர்க்காருக்கு வந்தது. இது அரசினுடைய கொள்கையா? நாட்டினுடைய பாதுகாப்புக்கு ஆபத்து வரும்போது, புனிதத்தைப் பேசிக்கொண்டிருந்தால் என்னாவது? அந்த அடிப்படையிலே தைரியமாக நாம் இராணுவத்தை அனுப்ப நடவடிக்கை எடுத்தோம். அதனால் பஞ்சாபில் ஒரு நிலைமை வந்தது. அதனால் அன்னை இந்திரா காந்தி சுட்டுக் கொல்லப்பட்டார். தன் உயிரைக் கொடுத்து நாட்டினுடைய ஜனநாயகப் பாதுகாப்பை உறுதிப்படுத்திவிட்டுப் போனார். அதுமாதிரி





ரதமர் உயிரைவிட நம்முடைய உயிர் பெரிதா? இல்லை. அந்த அடிப்டையிலேதான் இன்றைக்கு ஸ்ரீலங்காவிலே இருக்கக்கூடிய நம்முடைய தமிழ்க்கள் இனப் படுகொலை செய்யப்படுகிறார்கள். உலக நாடுகள், 'மனிதரிமை' கமிஷனிலே ஸ்ரீலங்காவிலே இனப்படுகொலை நடக்கிறது என்று சால்லின. உலகின் கருத்துக்கள் எல்லாம் கொடுக்கப்பட்டுவிட்டது. யவர்கள் செயலுக்கு எதிராக ஸ்ரீலங்கா இருக்கிறது. அந்த அளவுக்கு ற்றிப்போய்விட்ட நிலைமையில், இந்திய சர்க்காருக்கு 'எக்ஸ்ட்ரீம் டெப்ஸ்' எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் இன்றைக்கு வந்திருக்கிறது. அது பாற்கோயிலுக்குள் எடுக்கப்பட்ட நடவடிக்கையைப் போலக் கூட இருக்கலாம். அது தவறல்ல. அதற்கு ஒரு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ந்தச் சந்தர்ப்பத்திலே வலியுறுத்தி எனக்கு வாய்ப்பு அளித்த தலைவருக்கு ன்றி கூறி அமைகிறேன்.

திரு. ஏ. ஜே. தாஸ்: மாற்றுத் தலைவரவர்களே, 1986-87 ஆம் ஆண்டு திநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற வாய்ப்பு அளித்தமைக்காக நன்றி கூறிக்கொள்கிறேன்.

ஸ்ரீலங்காத் தமிழர்கள் பிரச்சினையில் மத்திய அரசும், மாநில அரசும் டுத்துக்கொண்ட நடவடிக்கைகளுக்குப் பாராட்டுத் தெரிவித்து, இன்றைக்கு ஸ்ரீலங்காத் தமிழர்களின் நிலைமை எந்த அளவிலே இருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் மிக விளக்கமாகச் சொன்னார்கள். எந்தெந்த நிலைமையிலே எப்படியெல்லாம் உலக அரசாங்கத்தின் தலையீடுகள் இருக்கும்போது, இந்திய சர்க்காரும், மாநில சர்க்காரும் ஸ்ரீலங்கா பிரச்சினையை எப்படி அணுக வேண்டுமென்று அவர் சொல்லியிருக்கிறார்.

இன்றைக்கு தமிழகத்திலே உள்ளாட்சித் தேர்தல் நடத்தி ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்கிய அரசுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த 5 ஆண்டு கால வரலாற்றைப் புரட்டிப் பார்ப்போமேயானால், கடுமையான வறட்சி, வெள்ளம், கடுமழை ஆகியவற்றால் தமிழகம் பாதிக்கப்பட்டு, அதுவும் குறிப்பாக 1985-86-ல் பெரும் பாதிப்புக்குள்ளாகி, தமிழகத்தில் ஒரு தனித் தன்மை நிலவியது. ஒருபுறம் வெள்ளம், மறுபுறம் உயிர் இழப்பு எல்லாம் ஏற்பட்டது. இது தொடர்ந்து கடந்த 5 ஆண்டுகளாக ஏற்படுகிறது. இந்த நிலையை அரசு கவனிக்கவில்லையா அல்லது அதிகாரிகள் கவனிக்கவில்லையா என்பதைப் பார்க்க வேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த 5 ஆண்டுகளாக நிரந்தரமான பாதிப்பும்,

ஒருபுறம் வெள்ளச் சேதமும், உயிர்ச்சேதமும் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் போது, அந்த 5 ஆண்டுகளாக ஏன் அரசு அந்தப் பிரச்சினையில் கவனம் செலுத்தவில்லை என்பதுதான் என்னுடைய கேள்வியாகும், கோரிக்கையுமாகும். அதுபற்றி அதிகாரிகள் கவனிக்கவில்லையா? அமைச்சர்கள் கவனிக்கவில்லையா? யார் கவனிக்கவில்லையோ அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். வெள்ள நிவாரணப் பணிகளுக்காக 66.8 கோடி ரூபாய் இதுவரை மத்திய அரசு கொடுத்திருக்கிறது. இந்த நிவாரணப் பணிகளுக்காகச் செலவிடப்பட்ட தொகை 45 கோடி ரூபாய் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ரூ. 21.8 கோடி மிச்சமாக இருக்கிறது. ஆனால் இந்த மிச்சமான பணத்திலே இன்றைக்கு எங்கு பார்த்தாலும் வெள்ள நிவாரணப் பணிகள் சரியான முறையிலே மக்களுக்குப் போய்ச் சேரவில்லை என்பது குற்றச்சாட்டாக இருக்கிறது.

(பிற்பகல் 12-15)

சென்னை நகரிலே பார்த்தால்கூட, இந்தப் பணிகள் நல்ல முறையில் நடக்கவில்லை. அதிகாரிகள் சரியான முறையில் செயல்படவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாஸ் அவர்கள் மேலெழுந்தவாரியாகச் சொல்ல வேண்டாம். இந்த மன்றத்திற்கும் ஆட்சிக்கும் உதவியாக இருக்கிறவகையில், தய்வுசெய்து இன்னின்ன இடங்களில் இந்த வேலை நடக்கவில்லை என்று குறிப்பிட்டுக் காட்டினால், மாண்புமிகு அமைச்சர்களும் நடவடிக்கை எடுப்பதற்கு உதவியாக இருக்கும். அந்த வகையில் அவர் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஏ. ஜே. தாஸ்:** உண்மையிலேயே என்னிடத்தில் ஆதாரம் இருக்கிறது. எந்த எந்த இடத்தில் அந்தப் பணிகள் சரிவர நடக்கவில்லை என்று சொல்ல வேண்டுமென்றால், சொல்லத் தயாராக இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் கேட்பதற்குத் தயாராக இருக்கிறார் என்றால் சொல்லத் தயார். இல்லையென்றால் குறிப்பாக எந்த எந்த இடத்தில் சரியாக நடக்கவில்லை என்று எழுதிக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்.

தொழில் வளர்ச்சியைப் பார்க்கிறபோது, சில இனங்களில் வளர்ச்சி அடைந்திருந்தாலும், 'பப்ளிக் செக்டர் அண்டர்டேக்கிங்' என்று சொல்லுகிற பொதுத் துறை நிறுவனங்களின் செயல்பாடு மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது.



பொது நிறுவனங்களில் அதிகாரிகளாக இருக்கிற எம்.டி.க்கள் மாடர்ன் ராஜாக்களைப் போல், நவீன ராஜாக்களைப் போல் காட்சி அளிப்பதைப் பார்க்கிறோம். பொது நிறுவனங்களில் பலவிதமான தவறுகள் நடக்கின்றன. இதற்கும் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் ஆதாரம் கேட்டால், ஆதாரம் தருவதற்கும் தயாராக இருக்கிறேன். எப்போது வேண்டுமானாலும் கொடுப்பதற்குத் தயார். பிறகு கேட்டாலும் கொடுக்கத் தயார்.

**திரு. எஸ். ஆர். இராதா:** என்னுடைய பெயரை இழுத்துவிட்டதால், சொல்லுகிறேன். ஆதாரம் இருக்கிறது, காட்டுகிறேன் என்று சொல்லிக் கொண்டே இல்லாமல், எதையாவது காட்டினால்தானே அவருக்கும் நல்லது, நாட்டுக்கும் நல்லது. அப்போதுதான் விவாதத்தில் பதில் சொல்லும்போது, அவருக்கு என்ன காரணம் என்பதை விளக்கிச் சொல்ல முடியும். இங்கே யார் தவறு செய்தாலும், எப்படிப்பட்டவர் தவறு செய்தாலும், அவர்மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுதான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் எண்ணம் என்பதை மட்டும் அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. ஜே. தாஸ்:** தமிழ் நாடு வேர்ஹவுசிங் கார்ப்பரேஷன் என்ற ஒரு அமைப்பு இருக்கிறது. அதிலே பல ஊழல்கள் நடந்திருக்கின்றன. என்னிடம் தகவல்கள் இருக்கின்றன. தனியாகக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, படித்து பட்டம் பெற்று வேலையில்லாமல் இருக்கும் இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 25,000 கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இந்த ரூ. 25,000 கொடுப்பதைக் குறைத்து, ரூ. 5,000 அல்லது ரூ. 6,000 என்று நிரவிக் கொடுப்பதைப் பார்க்கிறோம். மறைந்த இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இளைஞர்களுடைய சுய வேலை வாய்ப்புக்கு ரூ. 25,000 கொடுக்க வேண்டும், அதன் மூலம் அவர்களுக்கு சுய வேலை வாய்ப்புக்கான வசதியைச் செய்து தர வேண்டும் என்று திட்டமிட்டு, நல்ல முறையில் கொண்டு வந்தார்கள். அப்படிப்பட்ட திட்டத்தை இன்றைக்கு அதிகாரிகளிடம் கொடுத்து பாழாக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சத்துணவுத் திட்டத்தின் மூலம் ஏழை எளிய மக்களின் குழந்தைகளுக்கு சத்துணவு கொடுப்பதைப் பாராட்டுகிறேன். மிகவும் நல்ல திட்டம் அது. பசியிலும் பட்டினியிலும் வாழ்கிற ஏழை எளிய மக்களின் வீட்டுக்

குழந்தைகளுக்கு இந்தத் திட்டத்தின் மூலம் நல்ல உதவி கிடைக்கிறது. ஆனால் அதே நேரத்தில் சைதைப் பகுதியில் ஒரு பள்ளியில் மாணவர்களுக்கு சத்துணவு அளிக்கப்படவில்லை என்ற குறை இருக்கிறது. இதற்கு அரசியல் காரணம் என்று அந்தப் பகுதி மக்களால் பேசப்படுகிறது. அதாவது யாருடைய தலையீட்டின் காரணமாகவோதான் மாணவர்களுக்கு இலவச உணவு கொடுக்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. இதைப் பற்றி விசாரித்து ஏழை எளிய குழந்தைகளுக்கு சத்துணவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சீருடை அளிப்பதிலும் முறைகேடு நடக்கிறது. அரசாங்கத்தின் திட்டம் என்று சொல்லுகிறபோது, நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் திட்டங்களைச் செயல்படுத்தும்போதுதான் குறைகள் வருகின்றன. நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், இதற்காக ஒரு கமிட்டியைக் கூட அமைக்கலாம். சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட அல்லது நல்ல அதிகாரிகளைக் கொண்ட ஒரு கமிட்டி அமைத்து, நாம் கொடுக்கிற நிதி, அதாவது பட்ஜெட்டில் ஒதுக்கப்படுகிற நிதி, சரியாக ஏழை எளிய மக்களுக்குப் போய்ச் சேருகிறதா என்றுகூட பரிசீலனை செய்யலாம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்து ஏழை எளிய மக்கள், ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் மற்றும் நரிக்குறவர்களுக்கும் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களுக்கும் வீட்டு வசதி செய்து கொடுப்பதற்காக ஒரு திட்டம் ஆளுநர் உரையில் சொல்லப்பட்டது. அதற்காக லட்சக்கணக்கான வீடுகளைக் கட்டப் போகிறோம் என்றும் சொல்லப்பட்டது . . . .

(பிற்பகல் 12.20)

உண்மையிலேயே இலட்சக்கணக்கான வீடுகளைக் கட்டி அவற்றை நல்ல முறையில் ஏழையெளிய மக்களுக்குக் கொடுத்தால், நன்றாக இருக்கும். குடிசை வாழ் மக்களுக்குப் போதிய குடியிருப்பு வசதிகளைச் செய்து கொடுக்கவில்லை. சென்னை நகரத்திலே ஏழையெளியவர்களுக்காகக் கட்டப்பட்ட வீடுகள் அந்த ஏழைகளுக்குப் போய்ச் சேரவில்லை என்பதை மிகவும் வேதனையோடு சொல்லுகிறேன். குடிசைகளை அகற்றிவிட்டு, அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பது என்பது திட்டம். ஆனால் அங்கே பல்லாண்டுக் காலமாக



குடிசையில் வாழ்ந்து மழையிலும், சேற்றிலும் கஷ்டப்பட்டு வாழ்ந்தவர்களுக்குக் கட்டப்பட்ட வீடுகள் கிடைக்கவில்லை. திடீரென்று வந்தவர்கள் 'கொடுக்க வேண்டியதைக் கொடுத்து, பெற வேண்டியதைப் பெற்றிருக்கிறார்கள்' என்று சொல்கிறார்கள். அதைப்பற்றிய விவரங்களைக் கேட்டாலும், என்னால் சொல்ல முடியும். இந்த நிலையை நாம் போக்கவேண்டும். நம்முடைய திட்டங்களின் பயன்கள் நியாயமாக ஏழையெளியவர்களுக்குப் போய்ச் சேர வேண்டும். இதுமாதிரி இலட்சக்கணக்கான வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும், குடிசைகளை மாற்ற வேண்டும், அவர்கள் சுகாதாரமாக வாழ வேண்டும் என்ற திட்டங்களை எல்லாம் செயல்படுத்தும்போது, பல தவறுகள் வருகின்றன. அந்தத் தவறுகளை இங்கே சொல்லுவதற்கு நான் வருத்தப்படுகிறேன். இத்தகைய தவறுகளை அகற்ற வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். "கரையான் புத்தெடுக்க, கருநாகம் குடியிருப்பது போல" என்று சொல்லுவதைப்போல, இத்தகைய திட்டங்களின் பயன்களை ஏழையெளியவர்கள் அனுபவிக்கவில்லை என்பதை மிகவும் வேதனையோடு சொல்லுகிறேன்.

கிருஷ்ணா ஆற்று நீரை சென்னைக்குக் கொண்டுவரும் திட்டத்தை நிறைவேற்றுவதில் பல சங்கடங்கள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆந்திராவின் முதலமைச்சர் அவர்கள், "தமிழகத்தின் நிதி எங்களுக்கு வந்து சேரவில்லை, எங்களுக்கு நிதி வந்து சேரவில்லையென்றால் இதனால் ஏற்படும் தாமதத்திற்கு தமிழக அரசுதான் பொறுப்பு" என்று அறிக்கை விட்டிருக்கிறார். ஆகவே சீக்கிரமாக கிருஷ்ணா ஆற்று நீரை சென்னை நகர மக்களுக்குக் கொடுப்பதற்கு வேண்டிய வழிவகைகளை தீவிரமாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

"1986-87 ஆம் ஆண்டில் மின்சக்தித் துறை திட்டச் செலவு 395 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது ; இந்த வகையில் ஏற்படும் செலவுகளுக்கு 300 கோடி ரூபாய் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது; கூட்டுத் துறையிலோ அல்லது தனியார் துறையிலோ மின்சக்தி உற்பத்தி செய்வதற்கான செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நாம் ஒவ்வொரு ஆண்டும் மின்சார வாரியத்திற்காக பல கோடி ரூபாய் ஒதுக்குகிறோம். இந்த நாட்டிலே தொழிற்சாலைகள் நன்றாக இயங்க வேண்டும், தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்க வேண்டும், உற்பத்தி பெருக வேண்டும் என்றால், மின்சாரத்திற்காக நாம் பல கோடி ரூபாய்களை ஒதுக்கியாக வேண்டும். இத்தனை ஆண்டுகாலமாக நிதி ஒதுக்கீடு செய்யப்

[திரு. ஏ. ஜே. தாஸ்] [1986 மார்ச் 24

பட்டும், இந்தத் துறையிலே எந்தவிதமான முன்னேற்றமும் காண முடிய வில்லை. இதற்கு முன்பு தனியார் துறையிலே வைத்திருந்தார்கள். அப்போது நல்ல லாபம் கிடைத்து வந்தது, மின்சாரமும் எல்லோருக்கும் கிடைத்தது. இப்போது இத்தனை கோடி ரூபாய் செலவு செய்தாலும், மின்சார உற்பத்தியில் பல கோளாறுகள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் நாம் போக்க வழிவகைகளைக் காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதை கூட்டுத் துறையிலே கொடுத்து, இது திறமையாக வளர்வதற்கு வேண்டிய வழிவகைகளைக் காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

"ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூபாய் 3,150 கோடியாக இருக்க, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூபாய் 5,750 கோடியாக உயர்ந்தது; திட்டத்திற்கான மத்திய அரசின் உதவியும் ரூபாய் 665 கோடியிலிருந்து ரூபாய் 1,438 கோடியாக உயர்த்தப் பட்டது" என்று இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. தமிழகம் வளர்ச்சி பெற நியாயமான நிதியுதவிகளை மத்திய அரசு கொடுத் திருப்பதற்காக நான் பாராட்டுகிறேன். மேலும் "1985-86 ஆம் ஆண்டிலும், 1986-87 ஆம் ஆண்டிலும் மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்குக் கிடைக்கும் வரி வருவாயின் பங்கும் ஓரளவிற்கு உயர்ந்துள்ளது" என்று குறிப்பிடப்பட் டுள்ளது. ஆனால் வரி வருவாய் எத்தனை கோடி ரூபாய் என்று குறிப்பிடப் படவில்லை. எந்தெந்த முறையில் எத்தனை எத்தனை கோடி ரூபாய் வரி உயர்வு கிடைத்திருக்கிறது என்பது இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட வில்லை. அதையும் குறிப்பிட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

"1987 சனவரித் திங்கள் முதற்கொண்டு, தமிழ்நாடு முழுவதிலும் கள்- சாராயம் விற்பனை அறவே நிறுத்தப்பட்டு, மதுவிலக்கு மீண்டும் கொண்டு வரப்படும்" என்று இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதை நான் பாராட்டுகிறேன். ஆளும் கட்சியிலே உள்ளவர்கள் இது குறித்து இரண்டுவிதமான கருத்துக்கள் கொண்டிருப்பதைக் கேட்டேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா அவர்கள், சாராயத்தினால் அவருடைய குடும்பம் எப்படியெல்லாம் பாதிக்கப்பட்டது என்பதை விளக்கமாகச் சொல்லி, சீக்கிரமாக மதுவிலக்கைக் கொண்டுவர வேண்டும் என்று பேசினார். இன்னொருபுறம் ஆளும் கட்சியைச் சார்ந்த திரு. க. சுப்பு அவர்கள் பேசும் போது, மதுவிலக்கினால் வரி இழப்பு ஏற்படும் என்று சொன்னார்கள். இப்படி இரு கருத்துக்கள் ஒரே கட்சியில் இல்லாமல் இருக்க வேண்டும்.



1986 மார்ச் 24]

**திரு. எஸ். ஆர். இராதா:** துணைத் தலைவர் அவர்களே, இரு கருத்துக்கள் அல்ல. நாட்டிலே உள்ள நிலைமைகளை இரண்டு பேரும் விளக்கியிருக் கிறோம். காங்கிரஸ் கட்சியிலேதான் அதிகமான குழப்பம் இருக்கிறது. முதலில் அதைத் தீர்த்துக்கொண்டு பிறகு எங்களைப்பற்றிப் பேசலாம். எங்கள் பிரச்சினையில் நுழைந்து மாண்புமிகு உறுப்பினர் தப்பித்துக் கொள்ளக்கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-25)

**திரு. ஏ. ஜே. தாஸ்:** ஆனால் இன்றைக்கு காங்கிரஸ் கட்சியிலே அதிலே வேறுபட்ட கருத்துக்களைச் சொல்லவில்லை. அதைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன். அதே மாதிரி ஜனவரி மாதம் 1-ம் தேதி, 1987 ஆம் ஆண்டுக்குப் பிறகு மதுக்கடைகளை, சாராயக் கடைகளை ஒழிப்போம் என்று இந்த அரசு சொல்லியிருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் 1985-86 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த இறுதி துணை விவா அறிக்கையை 12-30 மணிக்கு அளிக்க இருக்கின்றார்கள். உறுப்பினர் அவர்கள் அதற்குள் பேசி முடித்துக்கொண்டால் நல்லது. இப்போது தொடர்ந்து பேசலாம்.

**திரு. ஏ. ஜே. தாஸ்:** மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பேச ஆரம்பித்து 10 நிமிடங்கள்தான் ஆகியிருக்கின்றன.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் அவர்கள் இன்னும் இருக்கின்ற மூன்று நிமிடங்கள் பேசிக்கொண்டிருக்கலாம்.

**திரு. ஏ. ஜே. தாஸ்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர் களே, இந்த ஜனவரி 1 ஆம் நாள் கள்ளுக்கடைகள், சாராயக் கடைகள் நடத்துவதை நிறுத்துவது என்று முடிவெடுத்ததை இன்றைக்கு தமிழக ஏழை யெளிய மக்கள் எல்லாம் பாராட்டுகின்றார்கள். ஆகவே இந்த அரசுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு கள்ளுக் கடைகள், சாராயக் கடைகள் காரணமாக, எத்தனை ஏழைக் குடும்பங்கள் பாதிக்கப் பட்டு லட்சோபலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்ற நிலையை உணர்ந்து இந்த அரசு தனக்கு வரி இழப்பு ஏற்பட்டாலும், நிதி இழப்பு இருந் தாலும், இதை நாங்கள் செய்கிறோம் என்று முன்வந்ததற்கு இந்த அரசைப் பாராட்டுகிறேன். அதே நேரத்திலே 1987 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் தேதி நிறுத்துவது என்று சொல்லியிருப்பதை, நம்முடைய தேசத் தந்தை மகாத்மா

[திரு. ஏ. ஜே. தாஸ்] [1986 மார்ச் 24

காந்தியடிகள் பிறந்த தினமான அக்டோபர் 2 ஆம் தேதியே அமல் செய்வதாகச் சொல்லி நடைமுறைக்குக் கொண்டுவந்தால், இந்த அரசுக்கு நான் மிகவும் கடமைப்பட்டிருப்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கருத்தை மறுபரிசீலனை செய்து, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அக்டோபர் 2 ஆம் தேதியிலேயே மதுவை, ரத்து செய்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த வரி இழப்பு என்பது காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே வந்தபோது, மறைந்த மூதறிஞர் இராஜாஜி அவர்கள் இந்த மதுவிலக்குக் கொள்கையிலே மிகவும் உறுதியாக இருந்து, மது விலக்கினால் ஏற்படக்கூடிய வரி இழப்பைப் போக்குவதற்கு ஒரு பைசா என்று இருந்த விற்பனை வரியை உயர்த்தி வழிகாட்டினார். அகில இந்தியாவும் அதை வழிகாட்டியாக வைத்து செயல்பட்டது. அன்றைக்கு ஒரு பைசாவாக இருந்து வந்த வரியானது இன்றைக்கு ஏறக் குறைய 15 பைசாவிற்கு மேலே வசூலிக்கப்படுகிறது. அப்படி இருந்தும் இதிலே ஏன் இன்னும் வரி இழப்பு ஏற்படுகிறது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. வரி இழப்பை ஈடு செய்ய முடியவில்லை என்கின்றார்கள். 15 பைசாவிற்கு மேல் நாம் வரி வசூல் செய்யும்போது, ஏன் ஈடு கட்ட முடியாது என்பதை நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் சொல்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

சென்னை நகராட்சி பகுதி மேம்பாட்டிற்காக ரூ. 2.81 கோடி செலவில் புதிய திட்டங்கள் மேற்கொள்ளவும், துப்புரவு வண்டிகள் வாங்குவதற்கும் நடைபாதை வியாபாரத்திற்குக் கட்டிடம் கட்டுதல் போன்றவற்றிற்கும் இந்த ரூ. 2.81 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே பார்க்கும்போது, சென்னை நகரத்திலே வாழக்கூடிய ஏறத்தாழ 60 லட்சம் மக்களுக்கு, சென்னை நகராட்சிக்கு 2.81 கோடி ரூபாய் போதுமானதா என்று பார்க்கும் போது, இது போதாது என்று குறிப்பிட விரும்புகிறேன். இதற்கு அதிக நிதி ஒதுக்க வேண்டும். அப்படி ஒதுக்கினால்தான் அந்த சீரழிந்து கிடக்கும் பாதைகளை நாம் செப்பனிட முடியும்.

(பிற்பகல் 12-30)

### 3. 1985-86 ஆம் ஆண்டு இறுதித் துணை மதிப்பீடுகளை அளித்தல்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இப்போது மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் 1985-86 ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை மதிப்பீடுகளை அளிப்பார். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஜே. தாஸ் அவர்கள் அதன் பிறகு தன்னுடைய உரையைத் தொடர்வார்.



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, 1985-86 ஆம் ஆண்டிற்குரிய இறுதித் துணை மதிப்பீடுகளை இம் மாமன்றத்தில் வைப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். 1985-86 ஆம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் எதிர்பார்க்கப் பட்ட செலவினங்கள் அனைத்தையும் சேர்க்க, அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. என்றாலும், வெள்ள நிவாரணம் குறித்த செலவு, நான்காவது சம்பளக் குழுவின் பரிந்துரைகள் குறித்த செலவு உட்பட சில புதிய செலவினங்களுக்கு 1985-86-ல் அனுமதி வழங்கப்பட்டது. இப்புதிய செலவினங்களில் ஒரு பகுதி ஏற்கனவே, முதல் துணை மதிப்பீட்டில் சேர்க்கப் பட்டுள்ளது. மேலும், மக்களுக்குச் சிறந்த தொண்டாற்ற வேண்டும் என்னும் நோக்கத்தோடு ஏற்கனவே செயற்படுத்தப்பட்டுவரும் திட்டங்களில் பலவற் றுக்கான செலவுகளும் அதிகரிக்கப்பட்டன. இந்த மதிப்பீடுகளில் சேர்க்கப் பட்டுள்ள மொத்தம் ரூ. 436.50 கோடியில், ரூ. 317.02 கோடி வருவாய்க் கணக் கிலும், ரூ. 119.48 கோடி மூலதனக் கணக்கிலும் வருகின்றன. இத்துணை மதிப்பீடுகள் மூலம் கோரப்பட்டுள்ள தொகைகளின் விவரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு சில முக்கியமான இனங்கள்பற்றி மட்டும் ஈண்டு குறிப்பிட விழைகிறேன்.

2. இந்த ஆண்டில் நிலவிய பாதகமான பருவ நிலைகள் காரணமாக உணவு தானிய உற்பத்தி சற்றே குறைந்தது. பொது விநியோக முறையின்கீழ் மக்களுக்குச் சீராக உணவுப் பொருட்களை வழங்க வேண்டுமென்ற நோக்கத்தில், அரசு, காவிரி கழிமுகப் பகுதியில் ஏகபோகக் கொள்முதலை செயற்படுத்த வேண்டியதாயிற்று. இருந்தாலும், ஏகபோகக் கொள்முதல், நடைமுறைப்படுத்தப்பட்ட பகுதிகளில் உற்பத்தி ஊக்கத் தொகையாக குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 35 வழங்கப்பட்டது. இதற்காக இந்த இறுதித் துணை மதிப்பீடுகளில் ரூ. 13 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

3. 1985-86 ஆம் ஆண்டில் சொற்ப நில உழவர்களுக்கும் சிறு உழவர் களுக்கும் உதவி அளிக்கின்ற ஒரு பெருந்திட்டத்தின்கீழ் உழவர்களுக்கு உரங்களும், வீரிய விதைகளும் அடங்கிய சிறு பைகள் (மினி கிட்), பயறு வகைகள், மோட்டா ரக தானியங்கள் ஆகியவற்றின் விதைகள், எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றை இலவசமாக விநியோகிப்பதற்காக அரசு ரூ. 1.89 கோடி அனுமதித்துள்ளது. இதற்குத் தேவையான நிதி ஒதுக்கம், இந்தத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

4. தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் கைத்தறித் துறைக்குள்ள முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, அரசு, கைத்தறித் துறைக்கு இயன்ற அனைத்து உதவிகளையும் செய்து ஊக்கமளித்து வருகிறது. கட்டுப்பாட்டு விலை வேட்டி, சேலை உற்பத்தி செய்யும் நெசவாளர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. கைத்தறித் துணி விற்பனை மீதான தள்ளுபடிக்காகவும் அரசு நிதி ஒதுக்கம் செய்து வருகிறது. தொடக்க நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் நடைமுறை மூலதனக் கடன்களுக்குரிய வட்டியைச் செலுத்துவதற்காகவும் கூட அரசு உதவித் தொகை வழங்கி வருகிறது. இவற்றிற்காக, இத் துணை மதிப்பீடுகளில் ரூ. 15.48 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. தற்போதைய ரூ. 17.25 கோடி ஒதுக்கீட்டிற்கும் கூடுதலாக இத் தொகை ஒதுக்கப்படுகிறது.

5. தமிழ்நாட்டில் பரந்து, விரிந்து அமைந்துள்ள சாலைகளை மேலும் சீரமைத்து நன்கு பராமரிப்பதற்காக, நடப்பாண்டில் கூடுதல் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இதற்காக, இறுதித் துணை மதிப்பீடுகளில் ரூ. 2.20 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

6. கூட்டுறவு அமைப்புகள் உழவர்களுக்கு மேலும் பெரிய அளவில் இடுபொருட்கள் வழங்குவதற்கு ஏதுவாக, அரசு, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஆகியவற்றிற்கு வழிவகை முன்பணங்கள் வழங்கியுள்ளது. இதற்காக, துணை மதிப்பீடுகளில் ரூ. 13.35 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

7. தமிழ்நாடு வேளாண் தொழிற்கழகம் தன் பணியை விரிவுபடுத்திக் கொள்வதற்கு ஏதுவாக அரசு இதற்கு ரூ. 2 கோடி வழிவகை முன்பணம் வழங்கியுள்ளது. இத் தொகை இறுதித் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

8. பொது விநியோக முறையில் மக்களுக்கு மிகக் குறைந்த விலையில் தொடர்ந்து அரிசி வழங்கப்பட்டு வருகிறது. அரசு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு, 1985-86 வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீட்டுக்கும் மேலாக உதவித் தொகையும் வழிவகை முன்பணங்களும் வழங்கி வருகிறது. இதற்காக இறுதித் துணை மதிப்பீடுகளில் கூடுதலாக ரூ. 25 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

9. தமிழ்நாட்டில், தொழில்மயமாக்கலில் தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகம் மிக முக்கியப்பங்காற்றி வருகிறது. அதன் கடன் வழங்கு பணிகளை மேலும் விரிவுபடுத்தவும், வட்டியில்லா விற்பனை வரிக் கடனை அதிக அளவில் அளிப்பதற்கும் இறுதித் துணை மதிப்பீடுகளில் கூடுதலாக ரூ. 3.25 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.





10. இக்கோரிக்கையில் கண்டுள்ள அனைத்து இனங்களுக்கும் ஒப்புதல் அளித்து, அவற்றிற்குத் தேவையான நிதி ஒதுக்கத்தை வழங்கி, இம்மாநில அரசு வளர்ச்சிப் பணியில் மேலும் முன்னேற்றம் அடைய அனுமதிக்குமாறு அவையை வேண்டி அமர்கிறேன். வணக்கம்.

### 2. 1986-87 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

(பிற்பகல் 12-35)

**திரு. ஏ. ஜே. தாஸ்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நகராட்சிகளின் மூலமாக வியாபாரிகளுக்குக் கட்டிடம் கட்டிக் கொடுத்து வருவாயைப் பெருக்குவதற்காக ரூபாய் 2.81 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில், இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் நிதி போதாது. சென்னை நகரத்திலே இன்றைக்கு சாலைகள் எல்லாம் சீர் கேடுற்று இருக்கின்றன. சாலைகளைச் சீர்படுத்தத் தேவையான நிதி ஒதுக்கப்படவில்லை. அதோடு கூட கொசுத் தொல்லையும் அதிகம். இதற்கெல்லாம் தேவையான நிதியைச் சரியான முறையில் ஒதுக்கவில்லை.

அடுத்து, தானியங்கி துப்புரவு வண்டிகள் வாங்க நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. 6 லட்சம் ரூபாய் மதிப்புள்ள தானியங்கி துப்புரவு வண்டி ஏற்கெனவே ஓராண்டுக்கு முன்பு வாங்கியது குப்பையிலே கிடக்கிறது. இன்றைக்கு குப்பை எடுக்க தானியங்கி வண்டி வந்திருக்கிறது என்று பத்திரிகையில் செய்தி படித்தேன். இப்படி லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள தானியங்கி துப்புரவு இயந்திரத்தை வாங்குவதன் மூலம், பல பேருக்கு சௌகரியம் ஏற்பட்டிருக்கிறது என்பதற்காக இதனை வாங்க வேண்டுமா? இது உண்மையாகவே செயல்படாமல் கிடக்கிறது. ஓராண்டிற்கு முன்னால் வாங்கியதே செயல்படாமல் கிடக்கும்போது மீண்டும் மீண்டும் வண்டிகள் வாங்கி நிதியை வீணாக்க வேண்டுமா? இம்மாதிரியான வீண் செலவுகள் குறைக்கப்பட வேண்டும். சென்னையிலே குப்பைகளை நல்ல முறையிலே எடுக்க பலவித திட்டங்களை உருவாக்க வேண்டும். இப்படி இயந்திரங்களை வாங்கி மக்களுடைய பணத்தை வீணாக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆண்டர்சன் பாலத்தைப் பற்றிச் சொல்லியிருப்பதற்காக உண்மையாகவே இந்த அரசுக்கு என்னுடைய பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீண்ட காலத்திற்கு முன்பே அந்தப் பாலத்தை எடுத்து அகலப்படுத்தியிருக்க வேண்டும். சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது அந்தப் பாலம். இன்றைக்கும் அந்தப் பாலத்தின் மேல் நடந்து சென்றால், கழிவுநீரின் துர் நாற்றம் வீசுகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் அந்த

[திரு. ஏ. ஜே. தாஸ்] [1986 மார்ச் 24

வழியாக நடந்து சென்றால், இதைப் பார்க்கலாம். அந்தப் பாலத்திற்கு இன்னும் அதிகமான அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்து விரைவில் பாலத்தை அகலப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சென்னை மாநகராட்சிக்கும், கோவை மாநகராட்சிக்கும், மதுரை மாநகராட்சிக்கும் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் தேர்தலை நடத்த வேண்டும். ஜனநாயக முறையில் இப்போது தேர்தல் நடந்திருப்ப தற்கு என்னுடைய பாராட்டுக்கள். அதே முறையில் இந்த 3 மாநகராட்சி களுக்கும் எவ்வளவு தூரம் சீக்கிரம் நடத்த முடியுமோ அந்த அளவுக்கு சீக்கிரம் தேர்தலை நடத்தி பொதுமக்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பொதுத் துறை நிறுவனங்கள் சரியான முறையில் கவனிக்கப் படாததால், நஷ்டம் ஏற்படுகிறது. தமிழ் நாடு இன்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட் மென்ட் கார்ப்பரேஷனில் தொழிலாளர்களுக்கு வேலை இழப்பு ஏற்பட்டிருக் கிறது. வாலன்டரியாக வேலையிலிருந்து விலகும் 200 தொழிலாளர்களுக்கு தேவையான நிதியை ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். சிலர் அந்தத் தொகையை வாங்கிக்கொண்டு வேலையிலிருந்து நின்று விடுகிறார்கள். சிலர் வேலையை விட்டு நின்றால் என்ன செய்வது என்று கருதி வாலன்டரியாகப் போக அஞ்சுகிறார்கள். இம்மாதிரி நிலைமை டான்சியிலும் இருக்கிறது. வாலன்டரியாக வேலையிலிருந்து நின்று விடுகிற தொழிலாளர்களின் இடத் திற்கு ஆட்களை நிரப்ப வேண்டுமென்ற பிரச்சினை வருகிறபோது, 3 ஆயிரம் ரூபாய்க்கு மேல் சம்பாதிக்கிற பதவிகளுக்கு யாரை நியமிப்பது என்கிற பிரச்சினை வருகிறது.

(பிற்பகல் 12-40)

அந்த டான்சி நிறுவனத்தில் உள்ள எம்.டி. போன்ற அதிகாரிகள், அங்கே திறமைசாலிகளையும், நல்ல அனுபவம் பெற்றவர்களையும், முதல் வகுப்பில் படித்து பாஸ் செய்தவர்களையும் விட்டுவிட்டு மற்ற நிறுவனங்களில் பணி யாற்றும் அலுவலர்களையெல்லாம், "மூவாயிரம் ரூபாய் தருகிறேன், இங்கே வாருங்கள்" என்று வேலைக்கு அழைக்கிறார்கள். உள்ளவர்களை வெளியே அனுப்புகிறார்கள். இந்த முறைகேடுகள் தவிர்க்கப்பட வேண்டும். ஆகவே இதுபோன்ற அரசு நிறுவனங்களில் ஏற்படும் குறைபாடுகளைக் கண்டுபிடித்து தவிர்க்கும் வகையில், சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய கண்காணிப்புக் குழு அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கம் நிறைய பணிகள் செய்கிறது. ஆனால் அவற்றின் பலன் மக்களுக்குப் போய்ச் சேர வில்லை. தவறுகள் நடக்கின்றன. அத்தவறுகளைக் களைய நடவடிக்கை



1986 மார்ச் 24] [திரு. ஏ. ஜே. தாஸ்]

எடுக்க வேண்டும். 1,900 ரூபாய் வேலைக்கு 3,000 ரூபாய் தருகிறேன் என்று வெளியிலிருந்து ஆட்களை எடுக்கும் அவல நிலை இருக்கிறது. இதனால் அங்கே உள்ளவர்களுக்கு வேலை இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அரசு ஊழியர்களுக்கு பல முன்னோடித் திட்டங்கள் அறிவித்திருப்பதற்காக நான் அரசைப் பாராட்டுகிறேன். வீட்டுக் கடன் வாங்கிய அரசு ஊழியர்கள் இறந்துவிட்டால், அந்தப் பணம் தள்ளுபடி செய்யப்படும் என்று சொல்லியிருப்பது உண்மையிலேயே வரவேற்கத்தக்கது. அதேபோல், 10 பொருட்கள் மீது வரிகளை ரத்து செய்திருக்கிறார்கள். பல இனங்களில் பலமுனை வரி நீக்கப்பட்டு ஒருமுனை வரி போடப்பட்டிருப்பதை யும் நான் பாராட்டுகிறேன்.

ஆனால் விற்பனை வரித் துறை அதிகாரிகள் ஒழுங்காகப் பணியாற்று கிறார்களா என்று அரசாங்கம் கண்காணிக்க வேண்டும். காரணம், மொத்த வருமானத்தில் 25 சதவீதம்தான் அரசாங்கத்திற்கு வந்து சேருகிறது. 100 சதவீதம் வருமானமும் வந்தால், எவ்வளவோ மக்களுக்கு நன்மைகள் செய்ய முடியும். வரிவசூல் என்று பார்த்தால், 50 சதவீதம் யாருக்கோ போகிறது. 25 சதவீதம்தான் வியாபாரிகளும் கணக்கில் காட்டுகிறார்கள். ஆகவே உண்மை யாக, முழுமையான நியாயமான முறையில் அதிகாரிகள் வரி வசூல் செய்து, அதை அரசாங்கத்தின் கணக்கில் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதனால் அரசின் நிதியாதாரம் பெருகும். இதற்காக அதிகாரிகளுக்குச் சரியானமுறையில் உத்தரவுகள் போட்டு வரிவசூல் ஒழுங்காக நடைபெற நடவடிக்கை எடுங்கள். அதே நேரத்தில், ஒரு தொழிலை ஆரம்பிக்க வேண்டுமென்றால், முன்பு 10 ரூபாய் கட்டி ரிஜிஸ்டர் செய்ய வேண்டும். இப்போது அதை 100 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். இதனால் பெட்டிக் கடை வைக்கவேண்டுமென்றால்கூட, அவர்கள் அரசாங்கத்தை ஏமாற்றத்தான் செய்வார்கள். அரசாங்கத்திற்கு மலை போவது தெரியாது, கடுகு போவதுதான் தெரியும். ஆகவே அதை ரூபாய் 100 என்று உயர்த்த வேண்டிய அவசியம் இல்லை. அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில், அளித்துள்ள சலுகைகளின் காரணமாக அரசுக்கு 70 கோடி ரூபாய் இழப்பு ஏற்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான் முன்பு சொன்னதுபோல், விற்பனை வரி இழப்பு ஏற்படுவதை ... செய்தால் இதைச் செய்யலாம்.

[திரு. ஏ. ஜே. தாஸ்] [1986 மார்ச் 24

லாட்டரி சீட்டுகளுக்கு 20 சதவீத வரியிலிருந்து 10 சதவீதமாக ஏன் குறைத்தார்கள் என்று தெரியவில்லை. ஏழைகள் இதனால் நன்மையடையப் போவதில்லை. சென்னையில் சாதாரணமாக இருந்தவர்கள் எல்லாம் லாட்டரி சீட்டு விற்று கோடீஸ்வரர்களாகி விட்டார்கள். அவர்களுக்கு ஏன் வரியைக் குறைக்க வேண்டும்? 50 ஆயிரம் ரூபாய் வரி போட்டாலும் பரவாயில்லை. அவர்களுக்கு வரியைக் குறைக்கக்கூடாது. 'படா படா ஆத்மி'களிடம் பணம் குவிந்து கிடக்கிறது. அவர்களுக்குச் சலுகைகள் கொடுக்கக்கூடாது. மார்வாடிகள்தான் லாட்டரி ஏஜெண்டுகளாக இருந்துகொண்டு ஏராளமாகப் பணம் சம்பாதிக்கிறார்கள். ஆகவே 10 சதவீத வரியை 25 சதவீதமாக உயர்த்த வேண்டும். அதன்மூலம் அரசுக்கும் வருவாய் கிடைக்கும். இந்த அரசு . .

(பிற்பகல் 12-45)

**திரு. ஜேப்பியார்:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாஸ் அவர்கள் ஒரு மொழியை இங்கு பேசினார். அது என்ன மொழி என்று தெரியவில்லை. அதை தயவுசெய்து விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு).

**திரு. ஏ. ஜே. தாஸ்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, "படா படா ஹாத்மி" என்றால் பெரிய பெரிய பணக்காரர்கள் என்று பொருள். அந்தப் பெரிய பணக்காரர்கள் . . .

**திரு. எஸ். ஆர். இராதா:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாஸ் அவர்கள் இந்தியைக் கொலை செய்ய வேண்டாம். முன்னாலேயே அது கொலையான மொழி. (சிரிப்பு). "ஹாத்மி" என்றால் வேறு பொருள், 'ஆத்மி' என்றால் வேறு பொருள் . . . . .

**திரு. ஏ. ஜே. தாஸ்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் இந்தி மொழியில் அதிகப் பயிற்சி பெற்றிருப்பதைப்பற்றி மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் அந்த மொழியில் நான் கூறியதில் தவறு இருந்து அதைத் திருத்தியதற்கு நன்றி கூறிக் கொள்கிறேன். அதை . . .

**திரு. ஆர். டி. சீத்தாபதி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தி கற்றுக்கொள்வதிலே எங்களுக்குக் கருத்து வேறுபாடு இல்லை. இந்தியைக் கட்டாயமாகத் தமிழ் நாட்டின் மீது திணிக்கக்கூடாது என்பதில் அழுத்தந்திருத்தமாக, உறுதியாக இருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1986 மார்ச் 24]

**திரு. ஏ. ஜே. தாஸ்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தியை தமிழகத்திலே திணிக்கவில்லை என்கிற உறுதிமொழியை மறைந்த பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களும், இன்றைய பிரதமர் மாண்புமிகு திரு. இராஜீவ் காந்தி அவர்களும் கொடுத்திருக்கும்போது, இதைத் 'திணிப்பது' 'திணிப்பது' என்று சொன்னால் யார் திணிப்பது? . . .பிரதமர் அவர்களே உறுதிமொழி கொடுத்துவிட்ட பிறகு, இதில் வேறு பிரச்சினை இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோரிக்கை, அவ்வாறு அவர்களால் கொடுக்கப்பட்ட உறுதிமொழியை அரசியல் சட்டத்தில் சேர்க்க வேண்டும் என்பதுதான். அவ்வாறு சேர்க்காததுதான் இப்போதிருக்கிற சிக்கலே. அது அரசியல் சட்டத்திலே சேர்க்கப்பட வேண்டும் என்பதுதான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை. அதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்திய அரசிடத்திலே சொல்லி ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, முதலில் பண்டித நேருதான் உறுதிமொழி கொடுத்தார். அதுதான் முக்கியம். பண்டித நேருவை மறந்து விடாதீர்கள்.

**திரு. ஏ. ஜே. தாஸ்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் நினைவுபடுத்தியதற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, பண்டித நேரு அவர்களும், மறைந்த பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களும், இன்றைய பிரதமர் திரு. இராஜீவ் காந்தி அவர்களும் இந்த உறுதிமொழியைக் கொடுத்திருக்கின்றனர். இந்த உறுதிமொழியை அவர்கள் மீறமாட்டார்கள். அரசியல் சட்டத்திலே அதைச் சேர்ப்பதைப் பொறுத்தவரை, நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான் அதை நாடாளுமன்றத்தில் வலியுறுத்தி வற்புறுத்திச் செய்ய வேண்டும். நான் சொல்ல முடியாது என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொண்டு, இந் நிதிநிலை அறிக்கையை நான் மிகவும் பாராட்டுகின்றேன். இதில் ஏழை எளியவர்களுக்குப் பல சலுகைகள் கொடுத்ததற்கு பாராட்டி சில விஷயங்களில் மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

4. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே, மக்கள் நல்வாழ்வுத் துறை துறை அமைச்சர் அவர்களுக்கு டாக்டர் பி. சி. ராய் தேசிய விருது கிடைத்தமைக்குப் பாராட்டு.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு டாக்டர் பி. சி. ராய் தேசிய விருது அளிக்கப்பட்டுள்ள செய்தியை அவைக்கு மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அவருடைய சமூக மற்றும் மருத்துவச் சேவைக்காக இவ்விருது அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. அவர் அமைச்சர் என்ற முறையில் பட்டுமின்றி மேலவையின் உறுப்பினர் என்ற முறையிலும், அவர் பெற்றுள்ள இவ்விருது நமக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியை அளிக்கிறது. அமைச்சர் அவர்களுக்கு நமது மகிழ்ச்சியையும் பாராட்டுதல்களையும் அவையின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தின் சார்பாகப் பாராட்டியதற்காக என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். என்னைப் பொறுத்தவரையிலே, இந்த மன்றத்திலே பல ஆண்டுகளாக உழன்றுகொண்டிருக்கக்கூடிய ஒருவனாக இருக்கிறேன். 1964லிருந்து இந்த மன்றத்திலே உறுப்பினராக இருந்துகொண்டிருக்கிறேன். இந்த மன்றத்திலே உறுப்பினராக இருப்பதில் பெருமைப்படக்கூடிய அளவுக்குத் தொடர்ந்து நான் இங்கேதான் இருக்கிறேன்: குறிப்பாக மேலவையின் சார்பாகப் பாராட்டியதற்காக நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நமக்கு பல்வேறு வகையிலே அதிலும் குறிப்பாக என்னுடைய மக்கள் நல்வாழ்வுத் துறையிலே அதிக அக்கறை எடுத்துக் கொண்டு கவனம் செலுத்தி வந்திருக்கிறார்கள். ஆங்கிலத்திலே சொல்வார்கள் frequent course correction என்று சொல்வார்கள்.

(பிற்பகல் 12-50)

அந்த வகையிலே இந்தத் திட்டங்களை எடுத்துக் கொண்டால், நன்றாக இருக்குமென்று அவரே பல முறை நல்ல முடிவுகள் எடுத்துக்கொண்டு வழிகாட்டியாக இருந்திருக்கிறார். அது மட்டுமல்லாமல், நம்முடைய துறையிலே பணியாற்றுகின்ற சிப்பந்திகள், அலுவலர்கள், மற்றுமுள்ள பணியாளர்களும் நல்ல வகையிலே ஒத்துழைப்புத் தந்திருக்கிறார்கள். ஆகவே இந்த விருதை என்னைப் பொறுத்தவரையில், மேலவை உறுப்பினராக நான் இருக்கக்கூடிய காரணத்திற்காக, இது மேலவைக்குக் கிடைத்த ஒரு விருதாகவும், அதே நேரத்தில் இப்போது புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையிலே பணியாற்றிக் கொண்டிருக்கிற காரணத்தினாலே அது அரசாங்கத்திற்குக் கிடைத்த ஒரு



விருதாகவும், குறிப்பாக இன்னும் சொல்ல வேண்டுமென்றால் இந்த வெற்றிக்குப் பாடுபட்ட அத்தனை பேருக்கும் கிடைத்த விருதாகவும் நான் கருதிக் கொண்டு, மீண்டும் ஒருமுறை நான் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை 25—3—1986 செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 12-50)

5. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

176. சேலத்திலுள்ள, சேலம் மாவட்ட மாச்சத்து மற்றும் சவ்வரிசி உற்பத்தியாளர் தொழில் கூட்டுறவு சங்கத்தினரால் விற்கப்படும் சவ்வரிசி மற்றும் மரவள்ளிக் கிழங்கு மாச்சத்திற்கு விதிக்கப்படும் வரியினை குறைப்பது குறித்து வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 31—10—1985 ஆம் நாளிட்ட 1001 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.].

177. தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு பணி நடைமுறை நாளின் 1 -வது தொகுப்பில் தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழு விதி முறைகளுக்குத் திருத்தம் ஒன்றைச் செய்தது தொடர்பாக, பணியாளர்-நிருவாகச் சீர்திருத்தம் (பணி-M துறையின் 26—12—1935 ஆம் நாளிட்ட 1188 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) ஆம் பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.].

178. தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் 1984-85 ஆம் ஆண்டிற்கான இருபதாவது ஆண்டறிக்கையும், கணக்குகளும். (தமிழ் மற்றும் ஆங்கிலம்). [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் [illegible]) 619 (...) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.].

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1986 மார்ச் 25

179. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் 1984-85 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்). [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (A) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.]

180. தமிழ்நாடு மாநிலக் குழாய்க் கிணறுகள் கழகத்தின் 1984 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்). [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (A) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.]

181. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான முதல் ஆண்டு அறிக்கை. (தமிழ்). [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (A) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

**ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.**

83. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் 28—8—1969 ஆம் நாளன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையொட்டி மேலவை முன் வைக்கப்படும் கீழ்க்கண்ட சட்டமன்ற உறுப்பினர்களின் சொத்துக்கள் குறித்த ஆவணங்கள் :

**31—3—1984 ஆம் தேதியன்று உள்ளவாறு**

மாண்புமிகு டாக்டர் ம. பொ. சிவஞானம், மேலவைத் தலைவர்.

**30—6—1984 ஆம் தேதியன்று உள்ளவாறு**

மாண்புமிகு திரு. ஜி. சுவாமிநாதன், துணைத் தலைவர்.

**31—3—1985 ஆம் தேதியன்று உள்ளவாறு**

1. திரு. ப. மாணிக்கம்.
2. திரு. மு. செ. சங்கரலிங்கம்.
3. திரு. க. அருணாசலம்.
4. திரு. நெல்லை பாலாஜி.
5. திரு. ஈ. வெ. அ. வள்ளிமுத்து.
6. திரு. வி. வி. வி. ஆனந்தம்.
7. மாண்புமிகு டாக்டர் ம. பொ. சிவஞானம், மேலவைத் தலைவர்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# தமிழ்நாடு
# சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE COUNCIL DEBATES

# செயலக வெளியீடு
# OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, மார்ச் 25, 1986-தொகுதி 221 எண் 5.
Tuesday, 25th March 1986-Volume 221 No. 5.

சட்டமன்ற மேலவைச் செயலகம்.
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009.

LEGISLATIVE COUNCIL SECRETARIAT.
Fort St. George, Madras-600 009.

விலை ரூ. 2.75]

பொருளடக்கம்

| | பக்கங்கள். |
|---|---|
| 1. வினாக்கள்–விடைகள்— | |
| 2. 1985–86 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த | 38 — 410 |
| இறுதி துணை விவர அறிக்கையின் மீது விவாதம் .. .. .. .. | 410—464 |
| 3. அவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 464—465 |

143544

D
V211,32'N86
N86, 221, 3-5;1

# தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

செவ்வாய்க்கிழமை, 1986 மார்ச் 25.

பங்குனி 11, குரோதன—திருவள்ளுவராண்டு 2017.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-00 மணியளவில் மாண்புமிகு தலைவர் (டாக்டர் ம. பொ. சிவ ஞானம்) அவர்களின் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### தமிழ் நாட்டின் தலைநகர்

* 101 வினா—திரு. சி. இராமலிங்கம் (செல்வி ஆ. லீலாவதி சார்பில்): மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாட்டின் தலைநகரை, சென்னையிலிருந்து வேறு இடத்திற்கு மாற்றும் கருத்துரு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆர். டி. சீத்தாபதி: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் திருச்சிக்கும் தஞ்சைக்கும் இடையே தமிழகத்தின் தலைநகரை வைப்பதாகச் சொல்லியிருக்கிறார்களே, அது எந்த அளவில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: சென்னைத் தலைமையிடத்தை வேறு இடத்திற்கு மாற்றுகிற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்று சொன்னேன். ஆகவே, அந்த நிலைமையில் தமிழகத்தின் தலைநகரை மாற்றுகிற நிலையே இல்லாதபோது, தஞ்சைக்கும் திருச்சிக்கும் இடையிலே தலைநகரத்தை மாற்றுகிற தன்மை ஏற்படவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. ப. சிவராமன் :** சென்னை நகரம் தமிழகத்தின் தலைநகராக இருப்பதன் காரணமாக, கன்னியாகுமரி, திருநெல்வேலி போன்ற மாவட்டங்களில் இருப்பவர்கள் நெடுந்தொலைவு வர வேண்டியிருக்கிறது. தலைமைச் செயலகம் மற்றும் உயர்நீதி மன்றம் போன்றவற்றில் உள்ள பணிகளுக்காக அவர்கள் சென்னைக்கு வர வேண்டியிருக்கும்போது, பெரும் தொல்லைக்கு ஆளாகிறார்கள். எனவே இதைக் கருத்தில் கொண்டு தமிழகத்தின் மையப் பகுதியில் தலைநகரை அமைப்பதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, முன்னாள் இரண்டாம் செயலாளர் அவர்களைத் தலைவராகக் கொண்டு ஒரு குழு அமைக்கப்பட்டு எந்தெந்தத் துறைகளை சென்னையைவிட்டு வெளியூர்களுக்கு அனுப்பலாம் என்று ஆலோசிக்கப்பட்டது. அந்தக் குழு, தங்களது அலுவலகங்கள் சென்னையிலிருந்து மாற்றப்படலாம் என்று தாங்களாகவே ஒப்புக் கொண்டாலொழிய, மாற்றுவதற்கில்லை என்ற அடிப்படையில், சம்பந்தப்பட்ட செயலாளர்கள் மாற்றுவதற்கு ஒப்புக்கொண்ட சில துறைகள் மாற்றப்பட்டன. அதாவது,

தமிழ்நாடு நெசவாளர் கழகம், கோவையைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட ஒப்புக்கொண்டு அங்கேயிருந்து இப்போது இயங்கிக் கொண்டிருக்கிறது.

வேளாண்மை விளைபொருள் விற்பனை இயக்ககம் திருச்சியைத் தலைநகராகக் கொண்டு இயங்கி வருகிறது.

வேளாண்மை விற்பனைத் துணை இயக்குநரகம் சென்னையல்லாமல் வேறு ஒரு இடத்தைத் தலைநகராகக் கொண்டு இயங்கி வருகிறது.

தமிழ் நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் துணை மண்டல இயக்குநரகம் வேலூரைத் தலைமை நகராகக் கொண்டு இயங்கி வருகிறது.

தமிழ் நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம் சென்னையிலிருந்து விழுப்புரத்திற்கு 1979 ஆம் ஆண்டில் மாற்றப்பட்டு அங்கேயிருந்து கொண்டு செயல்பட்டு வருகிறது.

தமிழ் நாடு வனத் தோட்டக் கழகம் 1974 ஆம் ஆண்டு முதல் திருச்சியைத் தலைநகராகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.



தமிழ் நாடு தேயிலைத் தோட்டக் கழகம் 1975 ஆம் ஆண்டு முதல் கூனூரைத் தலைநகராகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

தமிழ் நாடு ரப்பர் தோட்டக் கழகம் நாகர்கோயிலைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது.

தமிழ் நாடு பூமிதான இயக்க வாரியம் மதுரையைத் தலைநகராகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

அதைப் போலவே தமிழ் நாட்டிலுள்ள போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரையிலும், அவைகளுடைய போக்குவரத்திற்கு ஏற்ற இடமாக அமைகிற முறையில், பல்வேறு தலைமை இடங்களில் அமைக்கப்பட்டு ஆங்காங்கிருந்து அவை செயல்பட்டு வருகின்றன.

அந்த வகையில் பெரியார் போக்குவரத்துக் கழகம் விழுப்புரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் வேலூரைத் தலைநகராகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

சோழன் போக்குவரத்துக் கழகம் கும்பகோணத்தைத் தலைநகராகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் திருநெல்வேலியைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

சேரன் போக்குவரத்துக் கழகம் கோவையைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

ஜீவா போக்குவரத்துக் கழகம் ஈரோடைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

நேசமணி போக்குவரத்துக் கழகம் நாகர்கோயிலைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

தீரன் சின்னமலைப் போக்குவரத்துக் கழகம் திருச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

[1986 மார்ச் 25

அண்ணா போக்குவரத்துக் கழகம் சேலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

பாண்டியன் போக்குவரத்துக் கழகம் மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகம் காரைக்குடியைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், வேறு தலைமையிடங்களுக்கு அல்லது வேறு மாவட்டத் தலைமையிடங்களுக்கு சில துறைகளை மாற்றுவதன் மூலமாகத் தமிழகம் முழுவதும் இருக்கிற அனைவருக்கும் உதவியாகப் பணியாற்ற முடியும் அல்லது வசதியாக இருக்கும் என்றால், அப்படிப்பட்ட செயற்குறிப்புகளை இந்த அரசு ஆராய்ந்து பார்க்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : திருச்சி அல்லது மதுரையைத் தமிழகத்தின் இரண்டாவது தலைநகராக மாற்றுவதற்கு அல்லது இரண்டாவது தலைநகர் என்கிற அந்தஸ்தை அதற்குக் கொடுப்பதற்கு அரசினிடம் ஏதேனும் கருத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். திருச்சி அல்லது மதுரையை அடுத்து ஒரு இடத்தை உருவாக்கி தமிழ் நாட்டின் தலைநகராக உருவாக்க அல்லது அதற்குத் தமிழகத்தின் இரண்டாவது தலைநகராக அந்தஸ்து வழங்க அரசு ஆலோசனை செய்ய முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : திருச்சியை இரண்டாவது தலைநகராகக் கொள்ளலாம் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. ஆனால் அது பற்றிய செயற்குறிப்பு பரிசீலனை ஏதும் அரசிடம் இல்லை.

திரு. எஸ். ஆர். இராதா : பல்வேறு இலாக்காக்களின் தலைமை இடங்கள் பல்வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டிருக்கின்றன. இப்படி பல்வேறு இடங்களுக்கு மாற்றுவதன் காரணமாக அவைகளுடன் தொடர்பு கொள்வதற்கு இந்த விஞ்ஞான காலத்தில் முடியும் என்றாலும், ஒரே இடத்தில் அனைத்துத் தலைமையிடங்களையும் வைப்பதற்கு ஏதுவாக ஒரு பகுதியைத் தேர்ந்தெடுக்க அரசு முன்வருமா ? அந்த வகையில் இரண்டாவது தலைநகராக இருந்து செயல்படுவதற்கு ஏற்ற வகையில் சோழ மண்டலத்தைத் தேர்ந்தெடுக்க இந்த அரசு முன்வருமா ?



1986 மார்ச் 25]

(முற்பகல் 10-05)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இரண்டாவது தலைநகர் தேவையென்ற நிலைமையில் அதற்குகந்த காரணங்களின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். சோழ மண்டலத்தைத் தேர்ந்தெடுக்க இயலுமா என்பதைப்பற்றி இப்போது சொல்வதற்கில்லை. அதற்கான வழிவகைகளை, மற்றவைகளை ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

திரு. எல். ஜெயச்சந்திரன் : இப்போது தலைநகரத்தை மாற்றும் எண்ணம் இல்லையென்றாலும், மாதிரி நகரத்தைத் தோற்றுவிக்கும் செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா? சில மாதங்களுக்கு முன்பு தமிழகத்திலே ஒரு மாதிரி நகரத்தை ஆரம்பிக்க இருக்கிறோம், அதற்காக மத்திய அரசின் உத்தரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்று அரசு அறிவித்திருந்தது. அதைப் போன்று ஒரு மாடல் டவுன்ஷிப்பை ஆரம்பித்து, அங்கே சில முக்கியமான அலுவலகங்களை ஆரம்பித்தால், சென்னைக்கு வரும் வேலை மிகவும் குறைவாக இருக்கும். ஆகவே அவ்வாறு மாடல் டவுன்ஷிப்புகளை ஆரம்பிக்கும் கருத்தாரு அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரக் குறிப்புகள் என்னிடத்திலே இல்லை. சென்னைக்கு அப்பால், சென்னைக்கு அருகாமையில் இல்லாமல் சிலபல நகரங்களை உருவாக்கினால், சென்னையில் நெருக்கடி ஏற்படாமலும், வீட்டு வசதி குறைவு, வாடகை உயர்வு, மற்றும் பல சங்கடங்கள், நெரிசல்கள் ஆகியவற்றைக் குறைக்க இயலும். அந்த வகையிலே மறைமலை நகர் உருவாக்கப்பட்டிருக்கிறது. அப்படி உருவாக்கப்பட்டு வருகிற பெரும்பாலான நகரங்கள் சென்னையையொட்டி தொலைவில் இருக்கின்றன. மாதிரி நகரத்தைப்பற்றி குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி போட்டால், அந்தத் துறையினர் நடவடிக்கை எடுப்பார்கள்.

திரு. ஆர். டி. சீத்தாபதி : 1976 ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் ஆட்சி நடைபெற்ற நேரத்தில் தலைமைச் செயலாளரின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் கமிட்டியின் சிபார்சை நிறைவேற்றுவது என்று அன்றைய தினம் முடிவு எடுக்கப்பட்டது. அந்தக் குழுவின் அறிக்கையை இப்போது மாண்புமிகு நாவலர் அவர்களால் அளிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தனிக் கேள்வி போட்டால், அது பற்றி முழு விவரம் அளிக்கலாம்.

## வயது உச்சவரம்பைத் தளர்த்துதல்

* 102 வினா.—திரு. எல். ஜெயச்சந்திரன் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

படித்து பட்டம் பெற்றுள்ள வேலையில்லா பட்டதாரிகள், அரசுப் பணியில் சேரும் வயது உச்சவரம்பைத் தளர்த்தும் கருத்துரு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. எல் ஜெயச்சந்திரன் : படித்து பட்டம் பெற்ற வேலையில்லாத பட்டதாரிகள் நிறைய பேர் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துவிட்டு வேலைக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். படித்த அனைவருக்கும் வேலை கிடைப்பது என்பது இப்போது எளிதாக இல்லை. படித்து முடித்து வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகும், வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து 'இண்டர்வியூ' கார்டு வருவதில்லை. பத்துப் பன்னிரண்டு ஆண்டுகள் ஆன பிறகு, வயது வரம்பை அவர்கள் தாண்டிவிடுவதால், அந்த வாய்ப்பை அவர்கள் இழக்கிறார்கள். ஆகவே இப்போது இல்லையென்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கூறினாலும் தயவுசெய்து இந்த வயது உச்ச வரம்பைத் தளர்த்த அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 6—10—1979 நாளிட்ட பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் அரசாணை நிலை எண் 1135-ன் படி அரசுப் பணியில் சேர நேரடித் தேர்விற்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களின் உச்ச வயது வரம்பு அந்த ஆணை வெளியிடும் பொழுது எங்கெல்லாம் 28-க்குக் குறைவாக இருந்ததோ அந்தப் பணிகளுக்கு எல்லாம் 28 என உயர்த்தியும், மற்றும் ஒரு பணியிடத்திற்கு சம்பந்தப்பட்ட பணி விதியில் 28 வயதிற்குமேல் என ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டிருக்கும் பட்சத்தில், அது தொடர்ந்து நீட்டிக்கப்படும் என்றும், மேலும் 28 வயது உச்ச வரம்பு என உயர்த்திய பின்னரும், பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்பினர்களுக்கு ஏற்கெனவே எந்தெந்தப் பணியிடங்களில் உச்ச வயது வரம்பில் 5 ஆண்டுகள் சலுகை அளிக்கப்பட்டு வந்ததோ அவை தொடர்ந்து நீடிக்கும் எனவும் ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது. 28-ஆக ஆக்கும் நிலைமையில் அந்தச் சலுகையை தொடர்ந்து அளிப்பதற்கான சூழ்நிலைகள் இருக்கின்றன.



1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட வேண்டிய பகுதி-4 போட்டித் தேர்வு 1983-ல் நடத்தப்பட்டது. 1976 ஆம் ஆண்டுக்குப்பின், ஏற்கெனவே பணியில் உள்ள தற்காலிகப் பணியாளர்களை நிரந்தரமாக்க இரண்டு சிறப்புத் தகுதித் தேர்வுகள் 1977 மற்றும் 1981-ல் நடத்தப்பட்டதாலும், 1976 ஆம் ஆண்டுக்குப் பின் மேற்கண்ட போட்டித் தேர்வினை எழுத வயதுத் தகுதி பெற்ற பலர் 1983 ஆம் ஆண்டில் பகுதி-4 போட்டித் தேர்வினை எழுத வயதுத் தகுதியை இழந்தவர்களாகி விட்டனர் என்ற காரணத்தாலும், 24—11—1981 நாளிட்ட பணியாளர் மற்றும் சீர்திருத்தத் துறை அரசாணை எண் 1181-ல் 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணிக்கு தேர்வாணையத்தால் நடத்தப்பட இருந்த பகுதி-4 போட்டித் தேர்வுக்கு மட்டும் விண்ணப்பதாரர்களின் உச்ச வயது வரம்பு 31 ஆக உயர்த்தி

(முற்பகல் 10-10)

ஆணை வெளியிடப்பட்டது. அதுபோலவே, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்பினைச் சார்ந்த விண்ணப்பதாரர்களுக்கான உச்ச வயது வரம்பும் 36 ஆக உயர்த்தப்பட்டது. பொதுவிதியில் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த விண்ணப்பதாரர்களுக்கு அளிக்கப்படும் சலுகை மேற்குறிப்பிட்ட தேர்வுக்கும் பொருந்தும் எனவும் ஆணை வெளியிடப்பட்டது. 28 வயது என்று உயர்த்திய பின்னரும் தனித் தன்மையில் விதியைத் தளர்த்துவது என்று வரும்போது, தனி ஆணைதான் பிறப்பிக்க முடியுமே தவிர, ஒட்டுமொத்தமாக பொதுவான ஆணை பிறப்பிப்பதற்கு இல்லை. இதில் பொதுப்படையான ஆணை ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே பட்டம் பெற்று வேலை தேடித் தரும் அலுவலகத்திலே பதிவு செய்யப்பட்டு 10 ஆண்டுக் காலம், 12 ஆண்டுக் காலம் அவர்கள் காத்திருந்தும், அதற்குப் பின்னாலே வயது வரம்பு காரணமாக வேலை கிடைக்காமல் இருப்பவர்கள் நாட்டில் இருந்துகொண்டிருக்கின்றார்கள். அப்படிப்பட்டவர்களுடைய நிலைமைகளைக் கவனத்தில் கொண்டு, படித்து பட்டம் பெற்று பின்னர் அவர்கள் வேலைக்காகப் பதிவு செய்த நாளையே அதற்குரிய வயதாகக் கொண்டு, வயது உச்சவரம்பு என்று இல்லாமல், அவர்களுக்கு எப்போது வேலை கிடைக்கிறதோ அப்போது வேலைக்குச் சேர்ந்துகொள்கின்ற வகையிலே சட்டத்தைத் திருத்த அரசு ஆலோசிக்குமா?

[1986 மார்ச் 25

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட முறைகள் ஏற்படுவதனால், பல சங்கடங்கள் ஏற்படக் காரண மாகிவிடும். புதியவர்கள் யாருமே வந்து சேர முடியாமல் போய்விடும், 32, 34, 36 வயதிலேதான் வேலைக்குச் சேர்கின்ற நிலைமைகள் ஏற்பட்டுவிடும். ஏற்கெனவே 25 வயது இருந்ததைத்தான் 28 ஆக ஆக்கியிருக்கிறோம். 28 வயதிலே, அந்த உரிய வயதிலே வேலை கிடைக்கின்ற அளவுக்கு வழிவகைப் படுத்திக்கொண்டிருக்கின்றார்கள். தேர்வாணைக் குழு தேர்வு நடத்தத் தவறியதால், இந்த இக்கட்டான சூழ்நிலைகள் வந்திருக்கின்றன. ஆகவே தனி யாகப் பிரச்சினைகள் வரும்போது, தனியான முறையில் அதற்கு என்று தனி ஆணை பிறப்பித்துக்கொள்ளலாம். அப்படி வேண்டுமென்றால், அப்படிப் பட்ட தனிப்பட்ட பிரச்சினைகள் வந்தால், பார்த்துக்கொள்ளலாமே தவிர, ஒட்டு மொத்தமாக வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்த நாளில் இருந்தே எடுத்துக்கொள்வது என்பது பொருந்தி வராது. வயது உச்ச வரம்பு தளர்த்தவேண்டியதாக வரும்போது, தனிப்பட்ட நேர்வுகளில் வேண்டு மென்றால் தனியாகப் பரிசீலிக்கலாம்.

திரு. எல். ஜெயச்சந்திரன் : தலைவர் அவர்களே, அரசுப் பணியில் 32 வயது வரை சேரலாம் என்று விதி இருக்க வேண்டும். 24 வயது ஆனாலும் வயதாகிவிட்டது என்று சொல்லி, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் இண்டர் வியூவிற்குக்கூட அனுப்புவதில்லை. 25 வயது என்பதை 28 வயது என்று ஆக்கியிருப்பதை 32 வயது வரையில் என்று உயர்த்தினால், வேலைவாய்ப்பு விதிகளைத் திருத்தினால், நிச்சயமாக அவர்களுக்கு அரசுப் பணிகளில் சேர் வதற்கு வாய்ப்பு இருக்கும். அதைச் செய்வதற்கு அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன். 28 வயது இப்போது இருப்பதை 32 வயதாக ஆக்க அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலிலேயே கூறியபடி, 28 வயது உச்சவரம்பை உயர்த்திய பின்னரும், பிற் படுத்தப்பட்டவர், தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்கள் போன்றவர்களுக்கு ஏற்கெனவே எந்தெந்த இடங்களில் உச்சவயது வரம்பை 5 ஆண்டுகள் வரை தளர்த்திக் கொடுக்க முடியுமோ அங்கெல்லாம் சலுகை அவர்களுக்குத் தரலாம். அந்த வகையிலே மாண்புமிகு உறுப்பினர் விண்ணப்பித்தால் அதுபற்றி அரசு கவனிக்கும்.



1986 மார்ச் 25]

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, வயது வரம்பைத் தளர்த்துகின்ற பிரச்சினையில் பாதிக்கப்பட்டிருக்கின்ற பட்டம் பெற்ற இளைஞர்கள், பட்டம் பெறாத இளைஞர்கள் இந்த இரு பாலாருக்கிடையிலே அது இன்று ஒரு சமுதாயப் பிரச்சினையாக மாறியிருக்கிறது. அவர்கள் மிகவும் மன விரக்தி அடைகின்ற அளவுக்கு இருக்கின்றார்கள். அவர்களுக்கு இன்டர்வியூ வாய்ப்புக்கூட கிடைக்கவில்லை என்ற அளவில் மனவிரக்தி படைந்திருக்கின்றார்கள். இன்றைய சமுதாய சூழ்நிலையில் மன விரக்தி நிலையில் இருக்கின்ற இளைஞர்கள் வன்முறையிலே நம்பிக்கை கொள்ளக்கூடிய அளவுக்கு வழிவகுக்கும். ஆகவே இந்தப் பிரச்சினையில் அரசு ஒரு நல்ல முடிவெடுத்தால், அந்த இளைஞர்களுக்கு வாழ்க்கையிலே நம்பிக்கை வரும். அரசு கடினமான நிலையை இதில் பின்பற்றாமல் சற்று விதிகளைத் தளர்த்தினால், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயச்சந்திரன் அவர்கள் கூறியதுபோல, வயது வரம்பைத் தாண்டியவர்கள் பயன் பெறுவார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் அதைப்பற்றி ஏதேனும் செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலேயே குறிப் பிட்டேன். இப்படி படித்துப்பட்டம் பெற்று வருகின்ற அனைவரும் தேர் வாணைக் குழு மூலமாகவே வேலை பெற வேண்டுமென்றால், அதை எந்த ஒரு நாடும் சமாளிக்க இயலாது. இப்போதுகூட வேலைவாய்ப்புப் பெற வேண்டியவர்கள் எண்ணிக்கையைப் பார்க்கும்போது, வயது வரம்புக்குட் பட்டு, தகுதி திறமையுடன் உள்ளவர்கள் 25 ஆயிரம், 30 ஆயிரம் பேர்கள் அளவுக்கு 500 பணியிடங்களுக்கு விண்ணப்பம் பண்ணக்கூடிய நிலைமைகள்

(முற்பகல் 10-15)

தான் ஏற்பட்டிருக்கின்றன. அதிலே வடிகட்டியதற்குப் பிறகு, இண்டர் வியூவிற்கு சில ஆயிரம் பேர்களை அனுப்பி, அதிலே 500 பேர்கள் தேர்ந் தெடுக்கப்படுகிறார்கள் என்ற நிலையில், மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லும் பிரச்சினை இருக்கத்தான் இருக்கும். விதிகள் என்று வைத்தால் தான், அதற்குள் கட்டுக்கடங்கி செவ்வனே நடத்த முடியும். அதைத் தளர்த்துவதால் குழப்பங்கள் உண்டாவதற்கான நிலைமைதான் ஏற்படும். நான் முதலிலே கூறியபடி, கிடைக்க வேண்டிய நியாயம் கிடைக்காத சூழ் நிலை ஏற்பட்டால், அதைத் தனி நேர்வாகக் கருதி, பரிசீலிக்கலாம்.

**திரு. க. சுப்பு:** தலைவரவர்களே, குறிப்பிட்ட வேலையில் சேராமல் போவது அங்கத்தினர்களுடைய கவலையல்ல. அது எல்லோருக்கும் தெரியும். வேலை தேடி அலையும் வாய்ப்பை அவர்களுக்குக் கொஞ்ச நாள் கூட்ட வேண்டுமென்று கேட்கிறோம். வயது வரம்பைத் தளர்த்தாமல் போனாலும், வேலை பார்க்கிற உரிமையை அடிப்படை உரிமையாக்கும் கோரிக்கை நீண்ட நாளாக இருக்கிறதே, அதற்காக அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்துமா? 'ரைட் டு ஒர்க்' என்பதை பண்டமென்டல் ரைட்சில் சேர்க்க வேண்டுமென்று கேட்கிறோம். ஏதாவது ஒன்றைச் செய்ய வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, வேலை செய்கிற உரிமை எல்லோருக்கும் இருக்கிறது. ஆனால் வேலை பெறுகிற உரிமை ஆங்காங்கே இருக்கிற சட்ட திட்டங்கள், விதி முறைகள் ஆகியவற்றுக்கு ஏற்ப அமைகிறது. வேலை செய்யும் உரிமை எல்லோருக்கும் இருக்கிறது.

**திரு. மு. செ. சங்கரலிங்கம்:** தலைவரவர்களே, இப்போது உச்ச வரம்பு வயது 28 என்ற அடிப்படையில் விதிகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அது மாறாமல் இருக்க வாய்ப்பு இருக்கிறதா? இப்போது வேலை வாய்ப்பு அலுவலகத்தில் 28 வயது முடிந்து வேலையில்லாமல் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பதை அறிந்து, அதற்குத் தகுந்தாற்போல் வயது வரம்பை உயர்த்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, ஏற்கெனவே ஓய்வு பெறுகின்ற வயது 55 என்று இருந்தது. அப்படி ஓய்வு பெறும் வயது 55 என்று இருந்தபோது, வேலையிலே சேருவதற்கான உச்ச வரம்பு 25 என்று விதிக்கப்பட்டது. 55 வயது என்று இருந்ததை 58 ஆக மத்திய அரசு உயர்த்திய நிலைமையில், மாநில அரசும் ஓய்வு பெறும் வயதை உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கையின் அடிப்படையில் 55 என்பதை 58 ஆக உயர்த்தினோம். 58 ஆக அதை உயர்த்திய நிலையில், சேருவதற்கான வயதை 25 என்று இல்லாமல், 3 ஆண்டுகள் கூட்டி, 28 என்று வைக்கப்படுவதுதான் முறை என்ற அடிப்படையில் 28 என்று ஆக்கப்பட்டிருக்கிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவரவர்களே, அரசுப் பணியில் சேருகின்ற வயதை 28 என்று உயர்த்தி, ஓய்வு பெறுகின்ற வயதை 58 ஆக உயர்த்தி இருக்கிறோம் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஓர் ஊழியர் பணியில் சேர்ந்து, ஓய்வு பெறும்போது 33 ஆண்டுக்காலம் பணியாற்றி இருந்தால்தான்



ஓய்வுகால முழுப் பயனை அனுபவிக்க முடியுமென்று விதி இருக்கிறது. 28 வயதில் பணியில் சேர்ந்து, 58 வயதில் ஓய்வு பெற்றால், அவர் பணியாற்றும் காலம் 30 ஆண்டுகள்தான். 33 ஆண்டுகள் பணியாற்றினால் தான் முழு ஓய்வூதியப் பயனைப் பெற முடியும். ஆனால் பணியாற்றுவதற்கு வாய்ப்பு குறைந்துதான் இருக்கிறது. எனவே 33 ஆண்டுக் காலம் பணியாற்றினால் தான் முழு ஓய்வூதியப் பயன்களைப் பெற முடியும் என்பதையாவது 30 ஆண்டுகள் என்று குறைப்பதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, உச்ச வரம்பு 28 என்று வைத்திருக்கிறோமே தவிர, 20 வயதிலேகூட வேலைக்கு வரலாம், 22 வயதிலே வேலைக்கு வரலாம், 26 வயதிலே வேலைக்கு வரலாம். 28 வயதிலும் வரலாம் என்று இருக்கிறது. ஆனால் 28 வயதில் வந்து, 30 ஆண்டுக்காலம் கழித்து ஓய்வு பெறும்போது, அப்படிப்பட்டவர்களுக்கு ஓய்வூதியம் குறைவாகக் கிடைக்கிறதென்று சொன்னார்கள். அது தனியாகப் பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று.

## பண்ணுருட்டி நகராட்சிப் பள்ளிகள்

* 103 வினா—**திரு. அ. ப. சிவராமன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பண்ணுருட்டி நகராட்சிப் பள்ளிகளில், 1—4—1985 நாளன்றுள்ளபடி, நிரப்பப்படாமல் உள்ள ஆசிரியர் பணியிடங்கள் எத்தனை?

(இ) அவை, எவ்வளவு காலமாக நிரப்பப்படாமல் உள்ளன?

(உ) நிரப்பப்படாமல் இருப்பதற்கான காரணங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) மூன்று.

(இ) 1 முதல் 2 வருடங்கள் வரை.

(உ) தமிழாசிரியை பணியிடம் ஒன்று 17—5—1985-ல் நிரப்பப்பட்டுவிட்டது. மீதி இரண்டு பணியிடங்கள், வேலைவாய்ப்பு அலுவலகங்களிலிருந்து தக்க நபர்கள் கிடைக்காததால், காலியாக உள்ளன. வேறு மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களிலிருந்து தக்க நபர்கள் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 10-20)

திரு. அ. ப. சிவராமன் : 30—6—1984 முதலே இந்த ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. இதுவரை இந்தப் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. நான் கேள்வி கேட்டே ஆறு மாதம் ஆகிறது. இரண்டாண்டுகளாக பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. அதுபோல் தமிழ் ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. இதற்குக் காரணம் என்ன என்பதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் சொன்னார். இருந்தாலும் கல்வி நிலையங்களில் இப்படி பணியிடங்கள் காலியாக இருப்பது அங்குள்ள மாணவர்களுக்குத் துயரம் தருவதாக இருக்கிறது. இந்நிலையை அகற்ற உடனடியாக முயற்சி எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வை இந்த அரசு அறிந்திருக்கிறது. எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் நிரப்ப இதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : பண்ணுருட்டி நகராட்சிப் பள்ளிகள் மட்டுமல்லாமல், மாநிலத்தில் இருக்கிற 98 நகராட்சிப் பள்ளிகளிலும் இன்றைக்கு முறையாக ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. நிறைய இடங்கள் காலியாக இருக்கின்றன. காரணம் கேட்டால், நிதிப் பற்றாக்குறை என்று சொல்கிறார்கள். பண்ணுருட்டி நகராட்சிப் பள்ளிகளில் ஆசிரியர் பணியிடங்கள் நிரப்புவது குறித்து கவனிக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். அதுபோல் மற்ற நகராட்சிகளிலும் உள்ள விவரங்களை உடனடியாகக் கேட்டறிந்து அந்தப் பணியிடங்களும் நிரப்பப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பண்ணுருட்டி நகராட்சிப் பள்ளிகளில் ஆசிரியர் பதவிகள் காலியாக இருப்பதற்கும் நிதிக்கும் சம்பந்தமே இல்லை. நிதியில்லாமல் பணியிடங்களை காலியாக வைத்திருக்கிறார்கள் என்கிற தவறான கருத்து பரவிவிடக் கூடாது என்பதற்காகத்தான் இதைக் கூறுகிறேன். தகுந்த ஆட்கள் இல்லாததால் தான் அந்தக் காலியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. நான் கொடுத்த புள்ளிவிவரமும் அதைத் தான் சொல்கிறது. ஆகவே, தகுந்த ஆட்கள் கிடைத்த உடன் காலியிடங்கள் நிரப்பப்படும். பண்ணுருட்டி நகராட்சிப் பள்ளிகள்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவராமன் எடுத்த அக்கறையைப் போல் மற்ற இடங்களிலும் மாண்புமிகு திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் அக்கறை எடுத்து கேள்வி கேட்டால் பதில் தர முடியும்.



திரு. க. சுப்பு : நகராட்சிப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் எல்லாம் இப்பொழுது அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்ட நிலையில் பழைய முறையிலேயே இனியும் காலியிடங்களுக்கு ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்களா அல்லது அரசே நேரடியாக நியமிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அரசு ஊழியர்களுக்குரிய சட்டதிட்டத்தின்படிதான் இனி அவர்கள் நியமிக்கப்படுவார்களேயல்லாமல் பழையபடி அல்ல.

திரு. எம். பி. சுப்பிரமணியம் : தகுதியுள்ள ஆசிரியர்கள் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். பண்ணுருட்டி நகராட்சிப் பள்ளிகளுக்கு மட்டும் அப்படி தகுதியுள்ள ஆசிரியர்கள் கிடைக்கவில்லையா அல்லது மாவட்டத்திலும் தமிழ் நாடு பூராவும் உள்ள பள்ளிகளுக்கும் அப்படி ஆசிரியர்கள் கிடைக்கவில்லையா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அந்த மாவட்ட ரீதியாக வேலைவாய்ப்பக்கத்திலிருந்து வந்த பட்டியலை வைத்துத்தான் சொன்னேன். அந்தப் பட்டியல்படி, தகுதியுள்ள ஆசிரியர்கள் இல்லையென்று சொல்லப்பட்டிருக்கிறது. வேறு இடங்களில் தகுதியுள்ள ஆசிரியர்களை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. அ. ப. சிவராமன் : வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து அனுப்பப்படும் பட்டியலில் தகுதியுள்ளவர்கள் இல்லையென்றால், சில நேரங்களில் பொது அறிவிப்பாக விளம்பரம் தந்து தகுதியுள்ள ஆட்களைத் தேர்ந்தெடுப்பது என்பது மரபாக இருக்கிறது. அதே மரபைப் பின்பற்றி இப்பணியிடங்கள் உடனடியாக நிரப்பப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அப்படி நிரப்புவது மரபல்ல. தகுதியுள்ளவர்கள் இல்லையென்றால், வேறு மாவட்டங்களிலுள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்களிலிருந்து பட்டியல் வாங்கி அதிலிருந்து தான் பணியிடங்களை நிரப்ப வேண்டும்.

கடலூரில் கொசுத் தொல்லை.

* 104. வினா—திரு. எல். ஜெயச்சந்திரன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) கடலூரில், இம்பீரியல் சாலைக்கருகில் உள்ள பெரிய குட்டையில், சாக்கடை கலப்பதன் மூலம் அதிக அளவு கொசுக்கள் உற்பத்தியாகி, சுகாதாரக் கேடு ஏற்படுகிறது என்பது அரசுக்குத் தெரியுமா ?

(இ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) மற்றும் (இ) ஆம். அரசுக்குத் தெரியும். சிறிது சிறிதாக, அந்தப் பகுதிகளில் எடுக்கப்படும் மண், கட்டிட இடிபாடுகள் முதலியவற்றைப் போட்டு இந்தப் பள்ளத்தை மூடும் பணி, மேற் கொள்ளப்பட்டுள்ளது. மேலும் பள்ளத்தில் தேங்கியுள்ள கழிவு நீரில் கொசு உற்பத்தியாவதைத் தடுக்க தடுப்பு மருந்து தெளிக்கும் பணி துரிதப்படுத்தப் பட்டுள்ளது.

திரு. எல். ஜெயச்சந்திரன் : கடலூரில், இம்பீரியல் சாலைக்கருகில் உள்ள பெரிய குட்டையில், சாக்கடை கலப்பதன் மூலம் அதிக அளவு கொசுக்கள் உற்பத்தியாகி, சுகாதாரக் கேடு ஏற்படுகிறது என்பதுபற்றி நகரசபையில் பல முறை எடுத்துக் கூறியும் அவர்களும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த அதே பதிலைத் தான் அளித்தார்கள். எங்களுக்கு நன்றாகத் தெரியும். நகரசபை எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. உடனடியாக இது சம்பந்தமான வேலைகளை ஆரம்பிக்க வேண்டும். விரைவில் அந்தக் குட்டையை மூடுவதன் மூலம் கொசுக்கள் உற்பத்தியாவதைத் தவிர்க்கலாம். ஆகவே உடனடியாக இதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அந்தக் குட்டையில் கழிவு நீர் தேங்கி யுள்ளது. இந்தக் கழிவு நீர் குட்டையை அப்புறப்படுத்த வேண்டிய வேலை களுக்கு, 2 லட்சம் ரூபாய் செலவில் திட்டம் மதிப்பிடப்பட்டுள்ளது. அது அரசின் பரிசீலனையில் உள்ளது. பரிசீலனை முடிந்தவுடன் கழிவுநீர் குட்டையை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : பொதுவாகவே கடலூரில் சுகாதாரம் மோசமாக இருக்கிறது. கடலூர் சுகாதார வசதிகளில் மிகவும் புறக்கணிக் கப்பட்ட இடமாக இருக்கிறது. சுகாதாரச் சீர்கேடுகள் கடலூர் நகராட்சிப்



பகுதியில் மிகவும் அதிகமாக இருக்கின்றன. உடனடியாக சுகாதாரச் சீர்கேடு களைப் போக்க வேண்டுமென்று அதிகாரிகளுக்குத் தெரிவித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இப்போதுதான் புதிதாக தலைவரும் உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்ட குறைகளை கவனிப்பார்கள் என்று நம்புகிறேன்.

நீதிப்பேராணை மேல்முறையீடு கட்டணம்

* 105 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) நீதிப்பேராணை மேல்முறையீடு (Writ appeal) செய்வதற்கு உள்ள கட்டணத்தை உயர்த்தியதற்கு, சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கம், எதிர்ப்பு தெரிவித்துள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர்களிடமிருந்து இதற்கு எந்தவித எதிர்ப்பும் அரசுக்கு வரவில்லை.

(இ) இல்லை.

(முற்பகல் 10-25)

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, நீதிப்பேராணை மேல் முறையீடு செய்வதற்கு ஏற்கெனவே இருந்த கட்டணம் எவ்வளவு ? இப்போது எவ்வளவு உயர்த்தப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருந்தது ரூ. 100. அதன்பின் இங்கே ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டு அது 200 ரூபாயாக உயர்த்தப்பட்டது. நீதிப்பேராணை மேல்முறையீட்டு வழக்கிற்கு சராசரி செலவு ரூ. 266 என்று உயர்நீதிமன்றத்தால் கூறப் பட்டுள்ளது. அந்தக் கணக்கீட்டின் அடிப்படையில் இந்தத் தொகை உயர்த்தப் பட்டுள்ளது.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, உயர்த்தப்பட்ட நீதிப்பேராணைக் கட்டணத்தோடு, காலதாமதமும் அதிக அளவில் ஏற்படுகிறது. குறிப்பாக, சர்வீஸ் மேட்டர்கள் அதிகமாக வருகிறபோது, நிறைய வழக்குகள் தேங்கு

இன்றன. இதைத் தவிர்க்க, மத்திய அரசு ஊழியர்களுக்கான டிரிப்யூனல் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் மாநில அரசு ஊழியர்கள் பிரச்சினைகளைத் தீர்க்க, மாநில அரசு டிரிபியூனல் ஒன்றை அமைக்க இருப்பதாக, சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த டிரிபியூனல் அமைக்கும் பணி எந்த அளவிற்கு இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பேரவையில் சுட்டிக் காட்டியது, கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்குத் தக்க நிர்வாக ஏற்பாடுகள் செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. விரைவில் அந்த டிரிபியூனல் நிறுவப்படும்.

**திரு. க. சுப்பு :** தலைவர் அவர்களே, மத்திய அரசு சட்டப்படி அத்தகைய டிரிபியூனல் அமைக்க, மத்திய அரசிடம் அனுமதி பெறவேண்டியிருக்கிறது. அந்த அடிப்படையில் போகப்போகிறோமா அல்லது தனியாகவே சட்டம் கொண்டு வந்து நாமே போடப்போகிறோமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, மைய அரசின் அனுமதியோடு அமைக்கப்படும்.

## LEGAL AID TO THE POOR.

*106 *Q.*—Thiru K. SUBBU : Will the Hon. the Minister for Law be pleased to state—

(*a*) whether it is a fact that the legal aid to the poor, provided by the State Legal Aid Board, is being misused by touts; and

(*b*) whether there is any machinery to verify the eligibility of the applicants to legal aid?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) இல்லை

(இ) ஆம்.

**திரு. க. சுப்பு :** தலைவர் அவர்களே, இந்த சட்ட உதவி வழங்கும் முறை எந்தவிதமான வருமானத்தின் அடிப்படையிலும் கொண்டுவரப்படவில்லை. தேவையான நிதி கிடைக்க இந்தச் சட்ட உதவிக் குழு பயன்படுத்தப் படுகிறது. ஆனால் எந்த நோக்கத்தோடு இந்தக் குழு அமைக்கப்பட்டதோ அந்த நோக்கம் இடைத் தரகர்களால் சிதைக்கப்படுகிறது என்று புகார்கள்



வருகின்றன. அதைத் தடுக்க எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது என்பதையும், இந்த இடைத் தரகர்களினால் ஏற்படும் இடையூறுகள் அந்த நல்ல நோக்கத்தினை தடுப்பதால், அதைச் சரியான முறையில் நீக்க முடியுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, இடைத் தரகர்களைப் பொறுத்தவரையில், சிவில் வழக்குகளில் தனியார் தலையீடு இருப்பதற்கு வாய்ப்பு இல்லையென்று சட்ட உதவிக் குழு தெரிவித்துள்ளது. ஆனால் கிரிமினல் வழக்குகளைப் பொறுத்தவரையில், இந்த இடைத்தரகர் முறை நடைமுறையில் உள்ளது. அதைத் தடுக்கவும் தக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மேலும் ஒவ்வொரு வட்ட அளவிலும் இத்தகைய குழுக்கள் அதிக எண்ணிக்கையில் அமைக்கப்பட்டுள்ளன. அதன் காரணமாகவும் இடைத்தரகர்கள் தலையிட வாய்ப்பு இல்லை. பெரும்பாலான இடங்களில் மக்களே நேரடியாக வழக்கறிஞர்களை அணுக வாய்ப்பு இருக்கிறது. இத்தகைய சட்ட உதவிக் குழுக்கள் இல்லாத நேரங்களில், நெடுந்தூரம் மக்கள் செல்லவேண்டியிருப்பதால், இடைத்தரகர்களை சில நேரங்களில் நாடவேண்டிய நிலை ஏற்படுகிறது. இத்தகைய 137 சட்ட உதவிக் குழுக்கள் தமிழ் நாடு முழுவதும் உள்ளன. இதற்காக ரூ. 38 லட்சம் நிதி ஒதுக்கப் பட்டிருக்கிறது. இத்தகைய சட்ட உதவிக் குழுக்கள் மற்ற வட்டங்களுக்கு நீட்டிக்கப்படும்போது, இந்தப் பிரச்சினை தீரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

**திரு. க. சுப்பு :** தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே இத்தகைய சட்ட உதவிக் குழுவை நாம் அமைத்து அது சிறப்பான பணியை ஆற்றிக் கொண்டிருக்கிறதைப்பற்றி நான் பாராட்டுகிறேன். இதற்காக வழக்கறிஞர் களைத் தேடுகிறபோது, வேறு வழக்குகள் கிடைக்காதவர்களை இதிலே நாம் 'அக்காமடேட்' செய்வதுபோல் ஒரு குறைபாடு இருக்கிறது. ஆகவே வெளியிலிருந்து சிறந்த வழக்கறிஞர்களை அதிகக் கட்டணம் கொடுத்தாவது அமர்த்தி வழக்குகளில் வெற்றி பெறக்கூடிய நிலையில் இருந்தால் நல்லது. அதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, இதிலே ஆரம்ப காலத்திலே இப்படிப்பட்ட நிலை இருந்தது. தற்போது நிலைமை முற்றும் மாறுபட்டிருக்கிறது. ஏ கிரேடு, பி கிரேடு என்ற பட்டியல்களில் உள்ள வழக்கறிஞர் ஆகியோர் அந்த வழக்குகளைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கருதினால், சம்பந்தப்பட்ட கருத்துக்களைக் குறிப்பிட்டு குறிப்புரை ஒன்றை அவர் தயாரிக்கலாம். இதற்கான உண்மை நிலையை

ஆய்வு செய்தோம். இந்த வழக்கிற்கும் ஆயாராக வருகிற வழக்கறிஞர்களை எண்ணிக்கையைவிட, பெரும்பாலும் நன்கு திறமையான சீனியர் அட்வகேட்டைப் போடலாம் என்ற கருத்து வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறிய குறைபாடுகள் தமிழகத்தில் அதிகம் இல்லை. மாண்புமிகு நீதிபதி கிருஷ்ணசாமி அவர்களும், மாண்புமிகு திரு. ராமகிருஷ்ணன் அவர்களும் ஒவ்வொரு மாவட்டமாகச் சென்று அத்தகைய குழுக்களை அமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். தன்னிச்சையாக அவர்கள் சுதந்திரத்தோடு செயல்பட அரசு அனுமதி தந்திருக்கிறது. அவர்கள் இருவரும் அதிகத் தகுதி உள்ளவர்களாகப் பார்த்து நியமிக்கிறார்கள். நியமிக்கப்பட்டவர்களில் குறைபாடு உள்ளவர்கள், குற்றம் சாட்டப் பட்டவர்கள் இருந்தால், அவர்களை நீக்குகிற பணியையும் அவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள்.

(முற்பகல் 10-30)

**திரு. அ. ப. சிவராமன் :** தலைவர் அவர்களே, இலவசச் சட்ட உதவி மூலமானாலும் சரி அல்லது நேரடியாக வழக்கறிஞர்கள் வைத்துக் கொள்வது மூலமானாலும் சரி, விபத்தில் ஈடுபட்டவர்களின் வாரிசுதாரர்கள் இழப்பீடு கோரி வழக்குகள் தாக்கல் செய்து, நீதிமன்றங்கள் இழப்பீடு அளிக்கவும் இன்சூரன்ஸ் தொகை பெறவும் ஆணை பிறப்பிக்கும்போது, மேற்படி தொகைகளை விபத்தில் இறந்தவர்களின் வாரிசுதாரர்களிடம் நேரிடையாகக் கொடுக்காமல், வழக்கறிஞர்களிடம் கொடுக்கும் நிலை தற்போது இருந்து வருகிறது. பல இடங்களில் மேற்படி தொகை பாதிக்கப்பட்டிருப்பவர்களுக்குப் போய்ச் சேருவதில்லை. இந்த நடைமுறையை மாற்றிட அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறும் நடைமுறை தற்போது இருந்து வருவது உண்மைதான். அதைப் போக்க வேண்டும் என்றுதான் இந்த இலவசச் சட்ட உதவிக் குழுவைப் பொறுத்தவரைக்கும் பாதிக்கப்பட்ட மக்களிடம் அவர்கள் நேரடியாகத் தொடர்புகொண்டு, அவர்களுக்கு இந்த உதவியைச் செய்ய நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்கள். அந்த அடிப்படையில் இதுகாறும் 3,01,59,000 ரூபாய் அளித்து நேரடியாகப் பட்டுவாடா செய்வதற்கு இலவசச் சட்ட உதவிக் குழு நடவடிக்கை எடுத்து வருகிறது.





## திருவாரூர் அருகே மேம்பாலம் கட்டுதல்

*107 வினா.—**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவாரூர்-நாகப்பட்டினம் சாலையில், திருவாரூர் அருகே இருப்புப்பாதை குறுக்கிடும் இடத்தில், மேம்பாலம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** (அ) மற்றும் (இ) தஞ்சாவூர் மாவட்டம், திருவாரூர்-நாகப்பட்டினம் கடலூர்-மைசூர் சாலையில் மாநில நெடுஞ்சாலை கி.மீ. 22/6-ல் ரூ. 50 இலட்சம் செலவில் இரயில்வே மேம்பாலம் கட்ட அரசு அனுமதி வழங்கி அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, திருவாரூர்-நாகப்பட்டினம் சாலையிலுள்ள அந்த இருப்புப் பாதைக்கு மேம்பாலம் கட்டுகிற பணி தொடங்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதுவரை தொடங்கப்பட்டதாகத் தெரியவில்லை. அது எப்போது உண்மையிலேயே தொடங்கப்படும், எப்போது முடிக்கப்படும் என்று அறிய விரும்புவதோடு, ஏற்கெனவே திருவாரூர்-திருத்துறைப்பூண்டி சாலையிலும் உள்ள பாலம் கட்டி முடிக்கப்படும் நிலையில் இருப்பதாகச் சொல்கிறார்கள். அது எப்போது திறந்து வைக்கப்படும் என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, கட்டி முடிக்கப் பட்டிருக்குமானால், உடனே அதைத் திறந்து விடலாம். நாகை-திருவாரூர் சாலையில் உள்ள பாலத்தைப் பொறுத்தவரையில், வேலைகள் துவங்கி விட்ட தென்று குறிப்புகள் கொடுத்திருக்கிறார்கள். ஏறத்தாழ மூன்று கண்கள் கொண்ட பாலம் அமைக்கப்பட இருக்கிறது என்றும், இரண்டு கண்கள் பாலம் கட்டப்பட்டதென்றும், படுக்கைப் பலகைகள்கூட போடப்பட்டதென்றும், இன்னொரு கண்ணுக்கு பலகை போட வேண்டுமென்றும் குறிப்பு கொடுத்திருக்கிறார்கள். இணைப்புச் சாலையைப் பொறுத்தவரையில், இந்த மாத கடைசிக்குள்ளாக அதைத் துவங்கி முடிக்க வேண்டுமென்று அறிவுறுத்தப் பட்டிருக்கிறது. ஒருவேளை வேலை தடைப்பட்டிருக்குமானால் அல்லது ஆரம்பிக்கப்படாமலிருக்குமானால், நிச்சயமாக கடுமையான நடவடிக்கை எடுக்கலாம்.

[1986 மார்ச் 25

திரு. நெல்லை பாலாஜி: தலைவர் அவர்களே, திருநெல்வேலி நகரத் தொடர்ந்து தச்சநல்லூர் அருகில் எதிரில் மீட்டர் கேஜ் பாதையும், பிராட்கேஜ் பாதையும் நுழைக்கிறது. அங்கு எதாவது மேம்பாலம் கட்டுவதற்கு முயற்சி உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது தஞ்சை மாவட்டத்தைப் பற்றிய கேள்வி. திரு. அ. ப. சிவராமன் . . .

திரு. அ. ப. சிவராமன்: தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்தில் மட்டுமல்லாமல், தமிழகம் பூராவும் இதுபோன்று மேம்பாலங்கள் எத்தனை இடங்களில் கட்டுவதற்கு அரசு உத்தேசித்திருக்கிறது? அவற்றில் எவ்வளவு பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, மொத்தம் பதினான்கு பணிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று மத்திய அரசுக்கு எழுதினோம். அவற்றில் ஏறத்தாழ ஏழு இடங்களில் கட்டுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டு, சில இடங்களில் வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன; சில இடங்களில் ஏற்பாடுகள் தொடங்க இருக்கின்றன.

சாலைகளை மேம்படுத்துதல்

*108 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாட்டிலுள்ள வாகனப் போக்குவரத்து மிகுந்த சாலைகள் அனைத்தையும், தார் சாலைகளாக மேம்பாடு செய்வதற்கான திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) மற்றும் (ஆ) ஆண்டுதோறும் கிடைக்கின்ற நிதி ஒதுக்கீட்டினைப் பொறுத்து சாலைகள் படிப்படியாக மேம்படுத்தப்பட்டு வருகின்றன.



1986 மார்ச் 25]

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள மாவட்டச் சாலைகளில் 'மேஜர் டிஸ்ட்ரிக்ட் ரோட்ஸ்' என்றும், "அதர் டிஸ்ட்ரிக்ட் ரோட்ஸ்" என்றும் இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. இரண்டு பிரிவுகளிலும் பல இடங்களில் சாலைகளில் வாகனப் போக்குவரத்து அதிகமாக உள்ளது. அவ்விடங்களில் மேம்பாடு செய்யாமல் இருப்பதனால், பெரிதும் போக்குவரத்திற்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது.

(முற்பகல் 10-35)

ஆகவே தமிழகம் முழுவதும் இப்படிப்பட்ட சாலைகள் எத்தனை இடங்களில் இருக்கின்றன? எத்தனை இடங்களை தார் சாலைகளாக ஆக்குவதற்கு அரசு முயற்சி செய்கிறது என்பது போன்ற விவரங்களை அறியலாமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, மொத்தமாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், நிறைய கணக்கு இருக்கிறது. கான்கிரீட் சாலைகள் மொத்த நீளம் 232 கிலோ மீட்டர். தார் சாலைகள் நீளம் 20,597 கிலோ மீட்டர், கருங்கல் மற்றும் கப்பி சாலைகள் 3,162 கிலோ மீட்டர். கப்பி போடாத சாலைகள் 130 கிலோ மீட்டர். இவைகள் அத்தனையும் நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற சாலைகள். இதில் எங்கெங்கே தார் சாலை இல்லையோ, அங்கு படிப்படியாக தார் சாலை அமைக்க வேண்டுமென்ற முயற்சியை அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. நிதி வசதியைப் பொறுத்து கொஞ்சம் கொஞ்சமாக அரசு அந்த வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறது. மொத்தமாக எல்லாச் சாலைகளையும் செய்ய முடியவில்லை. மண் சாலைகள் கூட அதிகமாக இருப்பதற்குக் காரணம் தன்நிறைவுத் திட்டத்தின் கீழ் நிறைய சாலைகள் அமைத்து விட்டதுதான். மண் சாலைகளின் நீளம் அதிகமாக இருக்கிறது. அத்தனையையும் உடனே தார் சாலைகளாக அமைப்பதற்கு நிதிவசதி இல்லை. அவைகளில் தார் சாலை போடுவதற்கு அரசு படிப்படியாக நடவடிக்கை எடுக்கும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தலைவரவர்களே, படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்படுமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது அப்படி. படிப்படியாக எடுக்கப்படும் என்பதற்குப் பதிலாக, ஒவ்வொரு ஆண்டும் இத்தனை கிலோ மீட்டர் மண் சாலைகள் தார் சாலைகளாக மேம்படுத்தப்படுமென்று மாற்றுவதற்கு குறியீடு வைத்து அரசு செயல்படுமே யானால், மண் சாலைகள் அத்தனையையும் தார் சாலைகளாக மாற்றுவதற்கு வழி ஏற்படும். அப்படி ஒரு புதிய திட்டத்தை வகுத்துச் செயல்படுத்த அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவரவர்களே, இவ்வளவு கிலோ மீட்டர் சாலைகளைக் கணக்கிட்டு, இவ்வளவு தொகைதான் செலவிடப்பட வேண்டுமென்று கணக்கு வைத்து, தார் சாலைகள் போடப்படுகின்றன. அந்த அடிப்படையிலேதான் பணமும் ஒதுக்கப்படுகிறது ; நடவடிக்கையும் எடுக்கப் படுகிறது. குறிப்பாக ரோடுகளே இல்லாத பல கிராமங்களுக்கு புதிதாக ரோடுகள் அமைக்கப்பட்ட உடனே அங்கே பஸ் விட வேண்டுமென்று கோரிக்கை வருகிறது. பஸ் விட்ட உடனே அந்தப் பாதைகள் அதிகமாகப் பாதிக்கப்பட்டுவிடுகிறது. பொது மக்கள் சௌகரியமாகப் போக வேண்டும், பஸ்கள் சௌகரியமாகப் போக வேண்டும் என்பதற்காக பாதை அமைக்கப் பட்ட உடனே அங்கு பாதைதான் இருக்கிறதே தவிர, அங்கு பஸ் போகும் போது அது பாதிக்கப்பட்டுவிடுகிறது. இப்போது தார் சாலைகளாக மாற்றினால்தான், பஸ்ஸே போகுமென்ற நிலை இருக்கின்ற காரணத்தால், அரசே மிகத் தீவிரமாக இதைச் செய்ய வேண்டுமென்ற உணர்வோடு இப்போது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே எதிர்காலத்தில் நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளை மனதில் வைத்து அந்தக் காரியங்கள் செய்யப்படும்.

**திரு. க. சுப்பு :** தலைவரவர்களே, நிதிவசதியைப் பொறுத்து தேர்ந் தெடுத்து தார்சாலைகள் போடப்படுகின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படித் தெரிந்தெடுப்பதற்கு ஏதாவது 'கைடு லைன்ஸ்' இருக்கின்றனவா ? எந்தச் சாலையை எடுப்பது, எந்த மாவட்டத்தில் எடுப்பது என்பதற்கு விதிமுறைகள் இருக்கின்றனவா ? இல்லையென்றால் போக்கு வரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இருக்கிறார் என்று சொன்னால், அவர் களுடைய பகுதியில் அதிகமாக பஸ் விட வேண்டுமென்று கோரிக்கை வருகிறது. பிறகு பஸ் போவதற்கு சாலைகள் வேண்டி கோரிக்கை வந்து விடுகிறது. அந்த அடிப்படையில்தான் தார் சாலைகள் போடப்படுகின்றன. ஆனால் விருதுநகரைச் சுற்றி, அந்த மாவட்டம் தலைநகரான பிறகும் கூட. இன்னும் ஒரு வண்டி கூட போக முடியாத நிலைமைதான் அங்கு இருக்கிறதே தவிர—வண்டிக்காரனைக் கூப்பிட்டால்கூட வரமாட்டேன்கிறான்—அந்த அளவுக்கு சாலைகள் மிக மோசமாகப் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன. அதனால் சாலைகள் போடுவதற்கு 'கைடு லைன்ஸ்' ஏதாவது இருக்கின்றனவா அல்லது நாமே கட்டுப்பாடு பண்ணிக்கொள்ள வேண்டுமா ?





**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவரவர்களே, எல்லாவற்றிற்கும் 'கைடு லைன்ஸ்' இருக்கின்றன. ரோடுகள் எங்கெங்கே அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றனவோ அவைகளைப் பொறுக்கி எடுத்து அந்தச் சாலை வேலைகளை அரசு செய்து கொண்டிருக்கிறது. எங்கெங்கே இப்படி உறுப்பினர்கள் மிகத் தீவிரமாகச் செயல்படுகிறார்களோ, அங்கே சாலைகள் வேலை கொஞ்சம் அதிகமாக நடக்க வாய்ப்பு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் அந்தக் காரியத்தை இப்போது துவக்கி யிருக்கிறார்கள். எதிர்காலத்திலே அது சிறப்பாக நடக்குமென்று நம்பிக்கை இருக்கிறது. எனவே எங்கெங்கு சாலைகள் மோசமாக இருக்கின்றனவோ, தனக்குத் தெரிந்த அந்த சாலைகளைப்பற்றி எழுதிக் கொடுத்தால், மிக அதிகமான அக்கறையை நான் நேரடியாக எடுத்துக்கொள்ள வாய்ப்பாக இருக்கும். எனவே உறுப்பினர்களுடைய உதவியோடுதான் செய்ய வேண்டும். இதுவரை சொல்லாமல் இருந்தாலும் பரவாயில்லை. இனிமேலாவது எனக்கு எழுதிக் கொடுத்தால், நிச்சயமாக அதிகமான நடவடிக்கை அரசு எடுக்கும்.

**திரு. அ. ப. சிவராமன் :** தலைவரவர்களே, ஆலைகள் இருக்கின்ற பகுதிகளில் கரும்பு ஆலைகளின் லாபத்தில் ஒரு சதவீதத்தை எடுத்து ரோடுகளை போட்டுக் கொண்டிருக்கிறோம். அதுபோல பல்வேறு போக்கு வரத்துக் கழகங்களில்—லாபகரமாக இருக்கும் போக்குவரத்துக் கழகங்களில்—ஒரு சதவீதத்தை எடுத்து இந்தமாதிரி ரோடுகள் போடுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவரவர்களே, கரும்பு ஆலைகளைப் பொறுத்தவரை, ஆலைகளுக்குக் கரும்பு வந்தாக வேண்டும். எனவே அந்தக் கரும்பு நல்லபடியாக வந்து சேர வேண்டுமென்பதற்காக ஆலைகள் செலவு செய்யத் தயாராக இருக்கின்றன. ஆனால் போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரை, அந்தப் பேருந்துகள் அங்கே வரவேண்டுமென்பது மற்றவர் களுக்கு இருக்கிற அக்கறை. எனவே பஸ் விட வேண்டுமென்றால், மற்றவர்கள் அதற்கு ரோடு போட்டுத் தர வேண்டுமேயொழிய, அதற்கு பேருந்துக் கழகங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது சரியாக இருக்காது. அதோடு பேருந்துக் கழகங்களில் உள்ள பணத்தையெல்லாம் எடுத்துவிட்டால், புதிய பேருந்துகள் விடுவதை நிறுத்தி, பழைய பேருந்துகளை ஓட்ட வேண்டிய நிலை ஏற்படும் ; பல சிக்கல்களை நாம் சந்திக்க வேண்டிய நிலை வந்துவிடும். எனவே அரசு சார்பாகத்தான் ஒவ்வொரு போக்குவரத்துக் கழகமும் அந்தப் பணத்தை அந்தக் காரியங்களுக்காகச் செலவு செய்ய

வேண்டும். ஒவ்வொரு போக்குவரத்துக் கழகமும் ரோடு டாக்ஸ் கட்டிக் கொண்டு வருகிறது. எனவே அதன் மூலமாகத்தான் அந்தப் பணத்தை இப்போது வைத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே தனியாகப் பாதை அமைத்துக்கொள்வது என்பது நடக்காத காரியம். அது மிகவும் சிரமமான காரியமும் ஆகும்.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** தலைவரவர்களே, பொதுவாக தமிழகத்தில் ஆயிரக்கணக்கான வாகனங்கள் இருக்கின்றன. அவைகள் வரும் அளவுக்குத் தகுந்தவாறு சாலைகள் விருத்தியாகவில்லை. அந்த அளவுக்கு வசதி செய்து தரப்படவில்லை. அந்த ஒரு சராசரியை வைத்துத்தான் வாகனங்களின் வரியை உயர்த்தி, சாலைகளுக்கு வசதி செய்து தரவேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில், வாகனங்களின் எண்ணிக்கை அளவிற்குத் தகுந்தவாறு சாலைகள் ஒற்றையடிச் சாலைகளாகத்தான் இருக்கின்றன. இன்னும் இரண்டு சாலைகளாக வரவில்லை. வாகனங்களின் எண்ணிக்கைக்குத் தகுந்தவாறு சாலைகளின் வசதியை அதிகரிக்கவும், இரு வழிச் சாலைகளாக்கவும் அரசுக்கு எண்ணம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-40)

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் சாலைகளின் நீளத்தை நாம் அதிகரித்து விட்டதால்தான், இந்தச் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. சாலைகளை அகலப்படுத்த நாம் நடவடிக்கை எடுத்திருந்தால், நிறைய காரியங்களைச் செய்திருக்க முடியும். ஆனால் கிராமப்புற மக்கள் வந்து போவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்களே என்ற எண்ணத்தின் அடிப்படையில் நாம் பல புதிய இணைப்புச் சாலைகளையும், மற்ற சாலைகளையும் அமைத்துவிட்டதன் காரணமாக, எல்லாவற்றையும் பராமரிப்பது என்பது மிகவும் சிரமமாக இருக்கிறது. இப்போதும் சாலைகளை அகலப்படுத்தும் பணியை எல்லா இடங்களிலும் படிப்படியாகச் செய்து கொண்டுதான் இருக்கிறோம். என்றாலும் இன்னும் தீவிரப்படுத்தும் நடவடிக்கையை இந்த அரசு தொடர்ந்து எடுத்துக் கொண்டுதான் வருகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



## வேலை வாய்ப்பு.

* 109 **வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு மறுவாழ்வு-வேலை வாய்ப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், தமிழகத்தில் சுமார் 10 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்க, தமிழக அரசு திட்டமிட்டிருந்தது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், திட்ட காலத்தில் 15—2—1985 முடிய எவ்வளவு பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டது ?

**மாண்புமிகு திரு. தா. இராமசாமி :** (அ) வேலைவாய்ப்பினை அதிகரிக்க எல்லா முயற்சியும் எடுக்கப்பட்டு வரும் நிலையில், 10 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும் என்று நிர்ணயிக்கப்படவில்லை. வேலையில்லா பிரச்சனையைக் குறைப்பதே ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

(இ) திட்ட காலத்தில் 15—2—1985 முடிய கீழ்க்கண்ட திட்டத்தின் வாயிலாக வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டவர்கள் விவரம் கீழ்வருமாறு :—

(இலட்சத்தில்)

| | |
|---|---|
| வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக பணியில் அமர்த்தப்பட்டவர்கள். | 3.19 பேர்கள் |
| கிராம ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தின் மூலம் பயனடைந்தவர். | 13.89 பேர்கள் |
| சுயவேலைவாய்ப்பு திட்டத்தின்மூலம் | 0,10 பேர்கள் |
| குடும்பத்தில் ஒருவருக்கு வேலைவாய்ப்பு திட்டத்தின்மூலம் முதலமைச்சரின் குழந்தைகள் சத்துணவு திட்டத்திற்கு வேலையில் அமர்த்தப்பட்டவர். | 1.97 பேர்கள் |
| தமிழ்நாடு தேர்வாணைக் குழுவின் மூலம் வேலையில் அமர்த்தப்பட்டவர்கள். | 0,33 பேர்கள் |
| மொத்தம் .. | 19,48 பேர்கள் |

இந்த அளவுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வியின் நோக்கமே வேறு. அரசு அன்றாட நிர்வாக நடவடிக்கைகள் மூலமாகவும் இயல்பாகவும் பூர்த்தி செய்யக்கூடிய பதவிகளுக்கு அப்பாற்பட்டு சிறப்புத் திட்டங்களை உருவாக்கி அதன் மூலமாக வேலை இல்லாத இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க ஒரு இலக்கை வைத்து இந்த அரசு செயல்பட்டிருக்கிறதா என்று அறிந்து கொள்வதற்காகத்தான் நான் கேள்வி கேட்டேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன் பதிலில் அரசினுடைய அன்றாட பல்வேறு நிர்வாக நடவடிககைகள் மூலமாகவும், இயல்பான நடவடிக்கைகள் மூலமாகவும் நிரப்பப்பட்ட பதவிகளின் விவரத்தைத்தான் இங்கே கொடுத்திருக்கிறார்கள். வேலை இல்லாதவர்களுக்கு வேலை கொடுப்பதற்காக என்றே ஒரு இலக்கை ஏற்படுத்தி அதற்காக ஒரு திட்டத்தை உருவாக்கி செயல்படுத்தினால்தான், நாம் இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண முடியும். ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலும் இந்த வகையில் எத்தனை பேருக்கு வேலை கொடுப்பது என்று கூடுதல் இலக்கை வைத்து செயல்பட்டால்தான், இந்தப் பிரச்சினை தீரும் என்ற அடிப்படையில், அதற்காக அரசு என்ன திட்டங்களைத் தயாரித்திருக்கிறது என்றும், அதற்காக என்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. தா. இராமசாமி :** தலைவர் அவர்களே, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கமே அனைத்துப் பகுதிகளிலும் உள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதாகும். அந்த வகையில் வேலைவாய்ப்பகங்கள் மூலமாகவும், அரசு போடுகிற திட்டங்களான கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்புத் திட்டம், நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம், ஒருங்கிணைந்த திட்டம், கிராம வளர்ச்சித் திட்டம் என்கிற பல்வேறு திட்டங்களின் அடிப்படையில் நாடெங்கும் வேலை வாய்ப்புகளை உருவாக்கிட முடியும் என்ற நிலையில்தான் மத்திய அரசு அதற்கான ஆணைகளை வழங்கி, மாநில அரசு அத்திட்டங்களை எல்லாம் தீவிரமாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையில்தான் வேலைவாய்ப்பு நிலையங்கள் மூலமாகவும் தேர்வாணைக் குழு மூலமாகவும் மற்றும் மேலே சொல்லப்பட்ட திட்டங்கள் மூலமாகவும் கடந்த ஐந்து ஆண்டுகளில் எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பு கொடுத்திருக்கிறது என்ற கணக்கை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்விக்கு விடையாக நான் கொடுத்திருக்கிறேன்.



மற்றபடி ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையில், இவ்வளவு பேருக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்ற எந்தக் குறியீடும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தந்திருக்கிற விவரங்களில் தற்காலிக வேலைகளும் இருக்கலாம். கேஷுவல் லேபர் கூட இருக்கலாம். நிரந்தரமான வேலைகளும் இருக்கலாம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்த விவரப்படி, 3.19 லட்சம் பேருக்கு வேலை கிடைத்திருக்கிறது என்று தெரிகிறது. கிராமப்புறங்களில் செயல்படுகிற பல்வேறு திட்டங்கள் மூலமாக 13 லட்சம் பேருக்கு மேல் வேலை கிடைத்திருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவர்களில் கேஷுவல் லேபர் என்று சொல்லத்தக்க, சில நாட்களுக்கு மட்டுமே வேலை கொடுக்கப்பட்டு அதற்குப் பிறகு வேலை இல்லாமல் போய்விடுகிறவர்களும் இருக்கலாம். எனவே அதைத் தனியாகப் பிரித்துச் சொன்னால் விளக்கம் கேட்க வசதியாக இருக்கும். அதாவது வேலை அளிக்கப்பட்டவர்களில் நிரந்தரப் பணி பெற்றவர்கள் எவ்வளவு பேர்? தற்காலிகப் பணி பெற்றவர்கள் எவ்வளவு பேர்? கேஷுவல் லேபர் எவ்வளவு பேர் என்ற விவரம் தெரிவிக்கப்படுமா?

(முற்பகல் 10-45)

**மாண்புமிகு திரு. தா. இராமசாமி :** அதற்கான குறிப்புகள் தற்போதில்லை. தனிக் கேள்வி போட்டால், அதற்கான குறிப்புகள் தரப்படும்.

**திரு எல். ஜெயச்சந்திரன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 15—2—1986 முடிய எவ்வளவு பேருக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று பொதுவாகக் கூறியிருக்கிறார். அதிலே எவ்வளவு பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது என்ற விவரத்தையும் கூறினால், நன்றாக இருக்கும். மக்கள் தொகையைக் குறைக்கும் பணியில் தமிழக அரசு அகில இந்திய அளவில் நல்ல பல திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது. அதைப் போலவே மக்கள் தொகைப் பிரச்சினைக்கு அடுத்தபடியாக உள்ள பெரிய பிரச்சினையான இந்த வேலை வாய்ப்புப் பிரச்சினையிலும் நல்ல பல திட்டங்களைத் தீட்ட அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. தா. இராமசாமி :** மூலக் கேள்வி ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே வேலைக்கமர்த்தப்பட்டவர்களைப் பற்றியது. அது சம்பந்தமாக ஒரு விவரக் குறிப்பை அளித்தேன். மேலும் பட்டதாரிகளில் எத்தனை

பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டது, மற்றவர்களுக்கு எவ்வளவு என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்குரிய குறிப்புகள் தற்போதில்லை. தனிக் கேள்வி போட்டால், விவரம் தரப்படும்.

**திரு. க. சுப்பு :** தமிழகத்திலே வேலை வாய்ப்பு குறைவாக இருக்கும்போது, இந்திய அரசாங்கத்திற்கும் ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் விளைவாக தாயகம் திரும்பக்கூடிய ஸ்ரீலங்கா-தமிழர்களையும் வேலைக்கமர்த்த வேண்டிய சுமை நமக்கு இருக்கிறது. வங்காளத்திலேயிருந்து வந்தவர்களை அந்தமான் தீவில் குடியமர்த்தி அவர்களுக்கு மத்திய அரசினர் நிறைய பணமும் கொடுக்கிறார்கள். அதைப் போலவே ஸ்ரீலங்கா-இந்திய அரசுகளுக்கிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் விளைவாக வந்தவர்களை—அவர்களாகவே வந்தவர்கள் அல்ல—மத்திய அரசின் செலவிலேயே அந்தமான் தீவில் குடியமர்த்தலாம். ஏனென்றால் அவர்கள் ஸ்ரீலங்காவிலே இருந்த மலைத் தோட்டத் தொழிலாளர்கள், ஏற்கெனவே மலையில் பணிபுரிந்து பழக்கப் பட்டவர்கள். அப்படிப்பட்டவர்களை மத்திய அரசு அந்தமான் தீவில் அதனுடைய செலவிலேயே குடியமர்த்த வேண்டும் என்று மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்தியிருக்கிறதா? அப்படி இல்லையென்றால் இனியாவது அப்படி வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. தா. இராமசாமி :** ஸ்ரீலங்காவிற்கும்-இந்தியாவிற்கும் இடையே 1964 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் அவர்கள் தாயகம் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி தாயகம் திரும்புகிறவர்களை அந்தமான் போன்ற தீவுகளுக்கு அனுப்பலாமே என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறார். பொதுவாக இந்த ஒப்பந்தத்தின்கீழ் வருகிறவர்களை அண்டை மாநிலங்களான கர்நாடகா, ஆந்திரா போன்ற மாநிலங்களுக்கு அனுப்பினாலே, தமிழ் நாட்டை விட்டு அவ்வாறு வெளியே போகிறபோது வேறு நாட்டிலே இருப்பதாக அவர்களுக்கு உணர்வு ஏற்படுகிறது. அவர்கள் அங்கேயிருந்து திரும்பவும் தமிழ் நாட்டிற்கு வந்துவிடுகிறார்கள். அவர்களுக்கு மீண்டும் ஆலோசனை வழங்கப்பட்டு திருப்பியனுப்பும் சூழ்நிலை இருக்கிறது. இந்தியாவிலே இருக்கக்கூடிய மற்ற மாநிலங்களுக்கு அனுப்பினாலே வேறு நாட்டிற்குச் செல்வது போன்ற உணர்வு அவர்களுக்கு வரும் சூழ்நிலை இருக்கும்போது அந்தமான் போன்ற தீவுகளுக்கு அனுப்பும் யோசனை இதுவரையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



### செவிலியர் பயிற்சி.

* 110 வினா.—**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு மறுவாழ்வு-வேலை வாய்ப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வேறு மாநிலங்களில் செவிலியர் பயிற்சி பெற்ற தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள், தமிழகத்தில் உள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களில், தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ள முடியாத நிலை உள்ளது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்குரிய காரணம் யாது?

**மாண்புமிகு திரு. தா. இராமசாமி :** (அ) வேறு மாநிலத்தில் செவிலியர் பயிற்சி பெற்ற தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள், தமிழகத்தில் உள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களில் தங்களது பெயரினை வேலைவாய்ப்பிற்காக பதிவு செய்து கொள்ள முடியும். உறுப்பினர் கூறுவது போன்று பதிவு செய்து கொள்ள முடியாத நிலை இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** வேறு மாநிலங்களில் செவிலியர் பயிற்சி பெற்ற தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் தமிழகத்தில் உள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்திருப்பவர்கள் எத்தனை பேர்? அவர்களில் வேலை வாய்ப்பைப் பெற்றவர்கள் எத்தனை பேர்?

**மாண்புமிகு திரு. தா. இராமசாமி :** ஆந்திரப் பிரதேசத்தில் 22 பேர்கள் இங்கேயிருந்து சென்று செவிலியர் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். கேரளாவில் ஐந்து பேர், கர்நாடகாவில் 31 பேர், பஞ்சாபில் ஒருவர், உத்திரப் பிரதேசத்தில் 4 பேர், மகாராஷ்டிரத்தில் 17 பேர், பாண்டிச்சேரியில் 3 பேர், ஒரிசாவில் ஒருவர், பீகாரில் ஒருவர், மத்திய பிரதேசத்தில் ஒருவர், தமிழ்நாட்டில் 444 பேர், குஜராத்தில் இருவர் ஆகமொத்தம் 532 பேர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேறு மாநிலங்களில் பயிற்சி பெற்று இங்கே பதிவு செய்தவர்கள் பட்டியலைத் தந்திருக்கின்றார். தமிழ்நாட்டின் பட்டியலையும் சேர்த்து, அந்த 444 பேர்களையும் சேர்த்து அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்திருக் கின்றார்கள்.

தமிழ் நாட்டில் பயிற்சி பெற்றவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள்பற்றி நான் கேள்வியைக் கேட்பதற்கு முன்வரவில்லை. வெளி மாநிலங்களிலிருந்து வந்தவர்களிலே எத்தனை பேர்கள் பதிவு செய்திருக்கின்றார்கள் என்ற பட்டியல் தந்திருக்கிறார்கள். அப்படிப் பதிவு செய்திருப்பவர்களைப் பற்றித்தான் கேட்டிருக்கிறேன். அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கின்றதா ? எத்தனை பேருக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது ? தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. தா. இராமசாமி :** தலைவர் அவர்களே, மொத்தக் கணக்கைத்தான் நான் அவர்களுக்குச் சொன்னேன். மொத்தம் 532 பேர்களிலே தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் 444 பேர்களைக் கழித்துப்பார்த்தால் மீதி இருப்பது என்ன என்று தெரியும். எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கின்றது என்ற விவரம் இல்லை. தனிக்கேள்வி போட்டால், விவரம் அறிந்து தரப்படும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்)

## 2. 1985—86 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த இறுதி துணை விவர அறிக்கையின் மீது விவாதம்.

* **திரு. சி. இராமலிங்கம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் இங்கே துணை மான்ய நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்திருக்கின்றார்கள். அதன் மீது என்னுடைய கருத்தினைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு தமிழ் நாட்டிலே கைத்தறி நெசவாளர்களுடைய வாழ்க்கை மிக மிகப் பரிதாபகரமாக இருக்கிறது. அவர்கள் அப்படிப்பட்ட சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டு வருகின்ற சூழ்நிலையில் கடந்த ஆண்டு 1985—86-லே மாண்புமிகு அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் நெசவாளர்களுடைய வேலை வாய்ப்புக்காக, கிட்டத்தட்ட 17.25 கோடி ஒதுக்கி, தள்ளுபடி, ஏதாவது ரிபேட்டுக்கும் மான்யமாகவும் கொடுத்திருக்கின்றார்கள். அதற்காகவும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.



(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

ஒரு பக்கத்திலே மான்யம் கொடுக்கிறோம். ரிபேட் கொடுக்கிறோம். இன்றைக்கு கைத்தறி நெசவாளர்கள் நெசவுத் தொழிலை நம்பி வாழ்கின்றவர்கள், கிட்டத்தட்ட 75 லட்சம் பேர்கள் இருக்கின்றார்கள் என்று சர்க்கார் கணக்கு சொல்கிறது. அவர்களுக்கு இன்றைக்கு போதுமான வேலை வாய்ப்பு இல்லாமல் இருக்கின்றது. மாநில கோ-ஆப்டெக்ஸ், தமிழ் நாடு கைத்தறி நெசவாளர்கள் சங்கத்திலேயே கிட்டத்தட்ட 60 கோடி ரூபாய் சரக்கு தேங்கியிருக்கின்றது. அதுபோலவே பிரைமரி சங்கத்திலேயும் உற்பத்தி செய்து சரக்குகளை வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அதை எங்கே கொண்டுபோய் விற்பது என்று தெரியாமல் இருக்கின்றார்கள். இன்னறக்கு வெளி மாநிலங்களிலே சென்று விற்பதற்கும் வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. அதற்குக் காரணம் இன்றைக்கு ஆந்திராவிலே ரியல் மெட்ராஸ் ஹாண்ட்கர்சிப் என்ற ரகத்தை உற்பத்தி செய்கின்றார்கள். ஆந்திராவும் தமிழ் நாடும் உற்பத்தி செய்கின்றது. அதை உற்பத்தி செய்து மேற்கு ஆப்பிரிக்கக் கண்டத்திற்கு அனுப்பி வந்தோம். அதிலே ஏற்றுமதி பற்றி சொல்கின்றார்கள். அந்த ஆப்பிரிக்கக் கண்டத்திற்கு அனுப்புவதில் சுயதேவை பூர்த்தி என்ற திட்டமும், அதே நேரத்திலே பண்டமாற்று திட்டமும் என்ற அளவில் வைத்து நாம் மத்திய அரசுக்குத் தெரிவித்தோம். அந்த மாதிரி ஏற்றுமதித் திட்டத்திற்கு மத்திய அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கின்றது. ஆந்திராவிலே கிட்டத்தட்ட 2 லட்சம் பேர்களும் தமிழ் நாட்டிலே கிட்டத்தட்ட 2 லட்சம் பேர்களும், நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் அதிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் இன்று வேலையில்லாமல் இருக்கின்றார்கள். நம் மாநிலத்தின் மக்கள், குறிப்பாக செங்கற்பட்டு மாவட்டத்திலே வட ஆற்காடு மாவட்டத்திலே இருப்பவர்கள், அதாவது ஆந்திராவின் எல்லையோரப் பகுதியிலே இருப்பவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை. அந்த எல்லையோரப் பகுதி கிராம மக்கள் வேறு ரகங்களுக்குச் சென்றுவிட்டார்கள். ஆனால் ஆந்திராவிலே இருப்பவர்கள் வேறு ரகத்திற்குச் செல்ல முடியாமல் அவர்கள் அங்கே இன்றைக்கு நம் தமிழகத்தில் உற்பத்தி செய்யக்கூடிய ஏற்றுமதி ரகங்களை உற்பத்தி செய்கின்றார்கள். அதாவது மெட்ராஸ் ஹேண்ட்கர்சீப் என்றும் மெட்ராஸ் செக்ஸ் என்றும் அதே போல் லுங்கிகள் என்றும், கைலி என்ற ரகத்தை அவர்கள் உற்பத்தி செய்து, விற்று வருகின்றார்கள். அதே லுங்கிகளையும், கைலிகளையும் நாம் பாரம்பரியமாக நெய்து வருகிறோம். ஆனால் நாம் வெளி மார்க்கெட்டிலே விற்கின்ற விலைக்கும், ஆந்திராவிலே உள்ளவர்கள்

உற்பத்தி செய்து விற்கும் விலைக்கும் வித்தியாசம் இருக்கிறது. அவர்கள் விலை குறைவாக இருக்கின்றது. இதற்கு என்ன காரணம்? நம் வியாபாரி கள் எல்லாம் ஒரு மெமொராண்டம் கொண்டு வந்து கொடுத்து மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைப் பார்த்திருக்கின்றார்கள் என்று நினைக்கிறேன். கைத்தறி அமைச்சர் அவர்களையும் சந்தித்திருக்கின்றார்கள். என்னையும் சந்தித்தார்கள். அவர்கள் சொன்ன காரணத்தை நான் இங்கே சொல்ல வேண்டியது என்னுடைய கடமையாகும். ஆந்திராவிலே நூலுக்கு விற்பனை வரி கிடையாது. அதுபோலவே சாயப் பொருள்களுக்கு விற்பனை வரி கிடையாது. அங்கே வரி இல்லை. இன்றைக்கு நம் மாநிலத்திலே உற்பத்தி செய்யக்கூடிய மில்களிலே உற்பத்தி செய்யக்கூடிய நூலுக்கு உற்பத்தி வரி என்று சொல்லக்கூடிய சேல்ஸ் டாக்ஸ் 1.5 சதவிகிதம் என்று போட்டிருக் கின்றார்கள். அந்த நூல் வெளியிலே மார்க்கெட்டுக்கு வந்து விற்கின்றபோது

(முற்பகல் 10-55)

3 சதவிகிதம் அதற்கு வரி போடுகிறோம். அது இங்கே 4 சதவிகிதம் விலை அதிகமாக இருக்கிறது. இன்றைக்கு ஒரு கட்டு நூல் இங்கே 100 ரூபாய் என்றால், ஆந்திரா மாநிலத்திலுள்ள தடா, சத்தியவேடு, நகரி, நாகலாபுரம் பகுதிகளிலே 95 ரூபாய்க்கு அதை வாங்கலாம். அங்கே உள்ள மில்கள் அங்கே விற்கின்றனவா என்றால் இல்லை. அவர்கள் இங்கே இருந்துகொண்டு, பில் போட்டு விற்கிறார்கள். அதனால் 4, 5 ரூபாய் குறைவாக இருக்கிறது. சாயப் பொருள்களுக்கு 8, 10 சதவிகிதம் வரி போடுகிறோம். சாயத் தொழிற்சாலைகளில் சாயம் போட்டு வெளியே விற்கும் நூலுக்கு விற்பனை வரி போடுகிறோம். இங்கே 20 ரூபாய்க்கு சாயம் போடுவதாக இருந்தால், ஆந்திராவில் 15 ரூபாய்க்குப் போடுகிறார்கள். அடுத்து, 'மினிமம் வேஜஸ் ஆக்ட்' நம்முடைய மாநிலத்தில் கொண்டு வந்திருக்கிறோம். அதன்படி இங்கே நிறைவான கூலியைக் கொடுக்கிறோம். அந்த வரவேற்று நான் பேசியிருக்கிறேன். ஆந்திராவில் 'மினிமம் வேஜஸ் ஆக்ட்' இல்லை. அதனால் கூலியையும் குறைவாகக் கொடுக்கிறார்கள்.

உதாரணத்திற்கு சங்கு மார்க் லுங்கியை எடுத்துக் கொள்வோம். இங்கே 32 ரூபாய்க்கு அது கிடைக்கிறது என்றால், அவர்கள் இங்கே கொண்டு வந்து 32 ரூபாய்க்கு அதே குவாலிட்டி லுங்கியை விற்கிறார்கள். உள் நாட்டில் மட்டுமல்லாமல், ஏற்றுமதி செய்து கொண்டிருந்ததும் இதனால் நின்று விட்டது. ஸ்ரீலங்கா, மலேசியா, சிங்கப்



லுங்கிகள் போவது நின்றுவிட்டது. கல்கத்தா, பம்பாய், டில்லி போன்ற பகுதிகளுக்கு நம் லுங்கிகள் போய்க்கொண்டிருக்கின்றன. அங்கேயும் நமமுடைய லுங்கிகளின் விற்பனை குறைந்துவிட்டது. அதைப்போல வேட்டிகள், துண்டுகள், டவல்கள் விற்பனையும் குறைந்துவிட்டது. ஆந்திரா வில் 6 லட்சம் நெசவாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கும் இதே தொழில்தான். வங்காளத்தில் 4 லட்சம் நெசவாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கும் தொழில் நெசவுதான். வங்காளம், ஆந்திர மாநிலங்களில் வரி போடாததால், அவர்கள் சரக்கு குறைந்த விலையில் இருக்கிறது. நெகமம் சேலை என்று நாம் சொல்லுவோம். மிகவும் அழுத்தமான சேலை. அதை 75 ரூபாய்க்கு விற்கிறோம். அவர்கள் அதை குண்டூர் சேலை என்று சொல்லி 60 ரூபாய்க்கு வெளி மார்க்கெட்டில் விற்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் கைத்தறியில் செய்யும் சேலைகளுக்குப் போடும் விற்பனை வரி யாலும், சாயம் போட்ட பொருள்களுக்கான வரியாலும் விலை ஏறிவிட்டது. அதனால் சரக்குகள் விற்பனையாகாமல் தேங்கியிருக்கின்றன. வேலையில்லாத் திண்டாட்டம் பெரிதும் இருக்கிறது. நான் மாண்புமிகு நிதி அமைச்ச ரவர்களைக் கேட்டுக்கொள்வது, நெசவாளர்களுக்கு இன்றைக்கு 17 கோடி ரூபாய் இனாமாகக் கொடுக்கிறோம். மத்திய அரசும் கொடுக்கிறது. மத்திய அரசு கொடுக்கும் பணத்தை வைத்துப் பார்க்கும்போது, இதிலே வரும் விற்பனை வரி குறைவாக இருக்கும். எனவே அதைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்வேன்.

இப்போது பனியன் பின்னும் ஹோசியரி நூலுக்கு 2 சதவிகிதம் இருந்தது; கைத்தறி நூலுக்கு 3 சதவிகிதம் இருந்தது, மற்ற நூல்களுக்கு 4 சதவிகிதம் இருந்தது. கோன் நூல் பவர் லூமில் நெய்வது வழக்கம். இப்போது சராசரி 3 சதவிகிதம் வரி என்று வந்த பிறகு பனியன் நெய்பவர் களுக்கு 2 சதவிகிதம் என்பது 3 சதவிகிதமாகிவிட்டது. அதைப்போல பவர் லூமில் நெய்பவர்களுக்கு 1 சதவிகிதம் குறைந்துவிட்டது. லைசன்ஸ் இல்லாமல் 2 லட்சம் முதல் 5 லட்சம் வரை இருக்கின்றன. அவர்கள் உபயோகிக்கும் கோன் நூலுக்கு 1 சதவிகிதம் குறைந்துவிட்டது. இன்றைக்கு சலுகை, லைசன்ஸ் இல்லாமல், சட்டவிரோதமாகத் துணி நெய் பவர்களுக்குத்தான் இருக்கிறது. அதே நேரத்தில் பனியன் உற்பத்தி யாளர்கள் சொல்லும் காரணம், இன்றைக்கு பனியன் திருப்பூரில் மட்டும் நெய்யப்படவில்லை என்பதுதான். வங்காளத்தில் அளவு கடந்து நெய் கிறார்கள். வெளி நாடுகளுக்கு பனியன் ஏற்றுமதி செய்யும் ஒப்பந்தங்கள் நம்மிடமிருந்து கல்கத்தாவிற்குப் போய்விட்டன. அங்கே வரி இல்லாததால்

குறைந்த விலையில் உற்பத்தி செய்து விற்கிறார்கள். டெல்லியைச் சுற்றி, கான்பூர், லக்னோ பகுதிகளில் பனியன்கள் அதிகமாக உற்பத்தி செய்து, டெல்லி மார்க்கெட்டில் பிளாட்பாரங்களில் 5 ரூபாய்க்கு 'டி' சர்ட் விற்கும் அளவுக்கு வந்துவிட்டது. பம்பாயிலும் இந்தியா கேட்டைச் சுற்றி 2 ரூபாய்க்கு ஒரு பனியன் என்று விற்கிறார்கள்.

(முற்பகல் 11-00)

அதேபோல் பம்பாய் பிளாட்பாரத்தில் ஒரு மீட்டர் பாலியஸ்டர் துணி ரூபாய், 10 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. டாட்டா போன்ற பெரு முதலாளிகள் உற்பத்தி செய்த துணிகளை எந்த வரியையும் கட்டாமல் இம் மாதிரி மார்க்கெட்டுக்குக் கொண்டு வந்து குறைந்த விலையில் விற்கிறார்கள். சுங்க அதிகாரிகள் மற்ற அதிகாரிகள் எல்லாம் இப்படிச் செய்வதை அனுமதிக் கிறார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. பம்பாயில் எந்த ரகத் துணி யாக இருந்தாலும். குறைந்த விலைக்கு வாங்கலாம் என்கிற நிலைமை இருக் கிறது. இந்தத் தொழிலில் இருக்கும் ஒரு நண்பர் சொன்னதைச் சொல் கிறேன். இன்றைக்கு அகமதாபாத், பம்பாய் போன்ற இடங்களிலிருந்து மட்டும் இந்தியா பூராவும் போகக் கூடிய துணிகளின் மதிப்பு கிட்டத்தட்ட 10 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகம் என்று அவர் சொன்னார். தமிழகத் திற்கு மட்டும் ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் துணி வருகிறது என்று தெரி கிறது. அதுவும் சேல்ஸ் டாக்ஸ், ஆக்ட்ராய் வரி போன்ற எந்த ஒரு வரியையும் அவர்கள் கட்டாமலேயே இந்தியா பூராவும் அனுப்புகிறார்கள். ஆனால் அதேநேரத்தில் நம்முடைய கைத்தறித் துணிகள் பம்பாய்க்குப் போனாலும், கல்கத்தாவுக்குப் போனாலும் அல்லது இந்தியாவின் எந்த ஒரு பகுதிக்குப் போனாலும் ஆக்ட்ராய் வரி உண்டு. ஆந்திரா மட்டும் இதற்கு விதிவிலக்கு. ஆனால் மற்ற இடங்களிலிருந்து இங்கே வருகின்ற துணிகளுக்கு மட்டும் வரியே இல்லை. அதுவும் நம்முடைய கைத்தறித் துணிகளை விட குறைந்த விலைக்கு அவர்கள் விற்கிறார்கள்.

இந்நிலையில் நம்முடைய கைத்தறி நெசவாளர்களை நாம் காப்பாற் றியாக வேண்டும். ஏதோ ஜனதா ரகம் என்றால், மத்திய அரசு சப்சிடி கொடுக்கிறது. நேற்றையதினம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் சொன்ன கருத்துக்கு பதில் அளித்தது உள்ளபடியே கைத்தறி நெசவாளர்களுடைய நலனுக்கு உகந்த தொரு நல்ல பதிலாகும். இப்படி ஜனதா ரகத்தை கைத்தறி நெசவாளர் களுக்குக் கொடுத்து ஏதோ ஒரு சப்சிடியை மட்டும் கொடுப்பது ஏமைகளைக்



காப்பாற்றாது. கொடுக்கின்ற சப்சிடியையும் ஏதோ தர்மத்திற்குக் கொடுப்பது மாதிரி அறிவிக்கிறார்கள். டெக்ஸ்டைல் கார்ப்பரேஷனில் உள்ள வர்களுக்கு நஷ்டம் ஏற்பட்ட ரகங்களைப் பார்த்து கைத்தறி நெசவாளர் களுக்கு ஒதுக்கினார்கள். இப்படி ஜனதா ரகம் போன்ற ரகங்களை நம்முடைய நெசவாளர்களுக்கு ஒதுக்கி நம்முடைய ஏழையெளிய கைத்தறி நெசவாளர்களை இன்னும் நசுக்க வேண்டுமா? காடா ரகத் துணிகளை நெய்வதற்கு நாங்கள் இனியும் தயாராக இல்லை. ஏதோ இன்றைக்கு 2 ரூபாய் அதற்கு சப்சிடியாகக் கொடுக்கிறார்கள். இந்த ரகங்களை நெய்வதால், அவர்களுக்குக் கூலி கூட கிடைக்கவில்லை.

திரு. எம். பி. சுப்பிரமணியம்: பொருள்களை வாங்கும் சக்தி குறைந்த வர்களுக்கு ஜனதா ரகத் துணிகளை வாங்குவதற்காகத்தான் மத்திய அரசு உதவி செய்திருக்கிறது. அதோடு கூட கைத்தறியாளர்களுக்கும் வேலை கிடைக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில்தான் கைத்தறி நெசவாளர்களுக்கு இந்த ரகத்தைக் கொடுத்தார்கள். ஆனால் இப்படி மாண்புமிகு உறுப்பினர் இந்த ரகத்தை கைத்தறி நெசவாளர்களுக்கு ஒதுக்கக் கூடாது என்று இப்போது சொல்வது அவர்களுடைய நலனுக்கு விரோதமானது என்பதை அவர்கள் அறிவார்களா?

திரு. சி. இராமலிங்கம்: மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே சொன்ன கருத்து இந்த நாட்களுக்கு ஏற்றவை அல்ல. ஏழையெளி யவர்களுக்கு இலவசமாக அல்லது குறைந்த விலையில் துணிகள் கொடுப்பது எல்லாம் ஒரு காலத்தில் அதாவது 1 ரூபாய், 1½ ரூபாய் சம்பளத்தில் அவர்கள் வேலை செய்து வந்த காலத்தில் பொருத்தமாக இருந்தது. ஆனால் இன்றைக்கு 8 ரூபாய்க்கு மேல் குறைந்தபட்சம் சம்பளம் வாங்குகிறார்கள். மேலும் உண்மையாகவே ஏழையெளியவர்களுக்கு இந்தச் சலுகைகள் நேரடி யாகப் போய்ச் சேர்வதில்லை. இன்றைக்கு மத்திய அரசு நலிந்த மில்க ளுக்கு எவ்வளவோ உதவி செய்கிறது. 10 கோடி, 8 கோடி ரூபாய் நஷ்டத்தில் மில்களில் பல இயங்குகின்றன. கடந்த ஆண்டு மட்டும் நலிந்த மில்களுக்கு மத்திய அரசு 1,800 கோடி ரூபாயை மானியமாகக் கொடுத்தது. அங்கேயுள்ள மெஷின்கள்கூட லாயக்கற்றவை. யாரோ சொன்னார்கள் என்பதற் காக இந்த ரகத் துணிகள் மட்டும் ஏழையெளியவர்களுக்குக் கிடைக்க வேண்டுமா? ஏன் பாலியஸ்டர் போன்ற நல்ல ரகத் துணிகளைக் கொடுக்கக் கூடாது? ஏழையெளியவர்களுக்கும் நல்ல ரகத் துணிகளைக் கொடுங்கள். சாப்பாட்டில் மட்டும் அவர்கள் கஞ்சியையாவது குடிக்கட்டும். ஆனால்

[திரு. சி. இராமலிங்கம்] [1986 மார்ச் 25

உடுப்பதிலுமா வித்தியாசம் பார்க்க வேண்டும். ஒருசிலர் மட்டும்தான் தலைப்படியாக இருக்க வேண்டும், மற்றவர்கள் எப்படியோ இருக்கட்டும் என்று ஆகுமா? சுதந்திரம் கிடைத்து 30 ஆண்டுகளுக்குப் பிறகும் இப்படி இருக்க வேண்டுமா? படித்தவர்கள் மட்டும்தான் நல்ல ரகத் துணிகளை உடுத்த வேண்டுமா? இதற்கு அரசியல்வாதிகளாகிய நாம் போராடுகிறோம். இன்றும் போராடுகிறோம். ஆனால் ஏழை மக்கள் நிலையை உயர்த்தினோம் என்று யாரும் சொல்ல முடியாது. படித்துவிட்டு பதவியில் இருப்பவர்கள்

(முற்பகல் 11-05)

தங்கள் சுற்றத்தைத்தான் பார்க்கிறார்களே தவிர, சமுதாயத்தை யாரும் பார்ப்பது கிடையாது; நாட்டைப் பார்ப்பதில்லை. இன்றைக்கு மத்திய அரசு எத்தகைய திட்டங்கள் திட்டியிருக்கின்றன என்றால், என்னுடைய கருத்து, அது எந்தத் திட்டத்தையும் மக்களுடைய நன்மைக்காகக் கொண்டு வரவில்லை என்பதுதான். மத்திய அரசு ஜவுளிக் கொள்கை வைத்திருக்கிறது. அது கைத்தறியை வளர்க்கும் விதத்தில் இல்லை. பம்பாய் போன்ற ஊர்களில் உள்ள டாட்டா மில்ஸ், பிர்லா மில்ஸ், மொரார்ஜி மில்ஸ் போன்ற பெரிய ஆலைகள் எல்லாம், கோடிக்கணக்கான மீட்டர் துணிகளை மில்லில் உற்பத்தி செய்து, பம்பாயின் பிளாட்பாரங்களில் போட்டு, எந்தவித வரியும் இல்லாமல் விற்பனை செய்து வருகிறார்கள். இதை எந்த சுங்க அதிகாரியாவது, சேல்ஸ் டாக்ஸ் அதிகாரியாவது, எக்சைஸ் அதிகாரியாவது கேட்கிறார்களா? அப்படிக் கேட்டால், அவர்கள் உடனே மாற்றப்பட்டு விடுகிறார்கள். அந்த நிலைமை, டெக்ஸ்டைல் மில் துணிகளைப் பொறுத்த வரையில், இருக்கிறது. இஷ்டத்திற்கு அவர்கள் துணியை ஏராளமாக உற்பத்தி செய்து மார்க்கெட்டில் கொண்டு வந்து குவிக்கிறார்கள். இது என்ன நியாயம்?

திருமதி இந்திரா காந்தி அவர்கள் பிரதமராக இருந்தபோது, நான் அவர்களைச் சந்தித்து கைத்தறித் துணிக்கு தனிச் சட்டம் கொண்டுவர வேண்டுமென்று கேட்டபோது, அவர்கள் "ஏ பவர்லூம் ஹை, படா லாபி ஹை" என்று சொன்னார்கள். நான் விடாது பிடித்து கெஞ்சிக் கேட்டதால்தான், அண்ணாவின் லட்சியமான அந்தச் சட்டத்தை அங்கே கொண்டு வர முடிந்தது. கைத்தறிக்கு என்று சட்டம் கொண்டு வந்தார்கள். அதற்குப் பிறகு டெக்ஸ்டைல் பாலிசி வந்தது. ஆனால் ஜனதா துணிகளால் நெசவாளர் சமுதாயத்திற்கு எந்தவித நன்மையும் கிடையாது. அதை மாற்ற வேண்டுமென்று தமிழக அரசு தகுந்த ஏற்பாடுகள் செய்வதாக நேற்றுகூட



1986 மார்ச் 25] [திரு. சி. இராமலிங்கம்]

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். இன்றைக்கு நெசவாளர்களுக்குக் கடன் கொடுக்கிறோம் என்று மத்திய அரசு அறிவிக்கிறது. நெசவாளர்கள் கடன் வாங்க கூட்டுறவு சங்கத்தில் சேர்ந்தால், எங்களுக்கு வீடு இருக்க வேண்டும், பாவு, அச்சு, போன்ற இயந்திரங்கள், பெண்டாட்டி, பிள்ளை குட்டிகள் இருந்தாகவேண்டும். இவ்வளவும் இருந்தால்தான் மூலதனக் கடனாக 2,500 ரூபாய் கொடுப்பார்கள். ஆனால் இன்றைக்கு மேளா நடத்தி கடன் கொடுக்கிறார்கள். எஸ்.எஸ்.எல்.சி., பி.ஏ., போன்ற படித்தவர்களுக்கு அவன் எந்தத் தொழில் செய்வான் என்று கூட பார்க்காமல், 25 ஆயிரம் ரூபாய்வரை கடன் தருகிறார்கள். கணக்கே காட்டத் தேவையில்லை. "இந்தியாவில் 30 லட்சம் நெசவாளர்கள் இருக்கிறார்கள். ஆனால் எங்களுக்குப் பாதுகாப்பு இல்லை", என்று டெல்லியில் நான் சொன்னதை இங்கேயும் சொல்கிறேன். எங்களுக்கு மத்திய அரசு தருகிற சலுகைகள் பற்றாக்குறையாக இருக்கின்றன; எந்தவித பாதுகாப்பையும் ஏற்படுத்தித் தரவில்லை. முன்பு நெசவாளர்கள் கஞ்சி சாப்பிட்டோம். இப்போது வடித்த சோறு சாப்பிடும் நிலைதான் இருக்கிறது. அவ்வளவுதான். ஆனால் மில் முதலாளிகள் எவ்வளவு வேண்டுமானாலும் தங்கள் இஷ்டத்திற்கு துணிகளைத் தயாரிக்கலாம் என்று ஆகியிருக்கிறது.

இப்போது பாலியஸ்டர், பிளெண்டட் யார்ன் போன்ற செயற்கை நூல்கள் வந்துவிட்டன. செயற்கைத் துணிகளைக் கொண்டுவந்து குவிக்கிறார்கள், ஆகவே டெக்ஸ்டைல் பாலிசியை மாற்றியமைத்து அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தைக் கொண்டுவர வேண்டுமென்று நான் மத்திய அரசை கேட்டுக் கொள்கிறேன். மத்திய அரசு பாலியஸ்டர் நூலுக்கு வரியில்லை என்று அனுமதித்திருக்கிறது. யார் மொத்தமாக 'செக்' கொடுக்கிறார்களோ அவர்களுக்கு எக்சைஸ் வரியைக் குறைத்திருக்கிறார்கள். ஆனால் இங்குள்ள கோ-ஆப்டெக்ஸ் ஸ்பெஷல் ஆபீசர் 'செக்' கொடுக்க முடியாது. பணமாகத் தந்தால் வரிச் சலுகை கிடையாது. ஆகவே இதனால் பலனடைவது முதலாளிகள் தான். அதனால் மத்திய அரசு டெக்ஸ்டைல் பாலிசியை மாற்றியமைக்க வேண்டும். நெசவாளர் பிரைமரி சங்கத்திற்கு தறி ஒன்றுக்கு 2,500 ரூபாய் வீதம் 'ஷேர் கேப்பிடல்' கொடுக்கலாம் என்று 100 தறிகளுக்கு இரண்டரை லட்ச ரூபாய் கொடுக்க வேண்டுமென்று டெக்ஸ்டைல் டைரக்டர் சிபாரிசு செய்திருந்தும், அந்தப் பணத்தை அப்படியே கொடுக்காமல் இங்குள்ள கூட்டுறவு மத்திய வங்கிகள் வேண்டுமென்றே ரூ. 30,000 தான் கொடுக்கிறது. இதை வைத்துக் கொண்டு எத்தனை தறி நெய்வோம்?

பற்றிச் சொன்னேன். நெசவாளர்களுக்கென்று ஒரு கூட்டுறவு வங்கி வைத்துக்கொண்டால், அவர்களிடம் போய் தொங்கவேண்டியிருக்காது. இன்றைக்கு நெசவாளர்களுக்கு பல ஏற்பாடுகள் செய்திருக்கிறோம். பவர் லூம்காரர்களை அதில் சேர்த்துக்கொள்ளலாம். முதலாளிகளையும் சேர்த்துக் கொள்ளலாம். வெறும் 30 ஆயிரம் ரூபாய் பணம் கொடுத்தால், தொழில் செய்ய முடியவில்லை. அப்படியே தொழில் செய்தாலும் கூட்டுறவு பிரைமரி சங்கத்தில் 10,000 ரூபாய் சரக்கு இருக்கிறது. மாநில சங்கம் ரூ. 20,000-க்கு சரக்கு தருகிறது. மொத்தத்தில் ரூ. 30,000-க்கு சரக்கு வருகிறது. கூலி

(முற்பகல் 11-10)

கொடுக்காமல் நாங்கள் நெய்கிறோம். துணியை நெய்தபின் மாநில சங்கத்திற்குச் சரக்கை கொடுத்தால், மாநில சங்கம் அது விற்றால்தான் பணம் கொடுக்கிறது. மாநில சங்கத்தின் மூலதனம் ரூ. 15 கோடிதான். ஆனால் நெசவாளர்களின் டர்ன்ஓவர் ரூ. 200 கோடி. அவற்றில் விற்பனை சுமார் ரூ. 50 கோடி, ரூ. 60 கோடிக்குத்தான் ஆகிறது. நிலைமை இவ்வாறிருக்கும் போது, அவர்கள் கொடுக்கும் 15 கோடியில்தான் பிரைமரி சங்கங்கள் சரக்கு எடுக்க வேண்டும். ஆனாலும் பிரைமரி சங்கங்களிடமிருந்து மாநில சங்கம் பெற்றுக்கொள்ளும் சரக்கிற்குப் பணம் கொடுப்பதற்கு ஆறு மாதத்திற்கு மேலாகிறது. தாமதத்திற்கு வட்டி எதுவும் கொடுப்பதில்லை. ஆனால் மாநிலச் சங்கம் கொடுக்கும் கடனுக்கு வட்டி வாங்கிக்கொள்கிறது.

கைத்தறி இயக்குநர் அவர்கள் நெசவாளர்களுக்கு சுமார் 2½ லட்சம் ரூபாய் கடன் தரலாம் என அனுமதி அளித்திருக்கிறார். ஆனாலும் அந்த அளவுக்குக் கடன் கொடுப்பதில்லை. கேட்டால் 'நபாட்' அனுமதிக்க வில்லை என்று சொல்கிறார்கள். 'நபாட்' என்பது கிராம விவசாயிகளுக்காக ஏற்படுத்தப்பட்ட சங்கம். சரக்குகளைப் பெற்றுக்கொண்டதும், பணமும் கொடுப்பதில்லை, கடனும் கொடுப்பதில்லை. சரக்குகளைப் பெற்றுக் கொண்டு அதற்குப் பதிலாக நூலாவது கொடுங்கள் என்றால், அதுவும் கொடுப்பதில்லை. இதனால் நெசவாளர்கள் பெரும் கஷ்டத்திற்குள்ளாகிறார்கள். இந்நிலையைப் போக்கிட வழிவகை காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பட்டு நெசவுத் தொழில் குறித்து ஒரு சில சொல்ல விரும்புகிறேன். பட்டு நெசவுத் தொழில் நாளுக்குநாள் நசிந்து கொண்டே வருகிறது. பட்டு வளர்ச்சித்துறை ( Sericulture Department ) என்று ஒரு துறை ஆரம்பிக்கப்பட்டு, பட்டுப் புழு உற்பத்தி செய்யப்பட்டு,



அதிலிருந்து பட்டு நூல் உற்பத்தி செய்ய அதை கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்கு விற்பதை முறையாகச் செய்து வர வேண்டும். ஆனால் அங்கேயும் இப்போது வட்டி வியாபாரம்தான் நடைபெற்று வருகிறது இப்போது நம் நாட்டில் கக்கூன் உற்பத்தி குறைவு. 90 சதவீதம் பெங்களூரில் இருந்துதான் வாங்குகிறோம். மீதமுள்ள பத்து சதவீதத்திலும் ஐந்து சதவீதம்தான் இங்கே இருக்கிறது. ஐந்து சதவீதத்தை ஆந்திராவிலிருந்து வாங்குகிறோம். நம்முடைய உற்பத்திக்குத் தேவையான அளவு தற்போது இல்லை. தேவை ஏற்படும்போது எங்கே வாங்குவது? அரசு இதற்கும் சில நிபந்தனைகளை விதித்திருக்கிறது. தமிழ் நாடு பட்டு வளர்ச்சித் துறை மூலமாக அது நடத்துகின்ற பெடரேஷனில்தான் வாங்க வேண்டும். அங்கே இல்லையென்றால், அகில இந்திய அளவில் உள்ள பெடரேஷனில்தான் வாங்க வேண்டும். தமிழ் நாட்டில் உள்ள பெடரேஷனில் வாங்கச் சென்றால், அவர்கள் தங்களிடம் இருப்பு இல்லை என்று சொல்லிவிடுவார்கள், "சரி, இருப்பு இல்லை என்றால், 'இருப்பு இல்லை' என்று சான்றிதழாவது கொடுங்கள்" என்று கேட்டால், அதுவும் தர மறுக்கிறார்கள். அகில இந்திய அளவில் உள்ள பெடரேஷனில் கேட்டால். அவர்களிடமும் இருப்பு இருப்பதில்லை. பின் எப்படி வாங்குவது? பின் நெசவாளர் சங்கம் எப்படி இயங்கும் என்று கேட்க விரும்புகிறேன். அப்படி அவர்கள் கொடுத்தாலும், அதற்கு வட்டி வாங்குகிறார்கள். நான் முன்பே சொன்னதுபோல், நெசவாளர்கள் மாநில சங்கத்திற்குக் கொடுக்கும் சரக்கிற்கு அவர்கள் பணம் கொடுப்பதற்கு எவ்வளவு காலமானாலும் வட்டி கொடுப்பதில்லை. ஆனால் இவர்கள் வட்டி வாங்குகிறார்கள். மாதத்திற்கு சுமார் 16 சதவீதம் வரை வட்டி வாங்குகிறார்கள். மூன்று மாதத்திற்கு மேல் சென்றால், 17 சதவீதம் வாங்குகிறார்கள். இதனால் நெசவாளர்களுக்கு வட்டி கொடுக்கக்கூடிய அளவிற்குக்கூட இலாபம் வருவதில்லை. மாநில அரசு, கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் 10 சதவீதம்தான் லாபம் வைத்து துணிகளை விற்கலாம் என்று சொல்லியிருக்கிறது. ஆனால் வட்டி 17 சதவீதம் வாங்குகிறார்கள். இந் நிலைமைகளை எல்லாம், ஒரு கூட்டம் போட்டு, நெசவாளர்கள் மாண்புமிகு அமைச்சர் திரு. ஆனூர் ஜெகதீசன் அவர்களிடம் சொன்னார்கள். ஆனால் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அவற்றின்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இதில் இன்னொரு பிரச்சினையும் இருக்கிறது. இந்த கக்கூன் (பட்டுப் புழு) களை வாங்கிச் சென்று பட்டு நூல் உற்பத்தி செய்து திரும்பக் கொண்டு வருகிறபோது, எடை குறையும். சுமார் 500 கிலோ வாங்கிக் கொண்டு

சென்று திரும்ப பட்டு நூலாகக் கொண்டு வந்தால் 300 கிலோதான் வரும். ஆனால் தனிப்பட்ட நபர்கள் 500 கிலோவே கொண்டுவந்து கொடுக்கிறார்கள்.

(முற்பகல் 11-15)

இது எப்படி 300 கிலோ வருகிறது என்று கேட்கிறபோது அவர்கள் மட்டமான பட்டை வாங்கிக்கொண்டு வருகிறார்கள் என்று சொல்கிறார்கள். அதைத்தான் இங்கே வாங்க வேண்டுமென்று நெசவாளர்கள் தலையில் கட்டிவிடுகிறார்கள். வாங்கவில்லையென்றால் அதிகாரிகளை வைத்து மிரட்டி, சஸ்பென்டு செய்துவிடுவேன் என்று சொல்லி வாங்கச் சொல்கிறார்கள். அப்படி வாங்கி வைத்த அந்தச் சரக்கு இன்று இங்கே கிட்டத்தட்ட ஐந்து கோடிக்கு இருக்கிறது. உலகத்தில் சில்க் . . .(மணி அடித்தது) நான் முடித்து விடுகிறேன். பட்ஜெட்டில் பேசவில்லை

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் அவர்கள் 30 நிமிடமாகப் பேசுகிறார்கள். இன்னும் நான்கு உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். அவர்கள் அதிக நேரம் பேசக்கூடியவர்களாகத் தெரிகிறது. ஆகவே விரைவில் முடிக்க வேண்டும்.

**திரு. சி. இராமலிங்கம்:** துணைத் தலைவரவர்களே, மற்ற உறுப்பினர்கள் எனக்காக நேரத்தைக் குறைத்துக்கொள்வார்கள்.

ஆகவே ஏஜெண்டுகளை வைத்து அவர்கள் அப்படி 500 கிலோ கூடு வாங்கினால் 500 ரூபாய்க்கு கொடுக்கிறார்கள். ஆனால் இங்கே பெடரேஷனில் ரூ. 500-க்கு வாங்கி 550 ரூபாய்க்குக் கொடுக்கிறார்கள். இதனால் நெசவாளர்களுக்கு 50 ரூபாய் அளவுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. இன்றைக்கு வட்டிக் கடை நடத்துவதுபோல அவர்கள் இதை நடத்துகிறார்கள். அதே பட்டை பெங்களூரிலிருந்து என்னுடைய சொந்தத் தறிக்காக ஆயிரம் கிலோ வாங்கி வைத்து, அவர்களுக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்தால் போதும். இவனிடம் விற்றுக் கொடுத்து வட்டியில்லாமல் வாங்கலாம். ஆனால் இன்றைக்கு பெங்களூர் மார்க்கெட் விலை 600 ரூபாய். தமிழ் நாடு சில்க் போர்டில் விற்கும் விலை 650 ரூபாய். இதில் 50 ரூபாய் வித்தியாசம் இருக்கிறது. பெங்களூர் போர்டில் என்ன மார்க்கெட்டோ அதைத்தான் அகில இந்திய சில்க் பெடரேஷனும் விலையாக நிர்ணயித்துக் கொள்கிறது. ஆகவே இங்கே இருக்கக்கூடிய நெசவாளர்களுக்கு 50 ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. இங்கே கொடுக்கும் சில்க் மட்டமான சில்க். அழுக்கான சில்க் என்று சொல்கிறார்கள். இந்த



பெடரேஷனில் கொடுக்கும் சில்க்கில் 30 சதவீதம் அழுக்காகப் போய்விடும். ஆனால் பெங்களூரில் வாங்கி வந்தால், 20 சதவீதம்தான் போகும். நான் தப்பாகச் சொல்லவில்லை. நான் நெசவாளி, எனக்குத் தெரியும். தொழில் செய்யும் நெசவாளர்கள் சொல்கின்ற காரணங்கள் நியாயமாக இருக்கும். ஆகவே அந்த இலாகா நெசவாளர்களை ஒரு அடிமையைப் போல 'வா, போ' என்று பேசி, மட்டு மரியாதையுமில்லாமல், தேவையான அளவுக்கு நெசவாளர்களுக்கு சில்க் கொடுப்பதில்லை. அதனால் வேலையில்லாமல் நெசவாளர்கள் வெளியாரிடத்தில் போய் நிற்கிறார்கள். இன்றைக்கு 60 சதவீதம் கைத்தறித் துறைக்குக் கொண்டு வந்திருக்கிறோமேயொழிய, அதனுடைய டர்ன் ஓவர் மூலதனம் ஆண்டுக்கு எவ்வளவு என்று பார்க்கவில்லை; அதைப் பார்க்க வேண்டும். அதற்கு என்னென்ன சலுகைகளைச் செய்ய வேண்டுமோ அவைகளைச் செய்ய வேண்டும். இன்றைக்கு நபார்டில் தேவையான அளவுக்குச் சலுகைகள் அளிக்கவில்லை என்று நேற்று அமைச்சர் அவர்களே சொன்னார்கள். நபார்டு யார் யாருக்கோ கடன் கொடுக்கிறது. ஆனால் நெசவாளர்களுக்குக் கொடுத்த கடனை 'ரைட்-ஆஃப்' செய்யவில்லை. ஏன், நம்முடைய தமிழக அரசு விவசாயிகளுக்கு கடனை 'ரைட் ஆஃப்' செய்திருக்கிறது. நெசவாளர்களுக்கு அப்படி இதுவரை செய்யவில்லை. கடன் வாங்கியவர்கள் ஊரைவிட்டு ஓடிப் போனாலும், கும்பகோணத்திலிருந்து மெட்ராஸுக்கு வந்தாலும், மெட்ராசிலிருந்து சேலம் போனாலும் அவனைப் பிடித்து வந்து—இன்றைக்கு டில்லியில் எத்தனையோ பேர்கள் நெசவாளர் சங்கங்களின் தலைவர்களாக இருந்து ஓடிப்போனவர்கள் இருக்கிறார்கள்—அங்கேயெல்லாம் போய் பிடித்து வந்து அவனுடைய வீட்டை ஜப்தி செய்கிறார்கள். நெசவாளர்களுக்கு நல்ல வாழ்க்கை கொடுத்திருக்கிறோம், குறைந்தபட்சக் கூலியிலிருந்து நிறையக் கூலி கொடுத்திருக்கிறோம். ஆனால் கூலி இருந்து என்ன செய்ய முடியும்? வேலையில்லாமல் தனியாரிடத்தில் கொத்தடிமைகளாக அவர்கள் போகும் நிலைமைதான் இருக்கிறது. எனவே நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். நெசவாளர்களுக்கு மட்டும், அவர்கள் வாங்கும் நூலுக்குப் போட்டுள்ள விற்பனை வரியையும், தமிழ் நாட்டில் சாயம் போட்டு, பாக்டரியிலிருந்து வெளியே வந்தால் அதற்குப் போடும் சேல்ஸ் டாக்ஸையும் நீக்கினால், நெசவாளர்கள் ஆந்திராவோடு போட்டி போட முடியும். அதேநேரத்தில் நாட்டில் உற்பத்தியாகும் நூல் எல்லாம் வெஸ்ட் பெங்காலுக்குப் போகிறது. அங்கேயிருந்து கீழ் திசை நாடுகள் என்று சொல்லக்கூடிய அருணாசலப் பிரதேசம், அஸ்ஸாம், மணிப்பூர், நாகாலாந்து, ஹிமாசலப் பிரதேசம் ஆகிய

வற்றுக்கு நம்முடைய ஊர் நூல்கள் எல்லாம் செல்ஸ் டாக்ஸ் இல்லாமலேயே போகின்றன. அது மட்டுமல்ல, பர்மாவுக்கு மணிப்பூரிலிருந்து நம்முடைய வியாபாரிகள்தான் லுங்கியையும், நூலையும் கள்ளக்கடத்தல் செய்கிறார்கள். வங்காளத்திற்கும் போகிறது. அதற்கெல்லாம் தலைநகர் கல்கத்தாதான். கல்கத்தாவில் செல்ஸ் டாக்ஸ் இல்லை. நம்முடைய ஊரில் உற்பத்தி செய்யக் கூடிய நூலைக் கணக்கிட்டுப் பார்ப்போமேயானால், அதை நாம் வாங்குவ தில்லை. மில்கள் வாங்குவது, கைத்தறி வாங்குவது, பவர் லூம் வாங்குவது எல்லாம் சேர்த்து அது 10 சதவிதம்தான் இருக்கும். மீதி 90 சதவிதத்தை அவர்கள் வெளியிலே விற்கிறார்கள். நம்முடைய நெசவாளர்கள் அடுத்த மாநிலத்தோடு, வங்காளத்தோடு போட்டி போட்டு விற்க வேண்டுமானால், நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். நெசவாளர்களுக்கு, நூலுக்கு, சாயத்திற்கு இருக்கிற வரியை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்—இது என்னுடைய கோரிக்கையல்ல, இன்றைக்கு இருக்கக்கூடிய ஆறு லட்சம் நெசவாளர்களுடைய கோரிக்கை, அவர்கள் வேலையில்லாமல் தவிக்கி றார்கள். அரசு வேண்டுமானால் சி.ஐ.டி.யை எல்லா இடங்களுக்கும் அனுப்பி பார்த்துக்கொள்ளலாம். அவர்கள் எந்த நிலையில் இருக்கிறார்கள் என்பது தெரியவரும். இத்துடன் எனக்கு இந்த வாய்ப்பு கொடுத்தமைக்காக நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

(முற்பகல் 11-20)

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1985-86 ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை மதிப்பீடு அவை முன் வைக்கப் பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இறுதித் துணை மதிப்பீட்டின் மீது அதிகமான நேரம் பேசுவது என்பது அவ்வளவாக ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை என்பது எனக்குத் தெரியும் என்றாலும் ஆளும் கட்சியில் இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் மாண்புமிகு அமைச்சர்களிடம் பிரச்சினைகளை விரிவாக எடுத்து விளக்கிக் கோரிக்கைகளை வைத்து நிறைவேற்றிக் கொள்ளும் வாய்ப்பு பெற்றிருக்கி றார்கள் என்ற சூழ்நிலையிலும் கூட, இங்கே அவர்களுடைய கோரிக்கைகளை விளக்கிச் சொல்கிற சூழ்நிலை இருக்கிறது என்றால், எங்களைப் போன்ற எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் இங்கே பேசுகிற வாய்ப்பை மட்டுமே பெற றிருக்கிற காரணத்தாலே, சற்று அதிகமான நேரத்தை எடுத்துக் கொண்டால், நீங்கள் வருத்தப்பட மாட்டீர்கள் என்று கருதுகிறேன்.





**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** ஒரு மணிக்குள் முடிக்க வேண்டும். மற்ற உறுப்பினர்களும் பேச வேண்டும். உறுப்பினர் அதிகமான நேரம் எடுத்துக்கொண்டால், மற்றவர்களுக்கு வாய்ப்பு இருக்காது. ஒரு மணிக்குள் முடிக்கவில்லை என்றால்கூட, மற்றவர்களுக்கு வாய்ப்பு இருக்காது. எனவே குறைந்த அளவுக்கு நேரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். திரு. அனகாபுத்தூர் இராமலிங்கம் அவர்கள் 30 நிமிடங்கள் பேசியிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினரும் 30 நிமிடங்களுக்குள்ளாகப் பேசி முடிக்க வேண்டும். அப்போதுதான் மற்றவர்களும் பேச வாய்ப்பு இருக்கும். உறுப்பினரும் பேச வேண்டும். மற்றவர்களுக்கும் வாய்ப்பு அளிக்க வேண்டும். அதற்காகத்தான் நான் துணைத் தலைவராக இங்கே அமர்ந்திருக்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு அவையில் உட்கார்ந்திருந்து பேசுகிறபோது, அதிகமான நேரம் தேவைப்படு கிறது. ஆனால் தலைவர் இருக்கையில் அமர்ந்துவிட்டால், கொஞ்ச நேரம் ஆனதுமே மணி அடித்து உட்கார வைக்க வேண்டும் என்று தோன்றி விடுகிறது . . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** பல உறுப்பினர்கள் பேச வேண்டும். அவர்களுக்கும் நேரம் கொடுத்தால்தான் அவர்கள் பேச முடியும். மாண்புமிகு உறுப்பினர் இப்போது பேச விரும்புவதைப்போல் அவர்களும் பேச விரும்புகிறார்கள். மாண்புமிகு உறுப்பினரே நீண்ட நேரம் பேசி நேரத்தை எடுத்துக் கொண்டால், அவர்களுக்கு நேரம் இருக்காது. எனவே அவர்களும் பேசுவதற்கு வாய்ப்பாக விரைவில் பேசி முடிக்க வேண்டும் என்கிறேன். இதற்கு மாண்புமிகு உறுப்பினர் ஒத்துழைப்பு தர வேண்டும் என்றுதான் கேட்கிறேன். மாண்புமிகு உறுப்பினரை மணி அடித்து உட்கார வைக்க வேண்டும் என்பது என்னுடைய விருப்பம் அல்ல.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களின் ஆலோசனையை ஏற்று மிக விரைவில் முடித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏற்கெனவே நிதிநிலை அறிக்கைபற்றி விவாதிக்கப்பட்டிருக்கிறது. நாங்களும் எங்களுடைய கோரிக்கைகளை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அதற்கெல் லாம் விளக்கமான விரிவான பதிலை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தம்முடைய இறுதி பதிலுரையில் சொல்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். நிதிநிலை அறிக்கை அளிக்கப்படுவதற்கு முன்னாலே ஆசிரியர்-அரசு

ஊழியர்களின் ஊதியத்தில் உள்ள முரண்பாடுகளையும் போக்குவதற்காக என்று ஒரு நபர் குழு அமைக்கப்பட்டது. அப்படி அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கை நிதிநிலை அறிக்கைக்கு முன்னரே வரும் என்று எதிர்பார்க்கப் பட்டது. அதாவது பிப்ரவரி 16 ஆம் தேதிக்குள் எதிர்பார்க்கப்பட்டு, அது வராமல் போகவே, மார்ச் மாதத்தில் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப் படுவதற்கு முன்னாலே அந்த அறிக்கை வந்து அது நிறைவேற்றப்பட்டு அறிவிப்பு வரும் என்று எதிர்பார்க்கப்பட்டு, அதுவும் வராமல், இன்றைக்கு என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், என்றைக்கு ஒரு நபர் குழு தன்னு டைய அறிக்கையைக் கொடுக்கிறதோ அன்றைக்கு அது பரிசீலிக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் இருக்கிறது. ?

இந்த நிலைமையில் துணை மதிப்பீட்டிலாவது அதுபற்றிய வாசகம் சில வரும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் ஒரு நபர் குழு என்று ஒன்று இருப்பதாகவே காட்டிக் கொள்ளாமல், அதற்குப் பணம் ஏதும் தேவை யில்லை என்ற கருத்தில் தயாரிக்கப்பட்ட அறிக்கைபோல் இது இருக்கிறது. என்றாலும்கூட மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தம் இறுதி உரையில் அதைப்பற்றிக் குறிப்பிட்டு அது என்னவாயிற்று, அதன் அறிக்கை தயாரிக்கப் பட்டுவிட்டதா, அது எப்போது தர இருக்கிறது, அது எப்போது பரிசீலிக்கப் படும், பரிசீலிக்கப்பட்டு அரசு அதை ஏற்பதாக அறிவிப்பது எப்போது, அதற் கான ஆணைகள் எப்போது பிறப்பிக்கப்படும், அது எந்த ஆண்டிலே அமுல் படுத்தப்படும், இந்த ஆண்டே அமுல்படுத்தப்படுமா அல்லது காலதாமதப் ஆகுமா என்று ஆசிரியர்—அரசு ஊழியர்கள் இதை எதிர்பார்த்துக் கொண் டிருக்கிறார்கள். இதற்கெல்லாம் உரிய பதிலை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் பதிலுரையில் எதிர்பார்க்கிறார்கள் என்று நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். கல்வியைப் பொறுத்த வரையில், ஆசிரியர்கள் நியமனத்திற்காக அதிக நிதியை ஒதுக்குவார்கள் என்று எதிர்பார்த்தோம். நிதிநிலை அறிக்கையிலேயேகூட 2.68 லட்சம், அதாவது ஏறத்தாழ 3 லட்சம் புதிய மாணவர்களை, சத்துணவு அளிப்பதன் மூலமாகப் பள்ளிகளில் சேர்த்திருப்பதாகச் சொல்லப்பட்டிருக் கிறது. அந்த வகையில் இடை நிலை ஆசிரியர் இடங்கள் 500, தமிழாசிரி யர்கள் 50, பகுதி நேர ஆசிரியர்கள் 50 பேர், முறை நோக் தொழில் ஆசிரியர்கள் 50 பேர், பட்டதாரி ஆசிரியர்கள் 100 பேர்—பி.ஜி. ஆசிரியர்கள் இல்லை— என்று பட்டியல் போட்டு சுமார் 1,000 ஆசிரியர்களின் பதவிகள் உருவாக்கப் பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது 2.68 லட்சம் மாணவர்களைச் சேர்த்திருக்கிறார்கள் என்று சொல்லி பெரும் அளவுக்குப் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில், அதற்கேற்ப ஆசிரியர்கள் நியமிக்கப்பட இருக்கி றார்களா என்றால் இல்லை. தற்போது இருக்கிற ஆணைப்படியே பார்த் தாலும் கூட, ஒரு ஆசிரியருக்கு 25 மாணவர்கள் என்று கணக்கிட்டால், புதிதாகச் சேர்க்கப்பட்ட மொத்த மாணவர்களுக்கும் 10,720 புதிய ஆசிரியர் களை இந்த அரசு நியமித்திருக்க வேண்டும்.





(முற்பகல் 11-25)

அரசு தந்திருக்கிற புள்ளிவிவரத்தின்படி, இத்தனை மாணவர்களைச் சேர்த் திருக்கிறோம் என்று பெருமையாகக் குறிப்பிட்டுள்ள கணக்கின்படி, தற்போ துள்ள ஆணையின்படி தேவையான ஆசிரியர்கள் 10,720 பேர். ஆனால் ஆயிரத்திற்குள்ளான ஆசிரியர்களைத்தான் நியமிக்க இவ்வாண்டு நிதி ஒதுக்கப் பட்டிருக்கிறது. இதையெல்லாம் சற்று ஆலோசித்து மேலும் ஆசிரியர் பணி யிடங்களைத் தோற்றுவிக்க இந்த துணை மானியத்தில் வழிவகை செய்யப் படும் என்று நான் எதிர்பார்த்து ஏமாந்து போனேன்.

கல்வியமைச்சர் அவர்கள், "கல்வியின் தரம் உயரவில்லை, 5 ஆம் வகுப்பு படிப்பவனுக்கு ஏ, பி, சி, டி, கூட ஒழுங்காகத் தெரியவில்லை என்று பேசி யிருக்கிறார்". கல்வித் துறையை யார் நிர்வாகம் செய்கிறாரோ அவரே இந்தச் சான்றிதழை வழங்கியிருக்கிறார். 10,720 ஆசிரியர்களை நியமிக்க வேண்டிய இடத்தில் ஆயிரம் ஆசிரியர்களை நியமிக்க நிதி ஒதுக்கிவிட்டு, அதிகமான எண்ணிக்கையில் மாணவர்கள் உள்ள வகுப்புகளில் மாண வர்களுக்குக் கல்வி போதிக்க முடியாமல் மந்தைகள் போல அவர்களை மடக்கிப் போட்டுவிட்டு அனுப்பும் நிலையில், கல்வியின் தரம் குறைந்திருக் கிறது என்று—வேறு யாராவது சொன்னாலும் பரவாயில்லை—கல்வியமைச் சரே பேசியிருப்பது வேதனைக்குரிய விஷயமாகும். ஆகவே இந்தத் துணை மானியத்தில் ஆசிரியர்களின் எண்ணிக்கையை அதிகமாக்க வழிவகை செய் வார்கள் என்று எதிர்பார்த்தேன்.

மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் கூட தனியார் பள்ளிகளில் நல்ல தரம் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். தரமுள்ள தனியார் பள்ளி களிலாவது உள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப ஆசிரியர்களை நிய மிக்க வழிவகை செய்கிறார்களா என்றால், இல்லை. ஒதுக்குகிற ஆயிரம் ஆசிரியர்களில் முதல் பிரையாரிட்டி எதற்கு என்றால், அரசுப் பள்ளி

களுக்குத்தான். அதற்கடுத்து மைனாரிட்டி அல்லாத தனியார் பள்ளிகள்; அதற்கடுத்து மைனாரிட்டி பள்ளிகள் என்று சொல்லுகிறார்கள். இருக்கின்ற பள்ளிகளுள் மைனாரிட்டி தனியார் பள்ளிகளில்தான் தங்களுடைய குழந்தைகளைச் சேர்க்க வேண்டுமென்று அமைச்சர்களும், அதிகாரிகளும், பணம் படைத்தவர்களும் விரும்புகிறார்கள். ஆனால் அந்தப் பள்ளியில் இருப்பவர்களுக்கு அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்குள்ள சலுகைகள் வழங்கப்பட்டிருக்கிறதா என்றால், இல்லை. சென்ற ஆண்டு நிதிநிலைக் கூட்டத் தொடரிலே பேசும்போது, 'விடுப்புகால பயணச் சலுகை என்னவாயிற்று?' என்று நாங்கள் கேட்டபோது, "இந்தச் சலுகை நகராட்சிப் பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது, தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் விரைவிலே வழங்கப்படும்" என்று நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் தரம் இருக்கிறது என்று சொல்லக்கூடிய அத்தகைய தனியார் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களுக்கு, ஏனைய ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் அந்தச் சலுகையை ஏன் இதுவரை வழங்கவில்லை? அமைச்சர் கருத்துப்படி தாமாகப் பணியாற்றுபவர்களுக்குச் சலுகை இல்லையா? வீடு கட்டக் கடன் அவர்களுக்கு இல்லை. ஆசிரியர்களின் பணியிடங்களுக்கான ஒதுக்கீடு அவர்களுக்கு இல்லை. இந்த முறையிலே தனியார் பள்ளிகள் புறக்கணிக்கப்பட்டாலும், அங்கே நல்ல தரம் இருக்கிறது என்று பேசப்படுகிறது. ஏற்கெனவே நாங்கள் இங்கேயே ஒரு கோரிக்கை வைத்து வேண்டியிருக்கிறோம். "ஆசிரியர்களுக்கு என்று எந்தச் சலுகையை அறிவித்து உத்தரவிட்டாலும், அது அனைத்துத் துறை ஆசிரியர்களுக்கும், தனியார் பள்ளி ஆசிரியர்கள் உட்பட அனைவருக்கும் பொருந்தும் என்று ஒரு நிலையான ஆணை பிறப்பித்துவிடுங்கள்" என்று பலமுறை கேட்டிருக்கிறோம். ஆனால் அரசு இன்றுவரை அவ்வாறு செய்யவில்லை. தனியார் பள்ளி ஆசிரியர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். ஆகவே தனியார் பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியர்களை என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படி தனியார் பள்ளி ஆசிரியர்களைப் புறக்கணித்துவிட்டு, சலுகைகளை மற்றவர்களுக்கு அளித்துவிட்டு, அந்தத் தனியார் பள்ளிகளில் தங்களுடைய குழந்தைகளைச் சேர்க்கவேண்டுமென்று அமைச்சர்களும், அதிகாரிகளும் வந்தால், அப்படிப்பட்டவர்களின் குழந்தைகளைச் சேர்ப்பதில்லை என்ற புதிய போராட்டத்தை நடத்தலாமா என்று யோசித்துக்கொண்டு வருகிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

ஆசிரியர்களின் பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டும் என்று பலமுறை இங்கே கூறியிருக்கிறோம். ஓராண்டுக் காலம் பணி புரிந்தவர்கள் நிரந்தரம் செய்யப்படுவார்கள், அதற்குரிய தவிர்ப்புகள் வழங்கப்படும் என்று



நிதியமைச்சர் அவர்கள் இங்கே பதில் அளிக்கும்போது சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு போராட்டம் நடைபெற்று, பேச்சுவார்த்தையின் போதுகூட இது ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் இன்றுவரை ஆணை வெளிவரவில்லை. ஆகவே பணி நிரந்தரம் செய்யப்படாமல் பல்லாயிரக்கணக்கான ஆசிரியர்கள்—தமிழாசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், பி.ஜி. ஆசிரியர்கள், சிறப்பாசிரியர்கள் என்று எல்லா நிலைகளிலும்—பணியில் இருக்கிறார்கள். மொத்தமாக நிதியைச் செலவு செய்கிற துறை, ஒதுக்கப்படுகிற நிதி சரியாகச் செயல்படுத்தப்படுகிறதா என்பதையும், காலத்திலே காரியங்கள் நடைபெறுகின்றனவா என்பதையும் பார்க்க வேண்டும்.

உதாரணத்திற்கு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். பட்டதாரி ஆசிரியர் ஒருவர் 21—10—1981 ஆம் தேதி பணிக்கு வந்திருக்கிறார்கள். 1982 ஆம் ஆண்டில் தேர்வாணைக் குழுவிற்கு விண்ணப்பம் அளித்திருக்கிறார்கள். 1984 ஆம் ஆண்டு தேர்வாணைக் குழுவால் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இன்றுவரை, அதாவது 1986 ஆம் ஆண்டு வரை பணி நிரந்தரம் செய்யப்படவில்லை. இப்படி 1981 ஆம் ஆண்டு பணியில் சேர்ந்தவர்கள் 1986 ஆம் ஆண்டு வரையில் நிரந்தரம் செய்யப்படவில்லை என்றால், மெத்தனம் எங்கே இருக்கிறது என்பதை அரசு கண்டுபிடிக்க வேண்டாமா?

(முற்பகல் 11-30)

ஆனால் தங்களுடைய தகுதியை அவர்கள் முதுநிலை பட்டதாரி ஆசிரியர்களாக மாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் நிரந்தரம் செய்யப்படாத காரணத்தினாலே, அவர்கள் பணிமூப்புப் பட்டியலிலே சேர்க்கப்படவில்லை. அவர்களுக்குப் பணி உயர்வு பறிக்கப்படுகிறது. அதனால் அவர்கள் பொருள் இழப்புக்கு ஆளாகின்றார்கள். இப்படிப்பட்ட சிக்கல்கள் இருக்கின்றனவே. இந்தச் சிக்கல்களை எப்போதுதான் தீர்ப்பது? நாங்களும் பேசிக்கொண்டேதான் இருப்போம். பேசிப் பேசி அலுத்துப் போய்விட்டது. அரைத்த மாவையே அரைத்துக்கொண்டிருக்கிறோம். இங்கே வந்திருக்கின்ற நிருபர்கள் எல்லாம் கூட, உறுப்பினர்கள் அரைத்த மாவையே அரைத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்று எண்ணக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கின்றது. நாங்கள் சும்மா சும்மா பேசிக் கொண்டிருக்கிறோமே தவிர. காரியங்கள் நடைபெறவில்லை என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த மன்றத்திலேயே அரசு ஒப்புக் கொண்டிருக்கிறது. அரசு ஒத்துக்கொண்டிருக்

கின்றது. அது நடைபெறவில்லை என்பதை வருத்தத்தோடு சொல்லிக் கொண்டு அதை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பகுதி நேர தொழில் ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். இங்கே இந்த நிதிநிலை அறிக்கையிலே 50 ஆசிரியர்கள்தான் என்று தரப்பட்டிருக்கின்றது. புதிதாக இருக்கும் என்று எதிர்பார்த்தேன். அதுகூட தரப்படவில்லை. வாழ்க்கைத் தேவை தொழில் கல்வி என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆர்வத்தோடு கொண்டு வந்திருக்கின்றார்கள். அதிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு ரூ. 300 தான் கிடைக்கின்றது. அந்தச் சம்பளத்தை வாங்கிக் கொண்டுதான் அவர்கள் பணியாற்றிக்கொண்டிருக்கின்றார்கள். எம்.காம்., பி.காம். படித்திருக்கின்றார்கள். அவர்கள் தகுதி பெற்றவர்கள். அந்தத் தகுதியெல்லாம் பெற்றிருந்தும்கூட, அவர்களை நிரந்தரம் ஆக்காமல் இருக்கின்றார்கள். அவர்களைப் பகுதிநேர ஆசிரியர்களாகவே வைத்திருக்கின்றார்கள். இப்படிச் செய்தால், தொழில் கல்வி நாட்டிலே எப்படி வெற்றி பெறும்? அங்கே படிக்கின்ற மாணவர்களும் அந்த ஆசிரியர்களுக்கு ரூ. 300 தான் சம்பளம் என்று நினைப்பார்கள். அத்துடன் இன்னும் அவர்களை வரைமுறைப்படுத்தவில்லை என்று உணர்ந்தால், அவர்களுக்கு எப்படி அவர்களிடம் பக்தியும் பாசமும் ஏற்படும்? மனோதத்துவப்படி பார்த்தால், தொழில் கற்றுக் கொடுக்கின்றவர்களுக்கே இந்த நிலை இருந்தால், நமக்கு என்ன நிலை ஏற்படும் என்று மாணவர்கள் நினைப்பார்களே! நாம் எப்படி உருப்படியாகப் போகிறோம் என்றுதானே நினைப்பார்கள்? ஆகவே அந்தப் பகுதி நேர தொழில் கல்வி ஆசிரியராக இருப்பவர்களை நிரந்தரமாக ஆக்கி, அவர்களுக்கு ஒரு தகுதியை நிர்ணயம் செய்து, அந்தத் தகுதிக்குரிய ஊதியம் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் பணியைவிட்டு வீட்டிற்குப் போகின்ற அளவுக்கு விடாமல் செய்ய வேண்டும். அந்தத் தகுதிக்கு ஆசிரியர்களை ஆளாக்கிக்கொள்ள வேண்டும் என்று சொல்ல வேண்டும். அதையெல்லாம் செய்து அவர்களை நிர்ந்தரமாக்கி ஊதியம் தர வேண்டும். அதையெல்லாம் இந்த அறிக்கையிலே காட்டியிருப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் ஏமாந்தேன்.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலே நடத்தாட்டிகள் என்று ஒரு பிரிவினர் இருக்கின்றார்கள். அவர்கள் அந்தந்தப் பள்ளி மாணவர்களை அழைத்துவரும் பணியாற்றிக்கொண்டிருக்கின்றார்கள். பெண்கள்தான்



அப்பணிக்கு வந்திருக்கின்றார்கள். 15 ஆண்டுகளாக கன்டின்ஜன்ட் ஸ்டாஃப் ஆகவே இருந்துகொண்டிருக்கின்றார்கள். அவர்கள் கிட்டத்தட்ட 5 ஆயிரம் பேர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கு அடிப்படை ஊதியம் ரூ. 18. அலவன்ஸ் ரூ. 441. மொத்த ஊதியம் ரூ. 459. ஆனால் இப்போது இந்த ஊதியத்தையும் குறைத்திருக்கின்றார்கள். அவர்கள் பணி தேவையில்லை என்ற அளவில் அப்படிக் கொண்டுவந்திருக்கின்றார்கள். அவர்களை முறைப் படுத்தி நிரந்தரம் ஆக்கவில்லை. அவர்கள் 15 ஆண்டு காலமாக தற்காலிகமாகவே இருக்கின்றார்கள். முதல்வர் அவர்கள்கூட, 12—12—1985-லே அந்த கன்டின்ஜென்ட் ஊழியர்களை எல்லாம் டைம்ஸ்கேலில் நிரந்தரம் ஆக்கப்படும் என்று அறிவிப்பு செய்தார்கள். ஆனால் அது இதுவரையிலே செயல்படவில்லை. நம்முடைய அரசு ஆணையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஐந்து ஆண்டுகள் கன்டின்ஜென்ட் ஸ்டாஃப் ஆக ஒருவர் இருந்தால், அவர்களை டைம்ஸ்கேலிலே மாற்றி நிரந்தரப்படுத்த வேண்டும் என்று அரசு ஆணை 52, நிதித் துறை, 14—1—1977-லே இருக்கின்றது. அரசாணை 878, ஊரக வளர்ச்சித் துறை, 15—5—1981-லே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அரசாணை 692 பணியாளர் நிர்வாக சீர்திருத்தத் துறை, 13—3—1982-லே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அரசாணை எண் 677, அதே துறை, 1—7—1985-லே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இத்தனை ஆணைகள் இருக்கின்றன. முதல்வர் அவர்கள் உறுதி சொல்லியிருக்கின்றார்கள். இருந்தாலும் 15 ஆண்டுகளாக நிரந்தரம் செய்யப்படாமல், 'கன்டின்ஜென்ட் ஸ்டாஃப்' ஆகவே இருக்கின்றார்கள். அப்படி என்று சொன்னால், அந்த ஆணைகள் மற்ற துறைகளிலே இருப்பவர்களுக்குத்தானா? அது உள்ளாட்சித் துறையிலே இருப்பவர்களுக்கு இல்லையா? அவர்கள் எல்லாம் திரிசங்கு சொர்க்கத்திலேதான் இருக்க வேண்டுமா? அவர்களையெல்லாம் நிரந்தரம் செய்வதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1—6—1985-லே ஊராட்சி ஒன்றிய ஆசிரியப் பெருமக்களை அரசு ஊழியர்களாக ஆக்கினார்கள். இதுபற்றி முன்னாலே நிதிநிலை அறிக்கையிலே பேசியிருக்கிறேன். இப்போது அந்தப் பிரச்சினைக்குள்ளே நான் செல்லவில்லை. ஆனால் அப்படி ஆக்குகின்றபோது. உதவிக் கல்வி அலுவலர்களை நியமனம் செய்து, அவர்களுக்குக் கீழே 2 எழுத்தர்களைப் போடுவதற்கு முயற்சி செய்து, அப்போது ஒன்றியப் பணியாளர்களாக இருந்தவர்களை அவர்கள் விருப்பத்தைக் கேட்காமலேயே கல்வித் துறைக்கு கட்டாயமாக

எடுத்துக்கொண்டோம். அப்படி எடுத்துக்கொண்டதால், அவர்களுடைய பணி முடிப்பு நிர்ணயம் பெறவில்லை. அதனால் அவர்களுக்கு அந்தத் துறையிலே பதவி உயர்வு இல்லை. அதுவும் அவர்களைக் கேட்காமலேயே அந்தத் துறைக்கு மாற்றம் செய்திருக்கின்றார்கள். "எங்களை விட்டுவிடுங்கள்" என்று அவர்கள் கைகூப்பி கேட்டால்கூட, இதுவரையிலே விடவில்லை. அப்படி அவர்களை விடாத காரணத்தினாலேயே, அவர்கள் பெற வேண்டிய பதவி உயர்வைப் பெற முடியவில்லை. அவர்கள் "எங்களை விட்டுவிடுங்கள்" என்று கேட்கின்றார்கள். "தாய் இலாகாவிற்குப் போக விடுங்கள்" என்று கேட்டுக்

(முற்பகல் 11-35)

கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு பதவி உயர்வு இல்லாததால், பணி இழப்புக்கு ஆளாகியிருப்பதால் மனம் நொந்து அவர்கள் வேலையும் செய்வதில்லை. அவர்களை வேலை வாங்கும் அதிகாரம் ஏ.ஈ.ஓ. அவர்களுக்கு இருக்கிறதா என்றால் இல்லை. அவர்களை மாற்றுவதற்கு அதிகாரம் இருக்கிறதா என்றால் அதுவும் இல்லை. வேலை செய்வது அங்கே, அவர்களை மாற்றும் அதிகாரம் வேறு இடத்திலே! இப்படி இரட்டை ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. அப்படிப்பட்டவர்களை பழைய இடத்திற்கே அனுப்பினால், அவர்கள் நன்றாக வேலை செய்வார்கள். அரசு செலவு செய்யும் பணமும் நல்ல முறையிலே பயன்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நகராட்சிப் பள்ளி ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டுமென்ற கோரிக்கை வைக்கப்பட்டு, நிதி அமைச்சரவர்கள் கலந்து கொண்ட பேச்சு வார்த்தைகளில் அது ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஆணை வரும் என்று எதிர்பார்த்தோம். பேச்சு வார்த்தைகளில் ஏற்பட்ட முடிவை நிறைவேற்றவில்லை. 1—6—1986 முதல் அவர்கள் அரசு ஊழியர்களாக்கப்படுவார்கள் என்ற அறிவிப்பை கல்வி அமைச்சரவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அப்படி ஆவதற்கு முன்னாலேயே, பாராட்டுக் கூட்டம் நடந்து, பட்டயங்கள் பெற்றிருக்கிறார்கள். அந்த ஆணை ஏன் இன்னமும் வரவில்லை? காலத்திலே நீங்கள் இதைச் செய்வீர்களா என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. இதற்கு துணை மானியக் கோரிக்கையில் நிதி ஒதுக்கப்படவில்லை, நிதிநிலை அறிக்கையிலும் ஒதுக்கப்படவில்லை. மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் இதைச் செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.





அடுத்து, சத்துணவு அமைப்பாளர்கள் இப்போது இருக்கிறார்கள். அவர்களுக்கு 150 ரூபாய் சம்பளம் வழங்குகிறார்கள். சமையல் செய்பவருக்கு 60 ரூபாய் சம்பளம், உதவி செய்பவருக்கு 30 ரூபாய் சம்பளம். இப்போது 169 கோடி ரூபாய் இதற்காக நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்போதாவது அவர்களை நிரந்தரப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதா, அவர்களுடைய ஊதியத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால், இல்லை. 150 ரூபாய் சம்பளத்தில் அவர்கள் எப்படி ஒழுங்காக சோறு போடுவார்கள்? நல்ல அரிசி, பருப்பு, எண்ணெய் எல்லாவற்றையும் அவர்களிடம் ஒப்படைத்து, சத்துணவு வழங்க வழி வகை செய்து, 150 ரூபாய் ஊதியம் என்றால், அதில் ஒரு பாகத்தை ஒதுக்கிக்கொள் என்று சொல்வதுபோல் இருக்கிறது. அப்படியில்லாமல், அவர்களுக்கு நிறைய ஊதியம் கொடுத்து, சரியாக அவர்கள் வேலைகளைச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நிதிநிலை அறிக்கையிலே ஆசிரியர்களின் வீட்டு வசதி வாரியம் பற்றி ஒன்றும் வரவில்லை. தாழ்த்தப்பட்டவர்களுக்கு, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வீட்டு வசதி வாரியம் பற்றி வந்திருக்கிறது. ஆசிரியர்கள், தங்களுக்கு தனியாக வீட்டு வசதி வாரியம் வேண்டுமென்று கோரிக்கை எழுப்பி 4 ஆண்டுகளுக்கு மேல், மாண்புமிகு முதல்வரவர்கள் உறுதிமொழி அளித்தும், இதுவரை ஒன்றும் செய்யவில்லை. வீட்டு வசதி வாரியத்தை அமைத்து தலைவரை நியமித்திருக்கிறார்கள். அவருடைய பதவிக் காலம் ஓராண்டு. பின்னால் நீட்டித்தால் உண்டு. அல்லது வேறு ஒருவர் வருவார். அதுவும் ஆசிரியர்கள் 20 ரூபாய் கட்டினால்தான், அதாவது வீட்டு வசதி வாரியத்திற்கு பல ஆண்டுகள் கட்டினால்தான் பின்னால் வீடு கட்டித் தருவார்களாம். முன்னதாகப் பணத்தைக் கட்டிக் கொண்டிருக்க வேண்டுமாம். கையிலே ஒன்றும் இல்லாமல், வெறும் கை முழம் போடுவதுபோல இருக்கிறது. இதற்கு ஏதாவது ஒதுக்கீடு இருக்கிறதா என்றால் இல்லை. ஆசிரியர்களிடம் பணத்தை 20 ரூபாய் வீதம் வாங்கி, அதை வங்கியில் சேர்த்து, அதற்குரிய வட்டியையும் சேர்த்து, அதை வேறு துறைகளுக்கு செலவழிக்கத்தான் அது பயன்படும். வசூலித்த பணத்திற்கு வீடு கட்ட ஆரம்பித்து விட்டார்களா என்றால் இல்லை . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இறுதித் துணை மதிப்பீடுகள் மேல் பேசுவதற்கும், நிதிநிலை அறிக்கையின்மேல் பேசுவதற்கும் வித்தியாசம் உண்டு என்பது மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரியும். துணை மதிப்பீடுகளில் எது எதற்கு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறதோ அதைப்பற்றிப் பேச

வேண்டும். ஒரு கோடி ரூபாய்க்கு இதில் ஒதுக்கியிருக்கலாம். ஒதுக்கப்படாதது பல கோடி ரூபாய்க்கு இருக்கலாம். ஒதுக்கவில்லை, ஒதுக்கவில்லை என்று பேசினால், மறுபடியும் நிதிநிலை அறிக்கையின்மேல் பேசுவதாக இருக்கும். கூடுதல் செலவு சரியாக இருக்கிறதா, இல்லையா என்று அந்தப் பிரச்சினைக்குள் போக வேண்டுமே தவிர, ஒதுக்காத இனங்கள் பற்றிப் பேசினால், உலகத்திலுள்ள எல்லாம் வரும். அது நிதிநிலை அறிக்கையிலே பேசுவதாகத்தான் இருக்கும். இவற்றை கல்விக் கொள்கைக் குறிப்பில் பேசலாம். மாண்புமிகு உறுப்பினர்கள் வீட்டு வசதி வாரியம் பற்றிச் சொல்லுகிறார்கள். அதற்கு இதில் ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** பலவற்றுக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். இது அவசியமாயிற்றே, இதற்கு ஒதுக்கவில்லையே என்றுதான் கேட்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** எதற்குக் கூடுதல் செலவு ஆயிற்றோ அதற்கு ஒதுக்குவார்கள். செலவு ஆகாததற்கு ஒதுக்க மாட்டார்கள்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** துணைத் தலைவரவர்களே, ஆலோசனைக்கு நன்றி. எத்தனையோ எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதிலே ஒன்றிரண்டு நடந்து, அதற்கு ஒதுக்கம் கேட்டு அல்லது ஒதுக்கம் செய்திருந்தால், நலமாக இருக்கும் என்பதற்காகத்தான் சொன்னேன். 1—1—1986 முதல் மத்திய அரசு அகவிலைப்படி உயர்வு வழங்கியிருக்கிறது. 3 மாதங்கள் ஆகியிருக்கின்றன.

(முற்பகல் 11-40)

எப்போதும் 4 மாதங்கள் கழித்துத்தான் நம்முடைய அரசு அதுபற்றி அறிவிக்கும். இப்போது அதுபற்றி அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் நிரம்ப ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கான அறிவிப்பையும் விரைவில் தெரிவிக்க வேண்டும். அதற்கான நிதியையும் ஒதுக்க வேண்டும். சென்னை பல்கலைக் கழகத்திற்கு நம்முடைய அரசு 127 இலட்சம் ரூபாய் பாக்கி வைத்து இருக்கிறது. அதுபோல் நெய்வேலி நிறுவனத்திற்கு 32 கோடி ரூபாய் பாக்கி வைத்து இருக்கிறது. இன்னும் நம்முடைய அரசு கடன்கார அரசாகத்தான் இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளை எல்லாம் மாற்றியமைக்க வேண்டும்.



அடுத்து, எவ்வளவோ பணத்தை ஒதுக்கியிருக்கிறார்கள். இப்படி ஒதுக்கப்படும் பணம் எல்லாம் நல்ல முறையில் செலவிடப்படுகிறதா, பாழ்படாமல் இருக்கிறதா, நிர்வாகம் சரியாகச் செயல்படுகிறதா என்பது பற்றியெல்லாம் பார்ப்பதும் அவசியமாகும். எங்காவது தவறு நடந்தால், அதை சுட்டிக்காட்டும்போது எதிர்க்கட்சியினர் அதைக் குறிப்பிடுகிறார்களே என்று பார்க்காமல், பெரு நோக்கத்தோடு அவற்றையும் களைய முயல வேண்டும். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்வேன். தமிழ் நாடு கூட்டுறவு எண்ணெய் உற்பத்தி இணையகம்பற்றி ஒன்றைச் சொல்வேன். (தமிழ் நாடு ஆயல் சீட்ஸ் ப்ரடியூசர்ஸ் பெடரேஷன்). அதிலே ஊழியர்களை நியமிக்கும்போது, பின்பற்ற வேண்டிய வழிமுறை இருக்கிறது. கம்யூனல் ரொட்டேஷன் என்கிற முறை இருக்கிறது. நம்முடைய நாட்டிலே அடிப்படையான ஒன்றாக இருக்கிற இதனை திராவிட பாரம்பரிய அரசு சற்று விழிப்பாக கவனிக்க வேண்டும். அதிலே கம்யூனல் ரொட்டேஷன் முறை பின்பற்றப்படவில்லை. குறிப்பிட்ட ஜாதியினர் அதிலே ஆதிக்கம் செலுத்துகிறார்கள். அந்த நிறுவனத்தினர் 1986 ஆம் ஆண்டு பிப்ரவரியில் ஓரே நாளில் கடலை எண்ணெய் வியாபாரம் பண்ணியிருக்கிறார்கள். அன்றைக்கு இருந்த மார்க்கெட் பிரைசைவிட டீலர்ஷிப் பிரைசைக் குறைத்துக் கொடுத்திருக்கிறார்கள். ஓரே நாளில் ஏற்பட்ட வியாபாரத்தில் மட்டும் அரசுக்கு ஏற்பட்ட நஷ்டம் 12 லட்சம் ரூபாய். அதுபற்றி ஒரு கமிஷன் போட்டு விசாரணை செய்தால், விவரங்கள் தெரிய வரும். டீலர் பிரைஸ் மார்க்கெட் பிரைசைவிட குறைந்திருக்கிறது என்றால் அதற்குக் காரணம் அதன் சேர்மேனுடைய உறவினர்கள் அந்த டீலர்ஸ். இவ்வளவு பெரிய பணத்தை வரவு-செலவு செய்யும் அந்த இடத்தில் முறையாக ஆய்வு செய்யப்படுகிறதா? அங்கே ஆய்வாளர்கள் இருக்கிறார்களா ? அந்த இணையகம் 5 ஆண்டுகளாகக் கண்காணிக்கப்படவில்லை. ஆய்வு செய்யப்படவும் இல்லை. ஆய்வு அறிக்கையும் கிடையாது. தொடர்ந்து ஊழல் நிறைந்த நிர்வாகம் அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த நஷ்டத்திற்கு யார் காரணம், பொறுப்பு என்பதைப் பற்றியெல்லாம் கண்டுபிடிக்க அவசியம் விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட வேண்டும். இப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் எதிர்காலத்திலாவது தவிர்த்தால் அரசாங்கப் பணம் நல்ல முறையில் செலவிடப்பட அது உதவி செய்வதாக அமையும்.

அடுத்து, சென்னை மாநகராட்சியில் குப்பை அள்ளுவதற்கான இயந்திரம் 6 லட்சம் ரூபாயில் வாங்கப்பட்டது. அது வாங்கப்பட்டு ரொம்ப நாள் ஆயிற்று. ஸ்பேர் பார்ட்ஸ் இல்லாமல் இருந்ததால், 6 லட்சம் ரூபாய்க்கான

அந்த இயந்திரம் கிடப்பில் முடங்கிக் கிடந்தது. அது வேலை செய்யாமல் போனதால், அரசின் பணம் பாழானது. ஆகவே எந்த இயந்திரத்தை வாங்கினாலும், அது நல்ல முறையில் செயல்படுகிறதா என்பதைக் கண்காணிக்க வேண்டும்.

**திரு. அ. ப. சிவராமன் :** இன்று முதல் அந்த இயந்திரம் செயல்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினரின் தகவலுக்காகச் சொல்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** சம்பந்தப்பட்ட அமைச்சரே சொல்வார் என்று எதிர்பார்த்தேன். உறுப்பினரே அமைச்சர் அளிக்க வேண்டிய பதிலை அளித்திருக்கிறார். இன்று முதல் வேலை செய்கிறது என்றால், இதுவரை எவ்வளவு காலமாக அந்த இயந்திரம் வேலை செய்யவில்லை? இவ்வளவு காலம் அது ஸ்பேர் பார்ட்ஸ் கிடைக்காத காரணத்தால் செயல்படாமல் இருந்தது என்றால், இதுவரை அரசின் எவ்வளவு பணம் பாழாகியிருக்கிறது? அப்படி என்றால், நிர்வாகம் சீர்கேடடைந்திருக்கிறது என்றுதானே அர்த்தம். இப்படிப்பட்ட குறைகளைக் களைய உடனடியாக இனியும் தாமதிக்காமல் மாநகராட்சிகளின் தேர்தலை நடத்த வேண்டும். உள்ளாட்சி மற்றும் நகராட்சிகளின் தேர்தலுக்குப் பிறகு மாநகராட்சித் தேர்தலை நடத்துவதற்கு இந்த அரசுக்கு துணிவில்லை. அல்லது அவர்கள் நடத்துவதாக இல்லை. இதுபற்றி பல்வேறு மாநிலங்களுக்குச் சுற்றுப்பயணம் செய்து, ஆய்வு செய்து, அதற்கான குழு அதுபற்றி அறிக்கை தந்த பிறகு, மாநகராட்சித் தேர்தல் நடைபெறும் என்று அறிவித்திருக்கிறார்கள். நான் சொல்கிறேன். அக்குழு அறிக்கை தரும்முன் உங்கள் ஆட்சியே முடிந்துவிடும். நகராட்சிகளுக்குத் தேர்தலை நடத்தியதன் மூலம் மக்கள் பிரதிநிதிகள் வந்திருப்பதுபோல், மாநகராட்சிகளுக்கும் தேர்தலை உடனடியாக நடத்தினால், மக்கள் பிரதிநிதிகள் வருவதன் மூலம், மக்களுடைய குறைகளை உடனடியாகக் களைய, நடவடிக்கை எடுக்க வாய்ப்பாக இருக்கும் என்று கூறி, வாய்ப்பளித்தமைக்கு நன்றி சொல்லி அமைகிறேன்.

(முற்பகல் 11-45)

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1985-86 ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை மதிப்பீடுகள் குறித்து நடக்கிற விவாதத்திலே என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த விவாதத்தில் நான் கல்வித் துறையைப் பற்றியும், அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டதைப்பற்றியும் கூற விரும்புகிறேன். கல்வித் துறைக்



கான பல்வேறு ஒதுக்கீடுகள் இங்கே கொடுக்கப்பட்டிருந்தாலும், அப்படிக் கொடுக்கப்பட்டிருக்கிற இந்த ஒதுக்கீடுகள் போதாது என்பதுதான் என்னுடைய கருத்து. கல்வித் துறையின் தேவைகளுக்கு 1985-86 ஆம் ஆண்டுக்கு எவ்வளவு தேவைப்பட்டதோ அந்த அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்பதுதான் முக்கியமான கருத்து. கல்வித் துறையின் தேவை என்ன, கேட்கப்பட்ட தொகை என்ன, அதற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு என்ற விவரத்தை இங்கே கொடுத்திருந்தால் சிறப்பாகப் பேச முடியும். ஆனால் கொடுத்ததை மட்டும் சொல்லியிருப்பதன் காரணமாக . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** பொதுவாக நிதிநிலை அறிக்கையில்தான் பணம் ஒதுக்கப்படுகிறது. இந்தத் துணை மதிப்பீடுகள், கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகைக்கு மேலாகச் செலவழித்துவிட்டு, அதற்கு இப்போது ஒப்புதல் அளிப்பதற்காக வந்திருக்கிறது. ஆகவே இன்னும் இதிலே பணம் ஒதுக்க வேண்டுமென்று கேட்பதும், ஒதுக்கிய தொகை போதாது என்று சொல்வதும் சரியானதுதானா என்பதை உறுப்பினர் யோசித்துப் பேச வேண்டுகிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை போதாது என்றுதான் பேசுகிறேன். இந்தத் துணை மதிப்பீடுகளைப் பொறுத்தவரையில் . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** எதிர்பாராத செலவுகள் கடந்த ஆண்டில் ஏற்பட்டுவிட்டதால், இந்த இறுதித் துணை மதிப்பீடு வைக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. பேசுகிறபோது, இதற்கு முன்பு, என்ன செய்தீர்கள், என்ன செய்யவில்லை என்று கேட்பது அவ்வளவு சரியானதுதானா என்று பார்க்க வேண்டும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** எதிர்பாராத செலவுகள், எந்தெந்த இனங்களுக்குத் தேவைப்படுகின்றனவோ அவைகளுக்கு அதைச் செலவழித்தோமா என்றுதான் கேட்க விரும்பினேன். எந்தெந்த இனங்களுக்கு எவ்வளவு செலவு செய்யப்பட்டது என்ற விபரம் இதிலே இல்லை. செலவுத் தொகைதான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எதிர்பாராத செலவு எவ்வளவு, ஒதுக்கீடு செய்யப்பட்டது போக எவ்வளவு செலவு ஏற்பட்டது என்பது குறிப்பிடப்படவில்லை. இருந்தாலும், பொதுவாக கல்வித் துறையின் தேவைகளுக்கும், அந்தத் துறையின் எதிர்பாராத செலவுகளுக்கும் நிதிநிலை அறிக்கையினுடைய ஒதுக்கீட்டுத் தொகைக்கும், இறுதித் துணை மதிப்பீட்டுக்கும் இடையே நிறைய இடைவெளி இருக்கிறது என்பதை மட்டும் காண முடிகிறது. அவற்றில் ஒன்றிரண்டை

மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சென்ற ஆண்டு ஒதுக்கீடு வந்திருக்க வேண்டும். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதி நடந்த ஆசிரியர்கள் தினமான அரசு விழாவில் சொன்னார்கள். அது அதிகாரபூர்வமான ஒரு விழா. அங்கே சொன்னது அதிகாரபூர்வமாகத்தான் கொள்ளப்பட வேண்டும். அதுதான் மரபும்கூட. அரசே ஏற்பாடு செய்த ஒரு விழாவில் கல்வி அமைச்சர் அவர்கள் "1—6—1981 அன்றுள்ளபடி, இடைநிலை ஆசிரியர்கள், இளநிலை ஆசிரியர்கள் இரண்டாண்டு காலம் பயிற்சி பெற்றவர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கப்படுவது, உடற்கல்வி ஆசிரியர்களுக்கும், கலை, தொழில் கல்வி ஆசிரியர்களுக்கும் அவர்கள் பயிற்சி பெற்றிருந்தால் நீட்டிக்கப்படும்" என்று அறிவித்தார்கள். "ஏற்கெனவே ஒரு பிரிவினருக்கு அளிக்கப்பட்டு வரும் ஒன்று மற்ற பிரிவினருக்கும் நீட்டிக் கப்படும்" என்று அறிவித்தார்கள். மாண்புமிகு கல்வியமைச்சர் ஒரு அரசு விழாவில் கொடுத்த இந்த அறிவிப்பு செயல்படுத்தப்படுவதற்கு இந்த இறுதித் துணை மதிப்பீட்டில் காணப்படவில்லையே என்பதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன். சென்ற ஆண்டே கல்வியமைச்சர் அறிவித்தார்கள். அது சென்ற ஆண்டே வந்திருக்க வேண்டும். இதற்கு என்ன காரணம்? இந்தக் குறை இந்த ஆண்டிலாவது சரி செய்யப்பட்டு, இந்த ஆண்டு உரையிலாவது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கனிவுடன் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-50)

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் செப்டம்பர் 5 அன்று நடைபெற்ற அரசு விழாவில் அறிவித்த அறிவிப்புகளுக்கு ஆகும் நிதி ஒதுக்கீட்டை இந்த ஆண்டிலேயே செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தனியார் பள்ளி ஆசிரியர்கள், ஆசிரியரல்லாத அலுவலர்களைப் பொறுத்தவரையில், ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும், ஆசிரியரல்லாத அலுவலர்களுக்கும் மானிய ஒதுக்கீடு கொடுக்கப்பட்டிருக்கிறது. நாங்கள் ஏற்கெனவே கோரி வருகின்ற கோரிக்கையான தனியார் பள்ளி, கல்லூரிகளில் பணிபுரிகின்ற ஆசிரியர், ஆசிரியர் அல்லாத அலுவலர்களுக்கும் விடுப்புப் பயணச் சலுகை போன்ற பல சலுகைகள் அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்குக் கொடுப்பதுபோல் கொடுக்க வேண்டுமென்று கோரி வருகிறோம். அவர்களுக்கும் விரிவுபடுத்த வேண்டும் என்று கோரி வருகிறோம். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களிடமும் பல முறை இது குறித்துக் கேட்டிருக்கிறோம். இவற்றை தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குக் கொடுக்க வேண்டுமானால் தனியார் பள்ளி நிர்வாகங்களின் மூலம்தான்





கொடுக்க முடியும். அப்படிக் கொடுப்பதற்கு மானிய ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காரணம் இன்னும் அரசு முடிவு எடுக்கவில்லை. அதன் காரணமாக ஒதுக்கீடு செய்யவில்லை. எனவே நாங்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டிருப்பது போல, அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருப்பதுபோல, தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கும் ஆசிரியரல்லாத அலுவலர்களுக்கும் மேற்படி சலுகைகளைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இல்லாவிட்டால், அவர்களையும் அரசு ஊழியர்களாக அறிவித்துவிட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். அதுதான் எங்களுடைய கோரிக்கை. இதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆசிரியர்களுக்காக மத்திய அரசு தேசியக் குழு ஒன்றை அமைத்தது. அந்தக் குழு தனது அறிக்கையை நாடாளுமன்றத்திலே சமர்ப்பித்து விட்டது. அதில் பல பரிந்துரைகள் இருக்கின்றன. அதில் அகில இந்திய அளவில் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு குறைந்தபட்சம் ரூபாய் 150 ஊதிய உயர்வும், இடைநிலை ஆசிரியர்களுக்கு குறைந்தபட்சம் ரூபாய் 100 ஊதிய உயர்வும் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு முக்கியமான பரிந்துரை ஒன்றைச் செய்திருக்கிறது. இதை அகில இந்தியா முழுவதும் அமல் படுத்த வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறது. அந்தப் பொறுப்பு நம் மாநில அரசுக்கும் வரப் போகிறது. அதையும் நாம் முன்கூட்டியே யோசித்து, ஆலோசித்து, அதற்கேற்ற வகையில் ஒரு முடிவை எடுத்து அதற்காகும் செலவையும் இந்த நடப்பாண்டு நிதி செலவினத்தில் சேர்ப்பதற்கு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று. நம்முடைய அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷனை விரிவு படுத்துவதற்காக சுமார் 200 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. விரிவுபடுத்துவதற்கு 200 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதை வரவேற்கிறேன். இதில் ஒரு கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். பக்கத்தில் இருக்கிற பாண்டிச்சேரியில் அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷனின் ஒரு கிளையை நிறுவி இருக்கிறோம். இதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். ஜெயச்சந்திரன் அவர்கள்கூட சொன்னார். நம்முடைய மாநில கார்ப்பரேஷனின் கிளையை பாண்டிச்சேரி மாநிலத்தில் அமைத்திருக்கிறோம். எதற்காக? பாண்டிச்சேரியில் விற்பனை வரி குறைவாக இருக்கிறது. இங்கே

நம் மாநிலத்தில் கூடுதலாக இருக்கிறது. அங்கே குறைவாக இருப்பதன் காரணமாக அங்கே கிளையைத் துவக்கி வாணிகத்தைப் பெருக்க வேண்டும் என்று நினைந்து, அங்கே துவக்கப்பட்டிருக்கிறது. அதனால் வரக்கூடிய வருவாயை பாண்டிச்சேரி மாநிலத்திற்குக் கொடுக்கிறோம். ஆகவே; பாண்டிச்சேரி மாநிலத்திற்கு நம்முடைய மாநிலத்திற்கு வரவேண்டிய வருவாய் போய்ச் சேருகிறது. அதற்குப் பதிலாக பாண்டிச்சேரி மாநிலத்தில் இருக்கும் விற்பனை வரிச் சலுகையைப் போல நம் மாநிலத்திலும் செய்துவிட்டால், நாம், பாண்டிச்சேரி மாநிலத்திற்குச் செல்ல வேண்டிய அவல நிலை வந்திருக்காது. அவ்வாறு பிற மாநிலத்தில் நம் கார்ப்பரேஷனின் கிளையை வைப்பது எந்தக் கொள்கையின்கீழ் வருகிறதென்பது தெரியவில்லை. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அதற்கான விளக்கத்தைக் கொடுத்தால், அது சரியாக இருந்தால், நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். எனவே நம்முடைய விற்பனை வரியை பாண்டிச்சேரி மாநிலத்தில் இருப்பதுபோல் குறைக்க வேண்டும். அதற்கு இணையாக ஆக்க வேண்டுமென்று வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்து, இந்தத் துணை மதிப்பீடுகளில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட செலவினத்தைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 11-55)

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில், முன்புகூட ஒன்றைச் சொன்னேன். அந்தப் பல்கலைக் கழகத்திற்கு ஒரு தொகையை மானியமாக ஒதுக்கியிருக்கிறார்கள். வேறுசில பல்கலைக் கழகங்களுக்கும் பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு 1985-86 ஆம் ஆண்டு ஒரு மருத்துவக் கல்லூரி ஆரம்பிப்பதற்கு நம்முடைய தமிழக அரசு அனுமதி கொடுத்திருக்கிறது. வேறு இடங்களில், சென்னையிலும், கோவையிலும் இரண்டு தனியார் மருத்துவக் கல்லூரிகள் ஆரம்பிப்பதற்கும் நம்முடைய அரசு அனுமதி கொடுத்திருக்கிறது. அண்ணாமலைப பல்கலைக் கழகத்தில் துவக்கப்பட்டிருக்கிற மருத்துவக் கல்லூரியை ஒரு பிரைவேட் காலேஜ் என்று அரசு ஒரு ஆணை போட்டு கொடுத்திருக்கிறது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பொறியியல் துறை இருக்கிறது. அது ஒரு 'பேகல்டி'-யாக இருக்கிறது. விவசாயத் துறை அங்கு ஒரு பேகல்டியாக இருக்கிறது. அங்கு டென்டல் காலேஜ் இருக்கிறது. அதுவும் அங்கு ஒரு பேகல்டியாக இருக்கிறது. அங்கே இருக்கின்ற எல்லாத் தொழில் நுட்பப்



பிரிவுகளும் அந்தப் பல்கலைக் கழகத்தினுடைய பேகல்டியாகத்தான் இருக்கின்றதேயொழிய, இந்த மருத்துவக் கல்லூரியை மட்டும் அந்தப் பல்கலைக் கழகத்தினுடைய பேகல்டியாகக் கருதாமல், அதை முழுக்க முழுக்க ஒரு டைய விளைவு என்ன? அங்கு ஒரு குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. மாணவர்கள் தனியார் கல்லூரியாகக் கருதி, அரசு ஆணை வெளியிட்டிருக்கிறது. அதனு சேர்க்கப்பட்டு படித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது அந்த மாணவர்களுடைய எதிர்காலம் கேள்விக்குறியாக இருக்கிறது. காரணம் அண்ணாமலைப் பல்கலைக் கழக மருத்துவக் கல்லூரி ஒரு பேகல்டியாகக் கருதப்படாமல் இருப்பதால், ஒரு நிர்வாகச் சீரழிவே ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால் நம்முடைய அரசு வெளியிட்டிருக்கின்ற ஆணையின்படி, அந்த அண்ணாமலைப் பல்கலைக் கழக முந்தையா மருத்துவக் கல்லூரியை 'அபிலியேடேட் ஸ்டேடஸ்' கொடுத்து ஒரு பல்கலைக் கழகத்துடன் இணைக்க வேண்டுமென்று நாங்கள் சொல்கிறோம். அப்படி பல்கலைக் கழகத்துடன் இணைக்க வேண்டுமென்றால், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்க முடியாது. காரணம் அது ஒரு யூனிடரி பல்கலைக் கழகம். 'அபிலியேடட் ஸ்டேடஸ்' இல்லாத ஒரு ரெசிடென்சியல் பல்கலைக் கழகம். அதற்கு "அபிலியேடட் ஸ்டேடஸ்" இதுவரை இல்லை. எனவே நம்முடைய அரசினுடைய சட்டத்தின்படி அதைக் கொடுக்க முடியாது. அப்படியென்றால் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற அந்தத் தனியார் மருத்துவக் கல்லூரியின் நிலைமை என்னவாவது? தமிழகத்தில் வேறு எங்காவது இருக்கும் ஒரு பல்கலைக் கழகத்துடன் அதை இணைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது, அரசினுடைய ஆணையின் மூலமாக. அண்ணாமலைப் பல்கலைக் கழக வளாகத்திற்குள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற மருத்துவக் கல்லூரியை வேறு எங்கோ தமிழகத்தில் இருக்கின்ற ஒரு பல்கலைக் கழகத்துடன் இணைக்க வேண்டிய அளவுக்கு அல்லது இணைப்பதற்கு நிர்ப்பந்தம் கொடுக்கக்கூடிய அளவுக்கு, ஒரு மறைமுகமான நிர்ப்பந்தம் கொடுக்கக்கூடிய அளவுக்கு நம்முடைய அரசினுடைய ஆணை அமைந்திருக்கிறது. அது ஒரு குறைபாடான ஆணை. சட்டத் துறையைக் கலந்து அது வெளியிடப்பட்டிருக்கிறது என்று நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதைப் பொறுத்தவரை, சட்டத்தினுடைய அணுகுமுறை, சட்டத் துறையினுடைய முடிவு, பரிசீலனை சரியாக அமையவில்லை என்பதை நான் அழுத்தம் திருத்தமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பழைய மாணவர். ஆகவே காலேஜ் என்பதற்கும், பெகல்டி என்பதற்கும் அதிகமான விளக்கங்கள் நான் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை, அண்ணாமலைப்

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1986 மார்ச் 25

பல்கலைக் கழக வளாகத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற அந்தத் தனியார் மருத்துவக் கல்லூரியை, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பேகல்டியாகக் கருத வேண்டும். அப்படி பேகல்டியாகக் கருதுவதற்கு ஏற்ப ஏற்கெனவே அரசு வெளியிட்ட அந்த ஆணையிலே சரியான திருத்தங்களை அரசு வெளியிட வேண்டும் அல்லது புதிய ஆணை வெளியிட வேண்டும். அப்படி பேகல்டியாகக் கருத வேண்டுமென்றால், அதையொட்டி அந்த அண்ணாமலைப் பல்கலைக் கழக மருத்துவ மனைக்கு அரசு செய்யக்கூடிய சில உதவிகள் இருக்கின்றன. அவை முக்கியமான உதவிகளும் கூட. அரசு பொது மருத்துவ மனைகளில் இருக்கிற நோயாளிகளையும், வசதிகளையும் தற்காலிகமாக அண்ணாமலைப் பல்கலைக் கழக மருத்துவ மனை இப்போது பயன்படுத்த வேண்டியிருக்கிறது. அப்படித் தற்காலிகமாகப் பயன்படுத்துவதற்கு அரசு அனுமதி கொடுத்தால், போதுமானது. நான் ஏற்கெனவே குறிப்பிட்டவாறு, 'அனாடமி ஆக்ட்'-ஐ தென்னார்க்காடு மாவட்டத்திற்கு விரிவுபடுத்திவிட்டோமேயானால், இந்தப் பிரச்சினையைச் சுலபமாகத் தீர்த்துவிடலாம். சிதம்பரம், நெய்வேலி, மற்றும் கடலூர் ஆகிய இந்த மூன்று இடங்களிலும் இருக்கின்ற நோயாளிகளையும், அங்கே இருக்கின்ற வசதிகளையும், 'டெட் பாடீஸ்' என்று சொல்கின்ற சடலங்களையும் அரசு வேறு ஆணையின் மூலமாக, அங்கு 'அனாடமி ஆக்ட்'ஐ விரிவுபடுத்துவதன் மூலமாக, இந்தப் பிரச்சினையை மிகச் சுலபமாகத் தீர்த்து, பல்கலைக் கழக நிர்வாகத்தில் ஏற்பட்டிருக்கின்ற குழப்பத்தைப் போக்கிவிடலாம். அந்த மருத்துவக் கல்லூரியில் சேர்க்கப்பட்டிருக்கின்ற மாணவர்களுடைய எதிர்காலம் இன்று கேள்விக்குறியாக இருக்கிறது. அந்தப் பிரச்சினையையும் தீர்த்துவிடலாம் என்பதை நான் இந்தச் சமயத்தில் வலியுறுத்தி, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அதைக் குறித்து நல்ல விளக்கத்தைக் கொடுக்க வேண்டும், எங்களுடைய அந்தக் கோரிக்கை, வேண்டுகோளை ஏற்று அரசு முடிவை அறிவிக்க வேண்டுமென்று நான் இந்தச் சமயத்தில் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏற்கெனவே பல உறுப்பினர்கள் சொன்னதுபோல, இன்று மிகவும் முக்கியமாக இருக்கின்ற பிரச்சினை, தற்காலிகமான நிலையில் இருக்கிற சுமார் 10 ஆயிரம் ஆசிரியர்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இதே மேலவையில் இதற்கு ஒரு உறுதிமொழியைக் கூடக் கொடுத்திருக்கிறார்கள். சர்வீஸ் கமிஷனைக் கலந்து ஆலோசிக்காமலேயே அரசே, ஓராண்டு பணி புரிந்த எல்லோரையுமே நிரந்தரப்படுத்தி விடலாமென்ற கருத்தை அரசு



1986 மார்ச் 25] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளுமென்றும், இதைப்பற்றி அரசு ஒரு நல்ல முடிவு எடுக்கும் என்றும் மாண்புமிகு நாவலர் அவர்கள் இங்கே சொல்லி சென்ற ஆண்டு மகிழ்ச்சிகரமான அறிவிப்பைக் கொடுத்தார்கள்.

(மாற்றுத் தலைவர் திரு. பி. இராமலிங்கம் தலைமை.)

(நண்பகல் 12-00)

அதைச் செயல்படுத்துகிற அளவுக்கு அதாவது தற்போது இருக்கிற 10,000 ஆசிரியர்களின் பணியை நிரந்தரப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தேர்வாணைக் குழுவிடம் கலந்து ஆலோசனை செய்யாமல் அரசியல் சட்டம் அரசுக்கு அளித்திருக்கிற அதிகாரத்தைப் பயன்படுத்தி, இந்த ஆசிரியர்கள் அனைவரையும் நிரந்தரப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேல்நிலைப் பள்ளிகளின் தொழிற் கல்விப் பிரிவில் பணியாற்றும் 4,000 பகுதிநேர ஆசிரியர்களையும் முழு நேர ஆசிரியர்களாக ஆக்க வேண்டும் என்றும் அதற்காக நிதியொதுக்கீட்டை நடப்பு ஆண்டிலேயே செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த அளவுக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்கு நன்றி கூறி, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. எம். பி. சுப்பிரமணியம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1985-86 ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை மானியக் கோரிக்கையின் மீது ஒரு சில வார்த்தைகளை நான் சொல்ல விரும்புகிறேன்.

அரசாங்கத்தினுடைய நல்வாழ்வுத் திட்டங்களில் சத்துணவுத் திட்டம் முக்கிய இடம் வகிக்கிறது என்பது உண்மை. இதற்காகச் செலவழிக்கப்படும் பணம் ஒவ்வொரு துறையின் கீழும்—யாருக்குமே சுலபமாகப் புரிந்து கொள்ள முடியாத வகையில்—எவ்வளவு செலவு செய்யப்படுகிறது என்பது தெளிவாகத் தெரிந்துகொள்ள முடியாமல் இருக்கிறது. பல்வேறு துறைகளின் கீழ் இந்தச் செலவினம் வருகிற காரணத்தால், மொத்தமாக எவ்வளவு பணம் செலவழிக்கப்படுகிறது என்பதை எங்களாலே சுலபமாகப் புரிந்து கொள்ள முடியவில்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். உதாரணமாக கம்யூனிட்டி டெவலப்மென்ட் பிராஜக்ட் அண்டு முனிசிபல் அட்மினிஸ்ட்ரேஷன் என்ற துறையின் கீழ் ஒரு தொகை செலவழிக்கப்பட்டிருக்கிறது. சோசியல் வெல்பேர் துறையின் கீழ் ஒரு தொகை செலவழிக்கப்பட்டிருக்கிறது. வெல்பேர் ஆப் ஷெட்யூல்ட் கேஸ்ட்ஸ் என்ற தலைப்பில் ஒரு தொகை செலவழிக்கப்பட்டிருக்கிறது. அதைப்போலவே வெல்பேர் ஆப் பேக்வர்டு

கிளாசஸ் என்ற தலைப்பில் ஒரு தொகை செலவழிக்கப்பட்டிருக்கிறது. சிவில் சப்ளைஸ் துறையின் மூலம் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இப்படி பல்வேறு தலைப்புகளில் பணம் செலவழிக்கப்பட்டிருந்தாலும் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால் பழுதடைந்த பாத்திரங்களைப் புதுப்பிப்பதற்காகவும் அல்லது புதிதாகச் சமையல் பாத்திரங்கள் வாங்குவதற்கும் தொகை செலவழிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தச் செலவினம் ஒரே தலைப்பில் வந்தால், அரசாங்கத்தின் மூலம் இதற்காக எவ்வளவு செலவழிக்கப்பட்டிருக்கிறது என்பதை நாங்கள் சுலபமாகப் புரிந்துகொள்ள முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, காமராஜர் மாவட்டத்தில் ஸ்ரீவில்லிப்புத்தூரில் பாண்டியன் ரோடு வேஸ் கார்ப்பரேஷன் என்ற போக்குவரத்து நிறுவனம் ஒரு டெப்போ கட்ட வேண்டும் என்ற அடிப்படையில் ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்திருப்பதாகவும் அதற்காக அரசாங்கம் நில ஆர்ஜித நடவடிக்கையை மேற்கொண்டிருப்பதாகவும் அறிகிறேன். தனியாருக்குச் சொந்தமான ஒரு இரண்டு ஏக்கர் ஒரு சென்ட் நிலத்தை சுமார் 25 லட்சம் ரூபாய் பணம் கொடுத்து வாங்குவதாக, அதற்கான எல்லா நடவடிக்கைகளும் முடிந்துவிட்டதாக அறிகிறேன். அதாவது 4(1) நோட்டிபிகேஷன், 5(1) நோட்டிபிகேஷன் மற்றும் 10(1) நோட்டிபிகேஷன் எல்லாம் முடிந்து கடைசியில் அவார்டு பாஸ் பண்ணக்கூடிய நிலையில் இருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. நான் விசாரித்த வகையில் இதைவிட குறைந்த விலையில் நிலத்தைக் கொடுக்கப் பலர் தயாராக இருக்கிறார்கள். அது மட்டுமல்ல, அரசாங்கத்திற்கே சொந்தமான நிலமும் ஏராளமாக அங்கே இருக்கிறது. அதற்கு மேலாக கோயிலுக்குச் சொந்தமான நிலம் பல ஏக்கர் இருக்கிறது. அந்த இடமெல்லாம் எந்தவிதமான வருவாயும் இல்லாத நிலையில் பயன்படாமல் இருக்கின்றது. அந்த இடத்தை அரசே எடுத்துக்கொண்டாலும் பரவாயில்லை. கோயிலுக்குப் பணம் கிடைத்தால் அதைக் கோயிலாவது பயன்படுத்திக் கொள்ளும். அப்படி இல்லாமல் தனிப்பட்ட நபர்களுக்கு லாபம் சேர்க்க வேண்டும் என்று யாருடைய தூண்டுதல் பேரிலேயோ இவ்வளவு பெரிய தொகையை அந்த நிலத்திற்குக் கொடுக்க முன் வருவது சரியல்ல என்பதைச் சொல்லி, இந்த விஷயத்தை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து, தவறு நடந்திருந்தால், அதன்மீது அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து, இன்னொரு விஷயத்தையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். சில வாரங்களுக்கு முன்னால் தமிழக அரசு ஒரு உத்தரவைப் பிறப்பித்திருக்கிறது. அதாவது ஏற்கெனவே பிற்பட்டவர்கள் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் கிருத்துவ மதத்தைச் சேர்ந்திருந்தால், அவர்கள் அனைவருக்கும் பிற்பட்டவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் தொடர்ந்து அளிக்கப்படும் என்று அறிவிப்பு வந்திருக்கிறது. அது உண்மையிலேயே பாராட்டுக்குரிய அறிவிப்பாகும். சிலருக்கு மட்டும் இந்தச் சலுகை அளித்து மற்றவர்களுக்கு அளிக்காமல் இருப்பது நல்லதல்ல. அதாவது பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் கிருத்துவ மதத்தில் சேர்ந்திருந்தாலும், அவர்களுக்கு இந்தச் சலுகை வழங்கப்படும் என்று சொல்லும்போது, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள் கிருத்துவ மதத்தைச் சேர்ந்தால், அவர்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் வழங்கப்பட வேண்டும். ஆனால் இன்றையதினம் அவர்களுக்கு அந்தச் சலுகைகள் வழங்கப்படவில்லை. ஏன் அவர்களுக்கும் வழங்கக்கூடாது என்றுதான் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்க விரும்புகிறேன். பிற்பட்டவர்களுக்கு மட்டும் வழங்கப்படுகிற இந்தச் சலுகை தாழ்த்தப்பட்டவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். அதுதான் நியாயமாகும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

ஏற்கெனவே ஷெட்யூல்ட் கேஸ்ட்ஸ் என்று தனியாகக் கிடையாது. தீண்டத்தகாதவர்கள் என்று கருதப்பட்ட சில சாதியைச் சேர்ந்தவர்களை ஷெட்யூல்டு கேஸ்ட்-ஐச் சேர்ந்தவர்களாக நாம் அறிவித்திருக்கிறோம். அப்படித் தீண்டத்தகாத மக்கள் என்று சொல்லப்படுகிறவர்கள் கிருத்துவ சமயத்தைச் சார்ந்தாலும்கூட அவர்கள் அங்கேயும் தீண்டத்தகாதவர்களாகத்தான் கருதப்படுகிறார்கள், நடத்தப்படுகிறார்கள். எனவே அவர்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகள் தரப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதற்கு சட்டம் ஒரு தடையாக இருந்தாலும், அந்தத் தடையை நாம் நிவர்த்தி செய்ய அல்லது சட்டத்தைத் திருத்த அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இது மிகவும் அவசியமான, நியாயமான கோரிக்கையாகும். அதுவுமல்லாமல், அது அவர்களுடைய நீண்ட நாள் கோரிக்கையாகும் என்பதையும் நான் தெரிவிக்கக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-05)

அரசாங்க ஊழியர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு துறையில் இருப்பவர்களுடைய சம்பள விகிதத்தையும், படிகளையும் அவ்வப்போது திருத்தி, உயர்த்திக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் தசுதந்திரப் போராட்டத்திலே கலந்து கொண்டவர்களுக்கு ஓய்வூதியம் நிரந்தரமாக 150 ரூபாய்தான் கொடுக்கப்பட்டு வருகிறது. அதை 300 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று பல சந்தர்ப்பங்களில் அவர்கள் தமிழக அரசுக்கும், அமைச்சர்களுக்கும் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இது நியாயமான கோரிக்கை, கவனிக்கப்பட வேண்டிய கோரிக்கை. ஏற்கெனவே பல மாநிலங்களில் 300 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், மத்திய அரசு கொடுக்கும் ஓய்வூதியத்தைப் பெறுபவர்களாக இருந்தால், அவர்களுக்கு இங்கே 100 ரூபாய் மட்டுமே கொடுக்கப்படுகிறது. மத்திய அரசாங்கத்தில் ஓய்வூதியம் கிடைக்காதவர்களுக்கு மட்டும் 150 ரூபாய் கொடுக்கப்படுகிறது. ஆந்திரா, கர்நாடகம், கேரளம் போன்ற மாநிலங்களில் குறைந்தபட்சம் 300 ரூபாய் என்று ஓய்வூதியம் கொடுக்கப்படுவதைப் போலவே, இங்கேயும் 300 ரூபாய் கொடுக்க வேண்டும் என்பது நியாயமான கோரிக்கை. பல்வேறு துறையில் உள்ளவர்களுக்குரிய சம்பளத்தை உயர்த்தியிருக்கும்போது, இதையும் உயர்த்த வேண்டும் என்பது நியாயமானது என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

கிராமத்திலிருந்த கிராம முன்சீப், கர்ணம் ஆகியவர்களையும் எடுத்துவிட்டு அவர்களுக்குப் பதிலாக கிராம நிர்வாக அதிகாரிகள் என்று ஏற்படுத்தியிருக்கிறோம். கிராம முன்சீப்களும், கர்ணம் ஆகியவர்களும் இருபது, முப்பது ஆண்டுக் காலமாகப் பணியாற்றியவர்கள். அவர்கள் தங்களுக்கு ஏதாவது பரிகாரம் அளிக்க வேண்டுமென்று அரசாங்கத்திடம் முறையிட்டிருக்கிறார்கள். இந்த அவையிலேயும் பல்வேறு கோரிக்கையை வைத்திருக்கிறோம். ஆனால் அரசாங்கம் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்களுக்கு ஏதாவது செய்யப் போகிறோமா இல்லையா என்பதை அரசாங்கம் தெளிவாகச் சொல்வது நல்லது என்று குறிப்பிட விரும்புகிறேன். ஏனென்றால் அவர்கள் இன்னும் அரசாங்கத்திலேயிருந்து எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். முப்பதாண்டு காலமாக கிராமப்புறத்திலே அரசாங்க வேலை செய்தவர்கள் இன்றைக்கு நிர்க்கதியாக இருக்கிறார்கள். சில கணக்கப் பிள்ளையி



னுடைய குடும்பத்தினர் பிச்சை எடுக்கும் நிலையிலே இருக்கிறார்கள். அவர்களுக்கு ஏதாவது ஒட்டுமொத்தமாகவோ, மாதந்தோறும் கொடுக்கும் திட்டத்தையோ அரசாங்கம் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1981 ஆம் வருடத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் சாதி இந்துக்களுக்கும் கிறிஸ்தவர்களுக்குமிடையே இனக்கலவரம் நடந்து, துப்பாக்கிப் பிரயோகம் நடந்து அதில் பல பேர் இறந்திருக்கிறார்கள். அதற்காக விசாரணைக் கமிஷன் போடப்பட்டது. அந்தக் கமிஷனின் அறிக்கை என்னவாயிற்று என்பது பொது மக்களுக்கும், இந்த அவையினருக்கும் தெரியவில்லை. எப்போதுமே கமிஷன் போட்டால், அந்தப் பொருள் கிடப்பிலே போடும் நடவடிக்கையாகத்தான் இருக்கும். இந்த அரசாங்கத்திலே மட்டுமல்ல, இது எல்லா அரசாங்கங்களுக்கும் பொருந்தும். அந்த விசாரணைக் குழுவின் முடிவு தெரிந்து அதன் அடிப்படையில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாற்றுத் தலைவர் அவர்களே, மண்டைக்காடு நிகழ்ச்சி சம்பந்தமாக அமைக்கப்பட்ட விசாரணைக் கமிஷனின் அறிக்கை அரசுக்கு வந்து, அரசு பரிசீலித்து, அதை அவையில் வைக்க வேண்டிய ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. தமிழில் மொழி பெயர்க்க காலதாமதம் ஆகிறது. மொழிபெயர்ப்பு வேலையும், அச்சிடும் பணியும் நடந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். பி. சுப்பிரமணியம் : உரிய காலத்திலே வந்தால் அதிலே மக்கள் கவனம் செலுத்துவதற்கும், அரசாங்கம் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவும் உதவியாக இருக்கும்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாற்றுத் தலைவர் அவர்களே, உரிய காலத்திலேதான் வருகிறது. கமிஷன் தன்னுடைய முடிவைத் தெரிவிக்க நாள் ஆகியிருக்கிறது. கமிஷனுடைய அதிகார வரம்பிற்குள், அதனுடைய பணிக்குள் அரசு தலையிட முடியாது.

திரு. எம். பி. சுப்பிரமணியம் : ஐந்து வருடங்கள் ஆகிவிட்ட பிறகு பிரச்சினை தண்ணீருக்குள் போட்ட

போலவே கடந்த ஆண்டு மீனவர்கள் பிரச்சினையில் ஒரு பதட்டமான சூழ்நிலை தமிழகத்திலே இருந்தது. அது குறித்து எல்லாக் கட்சியினரும் போட்டி போட்டுக்கொண்டு நடவடிக்கை எடுத்தார்கள். அதற்கடுத்து சுப்ரீம் கோர்ட்டில் தீர்ப்பு வழங்கப்பட்டு, கட்டுமரங்கள் அவர்களிடம் மீண்டும்

கொடுக்கப்பட்டு அவர்கள் அங்கே மீண்டும் மீன் பிடிக்கலாம் என்று சொன்னார்கள். அரசாங்கம் இந்தத் தீர்ப்பை ஏற்றுக் கொண்டு விட்டார்களா? அல்லது ஏதாவது திட்டம் வைத்திருக்கிறார்களா? அமைச்சருக்கு ஞாபகம் வருகிற போது, மூன்று மாதங்களுக்கு ஒருமுறை பேசுவதற்கு மீனவர்களை அழைக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். ஆகவே இறுதியாக, உறுதியான நடவடிக்கையை அவ்வப்போது எடுப்பது அரசாங்கத்திற்கும், பொதுமக்களுக்கும் சம்பந்தப்பட்டவர்களுக்கும் நல்லது என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அதைப்போலவே நூற்பாலைகளில் பல ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன. பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இல்லாமல் உண்ணாவிரதம் இருந்துகொண்டு சென்னையை நோக்கி நடந்து வந்து கொண்டிருக்கிறார்கள். அவ்வப்போது கேள்விகளுக்கு பதில் சொல்வது என்பது அரசாங்கத்திற்குச் சுலபமாக இருக்கலாம். ஆனால் சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருந்தால், என்னவாகும் என்பதை தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும்.

(பிற்பகல் 12-10)

பல முறை இங்கே குறிப்பிட்டிருக்கிறேன். 2,800 தொழிலாளர்கள் மேட்டூரில் கடந்த ஓராண்டுக் காலமாக சம்பளம் இல்லாமல் இருக்கிறார்கள். பல லட்சக்கணக்கான ரூபாய் பெற்று வந்தவர்கள் இப்பொழுது எதும் சம்பளம் இல்லாமல் இருக்கின்றார்கள். அங்கே இருக்கின்ற வியாபாரம் ஸ்தம்பித்துவிட்டிருக்கின்றது. மேட்டூர் நகரப் பொருளாதாரமே பாதிக்கப்பட்டு விட்டது. இதற்கு அவகாசம் கேட்கின்றதை விட, அதற்கு உடனடியாக ஏன் பரிகாரம் காணக்கூடாது என்றுதான் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்த விஷயம் ஜாயிண்ட் கமிஷனர், டெபுடி கமிஷனர், பிறகு கமிஷனர் மட்டத்திற்கு வந்து, அரசு மட்டத்திற்கு வந்து, அமைச்சர் மட்டத்திற்கு வந்து, பிறகு முதலமைச்சர் மட்டத்திற்கு வந்து, அதற்குப் பின்னாலேதான் பரிகாரம் என்று இருக்கக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கேள்விக்குப் பதில் சொல்கின்ற நேரத்தில், நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பண்ருட்டி நகரத்திலே பள்ளி ஆசிரியர்கள் வேலை 1983-லிருந்து காலியாக இருக்கின்றது. அந்த காலியிடங்களை நிரப்புவதற்கு என்ன நடவடிக்கை நிர்வாகத்தில் எடுத்தார்கள்? "அந்த ஊரிலே தகுதியானவர்கள் கிடைக்கவில்லை, அந்த மாவட்டத்திலே



கிடைக்கவில்லை" என்கின்றார்கள். அப்படி கிடைக்கவில்லை என்றால், தமிழ் நாட்டிலே வேறே எங்கேயாவது இருந்தாலும் எடுத்துக்கொள்ளலாம் என்ற முடிவுக்கு இப்போதுதான் வந்திருக்கின்றார்கள். வெளியிலே படித்து விட்டு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் வேலையில்லாமல் பல ஊர்களிலே பல பேர் இருந்து கொண்டிருக்கின்றார்கள். எனக்குத் தெரிந்தவரையில், 8 ஆண்டுகள், 10 ஆண்டுகள் கூட வேலையில்லாமல் இருந்து கொண்டிருக்கின்றார்கள். அந்த அளவுக்கு அக்கறை இல்லாமல் நிர்வாகத்தினர் இருக்கின்றார்கள். சாதாரணமாக நாம் வைத்திருக்கின்ற காருக்கு டிரைவர் வேண்டுமென்றால், அடுத்த நாளே ஒருவரை அமர்த்திக்கொள்கிறோம். அந்த மாதிரி வேறு ஊரிலேயிருந்தாவது எடுத்துக் கொள்வதற்கு என்ன தடை இருக்க முடியும்? அதைப்பற்றி அரசாங்க அதிகாரிகள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது? அதனால் அரசுக்கு எவ்வளவு கெட்ட பெயர் ஏற்படுகிறது?

இறுதியாக, நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர்களும், பொதுமக்களும் அமைச்சர்களைப் பார்ப்பதற்கு என்று குறிப்பிட்ட நாட்களை ஒதுக்க வேண்டும், நேரத்தை ஒதுக்க வேண்டும். நகரத்திலே இருக்கும்போது, அவர்களை தாராளமாகப் பார்க்கக்கூடிய அளவுக்கு வழிவகைகளை ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதை என் வேண்டுகோளாகத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், பிரச்சினைகள் மீது அரசாங்கத்திலே உள்ளவர்களுக்குக் கொண்டு சென்று சொல்லி விட்டோம் என்ற திருப்தி ஏற்படுகின்ற வகையிலே இருக்கும். திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை தினங்களில் அமைச்சர்களைப் போய்ப் பார்க்கலாம், அவர்கள் வெளியிலே போயிருக்கமாட்டார்கள் என்ற நிலை இருக்க வேண்டும்.

சாதாரணமாக மாவட்ட கலெக்டர்களிடம், மனு நீதி என்ற பெயரிலே, யார் வேண்டுமானாலும் மனு கொடுக்கலாம், அவர்களிடம் பேசிக்கொள்ளலாம் என்ற ஒரு நிலை இருக்கின்றது. அப்படி இருக்கும்போது, அமைச்சர்களுக்கும் அப்படி ஏன் ஒரு நியதி ஏற்படக் கூடாது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

சமீபத்திலே நடந்து முடிந்த பஞ்சாயத்துத் தேர்தலைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். வாக்காளர் பட்டியல் ஒழுங்காக அச்சிடப்படவில்லை என்று பொறுப்புள்ள அரசியல் கட்சித் தலைவர்கள் பேசியிருக்கின்றார்கள். நான் நன்றாக அறிவேன். சில இடங்களில் வாக்காளர் பட்டியலைப் பார்த்தோமானால், அதில் 4, 5, 6 என்ற பக்கம் இருந்தால் அதையே மீண்டும் 12, 13, 14 பக்கம் என்று அச்சிட்டு இருக்கிறார்கள். ஒரு கிராமத்திலே வாக்காளர்கள்

விடுபட்டிருக்கின்றார்கள். 1981 ஆம் ஆண்டு அச்சடிக்கப்பட்ட வாக்காளர் பட்டியலை வைத்திருக்கின்றார்கள். 18 வயதானவர்கள் வாக்காளர் பட்டியலிலே இடம் பெறவில்லை. இது வேண்டுமென்றே நடைபெற்றதா அல்லது தவறுதலாக நடைபெற்றுவிட்டதா என்பதைப்பற்றி விசாரணை செய்ய வேண்டும் என்று ஓரிடத்தில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்கூட இதே கருத்தைப் பேசியிருக்கின்றார்கள். அதையும் நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல கிராமங்களிலே இதே தவறு நடந்திருக்கின்றது. அந்தத் தவறு இனி மேலாவது நடக்காமல் இருக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சட்ட சபை, நாடாளுமன்றத் தேர்தல்களுக்கான வாக்காளர் பட்டியலை ஆண்டுதோறும் திருத்தியமைக்க வழிவகை செய்யப்பட்டிருக்கின்றது. அதுபோல பஞ்சாயத்துத் தேர்தலுக்கும் ஒவ்வொரு ஆண்டும் வாக்காளர் பட்டியலை சரிபார்த்து திருத்தி அமைத்தால், இந்தவிதமான தவறுகள் நிகழாமல் இருக்கும் என்பதை அரசாங்கத்துக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக, மலைவாழ் மக்களுக்காக கூடுதலான ஒதுக்கீடு செய்திருக்கின்றார்கள் என்பதை நான் வரவேற்கத் தயாராக இருக்கிறேன். ஆனால் இப்போது என்ன நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது என்று சொன்னால், ஏலகிரி மலை, ஜவ்வாது மலை, கல்ராயன் மலை பகுதிகளிலே வாழக்கூடிய மக்கள் நாகரீகத்திலே பொருளாதாரத்திலே தாழ்த்தப்பட்ட மக்களின் நிலைக்கும் கீழே இருப்பவர்கள்; இன்றையதினம் அவர்களுக்குப் பாதை வசதி என்று போட்டவுடனே, கீழே உள்ளவர்கள் மலையிலே போய்விட்டார்கள். ஏலகிரி மலையிலே, மற்ற பகுதிகளிலே உள்ள நிலங்களை வாங்கி விட்டார்கள். அரசாங்க உத்தியோகத்திலே இருப்பவர்கள், நகரங்களிலே இருப்பவர்கள் இவர்கள் எல்லாம், மலைக்குக் கீழே உள்ளவர்கள் எல்லாம் அங்கே உள்ள நிலத்தை ஏக்கர் ரூ. 20,000, ரூ. 40,000 என்று உயர்த்தி வாங்கிவிட்டிருக்கின்றார்கள். அந்தப் பகுதிகளில் உள்ள நிலம் பெரும் அளவில் கீழே உள்ளவர்கள் கைக்குப் போய்விட்டன என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். எனக்குத் தெரியும். ஏற்காடு மலையில் அங்கேயுள்ள மலைவாழ் மக்கள் அங்குள்ள நிலங்களுக்கு சொந்தக்காரர்களாக இருந்தார்கள். அங்கேயுள்ள பெரும் பணக்காரர்கள், காபி தோட்டக்காரர்கள், தோட்ட சொந்தக்காரர்கள் சாதாரண ஏழையெளிய மக்களுக்கு ரூ. 100, ரூ. 200 என்று கடன் கொடுத்து, அவர்களிடம் எழுதி வாங்கிக்கொண்டு, 10 வருட



காலம் கந்தாயப் பணம் கட்டிக்கொண்டு வந்து சொந்தமாக்கிக்கொண்டிருக்கின்றார்கள். அந்த மலைவாழ் மக்களை வெளியிலே அப்புறப்படுத்திவிட்டார்கள். அங்கேயிருந்த பெருவாரி மலை வாழ் மக்கள் நிலம் இல்லாது இருக்கின்றார்கள் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். காபி தோட்ட சொந்தக்காரர்கள் ஏற்காடு மலை முழுவதையும் சொந்தமாக்கிக்கொண்டதைப் போல ஒரு கேவலமான நிலை ஏற்படாமல் தடுக்க வேண்டும். அந்த அடிப்படையில் இந்த நிலங்களை மலைவாழ் மக்கள் அல்லாதவர்கள் வாங்கக் கூடாது: அதற்கு மலையாளி கண்டிஷன் என்ற பெயரில் மலையாளி மலையாளிக்குத்தான் விற்கலாம். அதை கீழே உள்ளவர்கள் வாங்கக்கூடாது என்று இருக்க வேண்டும். அப்படி இருந்தால், அது மலைவாழ் மக்களுக்கு, அவர்கள் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது முக்கியமானது. இதில் பலர் நிலங்கள் கை மாறி இருக்கின்றன. இனியாவது அதைத் தடுத்து நிறுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டு என் வார்த்தைகளை முடிக்கிறேன்.

(பிற்பகல் 12-15)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, 1985-86 ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை மதிப்பீடுகள்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். ஆகவே ஆண்டுக்காண்டு போடுகிற வரவு-செலவுத் திட்டத்திற்கும், நிதிநிலை அறிக்கைக்கும் இதற்கும் ஒரு வேறுபாடு உண்டு. துணை மதிப்பீடுகளை நாம் அவையிலே வைக்கும்போது, பெரும்பாலும் ஏற்பட்டுவிட்ட செலவுகளுக்கான அனுமதியை இந்த அவையிலே பெறுவதற்கும், அல்லது ஏற்படும் செலவுகளுக்கு அனுமதி பெறுவதற்காக இருக்கும். இறுதித் துணை மதிப்பீடு என்று இந்த அவையிலே வரும்போது, ஏற்பட்ட செலவுகளுக்கு இந்த அவையிலே அனுமதியைப் பெற வேண்டும் என்பதற்காக வைக்கப்படுகிறது. 1985-86 ஆம் ஆண்டுக்கான பொதுத் தன்மையின் அடிப்படையில், வரவு-செலவுத் திட்டத்தின் அடிப்படையில் பல்வேறு துறைகளைப் பொறுத்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட வகையில், அவையினுடைய அனுமதியை நாம் பெறுகிறோம். அந்த ஒதுக்கீட்டுக்கு மேலே செலவு என்று வரும்போது, அவ்வப்போது 'ஸ்டேட்மென்ட் ஆஃப் சப்ளிமெண்டரி எக்ஸ்பென்டிசர்' என்று அவையிலே வைத்து, மறுபடியும் அனுமதியைப் பெறுகிறோம். அப்படி ஏற்கெனவே ஒரு துணை மதிப்பீட்டுக்கான அறிக்கையை அவையிலே வைத்து, அவையின் அனுமதியைப் பெற்றோம். அதற்குப் பிறகு ஏற்பட்ட கூடுதல்

செலவுகளுக்கு இந்த இறுதித் துணை மதிப்பீடுகள் வழிவகை செய்கின்றன. 1—3—1986-க்குள் ஆகக்கூடிய, ஆகின்ற, ஆக வேண்டுமென்று திட்டமிடப் பட்டு, ஆன செலவுகளுக்கு மட்டும்தான் துணை மதிப்பீடுகள், வேறு வழி களில் அல்ல. எற்கெனவே 1986-87 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் எந்தெந்தத் துறைகளில் என்னென்ன நிலைமைகளை மேற்கொள்ள வேண்டுமென்று விரிவாகவும், விளக்கமாகவும் பேசலாம் என் றாலும், அப்படி பொது நிதிநிலை அறிக்கையிலே பேசுகின்ற வகையிலேயே மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் இங்கே தங்கள் கருத்துக்களை இதிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் சொல்கிற மாதிரி, ஒரே தலைப்பிலே செலவைக் கொண்டுவர முடியாது. இந்த அவை அனுமதித்ததற்கு மேல், அந்தந்தத் தலைப்புகளில் கூடுதலாகச் செலவு செய்யும் நிலைமை வரும்போது, எவ்வளவு கூடுதலாகச் செலவு செய்யப் பட்டதோ அதற்கு இந்த அவையின் அனுமதி பெற வேண்டும். அதற்காக ஒவ்வொரு தலைப்பின் கீழும் சில லட்சம், சில கோடி ரூபாய்களைச் செலவு செய்ததற்கு அனுமதி பெற வேண்டும். அந்த வகையிலே 436 கோடி ரூபாய்க்கு துணை மதிப்பீடுகள் என்ற அளவிலே அனுமதி பெற வேண்டிய அவசியம் ஏற்பட்டு, இந்த அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் சொல்லுகின்ற போது, கைத்தறித் துறையிலுள்ள பிரச்சினைகள்பற்றி விரிவாக எடுத்துச் சொன்னார்கள். அடிக்கடி இந்த அவையிலே அவர்கள் விளக்கங்களைத் தந் திருக்கிறார்கள். கைத்தறிக்கு எவ்வளவுக்கெவ்வளவு ஆக்கம் தர வேண்டுமோ அந்த அளவுக்கு இந்த அரசு பணியாற்றிக் கொண்டிருக்கிறது என்பதை இந்த அவை நன்றாக அறியும். அதில் ஏற்பட்டுள்ள பல சிக்கல்களை மாண்புமிகு உறுப்பினரவர்கள் தன்னுடைய உரையிலே விளக்கிக் காட்டினார்கள்.

கைத்தறித் துணிகளுக்குத் தரும் தள்ளுபடியால் ஏற்படும் இழப்பில் பாதியை மத்திய அரசும், பாதியை மாநில அரசும் ஏற்றுக்கொள்ளுவது என்ற நிலைமை இந்த ஆண்டிலிருந்து 'இல்லை' என்று மத்திய அரசு சொல்லி விட்டது. அடுத்து, பிரைமரி சங்கங்கள் வாங்கும் கடனுக்கான வட்டியில் ஒரு பாதியை மாநில அரசும், இன்னொரு பாதியை மத்திய அரசும் ஏற்றுக் கொள்ளும் நிலைமை இருந்தது. இனி அதையும் மாநில அரசே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று மத்திய அரசு சொல்லியிருக்கிறது.





திரு. எம். பி. சுப்பிரமணியம்: கைத்தறித் துணிகளுக்குக் கொடுக்கப்படும் ரிபேட்டில் மத்திய அரசின் பங்கு இல்லை என்று மாண்புமிகு அமைச்சர வர்கள் அறிவிக்கிறார்களா?

(பிற்பகல் 12-20)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மத்திய அரசாங்கத்தி னுடைய கணக்குப்படி 1985-86-ல் இல்லை. 1984-85 ஆம் ஆண்டுவரை தந்தார்கள். அதுவும் 50 சதவிகிதம் என்பதை 25 சதவிகிதம் என்று ஆக்கி னார்கள். இந்த ஆண்டு அதுவும் இல்லையென்று அறிவித்திருக்கிறார்கள். என்றாலும் தொடர்ந்து அதைக் கொடுக்க வேண்டுமென்று நாங்கள் வற்புறுத்திக்கொண்டிருக்கிறோம். அதாவது 50 சதவிகிதத்தை அவர்கள் கொடுக்க வேண்டுமென்றும் 50 சதவிகிதத்தை நாங்கள் ஏற்க வேண்டுமென்றும் வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். அவர்கள் தருவார்கள் என்று எதிர்பார்க் கிறோம்.

அதுபோல பல்வேறு சங்கடங்கள் கைத்தறி நெசவாளர்களுக்கு இருக் கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் சொன்னார். மத்திய அரசு உதவி இல்லையென்று சொன்னாலும்கூட, இந்த அரசு விட்டு விடவில்லை. கைத்தறித் துணிக்கான தள்ளுபடித் தொகையை நாம் தொடர்ந்து தந்துகொண்டிருக்கிறோம். வட்டியின் பங்கையும் நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அதுபோல் தமிழகத்திலே நூலுக்கான விற்பனை வரி அதிகம் என்று சொன்னார்கள். அதனால் துணிகள் விலை போகவில்லை யென்றும் சொன்னார்கள். இதுபற்றி வணிக வரித் துறை அமைச்சர், கைத் தறி அமைச்சர் மற்றும் நிதியமைச்சர், அதிகாரிகள் ஆகியோர் உட்கார்ந்து பேசி முடிவெடுத்தால், ஒரு தெளிவான நிலை ஏற்படும் என்று கருதுகிறேன். அரசுக்கு நிதி இழப்பும் ஏற்படக்கூடாது. அதே நேரத்தில் கைத்தறிக்கும் ஆக்கமும் ஊக்கமும் தருவதாகவும் அமைய வேண்டும். அதே சமயத்தில் ஏமாற்றுகிறவர்களுக்கும் இது போய்ச் சேராமல் பார்த்துக்கொள்ளவேண்டும். ஆக, இந்த மூன்று துறையினரும் உட்கார்ந்து பேசி என்னென்ன சலுகைகள் கொடுக்கலாம் என்பது பற்றி முடிவெடுக்கலாம். வணிக வரித் துறை, கைத் தறித் துறை இவற்றின் கருத்துக்களையும் கேட்கலாம். அந்த வகையில் மாநிலத்தின் நிதி நிலைமைக்கேற்ப சரியான வழிமுறைகளைக் கண்டறிந்து தீர்வு காணலாம். அதற்கு முன்பாக வரியை எடுப்பேன், குறைப்பேன் என்று எடுத்துச் சொல்வதற்கில்லை. அதற்கான சூழ்நிலையை உருவாக்குவது தான் நம்முடைய மாநிலத்தின் கைத்தறிக்கு பாதுகாப்பாக அமையும். வங்கி

ளத்தில், ஆந்திராவில் எல்லாம் வரி இல்லையென்றார்கள். அதற்கேற்ப இங்கேயும் செய்ய வேண்டும் என்றார்கள். வங்காளத்தில்கூட பனியன் தயாரிக்கிறார்கள். வங்காளம்தான் பனியனைப் பொறுத்த வரையில் நமக்குப் போட்டி என்றும் சொன்னார்கள். அவர்களுடைய பனியன் நம் பனியனைவிட விலையில் குறைவு என்பதால், இங்கே விலை போகாமல் தேக்கம் ஏற்படும் நிலை இருக்கிறது என்றும் சொன்னார்கள். அதுபற்றி முன்பே என்னிடம் சொல்லியிருந்தால், சிலபல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கக்கூடும். ஒரு வாரத்திற்கு முன்புதான் இதுபற்றி திருப்பூரிலிருந்து வந்தவர்கள் என்னிடத்தில் சொன்னார்கள். இதுபற்றி முன்பே இன்னின்ன வழியில் பனியன் உற்பத்தி பாதிக்கப்படுகிறது என்று சொல்லியிருந்தால், நன்றாக இருந்திருக்கும். அவர்கள் நூல் விலையில் ஒரு சதவிகிதம் கூட்டிவிட்டு, பனியன் விலையில் ஒரு சதவிகிதம் குறைத்தால், அங்கேயுள்ளவர்களுடன் போட்டியிடலாம் என்று தெரிவித்தார்கள். அவர்கள் மீண்டும் நேரில் சந்தித்து, தகுந்த விவரங்களுடன் சமாதானம் சொன்னால், அதுபற்றி நடவடிக்கை எடுக்க வாய்ப்பாக இருக்கும்.

அடுத்து, மூலதனப் பகுதியிலிருந்து கடன் பெறுவது பற்றியும் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் சொன்னார். நலிந்தவர்களுக்கு மத்திய அரசு, ரிசர்வ் வங்கி நிபந்தனைகளின்படி, 5 ஆயிரம் ரூபாய் அளவுக்குக் கடன் தருகிறார்கள். அதற்கு 'கியாரண்டி' எல்லாம் கிடையாது. நெசவாளர்களுக்கு உரிய அதிலிருந்து மற்றவர்கள் வாங்க முடியாது. சட்ட திட்டத்திற்கு உட்பட்டுத்தான் வாங்க முடியும். ரூபாய் 500-ல் இருந்து ரூபாய் 5,000 வரை வாங்கி தங்களுடைய வாழ்வை நெசவாளர்கள் சிறப்பாக நடத்த உரிமை பெற்றவர்கள். அதிலே என்னென்ன சிக்கல்கள் இருக்கின்றன என்பதைப் பற்றியும் இங்கே எடுத்துக் சொன்னார்கள். அதை ஆராய்ந்து எந்த அளவுக்கு நீக்க இயலுமோ அதை நீக்குவதற்கும் முயற்சி செய்யப்படும்.

(பிற்பகல் 12-25)

பட்டு விற்பனையைப் பொறுத்தவரையில், பெங்களூரில் நடக்கும் விற்பனைக்கும், தமிழகத்தில் நடக்கும் விற்பனைக்கும் நிரம்பவும் வித்தியாசம் இருந்து, இங்கே கூடுதலான விலைக்குப் போவதால், கஷ்டம் ஏற்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அந்தத் துறையினர் அதை ஆராய்ந்து அதற்கேற்ற செயற்குறிப்புக்களைத் தந்தால்,





அதையும் நிதித் துறை ஆராயும். ஆராய ஆயத்தமாக இருக்கிறது. அவர்கள் கூறிய அந்தக் கருத்துக்களை நிதித் துறையினர் எடுத்துக்கொள்ள முயற்சிகளை மேற்கொள்வார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொன்னார்கள். அதற்கு நான் பொது நிதிநிலை அறிக்கையில் பதிலுரை ஆற்றும்போது பதில் அளிக்கலாம் என்று நம்புகிறேன். பெரும்பாலும் அவர்கள் எடுத்துச்சொன்ன கருத்துக்களுக்கு தக்க பதிலை மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள்தான் அளிக்க வேண்டும். இருப்பினும் அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களின் அடிப்படையில், கல்வித் துறை செயற்குறிப்புக்களை அனுப்பினால், நிதித் துறை அதை எடுத்துக் கொள்ள ஆயத்தமாக இருக்கும். அப்படிப்பட்ட செயற்குறிப்புக்களை கல்வித் துறையிடமிருந்து எதிர்பார்க்கிறேன். எதெது உடனுக்குடன் தீர்க்க முடியுமோ அதற்கு ஆதரவு தருகிற வகையில் நிதித் துறை தனது பணியினை ஆற்றிவருகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவைகளை மனதில் வைத்து கல்வித் துறை ஏற்ற நடவடிக்கைகளை முனைப்போடு எடுப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன். கல்வித் துறை கொள்கைக் குறிப்பு வைக்கப்படும் போது, கல்வியமைச்சர் விளக்கங்கள் தருவார்கள் என்று நம்புகிறேன். கல்வித் துறையின் மூலம் நிதித் துறைக்கு தக்க செயற்குறிப்புகள் வந்தால், அதை ஏற்று நியாயத்தின் அடிப்படையில் செயலாற்ற நிதித் துறை ஆயத்தமாக இருக்கிறது.

ஒரு நபர் குழுபற்றிப் பேசினார்கள். அதைப்பற்றி நிதிநிலை அறிக்கையில் சிலவற்றைச் சொல்லியிருக்கிறேன். அந்த நிலையிலிருந்து ஏற்பட்டிருக்கிற முன்னேற்றங்கள் குறித்து, நான் நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்திற்கு பதில் அளிக்கும்போது, மேலும் அவர்களிடமிருந்து விபரங்கள் பெற்று, பதில் அளிக்க முடியும். இருந்தாலும் அவர்களுடைய அறிக்கை வந்ததற்குப் பிறகு, அதை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் எவ்வளவு காலம் ஆகும் என்பதை இப்போது கேட்டுப் பார்க்கலாம். அதை எனது அடுத்த பதிலுரையில் சொல்லவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆசிரியர்களைப் பற்றிய பல்வேறு குறைபாடுகளைச் சொன்னார்கள். தற்காலிக ஊழியர்களை நிரந்தரம் ஆக்குவதைப்பற்றி திரு. மீனாட்சிசுந்தரம் சொன்னார். திரு. லட்சுமிகாந்தன் அவர்களும் சொன்னார். ஏற்கெனவே நான் சொன்னது மாதிரி, தமிழ்நாடு தேர்வாணைக் குழுவின் தேர்வுக்கு அவசியம் இல்லாத அளவுக்கு கல்வித் துறையே அதைச் செய்யலாம் என்பதை நிதித் துறை ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதற்கான செயற்குறிப்பு இன்னமும் வரவில்லை. கல்வித் துறை அதை ஆக்கத்தோடு அனுப்பினால், அதை நிதித் துறை ஏற்கும். அதைத் தீர்த்துவைக்கலாம். நீண்ட காலத்திற்கு இழுத்துக்கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லையென்று நானும் கருதுகிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கை மீதான பதிலுரையிலும் நிதியமைச்சர் அவர்கள் இதைத்தான் சொன்னார்கள். இப்போதும் இதையே சொல்கிறார்கள். கல்வித் துறை இவ்வளவு காலம் ஆகியும் நடவடிக்கை எடுக்காததன் காரணம் என்ன? ஏன் நடவடிக்கை எடுக்க மறுக்கிறார்கள்? சென்ற ஆண்டு அளித்த அதே பதில்தான் எப்போதும் வரவேண்டுமா? அதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களே பார்த்துச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** என்னைக் குடைவதைவிட கல்வியமைச்சரைக் குடைந்தால் நலமாக இருக்கும். நான் சொல்வது என்னுடைய நிலைமையை. கல்வித் துறையைப் பொறுத்தவரையில், கல்வியமைச்சர் அவர்கள் ஏற்பாடுகளைச் செய்தால், விரைவில் காரியங்கள் நடக்கும். ஏனென்றால் ஒரு அவையில் ஓர் அமைச்சர் எதைச் சொன்னாலும், அந்தந்த துறைகள் அவைகளைக் குறிப்பெடுத்து நடவடிக்கை எடுப்பது முறை. ஒவ்வொரு துறைக்கும் நிதியமைச்சரே 'நோட்' அனுப்புவது என்பது நடைமுறையில் இருக்க முடியாது. நான் சொல்லிவிட்டேன் என்றால், பதிலுரை தருகிறேன். உறுதி மொழி கொடுக்கிறேன். அது குறித்து ஒவ்வொரு துறையும் குறிப்பெடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுதான் முறை. அதை மீண்டும் நான் வலியுறுத்துகிறேன். ஆக, தமிழ்நாடு தேர்வாணைக் குழுவிற்கு இந்தப் பிரச்சினை சென்று பல்லாண்டுக் காலம் பணியாற்றியவர்களுக்கு வேலையில்லை என்ற நிலைமைக்கு வருவது தவறு என்று சொல்லியிருக்கிறோம். பல்வேறு வகையான தேர்வுகளை





நடத்திக்கொண்டிருக்கும் தேர்வாணைக் குழு விரைவில் இதுகுறித்து நடவடிக்கை எடுக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. இன்னும் ஒருபடி மேலே போய்க்கூட நான் சொல்கிறேன், இதைக் கல்வி அமைச்சர் ஆராய வேண்டுமென்றும் நான் சொல்லியிருக்கிறேன். ஏராளமாக ஆசிரியர்களை

(பிற்பகல் 12-30)

ஆண்டுக்காண்டு தேர்ந்தெடுக்க வேண்டிய ஒரு கட்டத்திலே கல்வித் துறை இருப்பதன் காரணமாக, பல நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான ஆசிரியர்களை பல்வேறு வகைகளிலே பல்வேறு நிலைகளிலே தேர்ந்தெடுக்க வேண்டியதன் காரணமாக, இதற்கென்று தனியாகவே ஒரு ஆணைக் குழு வைக்கலாம் என்கிற கருத்தைக்கூட நிதித் துறை ஏற்றுக்கொள்கிறது என்று சொல்லியிருக்கிறேன். அதற்கான செயற்குறிப்பையும் அனுப்பும்படி சொல்லியிருக்கிறேன். அப்படி வந்துவிடுமானால், இப்படிப்பட்ட குறைபாடுகள் நீங்குவதற்கு வழிகள் அமையும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கருதுவது போன்று நானும் கருதித்தான் இவ்வாறு கூறியிருக்கிறேன்.

* **திரு. எம். பி. சுப்பிரமணியம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய வார்த்தை என்பது அரசின் சார்பாகச் சொல்லப்படுவதாகத்தான் அறிகிறேன். துணை மதிப்பீடுகளின்கீழ் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பேசும்போது எல்லா அமைச்சர்களுடைய துறைகளின்கீழ் வருகின்ற செலவினங்களுக்கும் தான் பொறுப்பேற்றுப் பேசுவார்கள். ஆனால் அவர் கூறுகிற கருத்துக்களின்படி ஓர் அமைச்சர் சரியாக பின் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால், அதை அமைச்சரவைக்குள்ளேயே சரி செய்துகொள்ள வேண்டுமே தவிர, இந்த அவையிலே அதைச் சொல்வது, பின் அதற்குச் சமாதானம் சொல்வது என்பது எப்படிப் பொருத்தமாக இருக்கும் என்பதைத்தான் அறிய விரும்புகிறேன். சென்ற ஆண்டு சொன்ன பதிலையே இந்த ஆண்டும் சொல்வதென்பது, உங்களுக்குள் ஒற்றுமை இல்லை என்பதைத்தான் எடுத்துக் காட்டுகிறதா அல்லது சம்பந்தப்பட்ட அமைச்சர் சரியான வழிக்கு வரவில்லை என்பதை எடுத்துக் காட்டுகிறதா என்பதைத் தயவுசெய்து. . .

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒற்றுமை இல்லை என்பது இல்லை. ஒரே வரியில் "நான் கவனிக்கிறேன்" என்றுகூட சொல்லிவிட்டுப் போகலாம். நான் கொஞ்சம் அதிக விளக்கம் தருவதனால் இந்த விளைவுகள் எல்லாம் வருகி

தென்று கருதுகிறேன். ஒரே வரியில் 'கவனிக்கிறேன்' என்றுகூட சொல்லி விட்டுப் போகலாம். அமைச்சர்களுக்கிடையே எந்தவித கருத்து வேறு பாடும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் சொல்ல விரும்பியதென்னவென்றால், காலத் தாழ்வு ஏற்படுகிறது. தேவையற்ற காலத் தாழ்வு ஏற்படுகின்றது என்பதை நான் அடிக்கடி ஒப்புக்கொண்டிருக்கிறேன். காலத் தாழ்வு ஏற்பட வேண்டிய அவசியம் இல்லை என்றும் ஒப்புக்கொள் கிறேன். ஒரு காரியத்தைச் செய்ய வேண்டுமென்று முடிவு எடுத்த பிறகு, தேவையற்ற வகையிலே காலத் தாழ்வு செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்ற கருத்தின் அடிப்படையில்தான் இதையெல்லாம் கூறினேன். அந்த வகையில் மீண்டும் வற்புறுத்த வேண்டுமென்கிற முறையில் சொன்னேனே தவிர, வேறுபாடோ வேறெந்தத் தன்மைகளோ இல்லை என்பதைக் கூறிக் கொள்கிறேன். இதையெல்லாம் செய்யக்கூடாது என்கிற எண்ணம் கல்வித் துறைக்கு இருக்கிறதென்கிற முனையிலும் நான் இதைச் சொல்லவில்லை. ஆகவே அதற்கான ஏற்பாடுகளை முறைப்படி காலத் தாழ்வுக்கு இடமில்லாத வகையில் செய்ய வேண்டும். அதற்குக் கீழே இருக்கிற எல்லா மட்டத் தினரும் உதவி செய்ய வேண்டும். காலத் தாழ்வு ஏற்படுவதற்கு இடங்கள் இருக்கின்றன. அந்த இடங்கள் இல்லாத வகையில் செய்ய வேண்டுமென் பதற்காகத்தான், வற்புறுத்துவதற்காகத்தான் மீண்டும் மீண்டும் இதை வற்புறுத்தி வருகிறேன்.

அடுத்து, சத்துணவு ஊழியர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று சொன் னார்கள். சத்துணவுத் திட்டத்தை இன்னும் செம்மைப்படுத்தவேண்டும், சீர்படுத்த வேண்டும், அதிலே சீர்குறைவு ஏற்படக்கூடாதென்ற கருத்திலே என்ன என்ன சீர்திருத்தங்கள் செய்ய வேண்டும் என்பதில் எல்லாம் நாம் மேலும் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். நோக்கம், நல்ல நோக்கம். அதனுடைய பயன் நல்ல விதத்தில் அமையவேண்டுமென்று நமக்கு எண்ணமிருந்தாலும், அதிலே பல்வகையான குறைபாடுகள் இருக் கின்றன என்பதை எல்லோரும் அறியத்தான் செய்கிறார்கள். அந்தக் குறை பாடுகளைப் போக்குவதற்கான முயற்சிகளில் எல்லாம் நாம் ஈடுபடவேண்டிய வர்களாக இருக்கிறோம். அதற்கு நான் அடிக்கடி எடுத்துச் சொல்கிற மாதிரி, எல்லாத் தரப்பினரின் உதவியும் இருந்தால், சிறப்பாக நடைபெறும். இதிலே ஈடுபட்டிருக்கும் பகுதி நேர ஊழியர்களை பகுதி நேர ஊழியர் களாகத்தான் நாம் வைத்துக் கொண்டிருக்கிறோம். ஒரு குறிப்பிட்ட அளவு ஊதியத்தையே அவர்களுக்குத் தருகிறோம். அவர்களை முழு நேர அரசு



ஊழியர்களாக, நிரந்தர ஊழியர்களாக ஆக்கிவிடுவோமானால், அவர்களுக்கு எவ்வளவு பணம், படி, மற்றவைகளை எல்லாம் தரவேண்டுமென்று வருகிற போது, இந்த மதிய உணவுச் செலவுகளை விட இன்னும் அதிகமாகச் செலவு ஆகிவிடும். ஆகவே இதிலே அவர்களுக்கு வழங்க வேண்டிய வசதி வாய்ப்பு களை மனதிலே வைத்துக்கொண்டு அவ்வப்போது ஏற்படுகிற சூழ்நிலைக் களுக்கேற்ப நாம் செய்ய வேண்டியவைகளைச் செய்து கொண்டிருக்கிறோம் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, அகவிலைப்படி பற்றி சில உறுப்பினர்கள் குறிப்பிட்டுச் சொன் னார்கள். மத்திய அரசு ஒரு அகவிலைப்படி அறிவித்திருக்கிறது. அதை ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். விரைவில் அதுபற்றி அறிவிப்பு வரும் என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, கடலையெண்ணெய் பற்றி குறிப்பிட்டு ஒருநாள் தேக்கநிலை ஏற்பட்டதென்று சொன்னார்கள். அதன் முழு விவரத்தையும் சொல்வதற் கில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்தை மனதிலே கொண்டு தொடர்புடைய துறையினர் அதைப்பற்றி ஆராய்ந்து அதன் மீது எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பார்கள், எடுப்பதற் கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, கல்வித் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் சொன்னார். எவ்வளவு முடியுமோ அவ்வளவு நாம் கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்து வருகிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும் அறிவார்கள். ஆக, இருக்கின்ற நிதி ஆதார வசதிகளை வைத்துக்கொண்டுதான் நாம் பல்வேறு பணிகளை நிறைவேற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம். கல்வியைப் பரவலாக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அதற்கான பள்ளிக்கூட வசதிகள், அடிப்படைக் கல்விக்கான சாதனங்கள் மற்றவைகளைப் பெருக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இன்னமும் ஆயிரத்திற்கு மேற்பட்ட உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் கூரைக் கட்டிடங்களில்தான் இருக்கின்றன. ஆக எப்படியாவது கல்வி கற்றால் போதும் என்கிற அளவுக்கு, எவ்வளவு வசதி குறைவாக இருந்தாலும், பள்ளிகள் நடந்தால் போதும் என்கிற முடிவுக்கு வருகிறோம். கல்வித் துறையைப் பொறுத்த வரையில், முதலிலே இடப் பிரச்சினை வருகிறது. அதற்கு அடுத்தக்கன்

(டாக்டர் இரா. நெடுஞ்செழியன்) [1986 மார்ச் 25

(பிற்பகல் 12-35)

மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னது போன்று ஆசிரியர்களின் பிரச்சினைக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. அதற்குப் பிறகு இடத்துக்கான வாய்ப்பு வசதிகளைச் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். இதற்கு எல்.ஐ.ஸி. போன்றவைகளிலேகூட நூறு கோடி ரூபாய் கடன் தந்து உதவுவார்களேயானால், அரசு மெல்ல மெல்ல அந்தக் கடனைத் திருப்பி அடைக்கின்ற வகையில், எல்லாப் பள்ளிகளுக்கும் கட்டட வசதிகள் எல்லாம் அவர்கள் செய்து தர இயலுமா என்று அரசு முயன்று முயன்று பார்த்து, அதற்கான சரியான பதிலும், ஒத்துழைப்பும், உதவியும் வரமுடியாத சூழ்நிலைதான் இருக்கிறது. ஆக மீண்டும், மீண்டும் கல்வித் துறையும், கல்வி அமைச்சரும் வற்புறுத்திக்கொண்டு வருகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படுகிறபோது, எடுத்த எடுப்பிலேயே நூறு கோடி ரூபாய் ஒதுக்கி, கட்டிடங்கள் எல்லாம் கட்டிவிட்டு, அவற்றைத் திருப்பிச் செலுத்தக்கூடிய பொறுப்பை அரசு ஆண்டுக்காண்டு ஒரு தவணையினுடைய அடிப்படையிலே கூட செலுத்திவிடலாம். அதுபற்றி அரசு இன்னமும் சிந்தித்துக் கொண்டு, ஆராய்ந்துகொண்டுதான் இருக்கிறது. ஆனால் 1985-86 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் சாதாரணமாக பொதுக் கல்விக்கும், தொழில் நுட்பத் துறைக்கும் சேர்த்து கிட்டத்தட்ட ரூ. 468 கோடி ஒதுக்கினாலும் கூட, அதற்குப் பிறகு அரசு கூடுதல் செலவு செய்யவேண்டிய அவசியம் வந்து வந்து, துணை மதிப்பீடுகளிலே நாம் அனுமதி பெற்றுப் பெற்று, கிட்டத்தட்ட 530 கோடி ரூபாய்க்கு மேல்தான் செலவு செய்து, 1985-86 ஆம் ஆண்டை நாம் நகர்த்திக்கொண்டு வந்திருக்கிறோம். நாம் போடும் திட்டம் ரூ. 468 கோடிக்கு என்றாலும்கூட, அது ரூ. 530 கோடி அளவுக்கு வந்திருக்கிறது. இந்த ஆண்டு கிட்டத்தட்ட துணை மதிப்பீட்டின் அளவில்கூட ரூ. 551 கோடிக்குத்தான் நாம் போட்டிருக்கிறோம். இது இந்த அளவோடு நிற்காது. இந்த ஆண்டு அவ்வப்போது மாவட்டத்திற்குள் ஏற்படுகிற இன்றியமையாச் செலவுகளின் அடிப்படையில் கூடுதலாக ஆவதற்கான சூழ்நிலைகள் ஏற்படக்கூடும். அகில இந்திய ஆசிரியர்கள் கமிஷனுடைய அறிக்கை பாராளுமன்றத்தில் வைக்கப்பட்டதாகவும் மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். அதுகுறித்து பாராளுமன்றமும், மைய அரசும் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதும், அது மாநில அரசுக்கு எந்தப் பரிந்துரையைச் செய்ய இருக்கிறது என்பதும். அந்தப் பரிந்துரையின் அடிப்படையிலே மாநில அரசு என்ன கருதுகிறது என்பதும், அதைப்பொறுத்து மத்திய அரசினுடைய உதவியை எந்த அளவுக்கு எதிர்



1986 மார்ச் 25] (டாக்டர் இரா. நெடுஞ்செழியன்)

பார்க்க இருக்கிறது என்பதும், அதை எந்த அளவுக்கு நிறைவேற்ற இருக்கிறது என்பதும், வந்ததற்குப் பிறகு அது நிறைவேற்றப்பட வேண்டியதாக இருக்கும். ஆனால் மத்திய அரசினுடைய நடவடிக்கைக்குப் பிறகு, அதன் தன்மைகள் வந்த பிறகு, அந்தப் பரிந்துரைகளை ஆராய வேண்டிய அவசியம் வரும்போது, இந்த அவையும் அதைப்பற்றி ஆராயும், இந்த அவையில் இருக்கிற உறுப்பினர்களும் ஆராய்ந்து எடுத்துச் சொல்வதற்கான வாய்ப்பும் ஏற்படும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழக முத்தையா மருத்துவக் கல்லூரி அமைக்கப்பட்டதில் ஏற்பட்ட பல சட்டச் சிக்கல்களை மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் குறிப்பிட்டார்கள். அந்தச் சட்டச் சிக்கல்கள், மற்றவைகள் அவர்கள் கூறுகிறபடி இருக்குமேயானால், மருத்துவக் துறையும், சட்டத் துறையும் கலந்து யோசித்து அவர்கள் கூறுகின்ற குறைபாடுகளை நீக்குவதற்கும்—அங்கே நம்பி அந்தக் கல்லூரியிலே சேர்ந்து கல்வி பயில முயன்ற மாணவர்கள் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டுமென்பது மிகமிக முக்கியம்—அவர்களுடைய நலன்கள் காப்பாற்றப்படுகிற அளவுக்கு சட்டத் துறையின் மூலமாகவும், நல்வாழ்வுத் துறையின் மூலமாகவும் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அந்த நடவடிக்கைகளை எடுத்து, சீர்படுத்தி, செம்மைப்படுத்துவதற்கும் அந்தத் துறை முயலும் என்பதையும் இங்கே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். மற்றும் மருத்துவ மனைகளைப் பயன்படுத்திக்கொள்வதுபற்றி அரசு ஏற்கெனவே ஒப்புதல் அளித்திருக்கிறது என்று நான் கருதுகிறேன். அதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டதா, இல்லையா என்பது எனக்குத் தெரியாது. அவர்கள் குறிப்பிட்டது போன்று சிதம்பரம் மருத்துவமனை, கடலூர் பெரிய மருத்துவமனை மற்ற மருத்துவமனைகளை எந்த அளவுக்குப் பயன்படுத்திக்கொள்ள முடியுமோ அந்த அளவுக்குப் பயன்படுத்திக்கொள்ளலாமென்று அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது, கொள்கையளவில் ஒப்புக்கொண்டிருக்கிறது. அதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டு அது போயிருக்கிறதா என்பது தெரியவில்லை. அங்கே முதல் ஆண்டாக இருப்பதால், அதிகப் பிரச்சினை வராது. அடுத்தடுத்த ஆண்டுகள் வரும்போது, அந்த மருத்துவமனைகளினுடைய அவசியம் மிகமிக இன்றியமையாத தேவையுள்ளதாக அமையும். அதற்குள்ளாக நடவடிக்கைகளை அந்தத் துறை எடுக்கும் என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிட்ட போது, ஸ்ரீவில்லிபுத்தூரில் கையகப்படுத்தப்பட்ட நிலம் எந்தச் சூழ்நிலையில், என்ன நிலைமை என்று தெரியவில்லை. அவர்கள் சொன்ன குறிப்பை அடிப்படையாக வைத்து அரசு ஆராயுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கிராம அதிகாரிகளைப் பொறுத்தவரையிலும், ஏற்கெனவே சுப்ரீம் கோர்ட் கொடுத்த ஆணையின் அடிப்படையில் தகுதிபடைத்தவர்கள் அத்தனை பேரையும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற தன்மையில், அவர்கள் அத்தனை பேரும் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுவிட்டார்கள். அந்தத் தகுதிக்கு மேல் இடம் காலியாக இருந்தால், தேர்வாணைக் குழுவின் மூலமாக வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற அளவுக்கு தேர்வாணைக் குழுவிற்கு விடப்பட்டு, தேர்வாணைக் குழு ஒரு பட்டியல் தந்து அந்தப் பட்டியலில் உள்ளவர்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டு வருகிறார்கள். அந்தப் பட்டியலில் பல பேர்கள் இருக்கிறார்கள். அதில் இன்னும் பல பேர்கள் இருக்கிறார்கள். ஆனால் அந்தத் தகுதியைப் பெறாமல் இருந்தவர்கள் வேலைக்கு அமர்த்தப்படாமல் இருந்தார்கள். அநேகம் பேர் அதற்குப் பிறகு தங்களுடைய தகுதியை வளர்த்துக்கொண்டு, தங்களுக்கும் வேலை தாருங்கள் என்று கேட்கிறார்கள். அது தர முடியாமல் இருக்கிறது. என்றாலும் கூட அவர்களுடைய நிலையைக் கருதி வேறு எந்த வகையிலாவது அவர்களைப் பயன்படுத்திக்கொள்ள இயலுமா என்பதைப்பற்றியும், அவர்களுக்கு வேலை வாய்ப்புத் தர இயலுமா என்பதைப்பற்றியும் வருவாய்த் துறையும் ஆராயும்படியாகக் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது, அதனையொட்டிய வளர்ச்சித் துறை, உள்ளாட்சித் துறை ஆகியவைகளும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்தப் பழைய கிராம

(பிற்பகல் 12-40)

அதிகாரிகளை எந்த அளவுக்குப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்பதைப் பார்த்து, அவர்களையும் பயன்படுத்திக் கொள்வது குறித்து அரசு ஆலோசிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். காரணம் அவர்கள் ஊரைப் பற்றி நன்கு தெரிந்தவர்களாக இருப்பார்கள். ஊரின் நிலைமையைப்பற்றி நன்கு புரிந்து வைத்துக் கொண்டிருப்பார்கள். இவர்களைப் பொறுத்த வரையில், வயது வரம்பை மட்டும் தளர்த்தியாவது செய்ய முடியுமா என்பதையும் அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். புதிதாக ஒரு ஊரைப்பற்றித் தெரிந்து கொள்வதைக் காட்டிலும், ஏற்கெனவே அந்த ஊரைப்





பற்றி நன்கு தெரிந்தவர்களாக இவர்கள் இருப்பதால், புதிதாக வைப்பவர்களை விட இவர்களை நியமிப்பதே நல்லதாக இருக்கும் என்பதை நான் உணர்வேன். அந்த அடிப்படையில் தகுதி, திறமை ஆகிய தன்மைகளின் அடிப்படையில் இவர்களையும் நியமிக்கலாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் வாக்காளர் பட்டியலில் இந்த முறை ஏற்பட்ட தவறுகளைச் சுட்டிக்காட்டி இனியாவது இப்படிப்பட்ட தவறுகள் ஏற்படாத வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அது எப்படி ஏற்பட்டது என்பதுபற்றி எனக்குக் குறிப்பாக விவரம் இல்லை. பத்திரிகைகள்தான் அவற்றைப்பற்றி செய்திகள் வெளியிட்டிருந்தன. பல்வேறு விதமாக அவைகளும் செய்திகளை வெளியிட்டிருக்கின்றன. எனவே இந்த நிலைமையில் தேர்தல்கள் துறை இதனைப் பற்றி ஆராயும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. எனவே என்னென்ன 'டிபெக்ட்ஸ்' இருக்கின்றன என்று கண்டறியப்பட்டு இவைகள் இனி எதிர் காலத்தில் வராமல் இருக்கிற சூழ்நிலையை அந்தத் துறை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிட்டவாறு, எதிர்காலத்திலாவது அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படாமல் இருக்கும் அளவுக்கு நிலைமைகள் செம்மைப்படுத்தப்படும், சீர்படுத்தப்படும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இதைச் சொல்லும்போது, வேறு ஒரு கருத்தும் தெரிவிக்கப்பட்டது. சாதாரணமாகச் சட்டமன்றத்திற்கும் நாடாளுமன்றத்திற்கும் ஒரு வாக்காளர்கள் பட்டியல் என்றும் ஊராட்சி ஒன்றியங்கள் நகராட்சி மன்றங்கள் போன்ற உள்ளாட்சி மன்றங்களுக்கான ஒரு வாக்காளர் பட்டியலும் ஆக மொத்தம் இரண்டு பட்டியல்கள் இருக்கின்றன. இவ்வாறு இரண்டு பட்டியல்கள் என்று இல்லாமல் ஒரே பட்டியலாக இருந்தால் நல்லது என்று சிலர் சொல்லியிருக்கிறார்கள். அதிலும் ஒரு சங்கடம் இருக்கிறது. அதாவது உள்ளாட்சி மன்ற அமைப்புகளுக்கான தேர்தலுக்குரிய வாக்காளர் பட்டியலில் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் எல்லாம் இடம் பெறுகிறார்கள். ஆனால் சட்டமன்ற நாடாளுமன்றத் தேர்தல்களுக்கான வாக்காளர்கள் பட்டியலில் 21 வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டும்தான் இடம் பெற வேண்டும் என்ற சங்கடம் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமை இல்லை என்றால், ஆண்டு தோறும் ஜனவரி மாதம் 1 ஆம் தேதிக்குப் பிறகு யார் யார் ஒரு குறிப்பிட்ட வயதுக்கு வந்திருக்கிறார்களோ அவர்களுடைய பெயர்களை எல்லாம் நாம்

வாக்காளர் பட்டியலில் சேர்த்துக்கொண்டு போய்விட முடியும். தொடர்ந்து, தேர்தலைப்பற்றிய கவலைப்படாமல்—அதாவது தேர்தல்களை எதிர் பார்க்காமலேயே நாம் பட்டியலை மட்டும் செம்மைப்படுத்திக்கொண்டே போய் விட முடியும். அதன் காரணமாக இடைத் தேர்தல் வந்தாலும் சரி, நாடாளுமன்றத் தேர்தல் வந்தாலும் சரி, அந்தப் பட்டியலைப் பயன்படுத்திக் கொண்டிருக்கலாம். இப்படி ஒரு நிலையில் இதை மறுபரிசீலனை செய்கிற சூழ்நிலை ஏற்பட்டால் நல்லது. இந்த வகையில் அந்தத் துறையினர் மக்களுடைய விருப்பத்தை அறிந்து செய்வார்கள் என்று சொல்லி துணை மானியக் கோரிக்கைகளைப்பற்றி பலரும் பல்வேறு கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் என்றாலும், இது ஏற்கெனவே செய்யப்பட்ட செலவினங்களுக்கான அனுமதி பெறுகிற ஒன்று என்ற அடிப்படையில் நான் அதிகமான விளக்கத்தைச் சொல்ல வேண்டியதில்லை என்று சொல்லி, நிதிநிலை அறிக்கையில் இறுதி உரை வருகிறபோது, விளக்கமாகக் கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு ஏற்படும் என்று சொல்லி, இதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கோரி, அமைகிறேன்.

Thirumathi TARA CHERIAN. Sir, the other point which the hon. Member Thiru Subramaniam raised about the Christian community ............

Mr. DEPUTY CHAIRMAN The normal practice is that any hon. Member who took part in the discussion could ask a question for getting clarification. I have already made it clear in this House that an hon. Member who has not spoken could not ask a question for getting clarification. Today, the hon. lady Member had an opportunity to speak. But she has not spoken. Now, she wants to ask a question. I do not feel that it is relevant.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்பட்டவர்கள் கிருத்துவ சமுதாயத்தை ஏற்று அதிலே சேர்ந்தாலும் அவர்களுக்கு பிற்பட்டவர்களுக்கான சலுகை அளிக்கப்படும் என்று அரசு உத்தரவிட்டிருக்கிறது . . .

**திரு. எம். பி. சுப்பிரமணியம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் சொன்ன கருத்து ஏற்கெனவே பிற்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள் கிருத்துவ சமயத்திற்கு மதம் மாறினால் அதற்குப் பிறகும் அவர்களுக்குப் பிற்பட்ட வகுப்பினருக்கான சலுகை அளிக்கப்படும் என்று அரசு அண்மையில் உத்தரவிட்டிருக்கிறது. அது பாராட்டுக்குரியதாகும். ஆனால் அதே



அடிப்படையில் ஏற்கெனவே தாழ்த்தப்பட்டவர்களாக இருப்பவர்கள் கிருத்துவ சமயத்திற்கு மதம் மாறினால், அவர்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கான சலுகை வழங்கப்பட வேண்டும். இந்தச் சமுதாய நீதியை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றுதான் கேட்டுக்கொண்டேன். இதற்கு சட்டம் ஒரு தடையாக இருந்தால், சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். அதைப்பற்றி நிதியமைச்சர் அவர்கள் விளக்கம் தர வேண்டும் என்று மட்டும் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்பட்டவர்களைப் பொறுத்தவரையில், மாநில அரசே முடிவெடுக்கக்கூடிய அதிகாரம் பெற்றிருக்கிறது. ஆனால் தாழ்த்தப் பட்டவர்களைப் பொறுத்தவரையில், இப்படிப்பட்ட ஒரு முடிவை மத்திய அரசுதான் எடுக்க வேண்டும் என்ற நிலைமை இருக்கிறது. எனவேதான் கிருத்துவர்களாக மதம் மாறிய பிற்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்களுக்குத் தொடர்ந்து அந்தச் சலுகைகள் வழங்கப்படும் என்று இந்த அரசு அறிவித்திருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்களுக்கும் அத்தகைய சலுகைகள் அளிக்கப் பட வேண்டும் என்றால், அதற்கு மத்திய அரசு ஒத்துழைக்க வேண்டும். மத்திய அரசு அதற்கு இசையுமானால், நாம் அதைப்பற்றி யோசிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Thirumathi TARA CHERIAN: On a point of information, Sir. Three years ago, when there was a bye-election, one section of the Indian Christian community was declared as backward community for the purpose of giving privileges to that community. I am not against it. But the Government have done it only for one section of the community. There are many other sections in the same community which are lower than the particular section for which concessions have been granted. There may be 'parayas' among them. I am sorry to use this word and I do not know whether it is a parliamentary word. But, there are so many other sections in the same community which are more backward than the particular section which the Government have specifically chosen and given concessions. Therefore, I want a clarification on this point. When one particular section of the Indian Christian community was declared backward our Government did not consult the Government of India. They did it on their own. Of course, I am happy about it. But it has created a lot of unpleasantness among other people who are inferior in status.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பிற்பட்ட வகுப்பினராக இருந்து கிறிஸ்துவர்களாக மதம் மாறினாலும் கிறிஸ்துவர்களாக கருதப்படும் என்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. மற்ற சாதி இந்துக்களைப் பொறுத்தவரையில், மேல் வகுப்பினர் கிறிஸ்துவர்களாக மாறினாலும் மேல் வகுப்பினராகத்தான் கருதப்படுவார்கள். பிற்பட்ட வகுப்பினராக இருந்து கிறிஸ்துவர்களாக மாறினால், பிற்பட்ட வகுப்பினராகத்தான் கருதப்படுவார்கள் என்ற அளவிற்கு இப்போது அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

Thirumathi TARA CHERIAN: I am sorry for having used that word I used it because I did not remember the name of that particular community. On the eve of the bye-election, one particular community was specifically chosen for being declared backward and was given privileges. That is what I want to point out. That has created a lot of unpleasantness.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அப்படி ஏதாவது விடுப்பட்டிருக்கிற சூழ்நிலை இருக்குமானால், அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டுவாரேயானால், அதைப் பற்றி ஆராயலாம். ஆகவே விடுப்பட்டிருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டலாம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மேலவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை 26-3-1986 புதன்கிழமை காலை 10.00 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 12.46)

## 3. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

182. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1983-84 ஆம் ஆண்டிற்கான அறிக்கை (சிவில்) (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151(2) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது) (ஆங்கிலம்).

183. தமிழ்நாடு அரசின் 1983-84 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கக் கணக்குகள் (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151(2) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது). (ஆங்கிலம்).



184. தமிழ்நாடு அரசின் 1983—84 ஆம் ஆண்டிற்கான நிதி நிலைக் கணக்குகள் (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151(2) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது (ஆங்கிலம்).

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

* 84. 1986-87 ஆம் ஆண்டில் உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

* 85. 1986-87 ஆம் ஆண்டிற்கான உடனடிச் செலவுக்கான மானியக் கோரிக்கைகள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

---

* 24-3-1986 அன்று மேலவை முன் வைக்கப்பட்டது.

143544
சென்னை-600